# தொல்காப்பியம்

## உரைவளம்

# எழுத்ததிகாரம்

## உயிர்மயங்கியல்

பதிப்பாசிரியர்:
ஆ. சிவலிங்கனார்

# தொல்காப்பியம்--எழுத்ததிகாரம்

## (உரைவளம்)

## உயிர்மயங்கியல்


பதிப்பாசிரியர்

ஆ. சிவலிங்கனார்



உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

International Institute of Tamil Studies

டி. டி. டி. ஐ., தரமணி சென்னை 600 113.

## BIBLIOGRAPHICAL DATA


| | | |
|---|---|---|
| Title of the book | — | Tolkāppiyam—Uyir Mayaṅkiyal |
| Editor | — | A. Sivalinganar |
| Publisher & (C) | — | International Institute of Tamil Studies<br>Madras-600 113<br>International Institute of Tamil Studies<br>Madras-600 113 |
| Publication Number | — | 59 |
| Language | — | Tamil |
| Edition | — | First |
| Date of Publication | — | December, 1982. |
| Paper used | — | 16 Kg. D/Demy |
| Size of the Book | — | 21 × 18 Cms |
| Printing types used | — | 10 Point |
| Number of Pages | — | xvi+232 |
| Number of Copies | — | 1200 |
| Price | — | Rs. 12/- |
| Printing | — | Sri Gomathy Achagam<br>7, Chinnappa Rawother Street,<br>Triplicane, Madras-5<br>P. Phone: 841478 |
| Binding | — | Card Board. |
| Artist | — | Eswari |
| Subject | — | Grammar |
| Summary | | Commentaries on Uyir-Mayaṅkiyal of Tolkāppiyam |

**டாக்டர் ச. வே. சுப்பிரமணியன்**
இயக்குநர்
உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை - 600 113

# முன்னுரை

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் செயல்படுத்தி வரும் தொல்காப்பிய நூல் உரைவள வெளியீட்டுத் திட்டத்தின்கீழ் பத்தாவது வெளியீடாகத் **தொல்காப்பியம்—உரைவளம்—உயிர் மயங்கியல்** என்னும் இந்நூல் வெளி வருகின்றது.

முன்னைய ஒன்பது வெளியீடுகளில் உள்ளவாறே இளம் பூரணர், நச்சினார்க்கினியர் உரைகளும், டாக்டர் சுப்பிரமணிய சாஸ்திரியார், வேங்கடராஜுலு ரெட்டியார் கருத்துரைகளும், இக்கால மொழியியல் அறிஞர்களின் கருத்துகளும் இந்நூலில் இடம் பெற்றுள்ளன.

கிடைக்கப் பெற்ற ஆங்கில மொழிபெயர்ப்புகளும் குறிக்கப் பட்டுள்ளன. தொல்காப்பியத்திற்குப் பிற்பட்ட இலக்கண நூல்களின் ஒப்புமை நூற்பாக்களும் ஆங்காங்குக் குறிக்கப்பட் டுள்ளன.

தமிழகத்திலும், பிற வெளிநாடுகளிலும் தொல்காப்பிய உரைவளத்திற்கு நல்ல வரவேற்பு இருக்கிறது என்பதைப் பல அறிஞர்களின் கடிதங்களின் மூலம் அறிகிறோம். தமிழ் மக்களுக்கு இவ்வுரைவளக்கோவை மிகுதியும் பயன்படும் என்று நம்பு கிறோம்.

பல உரைகளைத் தொகுத்தும் தம் கருத்துக்களை இணைத்தும் இந்நூலினைச் சிறப்புற உருவாக்கியுள்ள பதிப்பாசிரியர் திரு. ஆ. சிவலிங்கனார் அவர்களையும் அவருக்கு உறுதுணையாய் இருந்து உதவிய டாக்டர் ச. சிவகாமி முதலிய தமிழறிஞர்களையும் பாராட்டுகிறேன்.

நூலினைக் கண்ணுறும் அறிஞர் பெருமக்கள் தங்கள் கருத்துரைகளை வழங்குமாறு கேட்டுக் கொள்ளுகிறேன்.

இந்நிறுவனத்தின் ஆக்கப்பணிகள் அனைத்திற்கும் உறுதுணையாக இருந்து ஊக்குவித்து வரும் மாண்புமிகு கல்வி அமைச்சர் செ. அரங்கநாயகம் அவர்கட்கு என்றும் நன்றியுடையேன்.

அழகுற அச்சிட்டுத் தந்த ஸ்ரீ. கோமதி அச்சக உரிமையாளர் திரு. சி. சரவணகுமார் அவர்களுக்கு நன்றி.

அன்புடன்

**ச. வே. சுப்பிரமணியன்**

# பதிப்புரை

தொல்காப்பிய எழுத்ததிகார உயிர் மயங்கியல் என்னும் இந் நூல் இளம்பூரணர், நச்சினார்க்கினியர் உரைகளும், சுப்பிரமணிய சாஸ்திரியார், வேங்கடராசுலு ரெட்டியார் கருத்துரைகளும், பேராசிரியர் கு. சுந்தரமூர்த்தி, மொழியியலறிஞர் டாக்டர் செ. வை. சண்முகம்போல்வார் கருத்துரைகளும் பதிப்பாசிரியர் கருத்துரைகளும், நூற்பாக்களுக்கு இலக்குவனார், கமீல்சுவலபில் ஆகியோரின் ஆங்கில மொழிபெயர்ப்புகளும் பிற்கால இலக்கண நூல்களின் ஒப்புமை நூற்பாக்களும் பிறவும் அமைந்து, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் தொல்காப்பிய நூல் உரைவள வெளியீட்டுத் திட்டத்தின் வெளியீட்டு வரிசையில் பத்தாவதாக வெளி வருகின்றது.

இந்நூல் வெளிவர உடனிருந்து உதவிய டாக்டர் ச. சிவகாமி அவர்கட்கும், அவ்வப்போது உசாத்துணையாயிருந்து வரும் டாக்டர் வை. இரத்தினசபாபதி அவர்கட்கும் வேண்டும் புத்தகம் தந்துதவிவரும் க. வா. சச்சிதானந்தம் அவர்கட்கும் நன்றியுடையேன்.

அழகுற அச்சிட்ட ஸ்ரீ கோமதி அச்சக உரிமையாளர் திரு. சரவணகுமார் அவர்கட்கும், நூலையேற்றுக் கருத்துரை வழங்கும் அறிஞர் பெருமக்களுக்கும் நன்றியேன்.

ஆ. சி.
25-12-82

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| | முன்னுரை | iii—iv |
| | பதிப்புரை | v |
| | பொருளடக்கம் | vi—viii |
| | System of Transliteration | ix |
| | உயிர்மயங்கியல்—பொருட் சுருக்கம் | x—xxiii |
| 1. | அகர வீறு | |
| | அல்வழியில் அகர வீற்றுப் பெயர் புணருமாறு | 5—11 |
| | அகர வீற்று வினைச் சொல்லும் இடைச்சொல்லும் | 11—14 |
| | சுட்டின் முன் ஞ ந ம மெய் | 14—15 |
| | சுட்டின் முன் ய வ மெய் | 16—17 |
| | சுட்டின் முன் உயிர் | 18—21 |
| | செய்யுளில் சுட்டு நீளுதல் | 22—24 |
| | சாவ என்னும் சொல் | 24—26 |
| | இயல்பாகும் அகர வீறுகள் | 26—36 |
| | வாழிய என்னும் சொல் | 37—40 |
| | அம்ம என்பதற்கு மேலும் ஒரு விதி | 41—42 |
| | பல | 42—47 |
| | பலசில | 47—53 |
| | பல சில—மேலும் ஒரு முடிவு | 53—56 |
| | வேற்றுமையில் அகரவீறு | 26—57 |
| | மரப்பெயர்க்குப் பிறிது விதி | 57—58 |
| | மக | 38—63 |
| | அகரவீற்றுப் பன்மைச் சொற்கள் | 63—65 |
| | அல்வழியில் ஆகார வீற்றுப் பெயர் | 65—66 |
| | ஆகார வீற்று வினை | 66—69 |
| | உம்மைத் தொகை முடிபு | 69—73 |
| | இயல்பாகும் ஆகார வீறுகள் | 73—77 |
| | வேற்றுமையில் ஆகாரவீறு | 78 |
| | குறிற்கீழ் ஆவும் தனி ஆவும் | 81—82 |
| | இரா | 81—82 |
| | நிலா | 83—86 |

| | |
|---|---|
| சில மரப் பெயர்கள் | 85—86 |
| அவற்றுக்கு மேலும் ஓர் முடிபு | 86—90 |
| மா, ஆ, மா | 91—101 |
| ஆன் | 101—105 |
| சில உகரம் பெறுதல் | 105—108 |
| 3. இகர வீறு | |
| வேற்றுமையில் இகர வீறு | 108—110 |
| வினைச் சொல்லும் இடைச் சொல்லும் | 110—112 |
| இன்றி | 112—115 |
| சுட்டுப் பெயர் | 115—117 |
| தூணி, பதக்கு | 119—119 |
| நாழி முன்னர் உரி | 119—122 |
| பனி | 122—124 |
| வளி | 124—125 |
| உதிமரம் | 125—126 |
| புளி மரம் | 126—128 |
| புளிச் சுவை | 128—131 |
| நாட் பெயர் | 132—133 |
| திங்கட் பெயர் | 133—136 |
| 4. ஈகார வீறு | |
| அல்வழியில் ஈகாரம் | —137 |
| நீ, மீ முதலிய பெயர் | 138—141 |
| மீ | 141—143 |
| வேற்றுமையில் ஈகார வீற்றுப் பெயர் | 143—144 |
| நீ | 144—147 |
| 5. உகர வீறு | |
| அல்வழியில் உகர வீறு | —147 |
| சுட்டின் முன்னர் வன்கணம் | —148 |
| சுட்டின் முன்னர் மென்கணம் முதலியன | 149—150 |
| உகர வீற்றுச் சுட்டுப் பெயர் | 151—152 |
| செய்யுளிற் சுட்டுப் பெயர் | 151—155 |
| வேற்றுமையில் உகர வீறு | —155 |
| எரு, செரு | 156—158 |
| ழ க ர வு க ர வீறு | 158—160 |
| ஒடுமரம் | 160—161 |
| சுட்டுப்பெயர்க்குச்சாரியை | 162—164 |
| 6 ஊகார வீறு | |
| அல்வழியில் ஊகார வீற்றுப்பெயர் | 164—165 |

| | | |
|---|---|---|
| | வினைச்சொல் | 165—167 |
| | வேற்றுமையில் ஊகாரவீறு | 167—168 |
| | குறிற்கீழ் ஊகாரமும் தனிமொழி ஊகாரமும் | 168—170 |
| | பூ | 170—172 |
| | ஊ என் பெயர் | 172—175 |
| | ஆடூஉ மகடூஉ | 175—178 |
| 7 | எகர ஒகர வீறு | |
| | அல்வழியில் எகர ஒகர வீறுகள் | 178—180 |
| | இடைச்சொற்கள் | 180—183 |
| | அல்வழியில் ஏகார வீற்றுப்பெயர் | 184 |
| | இடைச்சொற்கள் | 185—186 |
| | வேற்றுமையில் ஏகாரவீறு | 187 |
| | மேலும் ஓர் முடிபு | 188 |
| | சேமரம் | 189 |
| | சே-பெற்றம் | 190—191 |
| 9 | ஐகார வீறு | |
| | வேற்றுமையில் ஐகாரவீறு | 191—193 |
| | சுட்டுப்பெயர் | 193—194 |
| | வீசை, ஞெமை, நமை | 194—196 |
| | பனை, அரை, ஆவிரை | 196—198 |
| | பனை முன் அட்டு | 198—200 |
| | பனை முன் கொடி | 200—204 |
| | திங்களும் நாளும் | 204—206 |
| | மழை | 206—208 |
| | வேட்கைமுன் அவா | 208—211 |
| 10 | ஓகாரவீறு | |
| | அல்வழியில் ஓகாரவீறு | 212 |
| | இடைச்சொல் | 213—215 |
| | வேற்றுமையில் ஓகாரவீறு | 215—216 |
| | கோ + இல் | 216—218 |
| | சாரியைப்பேறு | 218—219 |
| 11 | ஔகாரவிறுதி | |
| | இருவழியிலும் ஔகாரவீறு | 220—222 |
| | பயன்படுத்தப் பெற்ற நூல்கள் | 223 |
| | சுருக்க விளக்கம் | 224 |
| | சொல்லகராதி | 225—231 |
| | சூத்திரமுதற்குறிப்பகராதி | 232 |

# System of Transliteration

## உயிரெழுத்துகள்—Vowels

| இலக்குவனார் | தமிழ்சுவலபில் |
|---|---|
| அ—a | a |
| ஆ—ā | ā |
| இ—i | i |
| ஈ—ī | ī |
| உ—u | u |
| ஊ—ū | ū |
| எ—e | e |
| ஏ—ē | ē |
| ஐ—ai | ai |
| ஒ—o | o |
| ஓ—ō | ō |
| ஔ—au | au |

## மெய்யெழுத்துகள்—Consonants

| | |
|---|---|
| வல்லினம் | |
| க்—k | k |
| ச்—s | c |
| ட்—t | ṭ |
| த்—th | t |
| ப்—p | p |
| ற்- ṛ | ṛ |
| மெல்லினம் | |
| ங்—ṅ | ṅ |
| ஞ்—ñ | ñ |
| ண்—ṇ | ṇ |
| ந்—n | n |
| ம்—m | m |
| ன்—n̲ | n̲ |
| இடையினம் | |
| ய்—y | y |
| ர்—r | r |
| ல்—l | l |
| வ்—v | v |
| ழ்—ḻ | ḻ |
| ள்—ḷ | ḷ |

# உயிர்மயங்கியல்—பொருட்சுருக்கம்

**உயிர்மயங்கியல்—பெயர்க்காரணம்**

ஆசிரியர் தொல்காப்பியர் நிலைமொழியீறும் வருமொழி முதலும் தம்மிற் புணருமிடத்து நிகழும் நிகழ்ச்சிகளை எழுத்ததிகாரத்தில் புணரியல், தொகைமரபு, உருபியல், உயிர்மயங்கியல் புள்ளி மயங்கியல், குற்றியலுகரப் புணரியல் என்னும் ஆறு இயல்களில் கூறினார். அவற்றைப் புணரியல் என ஓரியலிலேயே அடக்கலாமாயினும் ஆறு இயல்களாகப் பிரித்துக் கூறிய காரணம் இன்ன என்பது தொல்காப்பிய எழுத்ததிகாரப் புணரியல் உரைவள நூலின் முன்னர்ப் 'புணரியல்—ஓர் அறிமுகம்' என்னும் கட்டுரையில் விளக்கப்பட்டுள்ளது.

நிலை மொழியீற்று உயிர் வருமொழி முதல் எழுத்துடன் புணரும் இலக்கணம் கூறும் பகுதி உயிர் மயங்கியல் என்றும், நிலை மொழியீற்று மெய் வருமொழி முதல் எழுத்துடன் புணரும் இலக்கணம் கூறும் பகுதி புள்ளி மயங்கியல் என்றும், குற்றிய லுகரவீறு வருமொழி முதல் எழுத்துடன் புணரும் இலக்கணம் கூறும் பகுதி குற்றியலுகரப் புணரியல் என்றும் பெயர் கூறப் பட்டன.

உயிர் மயங்கியல் புள்ளி மயங்கியல் என்று பெயர் வைத்தது போலக் குற்றியலுகர மயங்கியல் என்று பெயர் வையாமல் குற்றியலுகரப் புணரியல் என இறுதியியலுக்குப் பெயர் வைத்த தன் காரணம் எதுவாகும்?

'புணரியல்' என்பதில் உள்ள 'புணர்' என்பது புணர்தல் என்னும் தன்வினைக்கும் 'புணர்த்தல் என்னும் பிறவினைக்கும் பொதுவான பகுதியாகும். எனவே புணரியல் என்பதற்கு, நிலை மொழியீறும் வருமொழி முதலும் புணரும் இலக்கணம் கூறும் பகுதி என்ற பொருளையும், நிலைமொழியீற்றையும் வருமொழி முதலையும் புணர்க்கும் சொல்பற்றிய இலக்கணம் கூறும் பகுதி என்ற பொருளையும் கொள்ளலாம். புணரியலில் உள்ள இலக்கணங்களுள் புணர்க்கும் சொற்கள் பற்றிய இலக்கணங்களே மிகவும் உண்டு.

> ''உயிரிறு சொல்முன் உயிர்வரு வழியும்
> உயிரிறு சொல்முன் மெய்வரு வழியும்
> மெய்யிறு சொல் முன் உயிர்வரு வழியும்
> மெய்யிறு சொல் முன் மெய்வரு வழியும் என்று''
> (புணரி. 5)

என நிலைவரு மொழிகள் தம்முள் புணர்வன போலத் **தன்வினைப்** பொருளில் (வருவழி எனக்) கூறியிருப்பினும்,

> ''நிறுத்த சொல்லின் ஈறாகு எழுத்தொடு
> குறித்துவரு கிளவி முதல் எழுத்து இயையப்
> பெயரொடு பெயரைப் புணர்க்குங் காலும்
> பெயரொடுதொழிலைப் புணர்க்குங் காலும்
> தொழிலொடு பெயரைப் புணர்க்குங் காலும்
> தொழிலொடு தொழிலைப் புணர்க்குங் காலும்''
> (புணரி. 6)

என நிலை வருமொழிகள் புணர்க்கப்படுவன போலப் (புணர்க்குங் காலும் எனப்) **பிறவினைப்** பொருளிலும் கூறியுள்ளார் ஆசிரியர். மேலும் நிலைமொழியை **'நிறுத்த சொல்' எனப்பிறவினை நிலையிலும், வருமொழியைக் 'குறித்து வருகிளவி' எனத் தன் வினை நிலையிலும் கூறியுள்ளார்** நிறுத்த சொல் என்பதற்கேற்ப வருகிளவி என்பதை வருவிக்கப்படும் கிளவி என்றோ, வருகிளவிக் கேற்ப நிறுத்த சொல் என்பதை முன்னே நிலையும் சொல் என்றோ கொள்ளல் வேண்டும்.

> புள்ளியீற்று முன் உயிர் தனித்து இயலாது
> மெய்யொடு சிவணும் அவ்வியல் கெடுத்தே (புணரி 36)

என்னும் சூத்திரம் ஒன்று மட்டுமே நிலை மொழியும் வருமொழியும் தம்முட் புணரும் தன் வினை நிலைக்குரிய சூத்திரம்.

நிலைமொழியையும் வருமொழியையும் புணர்க்க இடை வருவன **வேற்றுமை உருபுகளும் சாரியைகளும்** ஆம். அவையாவை என்பதும், அவை நிலைவருமொழிகளைப் புணர்க்குங்கால் தாம் அடையும் திரிபுகளும் விரிவாகப் புணரியலில் கூறப்பட்டன.

புணர்த்தற்கு வரும் வேற்றுமை யுருபுகளை வருமொழி நிலையில் வைத்து இலக்கணம் கூறியது உருபியல். ஆனால் சாரியைகளுக்கு அவ்வாறு தனியியல் கூறப்படவில்லை ஏன் எனின் அவை முதலும் ஈறுமாகவுள்ள உயிரோ அல்லது

மெய்யோ, உயிர்மயங்கியல் புள்ளிமயங்கியல்களில் கூறப்பட்ட விதிகளையே பெறத்தக்கன ஆதலினால் என்னலாம். எனினும் உயிர் மயங்கியலிலும் புள்ளிமயங்கியலிலும் கூறப்பட்ட புணர் மொழியிலக்கணங்களுள் சாரியைகள் வந்து புணர்க்குமாறும் கூறப்பட்டது.

எனவே, உயிர் மயங்கியலில் நிலைமொழி உயிரானது வருமொழி முதல் எழுத்துடன் புணருமாறும் புணர்க்கப் படுமாறும், புள்ளிமயங்கியலில் நிலை மொழியீற்று மெய்யானது வருமொழி முதல் எழுத்துடன் புணருமாறும் புணர்க்கப் படுமாறும், குற்றியலுகரப் புணரியலில் நிலை மொழியீற்றுக் குற்றுகரம் வருமொழி முதல் எழுத்துடன் புணருமாறும் புணர்க்கப்படுமாறும் கூறப்பட்டன என்றாலும், முதலிரண்டற் கும் மயங்கியல் என்றும் பின்னதற்குப் புணரியல் என்றும் பெயர் வைப்பானேன்?

உயிரெழுத்து மெய்யெழுத்துகளுள் மொழி முதலில் வருவன யாவை மொழியிறுதியில் வருவன யாவை என விளக்கமாக மொழி மரபு என்னும் பிரிவில் ஆசிரியர் கூறினார். மொழியிடை யில் அவ்விரண்டும் வருவதாயின் இடைநிலை மயக்கம் என்னும் நிலையிலேயே வரும். இடைநிலை மயக்கமாக உயிர் வருவதற்கு வரையறையில்லை. மெய் வருவதற்கு வரையறையுண்டு. அதனால் நூன்மரபு என்னும் முதற் பிரிவில் இடைநிலை மெய்ம் மயக்கம் பற்றி விரிவாகவும் தெளிவாகவும் கூறினார். நிலை வருமொழிகளின் புணர்நிலையில் உயிர்முன் உயிர், உயிர் முன் மெய், மெய்ம்முன் உயிர், மெய்ம்முன் மெய் என மயங்கி நிற்ற லின் ஒருவகையில் அவையும் மயக்கங்களே என்னலாம். அதாவது நிலைமொழியிறுதியும் வருமொழி முதலும் மயங்கும் மயக்கமே யாம். அதனால் நிலைமொழியிறுதி உயிர், வருமொழி முதல் எழுத்தோடு மயங்குங்கால் ஏற்படும் திரிபுகளைப் பற்றிக் கூறும் இயலை உயிர் மயங்கியல் என்றும், அவ்வாறே நிலைமொழி யிறுதி மெய், வருமொழி முதல் எழுத்தோடு மயங்குங்கால் ஏற்படும் திரிபுகளைப் பற்றிக் கூறும் இயலைப் புள்ளி மயங்கியல் என்றும் பெயர் வைத்தார் தொல்காப்பியர் (இவற்றில் திரிபுகளே யன்றி இயல்பாக அமையும் இலக்கணங்களும் உண்டு.)

குற்றியலுகரம் என்பது தனி உயிரன்று ஆதலினால் அது எவ்வெவ்வெழுத்துகளுடன் மயங்கும் எனக் கூறவேண்டுவ தில்லை. குற்றியலுகரம் மொழி முதலில் வாராமையாலும் நுந்தை என்பதில் மொழி முதற் குற்றியலுகரம் உண்டு எனக்

கூறப்படினும் அது நகர மெய்யை முன்னிறுத்தி வருவதாதலின் அச்சொல் மெய்ம் முதற்சொல் எனப்படுமேயன்றிக் குற்றுகர முதற் சொல் எனப்படாமையாலும், ஈற்றுக்குற்றுகரம் வல்லின மெய்யில் ஏறியிருப்பதால் உயிர்த் தன்மையும், வருமொழி உயிர் ஏற இடம் கொடுப்பதால் மெய்த் தன்மையும் கொண்டமையால் உயிரிலும் சாராது மெய்யிலும் சாராது இருநிலையும் உடைமை யாலும், அது உயிரீறாக இருந்து மயங்குவதாகவோ மெய்யீறாக இருந்து மயங்குவதாகவோ கூறக் கூடாமையாலும் குற்றியலுகர மயங்கியல் என்பது பொருந்தாது.

ஈற்றுக்குற்றியலுகரம் வருமொழியுடன் புணர்வதாலும், சாரியை இன் முதலியவற்றால் புணர்க்கப் படுவதாலும் புணரியல் என்று கூறுவதே பொருந்தும். அதனால் குற்றியலுகரப் புணரியல் எனப் பெயர் வைத்தார் தொல்காப்பியர் என்னலாம்.

**பொருட் சுருக்கம்**

(அ) **பொதுக்கருத்து** இனி உயிர் மயங்கியலிற் கூறப்பட்டுள்ள செய்திகளைக் காணலாம்.

நிலைமொழியீற்று உயிர் வருமொழி முதல் எழுத்துடன் புணரும் போது திரிதல், கெடுதல், இரண்டுமின்றி இயல்பாதல் என்னும் மூன்று நிலை அடையும். அதனை வருமொழி முதல் மெய்யெழுத்து மிக்கும் இடையில் இன், ஏ முதலிய சாரியைகள் தோன்றியும் புணர்த்தலும் உண்டு.

நிலைமொழியீற்று உயிர் வருமொழி முதல் எழுத்து வல்லெழுத்துடன் சேர்வது வன்கணத்தொடு புணர்வதென்றும், மெல்லெழுத்து இடையெழுத்து உயிரெழுத்துகளுடன் சேர்வது மென்கண இடைக்கண உயிர்கணங்களுடன் புணர்வதென்றும் கூறப்படும். வருமொழி வல்லெழுத்துகள் பெரும்பாலும் மிக்கே வருதலின் அவற்றைத் தனியாக வன்கணம் என்ற பெயரிலும், மற்றையெழுத்துகள் பெரும்பாலும் மிகாது இயல்பாய் வருதலின் அவற்றை இயல்புகணம் என்றும் உரையாசிரியர்கள் ஆள்வர்.

ஆசிரியர் தொல்காப்பியர் பெயர்ச்சொல், வினைச்சொல் இடைச்சொல் ஆகியவற்றை நிலைமொழியாக வைத்து அவற்றின் உயிரீறு வருமொழியுடன் புணருமாற்றைக் கூறுகிறார். பெயர்ச் சொல்லுள் உயர்திணைப் பெயரும் அஃறிணை விரவுப் பெயரும் பெரும்பாலும் இயல்பாகவே புணரும் என்று தொகை

மரபில் கூறிவிட்டமையால், இவ்வியலில் (புள்ளி மயங்கியலிலும்) அஃறிணைப் பெயர்கள் புணருமாறே கூறுகிறார். அப்பெயர்கள் அல்வழி வேற்றுமை என்னும் இருவகைத் தொடர்ப் பொருள் களில் புணரும்.

உயிர் எழுத்துப் பன்னிரண்டற்கும் தனித்தனியாகப்புணர்ச்சி விதிகள் கூறுகிறார் ஆசிரியர். அவற்றுள் இகர ஐகாரவீற்றுப் பெயர்களுக்கு அல்வழிப்புணர்ச்சி பற்றித் தொகை மரபில் கூறி விட்டமையால் வேற்றுமைப் புணர்ச்சியே உயிர் மயங்கியலில் கூறுகிறார். எகர ஒகரங்கள் பெயர்க்கு ஈறாகாமையின் விடப் பட்டன.

## (ஆ) பொது விதி

அ, ஆ, ஈ, உ, ஊ, ஏ, ஓ, ஔ என்னும் உயிர் ஈறுகள் வரு மொழி வல்லெழுத்துடன் புணரும் போது அல்வழியிலும் வேற்றுமையிலும் வரும் வல்லெழுத்தே மிகப்புணரும்.

| உ-ம் : | அல்வழி | வேற்றுமை |
|---|---|---|
| அ. | விளக்குறிது (1) | விளக்குறுமை (14) |
| ஆ. | தாராக்கடிது (19) | தாராக்கால் (2.) |
| இ. | .................. | கிளிக்கால் (33) |
| ஈ. | ஈக்கடிது (47) | ஈக்கால் (50) |
| உ. | கடுக்குறிது (52) | கடுக்காய் (57) |
| ஊ. | கொண்மூக்கடிது (62) | கொண்மூக்குழாம் (64) |
| ஏ. | ஏக்கடிது (72) | ஏக்கடுமை (74) |
| ஐ. | .................. | யானைக்கோடு (78) |
| ஓ. | ஓக்கடிது (87) | ஓக்கடுமை<br>கோஒக் கை (90) |
| ஔ. | கௌவுக்கடிது (93) | கௌவுக்கடுமை (93) |

(ஔ வல்லெழுத்துடன் புணரும்போது உகரம் இடைவரும்)

அகர இறுதி அல்வழியில் வல்லெழுத்துடன் புணரும்போது அவ்வல்லெழுத்து மிக்குப்புணரும் என்று முதலில் விதித்து அதனிடமே அகர இறுதியின் வேற்றுமைப் புணர்ச்சிக்கும், பிற உயிர்களின் அல்வழி வேற்றுமைப் புணர்ச்சிகளுக்கும் மாட்டேற்றுக் கூறுகிறார் ஆசிரியர். ‘வேற்றுமைக்கண்ணும்

அதனோரற்றே' (14) 'ஆகார இறுதி அகர இயற்றே' (19) முதலிய சூத்திரங்களைக் காணலாம்.

அ இ உ என்னும் முச்சுட்டின் முன்னர் வல்லெழுத்துவரின் அவ்வல்லெழுத்து மிகும். உ-ம் : அக்கொற்றன், (2) இக்கொற்றன், (36) உக்கொற்றன் (53)

அவற்றின் முன் ஞ ந ம என்பனவரின் அவையே மிகும். உ-ம் : அஞ்ஞாலம், அந்நூல், அம்மணி; (3) இஞ்ஞாலம், இந்நூல், இம்மணி; (36) உஞ்ஞாலம், உந்நூல், உம்மணி (54)

அவற்றின் முன் ய வ என்னும் இடையெழுத்துகளும், உயிர் எழுத்தும் வரின் வகரமெய் இடைவரும். உ-ம்: அவ்யானை, அவ்வண்டி, அவ்விலை; (4) இவ்யானை, இவ்வண்டி, இவ்விலை; (36) உவ்யானை, உவ்வண்டி, உவ்விலை (54)

அம்முச்சுட்டுகளும் செய்யுளில் நீண்டு வருதலும் உண்டு. உ-ம் : ஆவயின் (6) ஈவயின், (36) ஊவயின் (54)

## (இ) அகரவீற்றுச் சிறப்புவிதி

### (1) அல்வழி

பின்வரும் அகர ஈற்றனவும் வல்லெழுத்துவரின் மிக்கு முடியும்.

| | | |
|---|---|---|
| செய என்வாய்பாடு | : | உணக்கொண்டான் |
| உவமச்சொல் | : | புலிபோலப் பாய்ந்தான் |
| என என்னும் சொல் | : | கொள்ளெனக் கொடுத்தான் |
| ஆங்க என்னும் சொல் | : | ஆங்கக் கொண்டான். (2) |

பின்வரும் அகர ஈற்றன வல்லெழுத்துவரின் மிகுதல் இன்றி இயல்பாகவே வருமொழியுடன் புணரும்.

| | | | |
|---|---|---|---|
| உ-ம் : | அன்ன(உவமம்) | : | புலியன்ன சாத்தன் |
| | விளி | : | ஊர செல் |
| | செய்ம்மன | : | உண்மன குதிரை |
| | ஏவலில் வரும் வியங்கோள் | ; | உண்க தேவா |
| | செய்த (பெயரெச்சம்) | : | சென்ற பூதன் |
| | செய்யிய (வினையெச்சம்) | : | உண்ணிய சென்றான் |
| | அம்ம (உரையசை) | : | அம்ம கொற்றா |
| | பல | : | பல குதிரை (8) |

இவற்றுட் பல என்பது தன் முன் தான்வரின் பலபல, பலப்பல, (13) பல்பல, பற்பல (12) எனவரும் (சில என்பதும் இப்படியே வரும்)

(2) **வேற்றுமை**

வேற்றுமைப் பொருட்புணர்ச்சியில் பலவற்றுக்கோடு என வற்றுச்சாரியை பெற்று வரும் (18)

வேற்றுமைப்புணர்ச்சியில் விள என்பது போலும் மரப்பெயர்கள் விளங்கோடு என்பது போல மெல்லெழுத்து மிகுந்து வருதலும் உண்டு. (15)

மக என்னும் சொல் மகவின்கை என இன்னும் (16) மகத்துக்கை என அத்தும் (17) பெற்று முடிவதுண்டு.

**(ஈ) ஆகார வீற்றுச் சிறப்பு விதி**

**1 அல்வழி**

ஆகார இறுதிச் சொற்களுள் செய்யா என்னும் வாய்பாட்டு வினையெச்சச் சொல் வலிவரின் மிக்கு முடியும்; உ-ம் : உண்ணாக் கொண்டான். (20)

உம்மைத் தொகைந் தொடராகப் புணரும் ஆகார வீறு அகர எழுத்துப் பெற்றுப் புணரும். உ-ம்: இரா அப்பகல். (21)

பின்வரும் ஆகார வீறுகள் வல்லெழுத்துவரின் மிகாமல் இயல்பாகப் புணரும்.

| | | |
|---|---|---|
| ஆ | : | ஆகுறிது |
| மா | : | மாகுறிது |
| விளி | : | ஊரா கொள் |
| யா | ; | யாகுறிய |
| பன்மை | ; | உண்ணா குதிரை |
| மியா | : | கேண்மியா கொற்றா |

தன்தொழில் உரைக்கும் வினா : உணகா கொற்றா (22)

**2 வேற்றுமை**

வேற்றுமைப் பொருட்புணர்ச்சியில், பலா என்பது போல் வரும் குற்றெழுத்தின் முன்னர் வரும் ஆகாரமும், கா என்பது போல் வரும் ஓரெழுத்து மொழி ஆகாரமும் தம் இறுதியில் அகரக் குற்றெழுத்து வரப் புணரும். உ-ம் : பலாஅக்கோடு, காஅக் குறை. (24)

இரா என்னும் குறியதன் முன்னர் வந்த ஆகாரம் மட்டில் அகரக் குற்றெழுத்துப் பெறாது இராக் காக்கை என வரும். (25)

நிலா என்பது அகர எழுத்துடன் அத்துச் சாரியையும் பெறும். உ-ம் : நிலாஅத்துக் கொண்டான்.

பின்வரும் மரப்பெயர்கள் மெல்லெழுத்து (அ) வல்லெழுத்து மிகப் புணரும்.
உ-ம்

யா : யாஅங்கோடு (27) யாஅக் கோடு (28)
பிடா : பிடா அங்கோடு (27) பிடாஅக்கோடு (28)
தளா : தளாஅங்கோடு (27) தளா அக்கோடு (28)
மா : மா அங்கோடு (29) மாஅக்கோடு (28)

ஆ, மா என்னும் இரண்டு (விலங்கும்) பெயர்களும் ன் என்னும் எழுத்துமட்டும் பெற்று ஆன்கோடு மான்கோடு எனப் புணரும். (29) ஆன் என்பது 'ஆன நெய்' என அகர எழுத்துடன் சேர்ந்தும் வருமொழியுடன் சேரும் (30) ஆ + மீ என்பன இடையில் ப் எழுத்து மிகப் பீ என்பது பி எனக்குறுகி ஆப்பி என வருதலும் உண்டு. (31)

'நிலா' என்னும் குறியதன் கீழ் ஆ, 'நில' எனக் குறுகிப் பின் 'நிலவு' என உகர எழுத்துச் சேர்ந்து வருதல் செய்யுளில் நிகழ்வதாகும் (32)

**(உ) இகர வீற்றுச் சிறப்பு விதி**

**1 அல்வழி**

பின்வருவன வல்லெழுத்து மிக்கு முடிந்த இகர வீற்றுப் புணர்ச்சிகளாம்.

இனி = இனிக் கொண்டான் (34)
அணி: அணிக் கொண்டான் (35)
தூணி + பதக்கு = தூணிப்பதக்கு (37)
நாழி + உரி = நாடுரி (38)

தூணிப்பதக்கு என்பது தவிர மற்றையன வழக்கில் இன்று இல்லை.

**2 வேற்றுமை**

பின்வருவன வேற்றுமைப் புணர்ச்சிகள் :
பனி (காலம்) பனியத்துக் கொண்டான்—
அத்துச்சாரியை (39)

| | |
|---|---|
| | பனியிற்கொண்டான்—இன்சாரியை (39) |
| வளி (காற்று) | வளியத்துக் கொண்டான்—அத்துச் சாரியை (40) |
| | வளியிற் கொண்டான்—இன் சாரியை (40) |
| உதி (மரம்) | உதிங்கோடு—மெல்லெழுத்து மிகுதி (41) |
| புளி (மரம்) | புளியங்கிளவி : அம்சாரியை (42) |
| புளி (சுவை) | புளி + கூழ் = புளிங்கூழ்—மெல்லெழுத்து மிகுதி (43) |
| | புளி + கூழ் = புளிக்கூழ்—வல்லெழுத்து மிகுதி (44) |
| பரணி (நாள்) | பரணியாற் கொண்டான்—ஆன்சாரியை (45) |
| ஆடி (திங்கள்) | ஆடிக்குக் கொண்டான்—இக்குச்சாரியை (46) |

பனியத்துக் கொண்டான், வளியத்துக் கொண்டான் என்னும் வழக்கு இக்காலத்தில் குமரி மாவட்டப் பகுதியில் இன்றும் உண்டு. மலையாளத்தும் இவ்வழக்குண்டு. "வெயிலத்துப் போகருதே" (வெயிலில் போகாதே) என்னும் வழக்குக் காண்க. ஆசிரியர் தொல்காப்பியர் பனி, வளி என்பனவற்றுக்கு அத்துச்சாரியை கூறியதால் அவர் குமரி மாவட்டத்தைச் சார்ந்தவர் என்று கூறு வாரும் உளர். அவ்வாறு கூறுவதாயின் வடவேங்கடம் தென் குமரி ஆயிடைத் தமிழ் கூறு நல்லுலகத்து வழக்கும் செய்யுளும் கண்டு இலக்கணம் செய்தார் என்பதனோடு மாறுபடும். அவர் காலத்தில் தமிழகம் எங்கும் வழங்கப்பட்ட சொற்களை ஆராய்ந்தே இலக்கணம் செய்யப் புகுந்தவர் குமரி மாவட்டத்தில் இன்றும் வழங்கும் அத்துச் சாரியையோடு கூடிய வழக்குகளையும் விடாமல் சேர்த்துக் கூறினார் என்று கொள்வதே முறை. வளியத் துக் கொண்டான் போலும் வழக்குகள் குமரி மாவட்டத்தில் நிலைக்க மற்றைய இடங்களில் மறைந்தன எனலாம். 'ஆடிக் குவா', சித்திரைக்குவா', 'ஆடிக்கு இப்பத்திரம் காலாவதியா கிறது' என்பன போலும் வழக்குகள் தென்னார்க்காடு மாவட்டம், சென்னை முதலியவிடங்களில் இன்றும் வழங்குகின்றன. அதனால் ஆசிரியரைத் தமிழக வடபகுதியைச் சார்ந்தவர் என்று கூறி விடலாமா?

**(ஊ) ஈகாரவீற்றுச் சிறப்பு விதி**

பீ எனும் சொல் அல்வழியில் வருமொழி வல்லெழுத்து மிகா மல் பீ குறிது எனவரும் (48)

மீ (மேலிடம்) எனும் சொல் வருமொழி வல்லெழுத்து மிகாமல் மீகண் என வரும் (48) அதுவே மீக்கண் என மிக்கும் வரும் (49)

நீ என்னும் முன்னிலைப் பெயர், 'நீ குறியை' என அல்வழியில் வல்லெழுத்து இயல்பாயும், 'நின் கை' என வேற்றுமையில் நெடுமுதல் குறுகி (நீ-நி) னகர ஒற்றுப் பெற்று (நின்) வல்லெழுத்து மிகாமலும் வரும் (51)

**(எ) உகர வீற்றுச் சிறப்பு விதி**

**(1) அல்வழி**

'அது' எனும் உகரவீறு வருமொழி வல்லெழுத்துடன் சேரும்போது அல்வழியில் 'அது குறிது' என இயல்பாகச் சேரும். (55)

'அது' என்பது 'அன்று' எனும் சொல்லுடன் சேரும்போது உகரம் ஆ ஆக அதா என்று ஆகும். அதாஅன்று எனச்சேரும் (56) இது செய்யுளில் நிகழ்வது.‡

**(2) வேற்றுமை**

அது என்பது 'ஐ' என்னும் உருபுடன் சேரும் போது 'அதை' என உகரம் கெட்டு வரும். (56) இதுவும் செய்யுளில் நிகழ்வது என்றார் ஆசிரியர். உலகவழக்கில் இன்று 'அதைக் கொண்டுவா' என வழங்கப்படுதல் காணலாம்.

அது + கோடு = அதன்கோடு என அது என்பது அன் சாரியை பெற்றுவரும் (61) அது + ஐ = அதனை என உருபுப் புணர்ச்சியில் வருவது போல. (உருபியல்பு)

**(ஏ) ஊகார வீற்றுச் சிறப்பு விதி**

**1 அல்வழியில்**

செய்யூ என்னும் வாய்பாட்டு வினையெச்சம் வல்லெழுத்து வரின் அவ்வல்லெழுத்து மிக்குப் புணரும். உ-ம் : உண்ணூஉக் கொண்டான். (63)

முன்னிலை யேவல்மொழியில் வரும் இறுதி உகரமும் வல்லெழுத்துமிக்குப் புணரும். உ-ம் : கைதூஉக் கொற்றா (63)

---

‡ அதாஅன்று என்பதில் 'அன்று' என்பதே 'ஆன்று' என நீண்டது என்பர் நன்னூலார். (நன். 180)

**2 வேற்றுமையில்**

குற்றெழுத்தைச் சார்ந்து வரும் ஊகாரமும், ஓரெழுத்து ஒரு மொழி ஊகாரமும் வல்லெழுத்துவரின் அது மிக்குப்புணரும் எனினும் உகரக்குற்றெழுத்து இடைவரப் புணரும்.

உ-ம் : உடூஉக்குறை, தூஉக்குறை(65) பூ என்னும் ஓரெழுத் தொருமொழிக்கு உகரம் வருதல் இல்லை ; அது பூக்கொடி என வல்லெழுத்துப் பெறுதலோடு மெல்லெழுத்தும் பெற்று பூங்கொடி என முடியவும் பெறும் (66).

ஊ என்னும் தசையையுணர்த்தும் சொல் னகர ஒற்றுப் பெற்று (67) ஊன் என நின்று அக்குச்சாரியை பெற்று வருமொழி வல்லெழுத்துமிக்கு ஊனக்குறை எனவும் வரும் (68) (அக்குச் சாரியையில் அகரம் நிற்க மற்றவை கெட்டன)

ஆடூஉ, மகடூஉ என்னும் சொற்கள் வருமொழி வல்லெழுத்து மிகுந்து ஆடூஉக்கை மகடூடக்கை எனவருவதுடன், இன்சாரியை இடைவந்து வல்லெழுத்துமிகாமல் ஆடூஉவின்கை மகடூடவின்கை எனப்புணர்தலும் உண்டு.

**(ஐ) எகர ஒக்ரங்கள்**

எகரம் மெய்யுடன் சேர்ந்து இறுதியில் வராது. (மொழி மரபு 38) தனித்து இறுதியில் வரும் பெயர்ச் சொல்லில் வாராமல் முன்னிலையேவல் நிலையிலேயே வரும் (70)

ஒகரம் 'நொ' என நகர மெய்யுடன் இறுதியில் வரும். (மொழி மரபு 39) அச்சொல் நொந்தேன், நொந்தாய், நொந்தான் என மூவிடத்து வினையாக வரும். 'நொ' எனத்தனித்து ஏவலிலும் வரும். பெயர்ச் சொல்லில் இறுதியாக வராது.

எகர ஒகரம் பெயர்க்கீ றாகா
முன்னிலை மொழிய என்மனார் புலவர்
தேற்றமும் சிறப்பும் அல்வழி யான (70)

என்ற சூத்திரத்தால் மேலன உணரலாம். 'எ' என்பது முன்னிலையேவலில் தொல்காப்பியர் காலத்திலும் முன்னரும் வழங்கப்பட்டிருத்தல் வேண்டும். எய், எறி, எடு, எழு, எண் முதலிய சொற்கள் 'எ' என்னும் முதல் நிலையிலிருந்து உருவாகி யிருக்க வேண்டும். அச்சொற்களின் ஆட்சிமிகுதியில் தனித்த 'எ' என்பதன் ஆட்சி மறைந்திருக்க வேண்டும்.

அவ்வாறே தேற்றப்பொருளில் எகரமும் சிறப்புப் பொருளில் ஒகரமும் ஆசிரியர்காலத்தில் ஆட்சியிலிருந்த இடைச்சொற்கள் எனக்கொள்ளலாம்.

எனவே, எகரமும் ஒகரமும் பெயர்க்கு இறுதியில் வருவன வல்ல என்பதும், முன்னிலைக்குத்தனி எழுத்துகளாக வருவன என்பதும், தேற்றப் பொருளில் எகரமும் சிறப்புப் பொருளில் ஒகரமும் இடைச்சொற்களாக வரும் என்பதும் மேற்காட்டிய சூத்திரத்தின் பொருள் என்னலாம்.

உரையாசிரியர்கள் யாவரும் எகர ஒகரம் முன்னிலையில் இறுதியில் வரும் என்பதற்கு எகர ஒகரக்குறிலைக் கொள்ளாமல் ஏகார ஓகாரங்களின் அளபெடையில் அடையாளமாக இட்டுக் காட்டப்படும் எகர ஒகரங்களாகக் கொண்டு உரைஎழுதி ஏஎக் கொற்றா, ஓஒக்கொற்றா என உதாரணமும் காட்டினர். அளபெடை நிலையில் இறுதியில்வரும் குறில்கள் வரிவடிவ அடையாளங்களேயாகும். ஒலிவடிவில் அவைகுறில்கள் அல்ல. ஒலிவடிவில் அவை நெடில்களின் நீட்டங்களே. அதனால் ஆசிரியர் எகர ஒகரம் என்றது அளபெடையில் வரிவடிவுக்காக எழுதப்படும் எகர ஒகரங்கள் அல்ல.

முன்னிலையில் எகரம் வருமொழி வல்லெழுத்துடன் புணரும் போது எக்கொற்றா என வல்லெழுத்து மிக்கு வரும். அவ்வாறே ஒக்கொற்றா என்பதும் ஆம். இவ்விதி ஆசிரியர் தொல்காப்பிய ரால் கூறப்பட்டு மறைந்திருக்க வேண்டும்.

தேற்றப் பொருளில் வரும் எகர இடைச்சொல்லும் சிறப்புப் பொருளில் வரும் ஒகர இடைச்சொல்லும் வல்லெழுத்து வரும் வழி அவ்வல்லெழுத்து மிகாமல் 'எ கொண்டான்', 'ஒ கொண் டான்' என்பதுபோல் வரும். இதை அறிவிக்கவே

தேற்ற எகரமும் சிறப்பும் ஒவ்வும்
மேற்கூ றியற்கை வல்லெழுத்து மிகா (71)

என்றார் ஆசிரியர். இதற்கு உரையாசிரியர்கள் தேற்றேகார அளபெடை எகரமும், சிற்பு ஓகார அளபெடை ஒகரமும் எனக் கொண்டு அவனே எ கொண்டான், ஓ ஒ கொண்டான் என உதாரணங்காட்டினர். உரையாசிரியர்கள் தத்தம் காலங்களில் இருந்த வழக்குகளைக் கொண்டே தொல்காப்பியத்துக்கு உரை யெழுதினர் ஆதலின் அவ்வாறு எழுதினர்.

**(ஒ) ஏகார வீற்றுச்சிறப்பு விதி**

**(1) அல்வழி**

எதிர்மறை, வினா, எண் என்னும் பொருள்களில் வரும் ஏகார இடைச்சொல் வல்லெழுத்துவரின் இயல்பாகப் புணரும்.
உ-ம் : யானே கொண்டேன்—எதிர்மறை (கொண்டிலன் எனப் பொருள் தருவது)

நீயே கொண்டாய்?—வினா.

சாத்தனே கொற்றனே தேவனே—எண்.

**(2) வேற்றுமை**

ஏகார ஈற்றுப்பெயர் வேற்றுமையில் வல்லெழுத்து மிக்கு முடிவதோடு (74) இடையில் எகரக்குற்றெழுத்து வரவும் பெறும்.
உ-ம் : ஏஎக்கொட்டில்.

சே என்பது சேமரத்தையும், ஆவினையும் குறிக்கும். மரப் பெயராகும் போது 'சேங்கோடு' என மெல்லெழுத்து மிகும் (76) ஆவினைக் குறிக்கும்போது 'சேவின்கோடு' என இன்சாரியை பெற்றுப்புணரும்.

**(ஓ) ஐகார வீற்றுச் சிறப்பு விதி**

அவை, இவை, உவை என்பன வற்றுச் சாரியை பெற்று அவையற்றுக் கோடு, இவையற்றுக் கோடு, உவையற்றுக்கோடு எனவரும். (79)

மரப் பெயர்களாகிய விசை, ஞெமை, நமை என்பன வல்லெழுத்துவரின் இனமான மெல்லெழுத்து மிக்குப் புணரும் உ-ம்: விசைங்கோடு, ஞெமைங்கோடு, நமைங்கோடு (80)

**பிற மரப்பெயர்கள்**

பனை + காய் = பனங்காய்—ஐ கெட்டு அம்சாரியை பெற்றது (81)

ஆவிரை + காய் = ஆவிரங்காய்—ஐ கெட்டு அம்சாரியை பெற்றது (81)

அரை + காய் = அரையங்காய்—அம்சாரியை மட்டில் பெற்றது (81)

பனை + கொடி = பனைக்கொடி—(83)

பனை + அட்டு = பனாஅட்டு—ஐ கெட்டு ஆகாரம் வந்தது (82)

சித்திரை நாட்பெயராகவும் திங்கட் பெயராகவும் வரும் நாட்பெயராயின் ஆன்சாரியை இடைவரச் சித்திரையாற் கொண்டான்' எனவும், திங்கட் பெயராயின் இக்கு என்னும் சாரியை இடைவரச் 'சித்திரைக்குக் கொண்டான்' எனவும் வரும். (84)

மழையென்பது மழையத்துக் கொண்டான், மழையிற் கொண்டான் என அத்து அல்லது இன் சாரியை பெற்று முடியும். (86)

**(ஔ) ஓகார வீற்றுச் சிறப்பு விதி**

**1 அல்வழி**

ஓகார இடைச்சொல் எதிர்மறை, வினா, ஐயம் என்னும் பொருள்களில் வருமொழி வல்லெழுத்துடன் புணரும்போது. யானோ கொண்டேன் (எதிர்மறை) நீயோ கொண்டாய் (வினா பத்தோ பதினோன்றோ (ஐயம்) என இயல்பாகப் புணரும். ஒழியிசைப் பொருளில் வரும் ஓகாரம் அப்படியே இயல்பாய் வரும். உ-ம்: கொளலோ கொண்டான். (இதன் பொருள் கொண்டு உய்யப் போனான் இல்லை என்பது.)

**(2) வேற்றுமை**

ஓகார ஈற்றுப்பெயர் கோ என்பது வேற்றுமையில் வல்லெழுத்து மிகுதலோடு இடையில் ஒகரக்குறில் பெறுதலும் உண்டு. (90) உ-ம்: கோஒக்கடுமை. அதுவே இல் என்னும் வருமொழியுடன் புணரும்போது ஒகரக்குறில் பெறாது. கோயில் என இயல்பாக வரும் (91) அதுவே ஒன் சாரியை பெற்று வருமொழி வல்லெழுத்தோடு கோஒன்கை எனப்புணர்தலும் உண்டு (92)

இங்குக் கூறப்பட்டயாவும் உயிர் மயங்கியல் சூத்திரங்களில் உள்ள கருத்துகள். இவற்றுக்கு மாறுபட்டு வருவனவும், இவ்வியலிற் கூறப்படாதனவாய் இவ்வியலிற் கூறப்பட்ட கருத்துகளுடன் பொருந்திவருவனவும் ஆகிய செய்திகளை உரையாசிரியர்கள் ஆங்காங்கே எடுத்து எழுதியுள்ளனர்.

இளம்பூரணரும் நச்சினார்க்கினியரும் பெரும்பாலும் ஒத்த கருத்தினராகவே உரைவகுத்துள்ளனர். இருவருமே "உருபிற்குச் சென்ற சாரியை பொருட்கண் சென்றவழி இயைபு வல்லெழுத்து வீழ்க்க" * என்னும் தொடரை ஆங்காங்கு ஆண்டுள்ளனர். அதனுடன் "நிலை மொழித்தொழிலை நிலைமொழித்தொழில் விலக்கும்"† என்னும் ஒரு கருத்தையும் இருவரும் இரண்டிடங்களில் ஆண்டனர். உயிர்மயங்கியலில் உரையாளரிடையே கருத்துமாறுபாடுகளுக்கு இடம் இல்லை.

**ஆ. சிவலிங்கனார்**

---

* இதன் விளக்கத்தைச் சூத்திரம் 219-இல் (பக் 60-ல்) காண்க

† சூத்திரம் 229 (பக் 84), 417 பார்க்க.

# தொல்காப்பியம் - எழுத்ததிகாரம்

## (உரைவளம்)

## உயிர் மயங்கியல்

### இளம்பூரணர்

இவ்வோத்து என்ன பெயர்த்தோ எனின், உயிர் ஈறு வன் கணத்தொடும் சிறுபான்மை பிறகணத்தொடும் மயங்கிப் புணரும் இயல்பு உணர்த்தலின் உயிர்மயங்கியல் என்னும் பெயர்த்து. மேல் உருபு புணர்ச்சி கூறி ஈண்டுப் பொருட் புணர்ச்சி கூறுகின்றமையின் மேலதனோடு இயைபுடைத்தாயிற்று.

### நச்சினார்க்கினியர்

உயிரீறு நின்று வன்கணத்தோடும் சிறுபான்மை ஏனைக் கணங்களோடும் மயங்கிப் புணரும் இயல்பு உணர்த்தினமையின், இவ்வோத்து உயிர் மயங்கியல் என்னும் பெயர்த்தாயிற்று. மேற் பெயரோடு உருபு புணருமாறு கூறிப் பெயர்வருவழி உருபு தொக்கு நின்ற பொருட்புணர்ச்சி கூறுகின்றமையின் உருபிய லோடு இயைபுடைத்தாயிற்று.

### சுப்பிரமணிய சாஸ்திரியார்

உருபியலின் பின்னர் உயிரை ஈற்றிற்கொண்ட பெயரும் வினையும் நிலைமொழியாய் இருக்க, நேரும் மாறுதல்களை இவ்வியலிற் கூறினர் ஆசிரியர். ஆகலின் இவ்வியலை உயிர் மயங்கியல் எனப் பெயரிட்டனர்.

உரைகாரர்கள் உருபியலில் பெயருக்கும் வேற்றுமை யுருபிற்கும் இடையில் வரும் மாறுதல்களை ஆசிரியர் வெளிப்படையாகக் கூறி, உருபேற்ற பெயர்க்கும், மேல் வரும் சொற்கும் இடையில் வரும் மாறுதல்களை 203 ஆவது சூத்திரத்துள்ள 'தேருங்காலை' என்றதனால் உய்த்துணர வைத்தனர் எனக் கொண்டனர். இவ்வாறு கொண்டதற்குக் காரணம் வேற்றுமை யுருபு வெளிப்படையாய் இருக்க, குறித்துவருகிளவியோடு நேரும் மாறுதல்கள் உருபியலிலே கூறப்பட்டிருத்தல் வேண்டும் என்ற நினைவினாற்போலும். ஆகலினன்றே உயிர்மயங்கியல், புள்ளிமயங்கியல், குற்றியலுகரப் புணரியல் இவற்றுள் வேற்றுமை வழிக் கூறப்பட்ட புணர்ச்சிகளை வேற்றுமைப் பொருட்புணர்ச்சி யெனக் கொண்டனர். அவ்வாறு கொள்ளாது ஆங்கெல்லாம் வேற்றுமை யுருபு நிற்கும் போதும், தொகும் போதும் வரும் புணர்ச்சிகளை ஆசிரியர் கூறினர் எனக் கொள்ளுதல் பொருந்தும். 'மண்ணினைக் கொணர்ந்தான்' என்ற விடத்து வல்லெழுத்து மிகுதியை "ஐகார இறுதிப் பெயர் நிலைமுன்னர்" (எழு. 281) என்ற சூத்திரத்தானும்; "கயிற்றாற் கட்டினான்" "காக்கையிற்கரிது" என்ற விடத்து னகரவொற்று றகரவொற்றாய்த் திரிந்ததை "னகார விறுதி" (எழு. 333) என்ற சூத்திரத்தானும், "ஊருக்குச் சென்றான்" என்ற விடத்து வல்லொற்று மிகுதியை "வன்றொடர் மொழியும்" (எழு. 415) என்ற சூத்திரத்தானும் "அவனது கால்" என்ற விடத்து இயல்பு புணர்ச்சியை "ஒற்றிடையினமிகா" (எழு. 413) என்ற சூத்திரத்தானும் கொள்ளல் தகும். மண்ணினை, கயிற்றான், ஊருக்கு, அவனது என்பனவற்றுள் முதல் இரண்டையும் முறையே ஐகார வீற்றுப் பெயராகவும், னஃகானீற்றுப் பெயராகவும், பின்னைய இரண்டையும் குற்றிய லுகரவீற்றுப் பெயராகவும் கொள்ளல் தகுமா எனின், தகும். எவ்வாறு எனின், "சொல்லெனப் படுவ பெயரே வினையே ஆயிரண் டென்ப" (சொல் 158) என்றும், "இடைச்சொற் கிளவியும் உரிச்சொற் கிளவியும், அவற்று வழி மருங்கிற் றோன்று மென்ப" (சொல். 159) என்றும் ஆசிரியர் கூறியிருக்கின்றமையான் என்க.

அகரம் முதல் ஔகாரம் வரை ஈற்றிற் கொண்ட நிலைமொழிச் சொற்களை முறையாகக் கொண்டு, ஆங்கு முதலில் வேற்றுமை அல்வழிப் புணர்ச்சியையும், அதன் பின்னர் வேற்றுமைப் புணர்ச்சியையும் கூறினர்.

ஆதலின், மேல் உருபு புணர்ச்சிகூறி ஈண்டும்

> பொருட் புணர்ச்சி கூறுகின்றமையின் மேல
> தனோடு இயைபுடைத்தாயிற்று''

என்ற இளம்பூரணர் கூற்றும்,

> ''மேற்பெயரோடு உருபு புணருமாறு கூறிப்
> பெயர் வருவழி உருபு தொக்கு நின்ற பொருட்
> புணர்ச்சி கூறுகின்றமையின் உருபியலோடு
> இயைபுடைத்தாயிற்று''

என்ற நச்சினார்க்கினியர் கூற்றும் பொருந்தா†. அன்றியும் 'பொருட் புணர்ச்சி' என்றதற்கு வேற்றுமை யுருபு நில்லாது அப்பொருள் நிற்குமிடத்து வரும் புணர்ச்சி எனப் பொருள் கொள்ளல் வேண்டும். அவ்வாறாயின் இவ்வியலிற் கூறப்பட்ட விதிகளில் நிலைமொழிவினையெச்சம், பெயரெச்சம், வினை முற்று, உரையசைக்கிளவி இவை முதலியனவாக இருத்தல் இயலாது. ஆசிரியரோ ''வினையெஞ்சு கிளவியும்'' (எழு. 205), ''சாவவென்னும் செயவென் எச்சத்திறுதி'' (எழு. 210), ''வாழியவென்னும் சேயென் கிளவி'' (எழு. 112), ''செய்யா வென்னும் வினையெஞ்சு கிளவியும்'' (எழு. 223) ''தன்தொழில் உரைக்கும் வினாவின் கிளவி'' (எழு. 225), ''வினையெஞ்சு கிளவியும்'' (எழு. 237) முதலியவற்றைக் கூறினர்; அன்றியும் உருபியலில் பகுதிக்கும் வேற்றுமையுருபிற்கும் இடையில் வரும் மாறுதல்களை விரிவாகக் கூறிய ஆசிரியர் ''யானையை+ கண்டான்'' முதலிய இடங்களிலுள்ள புணர்ச்சியை உரையிற் கோடலாற் கொள்ள வைத்தார் என்பது நேரிதாகாது.

## வெள்ளை வாரணனார்

உயிரீறு நின்று வன்கணத்தோடும் சிறுபான்மை ஏனைக் கணத்தோடும் மயங்கிப் புணருமாறு கூறினமையின் உயிர் மயங்கியல் என்னும் பெயர்த்தாயிற்று. மயங்கல்—கலத்தல்.

உயிரும் புள்ளியும் இறுதியாகிய உயர்திணைப் பெயர்கள் அல்வழி வேற்றுமையாகிய எல்லாவிடத்தும் இயல்பாம் எனவும்,

---

† அவர்தம் கருத்தறியாத **ஒருவர்** இருவர் உரையும் பொருந்தா என்பர்—திரு—அடிகளாசிரியர். (ஒருவர் என்றதுசுப்பிரமணியசாஸ்திரியாரை)

ஒரோவழி அஃறிணை விரவுப்பெயர் இயல்பாவனவுளவெனவும் தொகைமரபில் விதந்து கூறிய ஆசிரியர், அவையொழிந்த உயிரீற்று அஃறிணைப் பெயர்களையும், ஏனை வினை முற்று வினையெச்சம் பெயரெச்சங்களையும் ஈண்டு உணர்த்துவான் எடுத்துக் கொண்டு, அகரமுதல் ஔகாரம் வரை அவற்றை நெடுங்கணக்கு முறையான் வைத்துணர்த்துகின்றார். இவ்வியலில் 93 சூத்திரங்கள் உள்ளன. அவற்றுட்பல மாட்டேற்று முறையில் அமைந்தனவாகும். ஈற்றுவகையாற் கூறப்பட்ட விதிகள் எல்லாம் வல்லெழுத்து மிகுவன, நீட வருவன, குறுகவருவன, சாரியை பெறுவன, பிறவாறு திரிவன என்னும் இவ்வகைப் பகுப்புகளுள் அடங்குவனவாம்.

### இலக்குவனார்

The chapter that deals with the occurrence of phonemes when the standing word ends in vowel.

### கமில் சுவலபில்

Chapter on Exceptions (to the rules concerning vowels)

### சிவலிங்கனார்

இளம்பூரணரும் நச்சினார்க்கினியரும் உருபியலையடுத்து உயிர்மயங்கியலை வைத்தமைக்கு "மேல் உருபு புணர்ச்சி கூறி ஈண்டுப் பொருட்புணர்ச்சி கூறுகின்றமையின் மேலதனோடு இயைபுடைத்தாயிற்று" எனக் காரணங் கூறினர். அவரிருவரையும் சுப்பிரமணிய சாஸ்திரியார் மறுத்தார். அவர் மறுப்புக்குரிய காரணம், "உருபியலில் பெயர் உருபொடுபுணருமாறு கூறப்பட்டது. அதனால் அவ்வியல் உருபுணர்ச்சிபற்றிய இயலாகும். உயிர்மயங்கியலில் உருபின்றி உருபின் பொருள்படவரும் புணர்ச்சி கூறப்படுகின்றது. அதனால் உயிர்மயங்கியல் பொருட்புணர்ச்சியியல் எனப்படும்" என்று உரைகாரர் இருவரும் கருதியதாகக் கொண்டமையேயாகும்.

உருபு என்பது வேற்றுமையுருபுக்கே சிறப்புப் பெயர். (மற்றைய விகுதி முதலிய உருபுகள் விகுதியுருபு முதலியவாக அடையுடனே கூறப்படும்) அதனால் உருபுணர்ச்சி என்ற மாத்

திரத்தில் பெயர் உருபுடன் புணரும் புணர்ச்சி எனக் கொண்டனர் உரையாளர்.

வேற்றுமையுருபின்றிப் புணரும் நிலை வருமொழிப்புணர்ச்சி பொருளடிப்படையில் நிகழ்வதால் பொருட்புணர்ச்சி எனப்படும். பொருள் தொடரும் முறைகள், வேற்றுமைப் பொருள், வினைத் தொடர்பான வினைமுற்று வினையெச்சம் பெயரெச்சம் முதலிய பொருள், இடைச்சொற்பொருள், உரிச்சொற் பொருள் எனப்பல வாம். அவை உயிர்மயங்கியல் புள்ளிமயங்கியல் குற்றியலுகரப் புணரியல் ஆகிய இயல்களில் கூறப்படுகின்றன. அதனால் அம் மூன்றும் பொருள் பற்றிய புணரியல்களாம். எனவே அம்மூன்றும் பொருட்புணர்ச்சி பற்றியனவாம். அதனால்தான் உரையாளர் உருபியலை அடுத்து உயிர்மயங்கியல் அமைந்ததற்கு அவ்வாறு கூறினர். பொருட்புணர்ச்சி என்பது வேற்றுமைப் பொருட் புணர்ச்சி மட்டுமன்று; அல்வழிப் புணர்ச்சியும் பொருட் புணர்ச்சியே. எனவே சாஸ்திரியார் கூறியது பொருந்தாது. திரு அடிகளாசிரியர் "இவர் தம் கருத்தறியாத ஒருவர், இருவர் உரையும் பொருந்தா என்பர்" எனச் சாஸ்திரியாரைக் குறிப் பிட்டது பொருத்தமே*

## 1. அகர ஈறு

அல்வழியில் அகர ஈற்றுப் பெயர் புணருமாறு

†* 204. **அகர இறுதிப் பெயர்நிலை முன்னர்**
**வேற்றுமை அல்வழிக் கசதபத் தோன்றின்**
**தத்தம் ஒத்த ஒற்றிடை மிகுமே.** (1) *†

---

* தொல்காப்பியம்-எழுத்ததிகாரம்-இளம்பூரணர் உரை—அடிகளாசிரியர் பதிப்பு (1969) பக்கம். 196. உரைக் குறிப்பு.

† சூத்திரத்தின் முன் உள்ள எண் எழுத்ததிகாரத் தொடர் எண்; பின் உள்ள எண் உயிர் மயங்கியல் தொடர் எண்,

**ஆங்கில மொழி பெயர்ப்பு:**
**இலக்குவனார்:**

Before the noun ending in 'a'
If 'k, c, t and p' appear in non-case

relation (as the initial of the coming word)
The initial consonant doubles itself.

**தமிழ் சுவல பில்:**

After a noun ending in –a,
if k, c, t, (and) p occurs in non-case relation,
the respective initial consonant is doubled.

## பிற்கால இலக்கண நூல்கள்

**வீரசோழியம்:** 20

*ஆவியின் பின்*
*ஆற்றுந்திறல் வல்லினம் வந்திடில் அவற்றின் வருக்கம்*
*போற்றுமிவை யென்ற வல்லொற்று மெல்லொற்றும் புக்கிடுமே.*

† **நேமிநாதம்:** 16.

"வாய்ந்த உயிர்ப்பின் வருமெழுத்தின் வர்க்கத்தொற்
றேய்ந்து புகுதும் இயல்புமாம்"—

† **நன்னூல்;** 165.

*இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன்*
*க ச த ப மிகும் விதவாதன மன்னே.*

† **இலக்கண விளக்கம்:** 82.

*இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன்*
*வல்லெழுத் தியையின் அவ்வெழுத்து மிகுமே*

---

† இங்கு எடுத்தாண்ட பிற்கால இலக்கண ஒப்புமைச் சூத்திரங்கள் அல்வழி வேற்றுமை என்னும் இரண்டுக்கும் உரியன,

**இளம்.**

இத்தலைச் சூத்திரம் என் நுதலிற்றோவெனின், அகர வீற்றுப் பெயர்க்கு வன்கணத்தோடு அல்வழி முடிபு கூறுதல் நுதலிற்று.

இதன் பொருள்: அகர இறுதிப் பெயர்நிலை முன்னர்— அகரமாகிய இறுதியையுடைய பெயர்ச் சொல் முன்னர், வேற்றுமை அல்வழிக் க ச த பந் தோன்றின்—'வேற்றுமையல் லாத அல்வழிக்கண் க ச த ப முதன்மொழி வருமொழியாய்த் தோன்றின், தம் தம் ஒத்த ஒற்று இடைமிகும்—தத்தமக்குப் பொருந்தின அக் க ச த பக்களாகிய ஒற்று இடைக்கண்மிகும்.

உதாரணம் : விளக்குறிது, [2]மகக்குறிது, சிறிது, தீது, பெரிது என வரும்.

'ஒத்த ஒற்று' என்னாது 'தத்தம்' என்றதனான், அகர வீற்று உரிச்சொல் வல்லெழுத்துமிக்கும் மெல்லெழுத்துமிக்கும் முடியும் முடிபும், இடைச்சொற்களுள் எடுத்தோதாதவற்றின் முடிபும் அகரம் தன்னை உணர நின்றவழி முடியும் முடிபும் கொள்க.

உ-ம்; தடக்கை, தவக்கொண்டான் என இவை உரிச்சொல் வல்லெழுத்துப்பேறு. தடஞ்செவி தடந்தோள் என இவை மெல்லெழுத்துப் பேறு. ''மடவ மன்ற தடவு நிலைக் கொன்றை* என்பது இடைச்சொல் முடிபு. ‡அக்குறிது சிறிது தீது பெரிது என்பது தன்னை உணர நின்றவழி வல்லெழுத்து மிகுதி.

---

சுவடி வேறுபாடு: 1. வேற்றுமை யல்லாத வழிக்கண்
2. அதக்குறிது. (அத—ஒருவகை மரம்)

* இதில் மன்ற என்பது இடைச்சொல். மன்ற என்பதின் அகர வீறு தடவு என்னும் தகர வல்லின முதல்மொழி வர இச் சூத்திரத்தின்படி 'மன்றத்தடவு' என முடிய வேண்டுவது, மாறாக 'மன்ற தடவு' என இயல்பாய் முடிந்தது.

‡ அக்குறிது = அ என்னும் எழுத்துக்குறியது.

$அவ்யாது என்பதும் இடையெழுத்து மிகுதி. அவ்வழகிது†† [3]என்பதற்கு உயிர்க்கணத்து முடிபு.

**நச்.**

இச் சூத்திரம் அகர வீற்றுப் பெயர் அல்வழிக்கண் வன் கணத்தோடு புணருமாறு கூறுகின்றது.

இ—ள்: அகரமாகிய இறுதியையுடைய பெயர்ச்சொல் முன்னர், வேற்றுமையல்லாத விடத்துக் க ச த ப முதன் மொழி கள் வருமொழியாய்த் தோன்றுமாயின், தத்தமக்குப் பொருந்திய அக் க ச த பக்களாகிய ஒற்று இடைக்கண் மிகும், என்றவாறு.

உ-ம்: விளக்குறிது, நுணக்குறிது, அதக்குறிது; சிறிது, தீது, பெரிது என ஒட்டுக. இவை அஃறிணை *இயற்பெயராகிய எழுவாய், †வினைக்குறிப்புப் பண்பாகிய பயனிலையோடு முடிந்தன.

'ஒத்த' என்றமையாது 'தத்தம் ஒத்த' என்றதனான் அகர வீற்று உரிச்சொல் வல்லெழுத்துமிக்கும் மெல்லெழுத்துமிக்கும் முடியும் முடிபும், அகரந் தன்னை உணர நின்றவழி வன் கணத்தோடு மிக்கு முடியும் முடிபும் கொள்க; தடக்கை தவக் கொண்டான், வயக்களிறு, வயப்புலி, குழக்கன்று எனவும், தடஞ்செவி, சுமஞ்சூல் எனவும், அக்குறிது சிறிது தீது பெரிது எனவும் வரும். இனி இடைச்சொல் வல்லொற்றுப் பெற்று வருவன உளவேல் அவற்றையும் இவ்விலேசினால் முடித்துக் கொள்க.$

---

சு. வே. 3. என்பது (இதுவே சிறப்பு)

$ அ+யாது → அவ்யாது = அ என்னும் எழுத்து யாது

†† அ+அழகிது → அவ்வழகிது = அ என்னும் எழுத்து அழகுடையது.

* இயற்பெயர்—இயல்பாக இடப்பட்ட பெயர்.

† பண்படியாகப் பிறந்த குறிப்பு வினைமுற்று;

$ 'மன்ற தடவு நிலை' என்பதை இடைச்சொல் அகரவீறு வருமொழித் தகரத்துடன் சேரும்போது தகரம் மிகாது

**சுப்.**

"ஒத்த ஒற்றென்னாது தத்தம் என்றதனான் அகரவீற்று உரிச்சொல் வல்லெழுத்து மிக்கும் மெல்லெழுத்து மிக்கும் முடியும் முடிபும், இடைச்சொற்களுள் எடுத்தோதாதவற்றின் முடிபும், அகரம் தன்னை யுணர நின்றவழி முடியும் முடிபும் கொள்க. தடக்கை, தவக் கொண்டான் என இவை உரிச்சொல் வல்லெழுத்துப் பேறு... அக்குறிது... என்பது தன்னை யுணர நின்ற வழி வல்லெழுத்து மிகுதி; அவ்யாது என்பது இடையெழுத்து மிகுதி; அவ்வழகிது என்பது உயிர்க்கணத்து முடிபு" என்றனர் இளம்பூரணர். உரிச்சொல் என்பது **தாது** எனத் தெய்வச் சிலையார் வெளிப்படையாக எச்சவியலில் முதற்சூத்திரத்தில் விளக்கியிருக்கின்றமையானும், **தவ** என்றதை வினைப்போலி எனச் சேனாவரையர் கூறுகின்றமையானும், **தட** என்பது அவர் கூற்றில் பெயர்ப் போலி யாகு மாதலானும் இச்சூத்திரத்துள்ள 'பெயர்நிலை முன்னர்' என்றதனானே **தடக்கை** என்றதைக் கொள்ளவும், அடுத்த சூத்திரத்துள்ள வினையெஞ்சு கிளவி என்றதனானே **தவக்கொண்டான்** என்றதைக் கொள்ளவும் சாலும் எனத் தோன்றுகிறது.

அக்குறிது, அவ்யாது, அவ்வழகிது என்ற இடங்களில் **அ** தன்னேயே குறித்தலான், அது பெயராகுமே யன்றி இடைச் சொல்லாகாது. ஆனது பற்றியே நச்சினார்க்கினியர் "இனி இடைச்சொல் வல்லொற்றுப் பெற்று வருவன உளவேல் அவற்றையும் இவ்விலேசான் முடித்துக் கொள்க" என்றனர் போலும். அவ்வாறாயினும், "அகரம் தன்னை யுணர நின்றவழி வன்கணத்தோடு மிக்கு முடியும் முடிபும் கொள்க" என ஏன் அவர் கூறினார் என்பது விளங்கவில்லை. ஆகலின் உரைகாரர்கள் கூற்று ஆராய்தற்பாலன. (அவ்யாது என்பது அவ்யாழ் போன்றதைப் பார்த்து ஒற்றுமைப் போலியான் வந்திருத்தல் கூடும்)

---

இயல்பாக வந்ததற்கு உதாரணம் காட்டினார் இளம்பூரணர்,
அகரவீற்று இடைச்சொல் வல்லினத்தின் முன் மிக்கதற்கு "**மன்றப்புகன்று** மாமழை நோக்கி" எனவரும் பெருங் கதை (3-15-51.) வரியினைக் காட்டுவர், திரு— அடிகளாசிரியர்.

*சிவ.*

சுப்பிரமணிய சாஸ்திரியார் "தடஎன்பது உரிச்சொல் ஆதலினாலும், உரிச்சொல் தாது எனத் தெய்வச்சிலையார் குறிப்பிடுவதாலும் (எச்ச வியல். 1) தட என்பது பெயர்ப்போலி யாகும் ஆதலினாலும் தடக்கை என்றதனை இச்சூத்திரத்தில் உள்ள 'பெயர்நிலை மூன்னர்' என்பதனாலேயே கொள்ளலாம் என்றும், தவ என்பது வினைப் போலி எனச் சேனாவரையர் கூறுவதால் தவக் கொண்டான் என்பதை அடுத்துவரும் "வினையெஞ்சு கிளவியும்" (எழு. 205) என்பதனாற் கொள்ள லாம் என்றும் கூறினார்.

தாது என்பது பெயர்க்கும் வினைக்கும் உரியதே. "பசப்பு நிறன்" (உரியியல் 10) என்பதுபோலும் உரிச்சொற்கள் பெயர் நிலையினவாயினும் "உகப்பே உயர்தல்" (உரி. 8) என்பது போலும் சொற்கள் வினை நிலையினவாதல் காணலாம். வினைக்கும் ஒரு பெயர் உண்மையின் வினைச் சொல்லின் தாதுவும் பெயரே எனக் கொள்ளின் என்னாம் எனின், அவ்வாறாயின் பெயரியல், வினையியல் என வேண்டா; பெயரியலிலேயே வினைகளையும் அடக்கிக் கூறிவிடலாமே? ஆசிரியர் தாதுவை அடிப்படையாக வைத்தோ அல்லது தாதுவுக்கோ இலக்கணம் கூறினாரல்லர். பெயர், வினை, இடை, உரி என முழுவடிவ அமைப்புகளுக்கே இலக்கணம் கூறினார். அதனால் தட என்பதைப் பெயராகக் கொள்ளாமலும், தவ என்பதை வினையாகக் கொள்ளாமலும் உரிச்சொல்லாகக் கொண்டு உரையாளர் கூறியது பொருத்தமே. தட என்றது பெயர்ப் போலி என்றும் தவ என்றது வினைப்போலி என்றும் கூறியதாலேயே அவை பெயர் வினைகளல்ல என்பதைக் காணலாம்.

'அக்குறிது' என்பதில் அகரம் பெயராதலின் உரையாளர் "அகரம் தன்னை யுணர நின்றவழி வன்கணத்தோடு மிக்கு முடியும் முடிபு கொள்க" எனக்கூற வேண்டுவதில்லை என்றார் அவர். அவர் கூற்று பொருந்துவதே. உரையாளர் "அகர இறுதிப் பெயர்" என்றது விள முதலிய ஈரெழுத்து மொழி முதலியவற் றைக் குறிக்கும் எனக் கொண்டமையே காரணம் ஆம். அன்றியும் அடுத்து 'சுட்டின் முன் வலி' மிகும் (205) எனக்கூறலின் அதனிற்

பிரித்துக் காட்டி அஎன்பது தன்னையே யுணர்த்தும் பெயராம் என்பதைத் தெரிவிக்கவும் கூறினர் என்றும் கொள்ளலாம்.

"ஒத்த ஒற்றென்னாது 'தத்தம்' என்றதனால்" என இளம் பூரணரும், "ஒத்த என்றமையாது 'தத்தம் ஒத்த' என்றதனால்" என நச்சினார்க்கினியரும் கூறியனவற்றுக்குப் பதிலாக, "தத்தம் ஒற்று என்றமையாது ஒத்த ஒற்று என்றதனால்" என்றெழுதி யிருப்பின் சிறக்கும். 'தத்தம் ஒத்த ஒற்று' என்ற தொடரில் 'தத்தம்' என்பது இலேசு அன்று; 'ஒத்த' என்பதே இலேசாகும். க ச த பத் தோன்றின் தத்தம் ஒற்று மிகும் என்றால் க ச த ப ஒற்றுகளே கொள்ளல் வேண்டும்; வேறு கொள்ள முடியாது. ஆனால் ஒத்த ஒற்று என்றால் க ச த பக்களுக்கு இனம் ஒத்த ஒற்று என்று ங ஞ ந ம என்னும் ஒற்றுகளையும் கொண்டுவிட நேரும். அதனால் இதில் தேவையற்ற சொல் 'ஒத்த' என்பதே.

*அகர ஈற்று வினைச் சொல்லும் இடைச்சொல்லும்:*

205 *வினையெஞ்சு கிளவியும் உவமக் கிளவியும்
என என் எச்சமும் சுட்டின் இறுதியும்
ஆங்க என்னும் உரையசைக் கிளவியும்
ஞாங்கர்க் கிளந்த வல்லெழுத்து மிகுமே (2)

**ஆ. மொ: இல.**

Adverbial partieiple, partieiple of comparison,
'Ena' the eliiptieal form, demonstrative ending and
'Ānga', the connecting participle in prose
All these, have the hard consonants doubled.

**க. சு.**

Gerunds, words of comparison,
the elliptical form ena, demonstrative endings,
and āṅka the connective Prose-particle, all these have
the plosives doubled as (in the cases) mentioned above

---

* இச்சூத்திரம் ஒப்பக் கூறல் என்னும் உத்தி. 'நாங்கள்... மிகுமே' இத்தொடர் வந்தது கொண்டு வாராத துரைத்தல் (தொல். பொருள். 665. பேரா)

**பி. இ. நூ.**

**முத்து** 4. 74, 75

*அகரச் சுட்டும் ஆங்கவும் உவமையும்*
*எனவென் எச்சமும் இருவழியினு மாகும்.*

*வினையெஞ்சு கிளவியும் மிகும்என மொழிப*

**இளம்.**

இது அகரவீற்று வினைச்சொல் முடிபும் இடைச் சொல் முடிபும் கூறுதல் நுதலிற்று.

இ—ள் : வினையெஞ்சு கிளவியும் உவமக் கிளவியும்—அகர வீற்று வினையெச்சமாகிய சொல்லும் உவமச் [1]சொல்லும், என என் எச்சமும் சுட்டின் இறுதியும்-என என்று சொல்ல வருகின்ற எச்சச் சொல்லும் சுட்டாகிய அகரவீறும், ஆங்க என்னும் உரையசைக் கிளவியும்—ஆங்க என்று சொல்லப்படும் உரையசையாகிய சொல்லும், ஞாங்கர்க் கிளந்த வல்லெழுத்துமிகும்—[2]மேலைச் சூத்திரத்துச் சொன்ன வல்லெழுத்துமிக்கு முடியும்.

உ—ம் : உணக்கொண்டான், தினக்கொண்டான்; சென்றான், தந்தான், போயினான் என்பன வினையெச்சம். மேலன வெல்லாம் இடைச்சொல். புலிபோலக் கொன்றான் என்பது உவமம். கொள்ளெனக் கொண்டான் என்பது எனஎன் எச்சம். அக்கொற்றன்; சாத்தன், தேவன், பூதன் என்பன சுட்டின் இறுதி. ஆங்கக் கொண்டான் என்பது உரையசைக் கிளவி.

**நச்:**

இஃது அகரவீற்று வினைச் சொல்லும் இடைச்சொல்லும் புணருமாறு கூறுகின்றது.

இ—ள் : வினையை ஒழிபாகவுடைய அகர ஈற்று வினைச் சொல்லும், உவமஉருபாய் நின்ற அகர ஈற்று இடைச் சொல்லும், என என்னும் வாய்பாட்டால் நின்ற அகர ஈற்று இடைச்சொல்லும், சுட்டாகிய அகர ஈற்று இடைச் சொல்லும், ஆங்க என்னும்

---

சு. வே : 1. உவமமாகிய சொல்லும்
2 முன்னிடத்துச்

அகரஈற்று உரையசை யிடைச்சொல்லும் முன்னர்க் கூறிய வல்லெழுத்துமிக்கு முடியும், எ—று.

உ—ம் : உண தவ சாவ எனநிறுத்திக் கொண்டான் சென்றான் தந்தான்போயினான் என வல்லெழுத்துக் கொடுத்துமுடிக்க. இவ்வினையெச்சம் ஒழிந்தன எல்லாம் இடைச்சொல் என்றுணர்க. புலிபோலக் கொன்றான் சென்றான் தந்தான் போயினான் எனவும்; கொள்ளெனக் கொண்டான் சென்றான் தந்தான் போயினான் எனவும்; அக்கொற்றன் சாத்தன் தேவன் பூதன் எனவும்; ஆங்கக் கொண்டான் சென்றான் தந்தான் போயினான் "ஆங்கக் குயிலு மயிலுங் காட்டிக் கேசவனை விடுத்துப் போகியோளே" எவைும் வரும். உவமம் வினையெச்ச வினைக் குறிப்பேனும் ஒன்றனோடு பொருவப்படுதல் நோக்கி உவமவியலின்கண் ஆசிரியர் *வேறுபடுத்துக் கூறினார். என என்னும் எச்சமும் இருசொல்லையும் இயைவிக்கின்ற நிலைமையான் இடைச் சொ.ஓ லோத்தினுள் வேறோதினார். ஆங்க என்பது ஏழன் உருபின் பொருள்பட வந்ததல்லாமை 'ஆங்க என்னும் உரையசை' என்ற தனாலும் 'ஆங்கவுரையசை' என்னும் இடையியற் சூத்திரத் தானும் (29) உணர்க. இவை இயல்புகணத்துக்கண் முடியும் முடிபு "ஞநமயவ" (எழு 14 ) எனபுழிக் கூறியதேயாம். அவை தாவ, புலிபோல, கொள்ளென, ஆங்க என நிறுத்தி ஞநமயவ முதலிய மொழி ஏற்பன கொணர்ந்து புணர்த்தி இயல்பாமாறு ஒட்டிக் கொள்க. சுட்டு மேற் கூறும்.

**சுப்.**

சுட்டை இடைச் சொல்லாக நச்சினார்க்கினியர் கூறுதல் பொருந்தாது. அவற்றைச் சுட்டுப் பெயரின் தாதுவாக மொழி நூல் வல்லார் கொண்டனர்.

அக்கொற்றன் என்பது தொகைச் சொல்; அதற்கு விரி 'அவனும் அவனே, கொற்றனும் அவனே' என்பது இளம்பூரணர் கொள்கையென்பது, "ரஃகானும் அதுவே ஒற்றும் அதுவே; பகர

---

* வேறுபடுத்திக் கூறுதல் : உவமையிடைச் சொல்லாகக் கொண்டு வினைச் சொல்லினின்றும் வேறுபடுத்திக் கூறுதல்.

மும் அதுவே இறுதியும் அதுவே'' (தொல். எழு. 7 இளம்) என்ற அவரது தொடரால் விளங்கும்.

## பிறகுறிப்புகள்.

"உவ, இவ என்னும் அகர வீற்றுச் சுட்டுச் சொல் வல்லினம் வர முடிதலையும் இந்நூற்பா விதியாலே அமைத்துக் கொள்க: "உவக்காண் எங்காதலர் செல்வார், இவக்காண் என்மேனி பசப் பூர்வது'' (குறள் 1185), "உவக்காண் தோழி அவ்வந்திசினே'' (குறுந். 367)''—திரு—அடிகளாசிரியர்.

"போல முதலிய உவமச் சொல் வினையெச்சவினைக் குறிப் பாகவும் கொள்ளப்படுமாயினும் உவமைப் பொருள் தந்தும் நிற்றலின் ஈண்டு உவமக்கிளவியும் என்றார். போல முதலிய வினையெச்ச வினைக் குறிப்பு என்பது நச்சினார்க்கினியர் கருத்து. சேனாவரையர் முதலியோர் கருத்து அன்னதன்று.—கணேசய்யர்

சுட்டின் முன் ஞநம மெய்,

206. சுட்டின் முன்னர் ஞநமத் தோன்றின்
ஒட்டிய ஒற்றிடை மிகுதல் வேண்டும். (3)

**ஆ. மொ: இ.**

Before the demonstrative (a) if, ñ, n̲ and m appear the respective consonants double it self

**க சு.**

If ñ, n (and) m appear after the demonstrative, the respective consonant must be doubled.

**பி. இ. நூ.**

**வீர. 24.**

ஆவிக் குறிற்பின் ஞநமத் தோற்றின் அவ்வொற்றிடையாம்.

**நன். 163.**

......முச்சுட்டின் முன்னர்......
பிறவரின் அவையும்......தோன்றுதல் நெறியே.

இ. வி. 80

......முச்சுட்டின் முன்னர்......
பிறவரின் அவையும்......நிலவலும் நெறியே.

**இளம்.**

இது, அகரச்சுட்டு மென்கணத்தோடு முடியுமாறு கூறுதல் நுதலிற்று.

இ-ள்: சுட்டின் முன்னர் ஞ ந மத்தோன்றின்—அகரச் சுட்டின் முன்னர் ஞ ந மக்கள் முதலாகிய மொழி வருமொழி யாய்த் தோன்றின், ஒட்டிய ஒற்று இடைமிகுதல் வேண்டும்— தத்தமக்குப் பொருந்திய ஒற்று இடைக்கண்ணே மிகுதலை வேண்டும்.

உ-ம்: அஞ்ஞாலம்; நூல், மணி என வரும்.

**நச்.**

இது 'ஞ ந ம ய வ' (எழு. 144) என்னும் சூத்திரத்தான் மென்கணம் இயல்பாகும் என முற்கூறியதனை விலக்கி மிக்கும் முடிக என்றலின் எய்தியது விலக்கிப் பிறிது விதி வகுக்கின்றது.

இ-ள்: அகரச்சுட்டின் முன்னர் ஞ ந மக்கள் முதலாகிய மொழிவரின், தத்தமக்குப் பொருந்தின ஒற்று இடை மிகுதலை விரும்பும் ஆசிரியன்; எ—று.

உ-ம்: அஞ்ஞாண், அந்நூல், அம்மணி எனவரும். ஒட்டிய என்றதனான் அஞ்ஞெளிந்தது, அந்நன்று, அம்மாண்டது என அகரந் தன்னையுணர நின்ற வழியும் மிகுதல் கொள்க.

**சுப்.**

'சுட்டின்' என்றாரேனும் அதிகாரத்தான் அகரச் சுட்டைக் கொள்ளல் வேண்டும்: "ஒட்டிய என்றதனான் அஞ்ஞெளிந்தது, அந்நன்று, அம்மாண்டது என அகரந்தன்னையுணர நின்ற வழியும் மிகுதல் கொள்க" என்றனர் நச்சினார்க்கினியர். 'அ நன்று,

என்றவிடத்து 'அ' எழுவாயாகவும் 'நன்று' பயனிலையாகவும் இருத்தலின் அவை விட்டிசைத்தலே சிறக்கும்†

சுட்டின் முன் யவ மெய்

**207. யவமுன் வரினே வகரம் ஒற்றும் (4)**

**ஆ. மொ: இல.**

If 'y' and 'v' appear as initials of the coming word 'V' stands between them

**க. சு.**

If y and v follow, v is inserted

**பி. இ நூ.**

**வீர. 24.**

ஆவிக்குறிற்பின்....வத் தோன்றின் அவ்
வொற்றிடையாம்.
மேவிய பன்னொன்று தோன்றில் வவ்வாம்.

நன் 163

......முச்சுட்டின் முன்னர்......
......யகரமும் எய்தின் வவ்வும்
பிறவரின் அவையும்......
...............தோன்றுதல் நெறியே.

**இ. வி. 80.**

.........முக்சுட்டின் முன்னர்
......யகரமும் எய்தின் வவ்வும்
பிறவரின் அவையும்......நிலவலுப் நெறியே

**முத்து. 4. 77**

வயவரின் வகரம் வருமென மொழிப

---

† அ நன்று=எழுவாய்த் தொடர். அந்நன்று=சுட்டிடைச் சொற்றொடர். நன்று=நன்றான பொருள். அந்நன்று= அந்த நன்றான பொருள்.

**இளம்.**

இது, சுட்டு இடைக்கணத்தோடு முடியுமாறு கூறுதல் நுதலிற்று.

இ—ள்: யவமுன்வரின் வகரம் ஒற்றும்—யகர வகரம் முதல் மொழியாகச் [1]சுட்டின் முன்னே வரின் இடைக்கண் வகரம் ஒற்றாகும்.

உ-ம்: *அவ்யாழ், அவ்வளை எனவரும்.

**நச்.**

இதுவுமது.

இ—ள்: யகர வகர முதன்மொழி அகரச் சுட்டின் முன்னே வரின், இடைக்கண் வகரம் ஒற்றாம், எ—று.

உ-ம்: அவ்யாழ், அவ்வளை எனவரும்.

வருமொழி முற்கூறியவதனால் அகரந் தன்னை யுணர நின்ற வழியும் வகரம் மிகுதல் கொள்க. அவ்வளைந்தது எனவரும்.

---

சு. வே: 1. அகரச்சுட்டின்.

* "அந்தயாழ் என்ற சொற்களைத் தொகையாக்கும் போது அவை அ+யாழ் என ஆகும். அதற்குவிதி ஐம்பாலறியும் பண்பு தொகுமொழியும் (எழுத். 482) என்றது ஆகும்"—சுப்பிரமணிய சாஸ்திரியார். இக் குறிப்பு தவறு. எழுத்ததிகாரப் புறனடைச் சூத்திரமான "உயிரும் புள்ளியும் இறுதியாகி" எனத் தொடங்கும் சூத்திரம் புணரியல்நிலையிடைப் பிரித்துப் புணர்க்கப் படாத சில தொடர்களைக் கூறுவது. பண்புந்தொகை, வினைத்தொகை முதலியன பிரித்துப் புணர்க்கப்படா என்னும் அச்சூத்திரம். அச்சூத்திர விதியைப் பிரித்துப் புணர்க்கப்படும் விதியில் காட்டிய அவ்வாழ் என்பதற் கேற்றுதல் தவறுடையதாம். அவ்யாழ் என்பது பண்பு தொகு மொழியும் அன்று; அன்றியும் அந்த என்பது 'அ' எனத் திரிவதன்று; 'அ' என்பதே அந்த எனப் பெயரெச்சவடிவு கொள்ளும்—**சிவ.**

சுட்டின் முன் உயிர்.

**208.** உயிர்முன் வரினும் ஆயியல் திரியாது (5)

**ஆ. மொ: இல.**

Even if vowel comes, the appearance of 'V' is not affected.

**க. சு.**

Even if a vowel follows, that rule is not affected.

**பி. இ. நூ.**

**வீர. 24.**

ஆவிக்குறிற்பின் ஞ நம வத் தோன்றின் அவ்வொற்றிடை யாம்.

**நன். 163.**

............... முச்சுட்டின் முன்னர்
உயிரும்........... எய்தின் வவ்வும்
..................... தோன்றுதல் நெறியே.

**இல. வி.**

...............முச் சுட்டின் முன்னர்
உயிரும்......... எய்தின் வவ்வும்
.................. நிலவலும் நெறியே.

**முத்து. 4. 78.**

ஆவிவரினும் அவ்வியல் நிலையும்.

**இளம்.**

இது, அச்சுட்டு உயிர்க்கணத்தொடு முடியுமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ—ள்: உயிர்முன் வரினும் ஆ இயல் திரியாது —உயிர் முதல்மொழி [1]அகரச் சுட்டின் முன்னர் வரினும் மேற்கூறிய வகரம் மிக்கு முடியும் [2]அவ்வியல்பில் திரியாது.

---

சு. வே:

1. சுட்டின் முன்னர்
2. இவ்வியல்பில்

உ-ம்: [3]அவ்வாடை, [4]அவ்வாண்டை என ஒட்டுக.

இடை மிக்க வகரத்தினை 'நெறியியல்' என்ற இலேசினான் (எழு. 161) †இரட்டுதல் கூறினமையின், அது நிலைமொழித் தொழில் என்பதுவே கூறப்பட்டது. 'திரியாது' என்றதனானே, மேற் (209) சுட்டு நீண்டவழி யகரத்தோடு கொள்க.

**நச்.**

இதுவும் அது.

இ—ள்: உயிர்கள் அகரச் சுட்டின்முன் வரினும் முற்கூறிய வகரம் மிக்கு வரும் இயல்பில் திரியாது; எ—று.

உ-ம்: அ என நின்ற சுட்டின் முன்னர் அடை என வருவித்து வகரம் ஒற்றித் தன்னுரு இரட்டி உயிர் ஏற்றி, அவ்வடை அவ்வாடை, அவ்விலை, அவ்வீயம், அவ்வுரல், அவ்வூர்தி, அவ்வெழு, அவ்வேணி, அவ்வையம், அவ்வொழுக்கம், அவ்வோடை, அவ்வௌவியம் என ஒட்டுக.

'நெடியதன் முன்னர்' (எழு. 161) என்பதனுள் 'நெறியியல்' என்றதனான் இரட்டுதல் கூறினமையின் அது, நிலைமொழித் தொழில் என்பது பெறப்பட்டது. வருமொழி முற்கூறியவதனால் அகரம் தன்னை யுணர நின்ற வழியும் வகரம் மிகுதல் கொள்க. அவ்வழகிது எனவரும். 'திரியாது' [5]என்றதனான் மேற்சுட்டு நீண்டவழி [6]வகரக்கேடு கொள்க.

---

சு. வே :

3. அவ்வடை
4. அவ்வாடை
5. எனக் கூறினமையின்
6. வகரக்கேடும்.

† 'நெடியதன் முன்னர்' எனத் தொடங்கும் சூத்திரத்தில் குறியதன் முன்னர் ஒற்று, உயிர் முதல் மொழி வருமிடத்துத் தன் உருஇரட்டும் என்பது கூறப்பட்டது. மண் + அகல் = மண்ணகல் எனக் காண்க. மண் என்பதின் ணகரமே இரட்டுதலில் அவ்விதி நிலைமொழித் தொழிலாகும். அ + ஆடை = அவ் + ஆடை = அவ்வாடை என வருமிடத்தில் அ முன் வகரம் இடைவந்து **அவ்** என நின்று பின்னர் அது நிலைமொழியாகி, ஆடையுடன்

**சுப்.**

"நெறியியல்" என்ற இலேசினான் (எழு. 161) இரட்டுதல் கூறினமையின் அது நிலைமொழித் தொழில் என்பதுவே கூறப் பட்டது" என இளம்பூரணர் கூறினர். இவ்வாறு கொள்ளாது உலக வழக்கை யொட்டி அதனைக் கொள்ளல் தகும் என அச்சூத்திரவுரையிற் கூறியது காண்க.

"திரியாது என்றதனானே மேற்சுட்டு நீண்டவழி யகரத் தோடு கொள்க" என்றனர் இளம்பூரணர். இவ்வாறு கொள்ளாது ஆயிருதிணையின் (சொல். 1) ஆயிரண்டு (எழு. 85) முதலிய ஆசிரியர் வழக்கே அதற்கு ஞாபமாகக் கொள்ளல் கூடும்.

"வருமொழி முற்கூறியவதனான் அகரந்தன்னை யுணர நின்ற வழியும் வகரம் மிகுதல் கொள்க; அவ்வழகிது என வரும்" என்றார் நச்சினார்க்கினியர். தன்னையுணர நிற்கும் அகரம் பெயராகுமேயன்றிச் சுட்டாகா தென்க.

**சிவ.**

"நெறியியல் என்ற இலேசினான்......கூறப்பட்டது" என்னும் இளம்பூரணர் உரையைச் சுப்பிரமணிய சாஸ்திரியார், "இவ்வாறு கொள்ளாது......கூறியது காண்க" எனக் கூறியதில் குறிப்பிட்ட கருத்து வருமாறு :

> "ஆறாம் விரல் புதிதாக முளைத்த கையையுடையோன் வேறு மனிதன் ஆகாமையானும், இடங்களுக்குத் தக்கவாறு ஒருவனுக்குச் சில அணிகலன்கள் முதலியன அவனுடலிற் றோன்றினும் அவனுடல் வேறாகாமையானும், அவ்வடை என்பனவற்றை உலக நியாயங்களாற் கொள்ளுதல் பொருந்துமாகலின் உரைகாரர்கள் (இளம்., நச்.) மிகையாற் கொள்ளுதல் வேண்டுவதன்று" (தொல். எழு. 161 குறிப்புரை)

---

சேரும்போது இரட்டித்து அவ்வாடையென வந்தது. இங்கு இரட்டியதும் நிலைமொழித் தொழிலாகக் கொள்ள வேண்டும். இதனை அச்சூத்திரத்தில், "நெறியியல் என்றதனால் குறியதன் முன்னர் நின்ற ஒற்றின்றிப் புணர்ச்சியாற் பெற்றதும் இரட்டுமென வுணர்க; அவ்வடை என வரும்" எனக் குறித்தார் இளம்பூரணர். அதனையே மீண்டும் சுட்டிக்காட்டினார்.

மண்+அகல்→மண்ண்+அகல்=மண்ணகல் என வருவதற்கு "நெடியதன் முன்னர் என்னும் சூத்திரத்தில்" (எழு. 611) "குறியதன் முன்னர்த் தன்னுருபு இரட்டலும்" என விதிகூறப் பட்டது. அவ்வாடை என்பது அ+ஆடை எனப்பிரிக்கப்பட்டு, "உயிர் முன்வரினும் ஆயியல் திரியாது" என்னும் இச்சூத்திரத் தின் விதிப்படி வகரஒற்று சேர்த்து, அவ்+ஆடை என நிறுத்திப் பின்னர் அவ் என்பதன் வகரம் இரட்டித்து அவ்வாடை எனப் புணர்க்கப் பட்டது. மண் என்பது இயல்பாகவே குறியதன் முன்னர் ஒற்றான சொல். அவ் என்பது புணர்ச்சி விதியால் வந்த குறியதன் முன்னர் ஒற்றான சொல். இவ்விரண்டும் குறிய தன் முன்னர் ஒற்றான சொற்களாயினும் மண் என்பதன் ணகரம் இரட்டுவதை "நெடியதன் முன்னர்" என்னும் சூத்திரத்தின் "குறியதன் முன்னர்த் தன்னுரு பிரட்டலும்" என்னும் விதியானும், அவ் என்பதன் வகரம் இரட்டுதலை அச்சூத்திரத்தில் வரும் 'நெறியியல்' என்னும் இலேசானும் கொள்ளல் வேண்டும். இது இளம்பூரணர் நச்சினார்க்கினியர் கருத்து.

அவர் கூறிய உவமை தெளிவில்லாதது; தவறுடையதுமாகும். இயற்கை மனிதனை நோக்க ஆறாம் விரல் பெற்ற மனிதன் மாறுபட்டிருப்பினும் அவனும் மனிதனே என்பது உலக நியாயம்: அதுபோல அ என்னும் சுட்டு வகர மெய் பெற்றாலும் வேறு சொல்லாகாது சுட்டெனவே படும். இவ்வாறு அமைவது அவர் காட்டிய உவமை விளக்கம். இவ்விளக்கத்துக்கும் அவர் மறுப்புக் கும் யாதும் இயைபில்லை. ஒரு கால் பின் வருமாறு கருத்து கொண்டிருக்கலாம் அவர்; அதுவாயின் ஓரளவு பொருந்தும்.

"புதிதாக ஆறாம் விரல் முளைத்தவனையும் மனிதன் என்று உலகம் கொள்ளுதல் போல அகரச்சுட்டு வகரமெய் பெற்றிருந் தாலும் அதனையும் குறியதன் முன்னர் ஒற்றுச் சொல் என்றே கொள்ளல் வேண்டும். அதனால் அவ் என்பது 'அவ்வ்' என இரட்டுதற்கு "குறியதன் முன்னர்த் தன்னுரு பிரட்டலும்" என்னும் விதியே கொள்ள வேண்டுமே தவிர அவ் என்பதை வேறு சொல்போல் கொண்டு 'நெறியியல்' என்னும் இலேசினாற் கொள்ள வேண்டுவதில்லை." என்பது சாஸ்திரியார் கருத்துப் போலும்.

"நெடிய தன் முன்னர்" என்னும் சூத்திரம் இயற் சொல்லுக் குரியது. அவ் என்பது இயற்சொல் அன்று. அதனால் இலேசினால் இரட்டுதல் கொள்வதே சிறப்பு. சாஸ்திரிபார் கருத்து ஏற்பதற் கில்லை,

செய்யுளில் சுட்டு நீளுதல்

**209. நீட வருதல் செய்யுளுள் உரித்தே** (6)

**ஆ. மொ: இல.**

The lengthened form (of the demonstrative 'a') is appropriate to appear in poetry

**க. சு.**

It is appropriate that the lengthened forms occur in poetry.

**பி. இ. நூ.**

**நன்.** 163.

சுட்டு நீளின் யகரமும் தோன்றுதல் நெறியே

**இ. வி.** 80

சுட்டு நீடலும் யகாரம் நிலவலும் நெறியே

**முத்து. பு. 79**

யாப்பினுள் அ, ஆ வாகும் என்ப

**இளம்.**

இது, [1]அச்சுட்டு செய்யுளுள் முடியுமாறு கூறுதல் நுதலிற்று.

இ—ள்: நீடவருதல் செய்யுளுள் உரித்து— [2]அகரச்சுட்டிற்கு நீளும்படியாக வருதல் செய்யுளிடத்து உரித்து.

உ-ம்: "ஆயிருதிணையி னிசைக்குமன சொல்லே" (கிளவி யாக்கம். 1) எனவரும்

வருமொழி வரையாது கூறினமையின், இம்முடிபு வன்கணம் ஒழிந்த கணம் எல்லாவற்றோடும் சென்றது. உதாரணம் பெற்ற வழிக் கொள்க.

---

சு. வே;

1. அகரச்சுட்டு
2. அகரச்சுட்டு, அச்சுட்டு

**நச்.**

இஃது எய்தியது விலக்கிச் செய்யுட்கு ஆவதோர் விதி கூறு கின்றது.

இ—ள்: அகரச்சுட்டு நீட வருதல் செய்யுளிடத்து உரித்து; எ—று.

உ-ம்: "ஆயிரு திணையின் இசைக்குமன சொல்லே" (சொல். 1) "ஆயிரு பாற் சொல்" (சொல். 3) எனவரும்.

இது வருமொழி வரையாது கூறலின் வன்கணம் ஒழிந்த கணம் எல்லாவற்றோடும் சென்றது. அவற்றிற்கு உதாரணம் வந்த வழிக் காண்க. இந்நீட்சி இருமொழிப் புணர்ச்சிக் கண் வருதலின் *நீட்டும் வழி நீட்டல் ஆகாமை யுணர்க.

**சுப்.**

பொருள்: அகரச்சுட்டு நீண்டு வருதல் செய்யுளின்கண் உள்ளது.

உ-ம்: †ஆயிரண்டு (எழுத். 85) ஆவறு மூன்று (சொல் 56) ஆங்கண் (கற்பு. 31) ஆவகை (களவு. 22) ஆவயின் (கற்பு. 8).

ஈண்டு அகரம் சுட்டு இவை அதிகரித்தன.

"வருமொழி வரையாது கூறினமையின்......கண்டு கொள்க" என உரைகாரர்கள் கூறினர். அவ்வாறு கூறியதற்குக் காரணம் இதன் முன்னர் மென்கணம், ய, வ, உயிர் இவை வருமொழி முதலாயிருக்க, அகரச்சுட்டின் பின்வரும் மாறுதல்களை ஆசிரியர் கூறியது என்னலாம்.

சுட்டு நீண்டவிடத்து யகரவகரங்கள் உடம்படு மெய்யாக வருதலும், வருமொழி முதல் இரட்டிக்காமல் இருத்தலும், வருமொழிமுதல் வல்லினமாயிருக்க அவற்றிற்கு இனமெல்லினம் தோன்றலும் உதாரணமாகக் கூறப்பட்ட ஆசிரியர் வழக்கினால் அறியக்கூடும்.

---

* தொல். சொல். எச்ச. 7

† ஆயிரண்டு, ஆவறு = சுட்டு நீண்டவிடத்து யகர வகரம் உடம்படு மெய்யாக வந்தன. இவற்றில் ஆய்யிரண்டு ஆவ்வறு ஆன இரட்டியாமை காண்க,

**பி. கு.**

"வன்கணம் வரின் சுட்டு நீளாதென்பர் இராமாநுச கவிராயர் (நன். 163). ஆனால் நச்சினார்க்கினியர் "சுட்டினியற்கை" (36) என்னும் நூற்பாவுரையுள் வன்கணத்தின் முன் இகரச்சுட்டு நீண்டதற்கு "ஈகாண் தோன்றும் எம் சிறு நல்லூரே" என்னும் அடியை மேற்கோள் காட்டியுள்ளார். நன்னூலார் தூக்கிற் சுட்டு நீளின் யகரமும் தோன்றும் என்றார். ஆனால் எல்லா இடங் களிலும் யகரம் தோன்றவில்லை! ஆவயினான், ஆமுப்பெயரும் என்று பல இடங்களிற் கூறுகின்றார்." — திரு. அடிகளாசிரியர்

சாவ என்னும் சொல்

**210.** **சாவ என்னும் [1]செயவென் னெச்சத்து**
**இறுதி வகரம் கெடுதலும் உரித்தே.** (7)

**ஆ. மொ. இல**

'Sāva', the adverbial participle of 'Seya'
form may have its final 'Va' dropped.

**க. சு.**

The verpal participle 'cāva' may lose its final va

**பி. இ. நூ.**

**நேமி.** 23

சாவ......என்புழிச் சார்ந்த இறுதி......
போவது உயிர்மெய் என்றே போற்று.

**நன்.** 169.

சாவஎன் மொழியீற் றுயிர்மெய் சாதலும் விதி.

---

சு. வே : 1. செயவெ னெச்சத்து.

ஆங்கண் = இதில் வருமொழி வன்கணத்துக் கேற்ப மெல்லின ஙகரம் தோன்றியது.

இ. வி 85.

சாவ என்னும் செயவென் எச்சத்து
இறுதி வகரம் கெடுதலும் உரித்தே

முத்து. 4.80

சாவவென் மொழியீற்றுயிர்மெய் சாதலும் விதி.

## இளம்.

இது, மேல் "வினையெஞ்சு கிளவியும்" (உயிர் மயங். 2) என்ற முடிபிற்கு எய்தாதது எய்துவித்தல் நுதலிற்று.

இ—ள்: சாவ என்னும் செய என் எச்சத்து இறுதி வகரம் கெடுதலும் உரித்து—சாவ என்று சொல்லப்படும் செய என் எச்சத்து இறுதிக்கண் அகரமும் அதனாற் பற்றப்பட்ட [1]வகர ஒற்றும் கெடாது நிற்றலே யன்றிக் கெட்டு முடிதலும் உரித்து.

உ-ம்: சாக்குத்தினான், சீறினான், தகர்த்தான், புடைத் தான் என வரும்.

‡இதனை வினையெஞ்சு கிளவியும் (உயிர் மயங். 2) என்றதன் பின் வையாத முறையன்றிய கூற்றினான், இயல்பு கணத்தும் அந்நிலை மொழிக்கேடு கொள்க. †சாஞான்றார் என வரும்.

---

சு. வே:
1. வகர ஒற்றுக் கெட்டு முடிதலும் உரித்து.

‡ "வினையெஞ்சு கிளவியும்" என்னும் சூத்திரத்தில் வைக்கப்பட்ட வரிசைப்படி "சாவஎன்னும்" என்னும் சூத்திரம் முன்னரும், 'சுட்டின் முன்னர்' என்பது முதலிய மூன்று சூத்திரங்கள் பின்னரும் வைக்கப் பட்டிருத்தல் வேண்டும்.

† சாஞான்றார் = சாவதற்குத் தூக்கிட்டுக் கொண்டார் இவ்வழக்கு ஒற்றுமைப் போலியான் பிற்காலத்து வந்தது எனக் கொள்ளலாகும்—சுப்பிரமணிய சாஸ்திரியார்.

**நச்.**

இது மேல் வினையெஞ்சு கிளவி என்ற எச்சத்திற்கு எய்தாதது எய்துவித்தது.

இ—ள்: சாவஎன்று சொல்லப்படும் செய என் எச்சத்து இறுதிக்கண் நின்ற அகரமும் அதனாற் பற்றப்பட்ட வகரமும் கெட்டுநிற்றலும் கெடாதுநிற்றலும் உரித்து; எ—று.

உ-ம்: கோட்டிடைச் சாக்குத்தினான் எனவரும்; சீறினான், தகர்த்தான், புடைத்தான் என ஒட்டுக. கெடாதது முன்னர் முடித்தாம். *

இதனை ''வினையெஞ்சு கிளவி'' (எழு. 204) என்றதன் பின் வையாததனான் இயல்பு கணத்தும் இந்நிலைமொழிக் கேடு கொள்க. சாஞான்றான், நீண்டான், மாண்டான், யாத்தான் வீழ்ந்தான், அடைந்தான் என ஒட்டுக.

இயல்பாகும் அகர ஈறுகள்

211 †அன்ன என்னும் உவமக் கிளவியும்
அண்மை சுட்டிய விளிநிலைக் கிளவியும்
‡செய்ம்மன என்னும் [1]தொழிலிறு சொல்லும்
ஏவல் கண்ணிய வியங்கோட் கிளவியும்
செய்த என்னும் பெயரெஞ்சு கிளவியும்
செய்யிய என்னும் வினையெஞ்சு கிளவியும்
அம்ம என்னும் உரைப்பொருட் கிளவியும்
பலவற் றிறுதிப் பெயர்க்கொடை [2]யுளப்பட
அன்றி யனைத்தும் இயல்பெனமொழிப (8)

---

சு. வே:

1. தொழிலீறு
2. யுட்பட

* சூ. 205—இல் உதாரணம் பார்க்க.

† ஒப்பக்கூறல் என்னும் உத்திக்கு எடுத்துக் காட்டுவர் பேராசிரியர் (தொல் பொருள் 665)

‡ தொல். சொல். வினையியல் சூத்திரம் 23-இல் இது பொதுவினை எனப்பட்டது.

ஆ. மொ: இல.

'Anna' the partieiple of comparison
Voeative used to address one near
'Seymana' the word in the sense of verbal noun
Optative in the sense of command
'Seytha' the partieipial adjective
'Seyyiya' the adverbial participle
'Amma' the explative used ln addressing
and
The words of a ending denoting many—
All these-stand without change, say the linguists

க. சு.

Aṉṉa the particle of comparison,
Vocative words addressed (to persons) near,
finite verbs of the type 'Ceymaṉa',
obtative in the sense of command,
relative participles of the type 'Ceyta',
gerunds of the type 'ceyyiya',
amma, the particle used in addressing (a person)
and the words ending in — a denoting many—
all these, they say, remain unchanged

பி. இ. நூ.

நன். 167

செய்யிய என்னும் வினையெச்சம் பல்வகைப்
பெயரின் எச்சம் முற்று ஆறன் உருபே
அஃறிணைப் பன்மை அம்மமுன் இயல்பே

இ. வி. 86. ஷை ஷை

முத்து. பு. 81

வியங்கோள் அண்மை விளி உவமையும்
செய்த செய்யிய எனும் ஈரெச்சமும்
அம்மவும் பலவும் மிகாது இயல்பாகும்.

**இளம்.**

இது, அகரவீற்றுள் ஒரு சார்பெயர்க்கும் வினைக்கும் இடைக்கும் முன் எய்தியது விலக்கியும் எய்தாதது எய்துவித்தும் முடிபு கூறுதல் நுதலிற்று. அன்ன என்பதும் செய்யிய வென்பதும் பலவற்றிறுதிப் பெயர்க் கொடை என்பதும் எய்தியது விலக்கின. மற்றையன எய்தாதது எய்துவித்தன.

இ—ள் : அன்ன என்னும் உவமக் கிளவியும்—அன்ன என்று சொல்லப்படும் உவம உருபாகிய இடைச்சொல்லும், அண்மை சுட்டிய விளிநிலைக் கிளவியும்—அணியாரைக் கருதிய விளியாகிய நிலைமையையுடைய உயர்திணைப் பெயர்ச் சொல்லும், செய்ம்மன என்னும் தொழில் இறு சொல்லும்—செய்ம்மன என்று சொல்லப்படும் வினைச் சொல்லாகிய அகர வீற்றுச் சொல்லும், ஏவல் கண்ணிய வியங்கோள் கிளவியும்—ஏவலைக் கருதிய வியங்கோளாகிய வினைச் சொல்லும், செய்த என்னும் பெயரெஞ்சு கிளவியும்—செய்த என்று சொல்லப்படும் பெயரெச்சமாகிய வினைச் சொல்லும், செய்யிய என்னும் வினையெஞ்சு கிளவியும்—செய்யிய என்று சொல்லப்படும் வினையெச்சமாகிய வினைச் சொல்லும், அம்ம என்னும் உரைப் பொருட் கிளவியும்—அம்ம என்று சொல்லப்படும் உரையசைப் பொருண்மையையுடைய இடைச் சொல்லும், பலவற்றிறுதிப் பெயர்க் கொடை உளப்பட அன்றி அனைத்தும்—பன்மைப் பொருள்களின் அகரவீற்றுப் பல வென்னும் பெயர்ச் சொல்லுமாகிய அவ்வனைத்துச் சொல்லும், இயல்பு என மொழிப—இயல்பாய் முடியும் என்று சொல்லுவர் (ஆசிரியர்).

உ—ம் : பொன் அன்ன குதிரை, செந்நாய், தகர், பன்றி எனவும்; ஊரகொள், செல், தா, போ எனவும்; உண்மன குதிரை, செந்நாய், தகர், பன்றி எனவும்; செல்க குதிரை, செந்நாய், தகர், பன்றி எனவும்; உண்ட குதிரை, செந்நாய், தகர், பன்றி எனவும்; இதன் எதிர் மறை உண்ணாத குதிரை எனவும்; இதன் குறிப்பு நல்ல குதிரை, செந்நாய் எனவும்; உண்ணிய கொண்டான், சென்றான், தந்தான், போயினான் எனவும்; அம்ம கொற்றா, சாத்தா, தேவா, பூதா எனவும்; பல குதிரை, செந்நாய், தகர், பன்றி எனவும் வரும்.

ஊரகொள் என்பது உயிரீறாகிய உயர்திணைப்பெயர் (தொகை மரபு 11) என்பதனுள் அடங்காதோ எனின், ஊரன் என்பது ஊர என ஈறுதிரிந்தமையின் ஆண்டு அடங்காதாயிற் றென்பது.

விளிநிலைக் கிளவியாகிய பெயரை முன் வைத்ததனால் செய்த என்பதன் மறையன்றிச் செய்யும் என்பதற்கு மறையாகிய செய்யாத என்பதும் அவ்வியல்பு உடைத்தெனக் கொள்க. அது வாராத கொற்றன் என வரும்.

உரையிற் கோடல் என்பதனால், வியங்கோள் முன் வைக்கற் பாலதனை முன்வையாது செய்ம்மன என்பதனை முன்வைத்தத னான், இவ்வியல்பு முடிபின்கண் செய்ம்மன என்பது சிறப்புடைத் தெனப் பெறப்பட்டது. அதனால், ஏவல் கண்ணாத வியங்கோளும் இவ்வியல்பு முடிபு உடைத்தெனக் கொள்க. அது, "மன்னிய பெரும நீ" (புறம். 6) என வரும்.

'பலவற்றிறுதிப் பெயர்க்கொடை' என்பதனை அம்ம என்பதற்குமுன் வையாததனால், பல என்பது மேற்கூறும் செய்யுள் முடிபில் திரிந்து முடிதல் ஈண்டை இயல்பிற் சிறப்பின் றென்பதூஉம், அகர வீற்றுள் முடிபுகூறாத முற்றுவினையும் வினைக்குறிப்பும் அவ்வியல்பின வென்பதூஉம் பெறப்படும். உண்டன குதிரை என்பது முற்றுவினை. கரிய குதிரை என்பது முற்றுவினைக் குறிப்பு.

தன்னின முடித்தல் (பொருள் 665) என்பதனால், பல என்பதின் இனமாகிய சில என்பதற்கும் அவ்வியல்பு கொள்க. சில குதிரை என வரும்.

**நச்.**

இஃது அகர வீற்றுள் ஒருசார் பெயர்க்கும் வினைக்கும் இடைக்கும் முன் எய்தியது விலக்கியும் எய்தாதது எய்துவித்தும் இலக்கணம் கூறுகின்றது.

இ—ள்: அன்ன என்று சொல்லப்படும் உவம உருபாகிய அகர வீற்று இடைச்சொல்லும், அணியாரைக் கருதின [1]விளியாகிய நிலைமையினையுடைய அகர வீற்று உயர்திணைப்

---

சு. வே: 1. முன்னின்றாரை எதிர்முகமாக்கிக் கூறும் விளியாகிய

பெயர்ச் சொல்லும், ஒருவரான் ஏவற்றொழின்மை கருதிக் கூறப்பட்ட ஏவற் பொருண்மையை முற்ற முடித்தலை உணர்த்தும் அகர ஈற்று வினைச் சொல்லும், செய்த என்று சொல்லப்படும் பெயரெச்சமாகிய அகர வீற்று வினைச்சொல்லும், செய்யிய என்று சொல்லப்படுகின்ற வினையெச்சமாகிய அகர வீற்று வினைச்சொல்லும், அம்ம என்று சொல்லப்படும் எதிர்முக மாக்கிய அகர வீற்று இடைச்சொல்லும், பன்மைப் பொருளை உணர்த்தும் அகர வீற்றுப் பெயர்கள் ஐந்தினையும் முற்கூறினவற் றோடு கூட்டிக் கொடுத்தல் உள்ளிட்டு அவ்வெட்டுச் சொல்லும் இயல்பாய் முடியும் என்று கூறுவர் ஆசிரியர்; எ—று.

உ-ம்: பொன்னன்ன குதிரை, செந்நாய், தகர், பன்றி என இது வினையெஞ்சு கிளவி (எழு. 205) என்பதனான் மிக்கு முடிதலை விலக்கிற்று. ஊர கேள், செல், தா, போ என ''உயிரீறாகிய உயர்திணை'' (எழு. 153) என்னுஞ் சூத்திரத்தான் இயல்பாய் முடிவது ஈண்டு னகரங் கெட்டு அகரவீறாய் விளியேற்று முடிந்தமையின் எய்தாதது எய்துவித்தது. உண்மன குதிரை, செந்நாய், தகர், பன்றி என்பனவற்றிற்கு உண்ணும் என விரித்தும், யானுண்மன, நீயுண்மன, அவனுண்மன என நிறுத்திக் கூழ், சோறு, தேன், பால், என வருவித்தும் முடிக்க. இவற்றிற்கும் அவ்வாறே விரித்துக் கொள்க. இங்ஙனம் செய்யும் என்பதன் பொருட்டாகிய மன வென் இறுதிச்சொல் அக்காலம் [1]வழங்கிய தாதலின் ஆசிரியர் [2]அதனையும் வேறாக எடுத்தோதினார். யானும் நின்னோடுடன் வருக, அவன் செல்க, அவள் செல்க, அவர் செல்க என நிறுத்திக் காட்டின்கண், செருவின்கண், தானைக்கண், போரின்கண் என வருவித்து முடிக்க. இவை ஏவற் பொருண்மையை முற்ற முடித்தன. ஏவல் கண்ணிய எனவே ஏவல் கண்ணாதனவும் உளவாயின; அவை நீசெல்க, அதுசெல்க, அவைசெல்க என நிறுத்தி முற்கூறிய காடு முதலியவற்றை வருவித்து முடிக்க. இவை ஏவற் பொருண்மையை முற்ற முடியாதன. அஃறிணை ஏவற் பொருண்மையை முற்ற முடியாமை வினையியலுள் வியங்கோட் கண்ணே பொருளியலும் செய்யுளியலும் பற்றிக் கூறுதும். மனவும் வியங்கோளும்

---

சு. வே: 1. வழங்குதலின்
2. மன என்பதனையும்

எய்தாதது எய்துவித்தது. உண்டகுதிரை, செந்நாய், தகர், பன்றி இதுவும் அது. இதற்குரிய உண்ணாத குதிரை என்னும் எதிர் மறையும், நல்ல குதிரை என்னும் குறிப்பும் கொள்க. உண்ணிய கொண்டான் சென்றான், தந்தான், போயினான் இது முன்னர் வினையெச்சம் வல்லெழுத்துப் பெறுக என்றலின் எய்தியது விலக்கிற்று. அம்ம கொற்றா, சாத்தா, தேவா, பூதா என்பது இடைச்சொல்லாதலின் எய்தாத தெய்துவித்தது. இதுகேளாய் கொற்றனே என எதிர்முகமாக்கியவாறு காண்க. பல்லகுதிரை, பலகுதிரை, சில்லகுதிரை, சிலகுதிரை, உள்ளகுதிரை, இல்ல குதிரை, செந்நாய், தகர், பன்றி என ஒட்டுக. இக்காலத்துப் பல்ல சில்ல என்பன வழங்கா. இதுவும் விளக்குறிது என்றாற்போலப் பலக்குதிரை என வல்லெழுத்து எய்தியதனை விலக்கிற்று. விளி நிலைக் கிளவியாகிய பெயர் முற்கூறாததனானே செய்யுமென் பதன் மறையாகிய செய்யாத என்பதற்கும் இவ்வியல்பு முடிபு கொள்க. அது வாராத கொற்றன் என வரும். இவ்வியல்பு முடிபிற்குச் செய்ம்மன சிறத்தலின் வியங்கோட்கு முன் வைத்தார். ஏவல் கண்ணிய என்பதனான் ஏவல் கண்ணாததும் உளதென்று கூறி 'மன்னிய பெரும நீ' புறம் (61) என உதாரணம் காட்டுக எனின், அது பொருந்தாது. கூறுகின்றான், அவன் நிலை பெற்றிருத்தல் வேண்டும் என்றே கருதிக் கூறுதலின் அதுவும் ஏவல் கண்ணிற்றேயாம். எல்லாவற்றினுஞ் சிறந்தபலவற்றிறுதி முற் கூறுக எனின், அது வழக்கிற்கும் செய்யுட்கும் வேறு வேறு முடிபுடைத்து என்றதற்குஞ் செய்யுள் முடிபு இவ்வியல்பு போற் சிறப்பின் றென்றற்கும் அகர வீற்றுள் முடிபு கூறாது நின்ற முற்று வினையும் வினைக் குறிப்பும் இவ் வியல்பு முடிபு பெறும் என்றற்கும் பின் வைத்தார். உண்டன குதிரை இது முற்று வினைக் குறிப்பு. இஃது இயல்பு கணத்து முடிபு 'ஞ ந மய வ' (எழு. 144) என்புழிப் பொருந்துவன வெல்லாம் கொள்க.

**சுப்.**

அகரவிறுதி, க ச த பத்தோன்றின் என்பன அதிகரித்தன.

பலவற்றிறுதிப் பெயர் என்பதற்குப் "பன்மைப் பொருளை உணர்த்தும் அகர வீற்றுப் பெயர்களுள் ஐந்து" எனப் பொருள். கூறினர் நச்சினார்க்கினியர். அவ்வாறு அவர் கூறியதற்குக் காரணம் "பல்ல பல சில்ல உள்ள இல்ல" என்றவற்றைச்

சொல்லதிகாரத்து 168. ஆவது சூத்திரத்தில் ஆசிரியர் படித் திருத்தலேயாகும். இளம்பூரணர் அதற்குப் "பல என்னும் பெயர்ச் சொல்" எனப் பொருள் கூறினர். தன்னின முடித்தலால் **சில** முதலியவற்றை அவர் கொண்டனர். 225 ஆவது சூத்திரத்திலுள்ள "பலவற்றிறுதி" என்பதற்கு, "அஃறிணைப் பன்மைப் பொருளை யுணர்த்தும் ஆகார வீற்று முற்று வினைச் சொல்" எனப் பொருள் கூறிய இருவரும் ஈண்டும் "அகரவீற்றுப் பண்புப் பெயர்"‡ எனக் கூறுவதே பொருந்தும்.

"எல்லாரும் என்னும் படர்க்கை யிறுதியும்" (எழு. 192) என்பது போல "பலவென்னும் இறுதி" எனப்பாடம் இருப்பின் அவர் கூறும் பொருள் பொருந்தும்.

ஏவல் கண்ணிய வியங்கோளுக்கு "நீ செல்க", "அது செல்க" முதலியவற்றை உதாரணமாகவும் நச்சினார்க்கினியர் கூறி, இளம்பூரணர் கூறிய "மன்னிய பெரும நீ" என்றதை ஏவல் கண்ணாத வியங்கோளுக்கு உதாரணமாகக் கொள்ளுதல் பொருந்தாதெனவும், அதற்குக் காரணம் "கூறுகின்றான் அவன் நிலைபெற்றிருத்தல் வேண்டும் என்றே கருதிக்கூறுதலின்" என்றுங் கூறினர்.

அவற்றுள்

முன்னிலை தன்மை ஆயீ ரிடத்தொடு
மன்னா தாகும் வியங்கோட் கிளவி (சொல் 226) என்ற

சூத்திரத்தான் வியங்கோள் தன்மை முன்னிலைகளில் வாராமை யானும் **மன்னிய** என்றதனால் பிறன் ஒருவன் செய்ய வேண்டிய செய்கையை விரும்பாமையானும் அவர்தங் கூற்று ஆராய்தற் பாலது.

'செய்ம்மன என்னும் தொழிலிறு சொல்' என்றதற்கு "செய்ம்மன என்று சொல்லப்படும் தொழிற் சொற் பொருள் தருங்கால் உம் ஈற்றான் இறும்சொல் என நச்சினார்க்கினியர் பொருள் கூறுதல் பொருந்தாதாகும். அதற்குச் செய்ம்மன வென்னும் வினையாகிய அகரவீற்றுச் சொல் என்பதே நேர் பொருளாகும்.

---

‡ அகரவீற்றுப் பன்மைப் பெயர் என்றுளது அச்சுப் பிழை போலும்.

'அண்மை சுட்டிய விளிநிலைக் கிளவி' அகரவீற்றுச் சொல்லாயின் அஃது "அண்மைச் சொல்லிற் ககரமாகும் (சொல் 130) என்ற சூத்திரத்தாற் பெறப்படும் ஆகலானும், அச்சூத்திரம் உயர்திணையதிகாரத்து இருப்பதாலும், அத்தொடர்க்கு, "அணியாரைக் கருதிய விளியாகிய நிலைமையையுடைய உயர்திணைப் பெயர்ச்சொல்" என உரைகாரர்கள் பொருள் கூறினர். "கிளந்த விறுதி யஃறிணை விரவுப் பெயர், விளம்பிய நெறிய விளிக்குங் காலை" (சொல் 150) என்ற சூத்திரத்தான் அஃறிணை விரவுப் பெயரும் அவ்வாறு வருதல் கூடுமாகலான் அவர்தங் கூற்று ஆராய்தற்பாலது. "உரைப் பொருள்" என்றதற்கு "உரையசைப் பொருள்" என இளம்பூரணரும் "எதிர்முகமாக்கிய...இடைச் சொல்லும்" என நச்சினார்க்கினியரும் பொருள் கூறினர்.

அம்ம என்ற சொல்லைப்பற்றி இடையியலில் "அம்ம கேட்பிக்கும்" (சொல் 276) என்ற ஒரு சூத்திரமே இருக்கின்றமையின் நச்சினார்க்கினியர் கூறும் பொருளே நேரிதாகும்

..................................

"விளிநிலைக் கிளவியாகிய பெயரை முன்வைத்ததனால் செய்த என்பதன் மறையன்றிச் செய்யும் என்பதற்கு மறையாகிய செய்யாத என்பதும் அவ்வியல்பு முடிபு உடைத்தெனக் கொள்க" என இளம்பூரணரும் 'விளிநிலைக் கிளவியாகிய பெயர் முற் கூறாததனானே 'செய்யும்' என்பதன் மறையாகிய 'செய்யாத' என்பதற்கும் இவ்வியல்பு முடிபு கொள்க" என நச்சினார்க்கினியரும் கூறினர். உவமக்கிளவிக்கு முன் பெயரை 204, 205 சூத்திரங்களிற் கூறினமையான் ஈண்டும் முதல் இரண்டடிகளை மாற்றி ஆசிரியர் கூற வேண்டியதே முறையாகுமாதலான் நச்சினார்க்கினியர் கூற்றே பொருந்தும். இளம்பூரணத்தில் 'முன் வைத்ததனால்' என்ற பாடம் ஏடெழுதுவோரின் பிழையால் வந்திருத்தல் கூடும். இனி ஆசிரியர் கூறிய 'செய்த' என்ற பெயரெச்சம் அகரவீற்றுப் பெயரெச்சங்களுக் கெல்லாம் †**உபலக்கணம்** எனக் கொள்ளின் சாலும். விதியை உணர்த்தும் பெயரெச்சம் மறையையுணர்த்தும் பெயரெச்சத்திற்கு உபலக்கணமாகுமா வெனின்,

**பெயரெஞ்சு கிளவியும் வினையெஞ்சு கிளவியும்**
**எதிர் மறுத்து மொழியினும் பொருணிலை திரியா** (சொல் 236)

† உபலக்கணம் = உடன் சேர்க்கும் இலக்கணம்.

என ஆசிரியர் கூறியிருக்கின்றமையின், அவ்வாறாகலாம் எனத் தோன்றுகிறது.

ஏவல் கண்ணாத வியங்கோளின் கண்ணும் இயல்பு புணச்சியை இளம்பூரணர் உரையிற் கோடலாற் கொள்ளுகின்றார். அது பிற்காலத்து வழக்காயில்லாதாயின் ஆசிரியர் 'ஏவல் கண்ணிய' என்ற அடைமொழியைக் கூறார்.

முற்று வினையும் வினைக்குறிப்பும் அவ்வியல்பின என்றதை "பலவற்றிறுதி...என்பதனை அம்ம என்பதற்கு முன்வையாததனால்" என இளம்பூரணரும், "எல்லாவற்றினும் சிறந்த பலவற்றிறுதியை இறுதியிற் கூறினதால்" என நச்சினார்க்கினியரும் கொண்டனர். † செய்ம்மன என்பது வினைமுற்றிற்கும் வினைக் குறிப்பிற்கும் **உபலக்கணம்** எனக் கொள்ளலாய்.

**கு. சுந்தர மூர்த்தி**

"ஏவல் கண்ணிய வியங்கோள்—ஏவற் பொருண்மையை முற்ற முடிக்கின்ற சொல். ஏவியதை யுணர்ந்து செய்யும் ஆற்றல் உயர்திணைக்கண் அல்லது, அஃறிணைக்கு இன்மையின் அஃறிணைக்கண் வருவனவற்றை ஏவல் கண்ணாதன என்பர் நச்சினார்க்கினியர். இளம்பூரணர் உயர்திணையாயினும் அல்லது அஃறிணையாயினும் ஏவற் பொருள் உடன் நிகழுமேல் அது ஏவல் கண்ணியது என்றும், அப்பொருண்மை உடன் நிகழாதேல் அது ஏவல் கண்ணாதது என்றும் கருதுவர்.

'மன்னிய பெரும்' என வாழ்த்தின் அங்ஙனம் நிலை பெறுதல் வாழ்த்தப்படும் பொருட்கண் உடன் நிகழாமையின் இது ஏவல் கண்ணாததாம்என்பது இளம்பூரணர் கருத்து. இதனையே, "கூறுகின்றான் அவன் நிலைபெற்றிருத்தல் வேண்டும் என்றே கருதிக் கூறின் அதுவும் ஏவல் கண்ணிற்றேயாம்" என மறுத்தனர் நச்சினார்க்கினியர். இதனைக் கருத்துட் கொண்டே அடுத்த

---

† செய்ம்மன என்பது இருதிணை ஐம்பாற் பொதுவினை என வினையியலுள் (23) ஆசிரியர் கூறியுள்ளார். செய்ம்மன என்பது பற்றித் தெய்வச் சிலையார்.

"யான் செய்ம்மன, நீ செய்ம்மன, அவன் செய்ம்மளஎன எல்லாப் பாலோடும் ஒட்டுக; அது இக்காலத்துச் செய்வது செய்வன, செய்பவை, செய்யுமவை எனவழங்கும் போலும்',

நூற்பாவிலும் 'வாழிஞெள்ளா' என்ற இது வாழ்த்தப்படும் பொருள் மேல் வாழ வேண்டும் என்னும் கருத்தினனாகக் கூறுதலின் ஏவல் கண்ணிற்றேயாம். அல்லாக்கால் "வாழ்த்தியல் வகையே நாற்பாற்கும் உரித்தே" (செய்யு 109) என்பதற்கும்' வாழ்த்தியலாகச் சான்றோர் கூறிய செய்யுட்களுக்கும் பயனின்றாம் என்று உணர்க" எனக்கூறினர்.

**சிவ.**

வாழ்த்துதல் என்பது ஏவல் கண்ணாததாக இருந்தாலும் 'மன்னிய பெரும்' என வந்த புறப்பாடலின்கண் உள்ள கருத்துகள் மன்னிய என்பதை ஏவல் கண்ணியதாகக் கொள்ளுமாறு அமைந்தமையே நச்சினார்க்கினியர் இளம்பூரணரை மறுக்கக் காரணம் என்னலாம். அப்பாடல் வருமாறு :

வடாஅது பனிபடு நெடுவரை வடக்கும்
தெனாஅது உருகெழு குமரியின் தெற்கும்
குணாஅது கரைபொரு தொடுகடற் குணக்கும்
குடாஅது தொன்றுமுதிர் பவ்வத்தின் குடக்குங்
கீழது, முப்புணர் அடுக்கிய முறைமுதற் கட்டின்
நீர்நிலை நிவப்பின் கீழும் மேல
தானிலை யுலகத் தானு மானாது
உருவும் புகழு மாகி விரிசீர்த்
தெரிகோற் சமன்வாய் போல ஒருதிறம்
**பற்றல் இலீயரோ** நிற்றிறம் சிறக்க;
செய்வினைக் கெதிர்ந்த தெவ்வர் தேஎத்துக்
கடற்படை குவிப்ப மண்டி யடர்புகர்ச்
சிறுகண் யானை செவ்விதின் ஏவிப்
பாசவற் படப்பை யாரெயில் பலதந்து
அவ்வெயில் கொண்ட செய்வுறு நன்கலம்
பரிசின் மாக்கட்கு வரிசையின் நல்கிப
**பணீஇயர்** அத்தைநின் குடையே; முனிவர்
முக்கட் செல்வர் நகர்வலம் செயற்கே
**யிறைஞ்சுக** பெருமநின் சென்னி; சிறந்த
நான்மறை முதல்வர் ஏந்துபுகை யெதிரே
**வாடுக** இறைவநின் கண்ணி, யொன்னார்
நாடுசுடு கமழ்புகை யெறித்த லானே

**செலீஇயர்** அத்தைநின் வெகுளி வாலிழை
மங்கையர் துனித்த வாண்முகத் தெதிரே
ஆங்க, வென்றி யெல்லாம் வென்றகத் தடக்கிய
தண்டா வீகைத் தகைமாண் குடுமி
தண்கதிர் மதியம் போலவுந் தெறுசுடர்
ஒண்கதிர் ஞாயிறு போலவும்
**மன்னிய** பெருமநீ நிலமிசை யானே (புறம் 6)

அப்பாடலில் பணீஇயர், யிறைஞ்சுக, வாடுக (வாடுமாறுநீ அமைக), செலீஇயர் என வருவன ஏவல்கண்ணியன என்னலாம். அதனால் மன்னிய என்பதும் ஏவல்கண்ணியதே என்க. இப் பாடலுக்குத் திணை துறை எழுதியோர் பாடாண் திணை என்றும் செவியறிவுறூஉ என்றும் எழுதியது காணுமிடத்து அவர்க்கும் வியங்கோளாக இங்குவந்தன ஏவல்கண்ணியனவாகவே கருத்து என்னலாம். துறை வாழ்த்தியலுமாம் எனவும் அவர் எழுதியிருப்பதைப் பார்க்கின் ஏவல் கண்ணாத நிலையாகவும் கொள்ளலாம்போலும். எனவே மன்னிய என்பது இருசார்க்கும் ஏற்பவே அமைந்தது என்க.

ஏவல் கண்ணிய என்பதில் கண்ணுதல் தொழில், கூறுவான் கண்ணதா கேட்பான் கண்ணதா என்பது முதலில் தெரிய வேண்டிய ஒன்று. இளம்பூரணர் கேட்பான் கண்ணது எனக் கொண்டமையின் மன்னிய என்பது ஏவல் கண்ணாதது என்றார். நச்சினார்க்கினியர் கூறுவான் கண்ணது எனக் கொண்டமையின் இளம்பூரணரை மறுத்தார்.

இச் சூத்திரத்தில் விளிநிலைக் கிளவியும் பலவற்றிறுதிப் பெயரும் பெயர்ச்சொற்கள். இவற்றுள் விளிநிலைக் கிளவி திரிந்தவடிவம். பல என்பது இயல்பு வடிவம். ஆதலின் திரிந்த வடிவம் பிற்கூறப்படவேண்டுவது. அதனால் "விளிநிலைக் கிளவி யாகிய...கொற்றன் எனவரும்" என்றார் இளம்பூரணர்.

வியங்கோட் கிளவி இயற்சொல்; செய்ம்மன என்பது திரி சொல். இயற் சொல்லாகிய வியங்கோட் கிளவி முன் வைக்கப் படல் வேண்டும். மாறுபட வைத்தலின் "உரையிற்கோடல் என்பதனால்...பெறப்பட்டது" என்றெழுதினார் இளம்பூரணர்.

அம்ம என்பது பொருளற்ற உரையசைச்சொல்; ஆதலின் பல என்ற பொருளுள்ள பெயர்ச் சொல்லுக்குப் பின் வைக்கப்பட்டல்

வேண்டும். அதனால் இளம்பூரணர் "பலவற்றுதி......முற்று வினைக் குறிப்பு" என்றெழுதினார்.

இவ்வாறே நச்சினார்க்கினியர் எழுதியவற்றுக்கும் கொள்க.

வாழிய என்னும் சொல்

**212, வாழிய என்னும் [1]சேயென் கிளவி**
**இறுதி யகரம் கெடுதலும் உரித்தே. (9)**

**ஆ. மொ: இல.**

'Vāḻiya' in the model of 'Seya'
has its final 'a' dropped.

**க. கு.**

The final 'ya' of the optative 'Vaḷiya' is optionally dropped

**பீ. இ. நா.**

**நன்** 168

வாழிய என்பதன் ஈற்றின் உயிர்மெய்
ஏகலும் உரித்தஃ தேகினும் இயல்பே.

**இ. வி** 87. ஷை ஷை

**முத்து. பு.** 83

வாழிய இறுதி கெடுதலும் உரித்தே.

**இளம்.**

இது, ஏவல் கண்ணாத வியங்கோட்களில் ஒன்றற்கு எய்திய இயல்பு விலக்கி விகாரம் கூறுதல் நுதலிற்று.

---

சு. வே : 1. செயுவென் (நச்.)

இ—ள் : வாழிய என்னும் சேய் என் கிளவி—வாழிய [2]என்று சொல்லப்படுகின்ற [3]அவ்வாழுங்காலம் [4]அண்மையவன்றிச் சேய்மைய என்று உணர்த்தும் சொல், இறுதியகரம் கெடுதலும் உரித்து—தன் இறுதிக்கண் அகரமும் அதனாற் பற்றப்பட்ட யகர ஒற்றும் கெடாது முடிதலேயன்றிக் கெட்டு முடிதலும் உரித்து.

உ—ம் : வாழிகொற்றா எனவரும்.

[5]'சேயென்கிளவி' என்றதனான், அம்முடிபு இவ் 'வாழிய' என்பதற்கு ஏவல் கண்ணாத நிலையது என்பது விளக்கிய நின்றது. "ஒன்றென முடித்தல்" (பொருள் உரை. 665) என்பதனால் பிற கணத்துக் கண்ணும இவ்விதி கொள்க. வாழி ஞெள்ளா எனவரும்

**நச்.**

இஃது எய்தியதன்மேற் சிறப்புவிதி வகுத்தது.

இ—ள் : வாழுங்காலம் நெடுங்காலம் ஆகுக என்னும் பொருளைத் தரும் வாழியவென்று சொல்லப்படும் செயவென் எச்சக்கிளவி, இறுதிக்கண் அகரமும் அதனாற் பற்றப்பட்ட யகர ஒற்றும் கெட்டு முடிதலும் உரித்து; எ—று.

கெடுதலும் எனவே, கெடாது முடிதலே பெரும்பான்மை யென்றவாறு.

வாழி கொற்றா சாத்தா தேவா பூதா எனவரும். வாழிய என்பதே பெரும்பான்மை. வாழிய யான், நீ, அவன், அவள், அவர், அது, அவை என இது மூன்றிடத்தும் சேறலின் 'உயிரீறாகிய முன்னிலைக் கிளவியும் (எழு. 153) என்புழி முன்னிலை யியல்பாம் என்றதன்கண் அடங்காதாயிற்று. இது குறிப்பு வியங்கோள்.

ஒன்றென முடித்தலான் இஃது இயல்பு கணத்துங் கொள்க. வாழிஞெள்ளா எனவரும். இவை வாழ்த்தப்படும் பொருள் வாழவேண்டும் என்னும் கருத்தினனாகக் கூறுதலின் ஏவல் கண்ணிற்றேயாம். அல்லாக்கால் 'வாழ்த்தியல் வகைநாற்பாவிற்கும் உரித்தே' (செய்யு. 108) என்பதற்கும் வாழ்த்தியலாகச் சான்றோர் கூறிய செய்யுள்களுக்கும் பயனின்றாம் என்றுணர்க.

---

சு. வே : 2. என்பது
3. வாழுங்காலம்
4. அண்மையதன்றிச் சேய்மையது
5. சேயவென்கிளவி என்ற தம் முடிபு

**சுப்.**

"வாழிய யான்நீ......சேறலின்" என நச்சினார்க்கினியர் உரையில் உளது. வியங்கோள் தன்மை முன்னிலைகளில் வாராது என ஆசிரியர் தொல்காப்பியனார் கூறியிருத்தலானும், (சொல். 225) நன்னூலார் மூன்றிடத்தும் வரும் எனக் கூறி யிருத்தலானும் நச்சினார்க்கினியர் நன்னூலார் காலத்திற்குப் பிற்பட்டவர் என்பதற்கு இஃது ஒரு சான்றாகும்.

**அடிகளாசிரியர்**

"வாழிய என்பதன் ஈற்றின் உயிர்மெய்
ஏகலும் உரித்தஃ தேகினும் இயல்பே (நன். 16)

மேற்கண்ட நன்னூல் நூற்பா வுரையுள் இராமாநுசகவிராயர், "இது புணர்ச்சி விகாரம் அன்றெனவும், கடைக் குறைந்த செய்யுள் விகாரம் எனவும், இது முற்று வினைச் சொல் எனவும் காண்க. இனி இவ்வாறு கூறவே, இவ் வாய்பாடு கொண்ட வினையெச்சச் சொல் ஒன்றுளதென்பதும், அது இவ்வாறு குறைந்து நில்லா தென்பதும் பெறப்பட்டது" என்றனர்.

**சி. கணேசய்யர்.**

வாழிய என்னும் செயவென் கிளவி என்னும் பாடம்பற்றிய கருத்து வருமாறு

"வாழிய என்னும் **சேயென்** கிளவி எனச் சூத்திரத்தைத் திருத்துக. இஃது ஒன்றையொன்று விசேடித்து முற்றாதலை யுணர்த்தும். **சேய** என்பதற்கு நீண்டகாலம் ஆகுக என்பது பொருள். இஃது உரையாசிரியர் (இளம்பூரணர்) உரையானும் நன்கு விளங்கும். **சேய** என்பது முற்றுமொழியாய் அஃறிணைப் பன்மையில் வருமாயினும் ஈண்டு வாழிய என்பதனால் விசேடிக்கப் பட்டமையின் வியங்கோள் முற்றாதலை உணர்த்தும் என்க. சேயென்கிளவி என்று மகாலிங்கையர் பதிப்பில் உள்ளது. அதன உரையும் அதற்கேற்ப 'வாழுங்காலம் நெடுங்காலம்' என்று எழுதப்பட்டுள்ளது. ஆயின் சி. வை. தாமோதரம் பிள்ளை பதிப்பில் 'வாழுங்காலம் நெடுங்காலம் ஆகுக' என்று வியங்கோட் பொருள்பட எழுதப்பட்டுள்ளது. சைவசித்தாந்தக் கழகப்பதிப் பிலும் அங்ஙனமே உள்ளது. ஆதலின் **சேயவென் கிளவி** என்று கோடலே பொருத்தம் என்பது உற்று நோக்கினார்க்குப் புலப்படும்'.

**வேங்.**

''வாழிய கொற்றா' என்னும் உதாரணத்தில் வாழிய என்னும்சொல் செயவென் எச்சமாதல் இன்மையின், நச்சினார்க்கினியத்தில் பிழைபட்டிருத்தல் வேண்டும் எனத் தோன்றுகின்றது.

''இச்சூத்திரம் ஏவல் கண்ணாத வியங்கோள் ஒன்றற்குச் சிறப்பு விதி கூறுகின்றது என்றார் உரையாசிரியர் (இளம்.) ஆயின் 'ஏவல் கண்ணிய வியங்கோட் கிளவியும்' என்னும் அடியை, 'அம்ம' என்னும் அடிக்கு முன் வைத்திருப்பின் இயைபுடையதாயிருக்கும்.

''செயவென்கிளவி'' என்னும்பாட்டம் உரையாளர் கூறும் பொருட்கு அமையாது.

ஆசிரியர் மேலைச் சூத்திரத்தில் (210ல்) கூறிய எட்டுவகைச் சொற்களுள் ஈற்றில் நின்ற மூன்று வகைச் சொற்களுக்குச் சிறப்பு விதி கூறுகின்றார்; இச்சூத்திரத்தையடுத்து, அம்ம என்னும் உரையசைச் சொற்கும் அதனையடுத்துப் பல என்னும் சொற்கும் சிறப்புவிதி கூறுவார் எனின் அப்போது வாழிய என்னும் செய்யிய கிளவி என்பதுபோன்று இச்சூத்திரத்து முதலடியும், அதற்கேற்ப உதாரணமும் இருத்தல் வேண்டும்''

***சிவ.***

இளம்பூரணர் தாம் கொண்ட 'சேயென் கிளவி' என்ற பாடத்துக்கேற்ப ''வாழிய என்று சொல்லப்படுகின்ற அவ்வாழுங் காலம் அண்மையவன்றிச் சேய்மைய என்று உணர்த்துஞ் சொல்'' என்று உரை எழுதினார். நச்சினார்க்கினியர் 'செயவென்கிளவி' என்ற பாடத்துக்கு ''வாழுங்காலம் நெடுங்காலமாகுக என்னும் பொருளைத்தரும் வாழிய என்று சொல்லப்படும் செய என் எச்சக் கிளவி'' என்று உரை எழுதினார். இருவரும் 'வாழிய என்பதற்கு 'நீண்டகாலம் வாழ்க' என்ற பொருளே கொண்டனர். நீண்ட காலம்' என்ற பொருளுடையதாகச் 'சேய்' என்ற சொல்லைக் கொண்டார் இளம்பூரணர். நச்சினார்க்கினியர் 'நீண்டகாலம்' என்பதை வருவித்துக்கொண்டு 'செய' என்பதைச் செயவென் எச்சமாகக் கொண்டார். வாழிய என்பது முற்றுச் சொல். செயவேன் வாய்பாட்டுச் சொல் அன்று. 'வாழிய' என்பது

செய்யிய என்னும் வாய்பாட்டில் வருவது 'செய' என் வாய்பாட்டில் வாராது. 'வாழி கொற்றா' என முற்றுத் தொடரில் உதாரணம் தந்தனர் இருவரும். எனவே இளம்பூரணர் கொண்ட 'சேயென்கிளவி' என்னும் பாடமே சிறக்கும். 'செயவென்கிளவி' என்னும் பாடம் தவறுடையதே.

அம்ம என்பதற்கு மேலும் ஓர்விதி

**213, உரைப்பொருட் கிளவி நீட்டமும் வரையார்** (10)

**ஆ. மொ: இல.**

The lengthening of the word 'amma' used as explanative is not prevented

**க. சு.**

No one prevents the lenthening of the partiele used in addressing (a person)

**பி. இ நூ.**

**முத்து.** 4. 82

அம்ம இறுதி நீட்டமும் வரையார்

**இளம்.**

இது, அம்ம என்பதற்கு எய்தாதது எய்துவித்தல் நுதலிற்று.

இ—ள் : உரைப்பொருட்கிளவி நீட்டமும் வரையார்— உரையசைப் பொருண்மையினையுடைய அம்ம என்னும் இடைச் சொல் தன் ஈற்றகரம் அகரமாய் நிற்றலேயன்றி ஆகாரமாய் நீண்டு முடிதலையும் வரையார்.

உ—ம் : அம்மா கொற்றா எனவரும்.

ஒன்றென முடித்தல் (பொருள். உரை. 665) என்பதனான், நீட்சி [1]இயல்புகணத்தும் கொள்க. அம்மா ஞெள்ளா எனவரும்.

---

சு வே : 1. மென்கணத்துக்கண்ணும், (இயல்புகணத்தும் என்பதே நன்று.)

**நச்.**

இஃது அம்ம என்பதற்கு எய்தாதது எய்துவித்தது.

இ—ள் : † எதிர்முகமாக்கும் பொருளையுடைய அம்ம என்னும் சொல், அகரமாக நிற்றலேயன்றி ஆகாரமாய் நீண்டு முடிதலையும் நீக்கார்; எ—று.

உ—ம் : அம்மா கொற்றா, சாத்தா, தேவா, பூதா எனவரும். உம்மையால் நீளாமையே பெரும்பான்மையாம். வரையாது கூறினமையின் நீட்சி இயல்புகணத்தும் கொள்க. அம்மா ஞெள்ளா, நாகா. மாடா, வடுகா, ஆதா என ஒட்டுக.

**பி. கு.**

"அம்ம இடைச்சொல் என்பதனையும், அது ஒருவனை ஒருவன் ஒன்று கேள் என்று சொல்லுதற்கண் வரும் என்பதனை யும் "அம்ம கேட்பிக்கும்' (இடையியல் 28) என்னும் நூற்பாவால் உணரலாம். அது இடைச் சொல்லாயினும் விளி கொள்ளும் என்பதனையும்' அப்பொழுது அது நீளும் என்பதனையும் "அம்ம என்னும் இடைச்சொல் நீட்டம், அம்முறைப் பெயரொடு சிவணா தாயினும் விளியொடு கொள்ப தெளியுமோரே'' (தொல். விளி. 36) என்னும் நூற்பாவால் உணரலாம்.

"அம்ம என்பது வியப்புக்குறிப்பையும் உணர்த்த வரும் (குறுந். 384)

"சிறிது பொருள் உணர்த்துவனவற்றை உரையசை என்றும், பொருள் உணர்த்தாது சொற்களை அசைத்து நிற்பனவற்றை அசைநிலை என்றும் கூறுதல் ஆசிரியர் கருத்து என்பர் (தொல்' சொல். 279.) நச்—திரு. அடிகளாசிரியர்.

பல

**214.** **பலவற் றிறுதி நீடுமொழி யுளவே**
**செய்யுள் கண்ணிய தொடர்மொழி யான** (11)

† 'உரையசைப் பொருளையுடைய' என்றல் சிறப்பு என்பர் கணேசய்யர்.

**ஆ. மொ: இல.**

The final of the word denoting many be lengthened in some words in poetic order when one follows another

**க சு.**

The final of the words denoting 'many' may be lengthened in some compounds in poetry

**பி. இ. நூ.**

**முத்து.** 4. 85

அவைதாம் பாவினுள் நீட்டமும் வரையார்.

**இளம்.**

இது, மேல் 'பலவற்றிறுதிப் பெயர்க்கொடை' (211) என்று ஓதியதற்குச் செய்யுள் முடிபு கூறுதல் நுதலிற்று.

இ-ள்: பலவற்று இறுதி நீடும் மொழி உள-பல என்னும் இறுதி அகரம் நீண்டு முடியும் மொழிகளும் உள; (யாண்டு உளவெனில்), செய்யுள் கண்ணிய தொடர்மொழியான — செய்யுளாதலைக் [1]கருதிய ஒன்றோடொன்று தொடர்ச்சிப்படும் செய்யுள் முடிவுடைய மொழிகளின் கண்ணே.

'செய்யுள் கண்ணிய மொழி' என்னாது 'தொடர் மொழி. என்றதன்ான், இப்பல வென்பது நீளும் வழி வருமொழியாவது சில வென்பதே என்று கொள்ளப்படும். 'செய்யுளான' என்னாது 'செய்யுள் கண்ணிய தொடர் மொழியான' என்றதனான், பல என்னும் மொழியீறு நீண்டவழி நிலைமொழி அகரப் பேறும், வருமொழி ஞகர மெல்லெழுத்துப் பேறும், வருமொழி [2]யீறு நீண்ட வழி அகரப்பேறும், [3]மகரமாகிய மெல்லெழுத்துப் பேறும் கொள்க. 'உண்டு' என்னாது 'உள' என்றதனால் சிலவென்னும் வருமொழியிறுதி நீடலும் கொள்க.

உ-ம்: ''பலாஅஞ் சிலாஅம் என் மனார் புலவர்'' என வரும். இதன் சொல் நிலை பல சில என்னும் செவ்வெண்.

---

சு. வே: 1 கருதி
2 இறுதி
3 மகர மெல்லெழுத்தும்.

**நச்.**

இது முற்கூறிய பலவற்றிறுதிக்கண் சிலவற்றிற்குச் செய்யுள் முடிபு கூறுகின்றது.

இ—ள் : பலவற்றை யுணர்த்தும் **ஐவகைச் சொல்லுள்** இறுதி அகரம் நீண்டு முடியும் மொழிகளும் சிலவுள, யாண்டுளவெனிற் செய்யுளாதலைக் கருதிய ஒன்றோடொன்று தொடர்ச்சிப்படும் செய்யுள் முடிபுடைய மொழிகளின்கண், எ—று.

'உடைத்து' என்னாது 'உள' என்ற பன்மையான் வருமொழிக்கண் சில என்பது வந்து நீடும் என்று கொள்க. 'செய்யுளான' என்னாது 'செய்யுள் கண்ணிய தொடர்மொழி யான' என்றதனான், பல என்பதன் இறுதி அகரம் நீண்டுழி நிலை மொழியில் அகரப்பேறும், வருமொழி முன்னர் ஞகரமாகிய மெல்லெழுத்துப் பேறும், வருமொழியிறுதி நீண்டவழி அகரப் பேறும், மகரமாகிய மெல்லெழுத்துப் பேறும் கொள்க.

உ—ம், 'பலாஅஞ் சிலாஅம் என்மனார் புலவர்'. இதன் சொல் நிலை பல சில என்னும் செவ்வெண் *

**சுப்.**

பொருள் : பலவற்றைக்குறிக்கும் அகரவிறுதிச் சொற்களுள் அகரம் நீளுகின்ற மொழிகளும் செய்யுட்கண் பொருந்திய தொடர்மொழிக்கண் உள.

உ—ம் : 'பலசில' என்ற தொடர்மொழி நீண்டதைப் 'பலாஅஞ் சிலாஅம் என்மனார் புலவர்' என்ற விடத்துக் காணலாம்.

வருஞ்சூத்திரத்தில் 'தொடரல் இறுதி தம்முற்றாம் வரின்' எனக் கூறப்பட்டமையான், பல சில என்றதை இரண்டு ஈரெழுத்து மொழிகளாகக் கொள்ளாது தொடர்மொழியாகக் கொள்ளல் வேண்டும். ஆகலான் 'பலவற்றிறுதி' என்பதற்குப் பல என்னும் சொல்லின் இறுதி என இளம்பூரணர் கூறும் பொருள் பொருத்தம் இன்று.

---

*செவ்வெண்—எண்ணும்மை தொக்கு வருவது. பலவும் சிலவும் என வர வேண்டுவது பல சில என வருவது செவ்வெண்,

......பல . சில என்றதை ஒரே தொடர்மொழியாகக் கொள்ளுதல் நேரிதாகலான், சில என்றதை வருமொழியாகக் கூறுதல் நேரிதன்றென்க. 'பலாஅஞ் சிலாஅம்' என்று இரண்டிடத்தும் வரும் அம்சாரியையைக் 'கிளந்தவல்ல செய்யுளுள் திரிநவும்' (எழு. 483) என்ற புறனடைச் சூத்திரத்தாற் கொள்ளலாம். இவ்வாறு கூறாது, "செய்யுளான என்னாது...... மெல்லெழுத்துப் பேறுங் கொள்க" என உரைகாரர்கள் கூறினர்.

"செய்யுள் கண்ணிய மொழியென்னாது தொடர் மொழி என்றதனான் இப்பல என்பது நீளும்வழி வரு மொழியாவது சில என்பதே என்று கொள்ளப்படும்" என இளம்பூரணர் கூறுதல் பொருத்த மின்று; ஏன் எனின் 'செய்யுள் கண்ணிய மொழி' எனக் கூறின் பல சில என்ற தொடர் மொழியைக் கொள்ள வேண்டிய நியதி இல்லை.

**வேங்.**

'பலாஅஞ் சிலாஅம் என்மனார் புலவர்' என்பது, உரையாளர்கள் காட்டியுள்ள உதாரணம். 'இதன் சொல் நிலை பல சில என்னும் செவ்வெண்' என்று அவர்கள் தாமே எழுதியிருத்தலின், இத்தொடர், பலவும் சிலவும் எனப் பொருள் படுவதாகும். ஆயின், எண்ணுப் பொருளில் வரும் **உம்** என்பதற்கு ஈடாக இங்கே **அம்** என்பது வந்துளது. கன்னடமொழியில், எண்ணுப் பொருளில் **உம், அம்** இரண்டும் வருதல் ஈண்டு நோக்கற்பாலது.

**'அ மு மெந்துயிர்வ ஸமுச்சயத உமு விதி** (சப்தமணி. 133) என்பது இலக்கணம்.

† **'த்ரோணங்கம் நினகம் பில்ஜாணி கெயொள்'** என்பது. ஆண்டு காட்டப்பட்ட மேற்கோள்.

இதனையும் 'பலாஅஞ்சிலா அம்' என்பவற்றின் பொருளையும் ஆராயின், ஈண்டும் **அம்** என்பது எண்ணுப் பொருளில் வந்த தாகும் என்பது போதரலாகும்.

---

† 'துரோணற்கும் நினக்கும் விற்றிறத்தில்' என்பது பொருள்

பல+அம் பலாம் என்று ஆகும். ஆயின், 'பலாஅம்' என ஓர் அகரம் தோன்றி நிற்பது என்னோ எனின், அஃதில்லாக்கால், பல சில என்பதனோடு **அம்** சேர்ந்து 'பலாஞ்சிலாம்' என்றாயின என்பது அறியப்படாதாகலின், அவ்வகரம் அறிகுறியளவில் நிற்பது என்க.

மேல், ''அன்ன என்னும் உவமக்கிளவியும்'' (211) என்னும் சூத்திரத்தில் கூறியவற்றுள் மூன்றற்குச் சிறப்பு விதி கூறத் தொடங்கியவர், 'வாழிய' என்னும் சூத்திரத்தால் வியங்கோட் கிளவிக்கும், 'உரைப் பொருட்கிளவி' என்னும் சூத்திரத்தால் **அம்ம** என்னும் உரைப்பொருட் கிளவிக்கும், இச் சூத்திரத்தால் பலவற்றிறுதிப் பெயர்க்கும் முறையே கூறினார் எனல் பொருந்துவதாகத் தோன்றுகின்றது. முன்னர் வரும் இரண்டு சூத்திரங்களும் பலவற்றிறுதிக்கே யாதல் காண்க.

***சிவ.***

இச்சூத்திரம் பல அல்லது சில என்னும் சொல் பற்றியதாகக் கொள்ளாமல் 'பலசில' என்னும் தொடர்மொழி பற்றியதாகக் கொள்வர் சுப்பிரமணிய சாஸ்திரியார். நிலை வருமொழிகள் தனிமொழிகளேயன்றித் தொடர்மொழிகளல்ல. தொடர்மொழியும் தொடர் மொழியும் புணரும் புணர்ச்சி யாண்டும் கூறப்படவில்லை. ''அடையொடு தோன்றினும் புணர் நிலைக்குரிய'' (எழு. 111) என ஆசிரியர் கூறியிருத்தலின் பல என்பது சில என்பதற்கு அடை மொழி யன்மையின் அக்கூற்றை யீண்டுக் கொள்ளுதற் கில்லை.

பல சில என்னும் தொடர்மொழியில் அகர ஈறு என்பது சில என்பதன் இறுதியேயாம். அதனால் அது நீளுமாயின் பல சிலாஅம் என்றேயாதல் வேண்டும். 'பலாஅஞ் சிலாஅம்' என வருதலின் பல என்பது தனிமொழியாக இருந்தே 'பலாஅம்' என வந்ததாகக் கொள்ளுதல் வேண்டும்.

* 'பலாஅஞ்சிலாஅம்' என்பதில் முன்னர் உள்ள அகரமும் ஞகரமும் பின்னர் உள்ள அகரமும் மகரமும் எழுத்துப் பேறுகள்

---

* திரிசிரபுரம் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் 'பலாஅஞ்சிலாஅம்' என்பதைத் தமது **திருவாரூர்த்தியா கராசலீலை** என்னும் நூலில் திருநாட்டுப்படலம் 87 ஆம்

என்னும் கருத்தில் உரையாளர்கள் எழுதினர். சுப்பிரமணிய சாஸ்திரியாரும் வேங்கடராசுலு ரெட்டியாரும் **அம்** என்னும் சாரியை எண்ணுப் பொருளில் வந்ததாகக் கொண்டனர்.

வேங்கடராசுலு ரெட்டியார், "பல+அம்=பலாம் என்றாகும்" என்று கூறி அது 'பலாஅம்' என அகரம் உண்மைக்குக் கூறிய அமைதி ஏற்பதற்கில்லை. பல+அம் பலாம் என்றாவது வடமொழிப் புணர்ச்சி. "அ ஆ முன் அ ஆ வரின் அவ்விரண்டும் கெட 'ஆ' ஒன்று தோன்றும்" என்பது வடமொழித் தீர்க்க சந்தி. இராம+அயணம்=இராமாயணம் எனக்காண்க. பல என்பது பலா என நீண்ட பின்னர் அம் வருதலின் பலாஅம் என்றேயாதல் வேண்டும். பலா+அம் என்பன சேரும் போது அகரம் கெட்டுப் 'பலாம்' என வரோதோ எனின், அம் சாரியையின் அகரம் கெடும் என ஆசிரியர் கூறவில்லையாதலின் 'பலாஅம்' என்றே வரும் எனக் கொள்க. "இயல்பீற்று முடிபினை விதியீறும் கொள்வதுண்டாதலின், பல என்னும் அகர ஈறு பலா என ஆகார ஈறான பின்னர் "குறியதன் முன்னரும் ஓரெழுத்து மொழிக்கும், அறியத் தோன்றும் அகரக் கிளவி" (எழு. 227) என்னும் விதியின் படி விதியீறாகிய பலா என்பது, அகரம் பெற்று 'பலாஅ' என்றாகிப் பின்னர், வருமொழி சகரத்துக்கேற்ப இனமெல்லெழுத்தாகிய ஞகர ஒற்றுப் பெற்றுப் 'பலா அஞ்' என ஆகியது" எனக் கொள்வது ஏற்புடைத்தாகும். இதனைக் கொள்ளாக்கால் உரையாளர் இருவரும் கூறிய எழுத்துப் பேறு கொள்வதே சாலும்.

பல சில

**215. * தொடரல் இறுதி தம்முன் தாம்வரின்**
**லகரம் றகரவொற் றாதலும் உரித்தே** (12)

---

பாடலில் "வெடிகொண்டெழுந்த பலாஅஞ் சிலாஅம் மீன்கள்" என ஆண்டுள்ளார். பல ஆம் சில ஆம் என்பனவே 'பலாஅஞ்சிலாஅம்' என்றாயின. குள ஆம்பல் என்பது குளாஅம்பல் ஆவது போல என்பர் தே. ஆண்டியப்பன்—காப்பியர் நெறி எழுத்தியல் பக். 75

சு. வே ; 1 றாகலும்.

* வாராததனால் வந்தது முடித்தல் என்னும் உத்திக்கு உதாரணம் (தொல். பொருள். 665. பேரா.)

**ஆ. மொ: இல.**

The final of the words having two letters if
they follow one after another, 'l' may
change into ṟ

**க. சு.**

'La' of the standing words may be changed to 'ṟ'
if they are not to ṭar and are followed by the same (words).

**பி. இ. நூ.**

**நன். 170**

பல சில எனுமிவை தம்முன் தாம்வரின்
... ... ... ... ... ... ... ...
லகரம் றகரம் ஆகலும் ... உள ...

| | | |
|---|---|---|
| **இல. வி.** 88 | ஷை | ஷை |
| **முத்து** 4. 84. | ஷை | ஷை |

**தொன்.** 31.

சில பல தம்மொடு சேர்புழி
... ... ... ... ... ... ... ...
ல றவ் வாகலும் ... ... ஆம்.

**இளம்.**

இது பல சில என்பவற்றிற்கு இயல்பே யன்றித் [1]திரிபும் உண்டெடன எய்திய தன்மேற் சிறப்பு விதி கூறுதல் நுதலிற்று.

இ—ள் : தொடர் அல் இறுதி தம்முன் தாம்வரின்—தொடர் மொழியல்லாத ஈரெழுத் தொரு மொழியாகிய பல சில என்னும் [2]அகரவீற்றுச் சொல் தம்முன்னே தாம்வரின், லசரம் றகரஒற்று ஆதலும் உரித்து—[3]தம் ஈற்றில் நின்ற லகரஒற்று றகரஒற்றாய்த் திரிந்து முடிதலும் உரித்து.

---

சு. வே :

1. திரிபுண்டென
2. லகர வீற்றுச் சொல்
3. தம் பின் நின்ற.

உ—ம் : பற்பல [4]கொண்டான் எனவும், சிற்சில வித்தி எனவும் வரும்.

'தன்முற்றான்' என ஒருமையாற் கூறாது 'தம்முன் தாம் வரின்' எனற பன்மையான், [5]மேல் பல சில என நின்ற இரண்டும் தழுவப்பட்டன. 'தொடரல் இறுதி தம்முன் வரின்' என்னாது 'தாம்' என்றதனான், இம்முடிபின் கண் பல என்பதன் முன் பல வருக, சில என்பதன் முன் சில வருக என்பது கொள்ளப்பட்டது.

'லகரம் றகரமாம்' என்னாது 'லகரம் றகர ஒற்றாம்' என்ற ஞாபகத்தான், அகரம் கெடும் என்றானாகக் கொள்க. அருத்தா பத்திமுகத்தால், தம்முன் தாம்வரின் லகரம் றகரஒற்றாம் எனவே தம்முன் பிறவந்த விடத்து லகரம றகரவொற்றாகாது அகரம் கெடும் என்பது கொள்ளப்படும். பல்படை, பல்யானை, சில் படை, [6]சில் வேள்வி எனவரும்.

'தொடரல் இறுதி' என்பது சுட்டல்லது ஓரெழுத்தொருமொழி அகரம் இன்மையின், ஓரெழுத்தொருமொழி மேற் செல்லா தாயிற்று. 'உரித்து' [7]என்றது அகர வீற்றொருமைபற்றி.

**நச்.**

இது பல சில என்பனவற்றிற்கு இயல்பேயன்றித் திரிபும உண்டென எய்தியதன்மேற் சிறப்புவிதி கூறுகின்றது.

இ—ள் : தொடர் மொழியல்லாத ஈரெழுத் தொருமொழி யாகிய பல சில என்னும் அகர ஈற்றுச் சொல், தம்முன்னே தாம் வருமாயின், தம் ஈற்றில் நின்ற லகர வொற்று றகர வொற்றாகத் திரிந்து முடிதலும் உரித்து; எ—று.

உம்மையாற் றிரியாமையும் உரித்தென்றார்.

உ—ம் : பற்பல கொண்டார், சிற்சில வித்தி எனவரும், அகரவீற்றுச் சுட்டல்லாத குற்றெழுத்து ஓரெழுத்தொரு மொழி

---

சு. வே :

4. கொண்டார், சிற்சில வித்தி எனவரும்.
5. மேல் நின்ற பலசில என்ற இரண்டும்
6. சில கேள்வி
7. என்றது ஈற்றொருமைபற்றி.

யாகுவன இன்மையின் தொடரல் இறுதி எனவே ஈரெழுத்தொரு மொழியே உணர்த்திற்று. **தன்முன்** என்னாது **தம்முன்** என்ற பன்மையாற் பல சில என நின்ற இரண்டுந் தழுவப்பட்டன.

'தம்முன்வரின்' என்னாது 'தாம்' என்றதனாற் பலவின்முன் பல வருதலும் சிலவின் முன் சில வருதலும் கொள்க. லகரம் றகர வொற்றாம் என ஒற்றிற்குத் திரிபு கூறி அகரம் கெடுதல் கூறிற்றிலர் எனின், வாராததனால் வந்தது முடித்தல் என்னும் உத்திபெற வைத்தது என்றுணர்க. இதனை ஞாபகம் என்பாரும் உளர். அருத்தாபத்தியால் 'தம்முன் தாம்வரின்' எனவே தம்முன் பிறவரின் லகரம் றகரவொற் றாகாது அகரம் கெடும் என்று கொள்ளப்படும்.

உ—ம் ; பல்கடல், சேனை, தானை, பறை எனவும்; பல் யானை, பல்வேள்வி எனவும்; சில்நாடு, சேனை தானை, பறை எனவும் வரும். உரித்தென்றது அகரவீற்றொருமைபற்றி.

**சுப்.**

சூத்திரத்துள்ள 'லகரம்' என்றதற்கு லகரஒற்று எனப் பொருள் கொண்டு ''லகரம் றகரமாம் என்னாது ... ... ஞாபகத் தால் அகரம் கெடும் என்றானாகக் கொள்க'' என உரைகாரர்கள் கூறினர். வகரம் (எழு. 210) யகரம் (எழு. 212) என்ற சொற்கள் வகரவொற்று யகரவோற்று எனப் பொருள் படாது வ, ய எனப் பொருள்படுகின்றமையான்ஈண்டும் ஆசிரியர் லகரம் என்றதனால் லகரவொற்றைக் குறிக்காது **ல** என்றதையே குறித்தனர் எனக் கொள்ளின் சாலும். ஆகலின் 'றகரவொற்று' என்ற விடத்து 'ஒற்று' என்றது மிகையென்றும், அது அகரம் கெடும் என்றதை ஞாபிக்கின்றது என்றும் உரைகாரர்கள் கூறுவது பொருந்தாக் கூற்றாகும்.

''அருந்தாபத்தி முகத்தால் தம்முற்றாம்வரின் லகரம் றகர வொற்றாம் எனவே......அகரம் கெடும் என்பது கொள்ளப்படும்'' என உரைகாரர்கள் கூறினர். இது அருத்தாபத்தியாகுமா? ஆகாது. ஆதலால் இதனை, 'பல்வேறு கவர் பொருள்' (களா. 23) 'பன்னகை' (களா. 23) பன்னூறு (களா. 32) பல்லாற் றானும் (கற்பு. 27) பல்குறிப்பினவே (உவம. 11) சில்வகை (மரபு 100) முதலிய ஆசிரியர் வழக்காற் கொள்ளலாம்.

**வேங்.**

"தொடரல் இறுதி...... உரித்தே என அகரத்திற்குக் கேடு வாராத சூத்திரத்தானே லகரம் றகர ஒற்றாய் வரும் எனப் பிரித்துத் திரிபு கூறியதே பற்றாக அகரம் ஆண்டு நில்லாது கெடும் என்று கொள்ளவைத்ததனானே, "சிற்சில வித்திப் பற்பல கொண்டார்" என்று வந்த புணர்ச்சி முடித்தவாறு கண்டு கொள்க" என்று பேராசிரியர் கூறினார். (மரபியல் 110 உரை) அதனையே கொண்டு, 'அகரம் கெடுதல் கூறிற்றிலர் எனின், அது வாராததனால் வந்தது முடித்தல் என்னும் உத்திபெற வைத்தது என்றுணர்க.' என்று நச்சினார்க்கினியர் எழுதியுள்ளார். இவற்றால், ஆசிரியர் லகரமெய் றகர மெய்யாகத்திரியும் என்றே விதிகூறினார் என்பதும், லகரத்தின் மேல் நின்ற அகரம் வாராதத னான் வந்தது முடித்தல் என்னும் உத்தியான் கெடுக்கப்படும் என்பதும் அவ்விருவர் கருத்துமாதல் அறியப்படும். ஆயின் ஆசிரியர் லகரம் என்றது லகரவுயிர்மெய்யையே குறிக்கும். லகரம் என்பது லகரமெய்யையே யன்றி உயிர்மெய்யை யுணர்த்துமோ எனின் உணர்த்தும். முன்னர்,

> **"பொன்னென் கிளவி யீறுகெட முறையின்**
> **முன்னர்த் தோன்றும் லகார மகாரம்"** (புள்ளி. 61)

என்னுமிடத்து, லகரம் என்றது உயிர்மெய்யினையே யுணர்த்து தல் காண்க. இதனால் லகரம் (ல) றகரமெய்யாகத் திரியும் என்பது சூத்திரத்தாற் போதருவதாகும். ஆகலின் உத்தியால் அகரம் கெடுதல் வேண்டா.

பற்பல என்று வருதலை நோக்கின,, இயல்பில், **பல்** என்று மெய்யீறா யிருக்கும் சொல்லே, பன்மையைக் குறிச்கும் அகரவுயிரோடு கூடிப் **பல** என்று நின்றதெனவும், புணர்ச்சிக்கண் பிறசொல்லோடு கூடி வரும்வழி அகரவிகுதியோடு நிற்றல் வேண்டாமையின், இயல்பாய மெய்யீறாய் நின்று புணர்ந்தது எனவும் அறிதல் கூடும்.

***சிவ.***

*அருத்தாபத்திக்கு விளக்கம்:*

பகலுண்ணான பருத்திருப்பான் என்புழி அவன் இரவு உண்பான் என்பது அருத்தாபத்தியாற் பெறப்படுவதாம். பகலுண்ணான் பருத்திருப்பான் என்ற தொடரில் பருந்திருப்பதற்

குக் காரணம் காணப்படவில்லை. பகலுண்ணாமை பருத்தமைக் குக் காரணம் அன்று; எனவே பருமைக்குக் காரணம் உண்ணுத லாகவே வேண்டும். ஆதலின் பகலில் உண்ணானாயினும் இரவில் உண்பவனாதல் வேண்டும். இரவில் உண்ணுதலே பருமைக்குக் காரணம். இவ்வாறு காணுதல் அருத்தாபத்தியாற் காணுதல் எனப்படும். இதனால் அருத்தாபத்தியாவது சொல்லப்பட்ட கருத்து முற்றுப்பெறவில்லை யென்றால் மறுதலையான கருத் தினைக் கூறிக் கொள்ளுதல் என்பது புலப்படும்.

இச்சூத்திரத்தில் சொல்லப்பட்ட கருத்து தம் முன்தாம் வரின் லகரம் றகர ஒற்றாம் என்பது. சொல்லப்படாத கருத்தாவது தம் முன்பிறவரின் எவ்வாறாம் என்பது. அதையும் முடித்துக்கொள்ள வேண்டுவது அருத்தாபத்தியால் முடித்துக் கொள்வதாம். இங்கு அருத்தாபத்தியின் இலக்கணம் முழுமையும் இல்லாததுபோல் காணப்படுதலின் சாஸ்திரியார் அருத்தாபத்தியாகாது என்றார் போலும்.

லகரம் றகரவொற்றாதல் என்ற தொடர்க்கு உரையாளர் இருவரும் லகர உயிர்மெய்யில் உள்ள லகர வொற்று எனக் கொள்ள, மற்றையோர் லகர உயிர்மெய் எனக் கொண்டனர். அதற்கேற்பத் தொல்காப்பிய ஆட்சிகளும் கூறினர். லகார மகாரம் (புள்ளி 61) என ஆசிரியர் ஆட்சியில் லகாரம் உயிர் மெய்யாகவும் மகாரம் மெய்யாகவும் வந்தனவாதலின் இச் சூத்திரத்தில் லகரம் என்பதை உரையாளர்கள் மெய்யாகக் கொண்டதும் தவறில்லை; அதனால் அவர்கள் எழுதிய சிறப்புரை களும் பொருந்துவனவே.

இரெட்டியார் அவர்கள் ''பற்பல என்று...... அறிதல் கூடும்'' என்றெழுதியது பொருந்துமேனும் ஆசிரியர் தொல்காப்பியர் பல சில என்னும் சொற்களுக்கே இங்கு புணர்ச்சி விதிகூறுதலின் அவர் எழுத்து இங்கு வேண்டுவதன்று.

இனி இச்சூத்திரம் ஒரு நயமிக்க இலக்கியம் (செய்யுள்) என்பதைக் காணலாம்: இச்சூத்திரம் பல சில என்னும் சொற்களுக்கேயுரியது; ஆனால் வெளிப்படையில் அச்சொற்கள் கூறப்படவில்லை. சொற்றொடர் ஆட்சியினால் குறிப்பாகக் கொள்ளவைத்தார் ஆசிரியர்.

தொடர் அல் இறுதி என்பதனால் இச்சூத்திரம் தொடர் மொழிக்கு அதாவது மூவெழுத்து மொழிக்குரியதன்று என்பது பெறப்படும்.

அகரச்சுட்டுதவிர வேறு தனி அகரமோ, உயிர்மெய் அகரமோ பொருளுணர்த்தும் சொல்லாக ஏதும் இன்மையால் ஒருமொழிக்கு அதாவது ஓரெழுத்தொருமொழிக்கும் இச்சூத்திரம் உரியதன்று.

எனவே ஈரெழுத்தொரு மொழிக்கேயுரியது இச்சூத்திரம். அகர இறுதிபற்றிய வரிசையில் இது அமைவதாலும், லகரம் என அகரஈறு பேசப்படுதலாலும் அகர இறுதி ஈரெழுத்தொரு மொழிக்குரியது என்பதும் புலப்படும். விள என்பதும் அகரவீற்று ஈரெழுத்து ஒருமொழியாதலின் அதுபோலும் சொற்களை நீக்குதற்குதற்கு லகர இறுதியாகவுள்ள சொல்லையே குறிக்க லகரம் என்பது ஆளப்பட்டுள்ளது. அப்படியாயின் இல என்னும் சொல்லைக் கொள்ளலாமோ எனின் அது தன்முன்தான் வராது ஆதலின் கொள்ளுதற்கில்லை. ஒருகால் இல இல் என அடுக்குத் தொடராகவரின் கொள்ளலாமேயெனின், இற்இல என லகரம் றகர ஒற்றாக ஆதல் வல்லின முதன்மொழி வருமொழியாக வேண்டுமாதலின் இல என்பது போலும் சொற்கள் கொள்வதற் கில்லை.

எனவே, 'தொடரல்' என்பதால் ஈரெழுத்து மொழியாதலும், 'லகரம்' எனபதால் அகர வீற்று மொழியாதலும், 'லகரம் றகர ஒற்றாதல்' என்பதால் அது லகரவீற்றதாதலும், அத்துடன் வருமொழி முதல் வல்லெழுத்தாதலும் ஆகிய குணங்கள் ஒருங்கே ஏற்பதற்குத் தம்முன் தாம் வரும் சொற்கள் பல சில என்பனவே யன்றிப் பிற ஆகா என்பது பெறப்படுதலின் இச்சூத்திரம் பல சில என்பனபற்றியதே என அறியலாம். இவ்வாறு அறியவைத்த சொற்றொடராட்சி இலக்கியச் சொற்றொடராட்சியாம். எனவே இலக்கணச் சூத்திரத்திலும் இலக்கியச் செறிவு அமையும் என்பதை இதன் மூலம் அறியலாம்.

பல சில என்பனவற்றிற்கு மேலும் ஒரு முடிவு.

**216. வல்லெழுத் தியற்கை உறழத் தோன்றும். (13)**

**ஆ. மொ: இல.**

The change of 'l' into hard consonant is optional

**க. சு.**

The quality (of p and c after 'pala' and 'eila' when followed by identical (words) is obtionally changed into a (long) plosive

**பி. இ. நா.**

**நன்** 170

பல சில எனுமிவை தம்முன் தாம்வரின்
இயல்பும் மிகலும் ... ... ...
... ... ... ... பிறவரின்
அகரம் விகற்ப மாகலும் உளபிற

**இ. வி** 88. ஷை ஷை

**முத்து.** பு. 84. ஷை ஷை

**தொன்.** 31.

சிலபல தம்மொடு சேர்புழி இயல்பும்
முதன்மெய்க் கடைமெய் மிகலும்
... ... ... லாவாதலும் ஆம்
பிறவரின் அகரம் நிற்றலும் கெடலுமாம்.

**இளம்.**

[1]இதுவும் மேற்கூறிய [2]இரண்டிற்கும் இன்னும் ஓர் முடிபு வேற்மை உணர்த்துதல் நுதலிற்று.

இ—ள் : வல் எழுத்து இயற்கை உறழத் தோன்றும் —மேற் கூறிய பல சில என்னும் இரண்டிற்கும் அகர வீற்றுப் பொது விதியிற்* கூறிய வல்லெழுத்து மிகுதியது இயல்பு [3]மிகுதலும் மிகாமையும் ஆகி உறழ்ந்து வரத் தோன்றும்.

உ—ம் : பலப்பல, சிலச்சில; பலபல, சிலசில எனவரும்.

---

சு. வே :

1. இது
2. இரண்டற்கும்
3. மிகலும்

உயிர்மம. 1

ஈண்டும் தம்முற்றாம் வருதல் கொள்க. 'இயற்கை' என்றதனான், முன் கூறிய பற்பல, சிற்சில என்னும் முடிபோடு பல்பல, சில்சில என்னும் முடிபு பெற்று உறழ்ச்சியாதல் கொள்க.

'தோன்றும்' என்றதனான், அகரம் கெட லகரம் ஆய்தமும் மெல்லெழுத்துமாய்த் திரிந்து முடிதல் கொள்க.

உ—ம் ; பஃறானை, பன்மரம்; சிஃறாழிசை, சின்னூல் என வரும்.

**நச்.**

இது முற்கூறிய இரண்டற்கும் உள்ளதோர் முடிபு வேற்றுமை கூறுகின்றது.

இ—ள் : முற்கூறிய பலசில என்னும் இரண்டற்கும் அகர வீற்றுப் பொது விதியிற் கூறிய வல்லெழுத்து மிகும் இயல்பு மிகுதலும் மிகாமையுமாய் உறழ்ந்து வரத் தோன்றும்; எ—று.

உ—ம் : பலப்பல, பலபல; சிலச்சில, சிலசில என வரும். ஈண்டுந் தம்முன்தாம் வருதல் கொள்க. இயற்கையென்றதனால் அகரங்கெட லகரந்திரிந்துந் திரியாதும் உறழ்ந்து முடிதலும் கொள்க. பற்பல, பல்பல, சிற்சில சில்சில எனவரும்.

தோன்று மென்றதனான் அகரங்கெட லகரம் மெல்லெழுத்தும் ஆய்தமுமாகத் திரிந்து முடிதலும் கொள்க. பன்மீன் வேட்டத்து, பன்மலர், பஃறாலி, பஃறாழிசை, சின்னூல் சிஃறாழிசை எனவரும். இது 'தோன்றும்' என்று எடுத்தோதிய சிறப்பு விதியால் அகரங்கெட நின்ற லகர வொற்றின் முடிபாக லின் தகரம் வரும் வழி ஆய்தம் நிலையலும் (எழு. 370) என்பதனால் முடியாது.

**பி. கு.**

பல் + தானை = பஃறானை என வருவதை கல் + தீது = கஃறீது என வருவது போல் கொண்டு தகரம் வருவழி'' (எழு. 370) என்னும் சூத்திர விதியையும், பல் + மரம் = பன்மரம் என வருவதை, கல் + முறி = கன்முறி என வருவது போலக் கொண்டு 'மெல்லெழுத்தியையின் னகரமாகும்' (எழு. 368) என்னும் சூத்திர விதியையும் கொள்ளலாம் என்பர் சாஸ்திரியார். அச் சூத்திரங்கள் லகர வீற்றுச் சொற்களுக்குக் கூறப்பட்டன. இச்சூத்திரம் அகர

விற்றுச் சொற்களுக்குச் சிறப்பாகப் பல சில என்னும் சொற்களுக்கே கூறப்பட்டது. ஆதலின் உரையாளர்கள் இருவரும் அகரம் கெட லகரம் ஆய்தமாகவும் மெல்லெழுத்தாகவும் வருவதற்குத் 'தோன்றும்' என்னும் சொல்லைச் சிறப்பாகக் கொண்டு கூறினர்.

வேற்றுமையில் அகர ஈறு

**217 வேற்றுமைக் கண்ணும் அதனோ ரற்றே** (14)

**ஆ. மொ: இல.**

Even in ease relations, the same eourse
takes place.

**க. சு.**

In ease relationship, too, the same rule applies.

**பி. இ. நூ.**

சூ. 204-இன் கீழ் உள்ளவற்றைக் கொள்க.

**இளம்.**

இது, அகரவீற்றுப் பெயர்க்கு வன்கணத்தோடு வேற்றுமை முடிபு கூறுதல் நுதலிற்று.

இ—ள்: வேற்றுமைக் கண்ணும் அதன் ஓர் அற்று—அகர வீற்றுப் பெயர் வேற்றுமைப் பொருட்புணர்ச்சிக் கண்ணும் மேற் கூறிய (204) அல்வழியோடு ஒரு தன்மைத்தாய்க் க ச த ப முதல் மொழி வந்தவழித் [1]தத்தம் ஒற்று இடை மிக்கு முடியும்.

உ—ம்: இருவிளக் கொற்றன், சாத்தன், தேவன், பூதன் எனவரும். விளக்குறுமை எனக்குணவேற்றுமைக் கண்ணும் கொள்க. (இருவிள — ஓலை; வேணாட்டகத்து ஓர் ஊர்)

1, தத்தம் ஒத்த ஒற்று;

**நச்.**

இஃது அகர வீற்றிற்கு அல்வழிமுடிபு கூறி, வன்கணத்தோடு வேற்றுமை தொக்கு நின்ற முடிபு கூறுகின்றது.

இ—ள்: அகர ஈற்றுப் பெயர் வேற்றுமைப் பொருட் புணர்ச்சிக்கண்ணும் முற்கூறிய அல்வழியோடு ஒரு தன்மைத்தாய், க ச த ப முதன் மொழி வந்துழித் தத்தம் ஒத்த ஒற்று இடைமிக்கு முடியும்; எ—று

உ—ம்; இரு விளக் கொற்றன், சாத்தன், தேவன், பூதன் எனவரும். இருவிளக்குறுமை சிறுமை, தீமை, பெருமை எனக் குணவேற்றுமைக் கண்ணும் கொள்க. இருவிள என்பது வேணாட்டகத்து ஓர் ஊர்; கருவூரினகத்து ஒரு சேரியும் என்ப. இருவிளவிற் கொற்றன என விரிக்க.

மரப்பெயர்க்குப் பிறிது விதி.

**218. மரப்பெயர்க் கிளவிக்கு மெல்லெழுத்து மிகுமே (15)**

**ஆ. மொ: இல.**

In the ease of words, denoting the name of the trees, the soft consonant appears.

**க. சு.**

In the words denoting trees, a nasal is inserted

**பி. இ. நூ.**

**நன். 166**

மரப்பெயர் முன்னர் இனமெல் லெழுத்து
வரப்பெறு னவுமுள வேற்றுமை வழியே

**இ, வி. 83.**

மெல்லெழுத்து மிகுநவும் வல்லெழுத்து மிகுநவும்
அம்மிடை வருநவும் உறழ்ச்சி எய்துநவும்
என்றொரு நால்வகைய மரப்பெயர் அன்னவை
வேற்றுமை மருங்கிற் போற்றல் வேண்டும்.

**முத்து. பு. 86**

வலிவரின் மரப்பெயர் மெலிமிகும் என்ப.

**இளம்.**

இது [1]அகரவீற்று மரப்பெயர்க் கிளவிக்கு எய்தியது விலக்கிப் பிறிது விதி வகுத்தல் நுதலிற்று.

இ—ள்: மரப்பெயர்க் கிளவிக்கு மெல்லெழுத்து மிகும்—அகரவீற்று மரப் பெயராகிய சொல் மெல்லெழுத்து மிக்கு முடியும்.

உ—ம்: விளங்கோடு, விளஞ்செதிள், தோல், பூ எனவரும்.

**நச்.**

இஃது அகர ஈற்று மரப் பெயர்க்கு எய்தியது விலக்கிப் பிறிது விதி வகுத்தது.

இ—ள்: அகரவீற்று மரப்பெயராகிய சொல் வேற்றுமைப் பொருட்புணர்ச்சிக்கண் மெல்லெழுத்து மிக்கு முடியும், எ-று

உ—ம்: அதங்கோடு, விளங்கோடு, செதிள், தோல், பூ என வரும். இது "க ச த ப முதலிய" (எழு. 143) என்பதனால் முடியும்.

மக

**219. மகப்பெயர்க் கிளவிக்கு இன்னே சாரியை (16)**

**ஆ. மொ: இல.**

The word, denoting chi'd has the increment 'in'

**க. சு.**

The word denoting child (maka) has the empty morph 'in'.

**பி. இ நூ.**

**முத்து.** 4. 87

இன்சா ரியைமக வேற்கும் என்ப.

**இளம்.**

இது அவ்வீற்றுள் ஒன்றற்கு எய்தியது விலக்கிப் பிறிது விதி வகுத்தல் நுதலிற்று.

---

சு. வே: 1. அவ்வீற்று.

இ—ள்: மகப் பெயர்க் கிளவிக்கு இன் சாரியை—அகரவீற்று மக என்னும் பெயர்ச் சொல்லிற்கு வேற்றுமைப் பொருட்புணர்ச் சிக்கண் வரும் சாரியை இன்.

உ-ம்: மகவின்கை, செவி, தலை, புறம் எனவரும்.

சாரியைப் பேறு †வரையாது கூறியவழி நான்கு கணத்துக் கண்ணும் செல்லும் என்பதாகலின், மகவின் ஞாண் என இயல்பு கணத்துக் கண்ணும் கொள்க.

**நச்.**

இஃது அகரவீற்றுள் ஒன்றற்கு எய்தியது விலக்கிப் பிறிது விதி வகுத்தது.

இ—ள்: அகரவீற்று மக என்னும் பெயர்ச் சொல்லிற்கு வேற்றுமைப்பொருட்புணர்ச்சிக்கண் வரும் சாரியை இன்சாரியை; எ—று.

உ-ம்: மகவின் கை, செவி, தலை, புறம் எனவரும். சாரியைப் பேறு வரையாது கூறியவழி நான்கு கணத்துக்கண்ணும் செல்லும் என்பது ஆசிரியர்க்குக் கருத்தாகலின் மகவின் ஞாண், நூல், மணி, யாழ், வட்டு, அடை என ஒட்டுக.

மேல் (219) அவண் என்றதனான் இன்சாரியை பெற்றுழி இயைபு வல்லெழுத்து வீழ்க்க.

**சுப்.**

மகவின்கை என்றது மகவிற்கை என ஆகாதா எனின் "னஃகான் றஃகான் நான்கன் உருபிற்கு" (எழு 124) என்றமை யான் ஆகாதென்க.

வரும் சூத்திரத்திலுள்ள 'அவண்' என்றதனால் மகவின்கை என மேல் இன்சாரியை பெற்றவழி இயைபு வல்லெழுத்து

---

† வரையாது கூறுதலாவது: வருமொழிமுதல் வன்கணம் மென்கணம் இடைக்கணம் உயிர்க்கணம் என்னும் நான்கனுள் இன்னது வருமிடத்து என வரையறை செய்யாது கூறுதல்.

வீழ்வைக் கொண்டனர் உரைகாரர்கள் க ச த பக்கள் ஈரொற்றாக ய ர ழ இவற்றின் பின்னரே வரும் என்பது,

> ய ர ழ என்னும் மூன்றுமுன் ஒற்றக்
> க ச தப ங ஞ ந ம ஈரொற் றாகும் (எழு. 48)

என்ற சூத்திரத்தில் ஆசிரியர் உணர்த்தினமையின் இன்சாரியை வரும்போது இயைபு வல்லெழுத்து வாராதென்பது பெறப்படும் ஆகலான் உரைகாரர்கள் கூற்றுப் பொருத்தம் இன்று.

*சிவ.*

"இன்சாரியை பெற்றவழி இயைபு வல்லெழுத்து வீழ்க்க என்று இளம்பூரணரும் நச்சினார்க்கினியரும் ஆங்காங் குரைப் பதன் விளக்கம் வருமாறு : உதாரணத்துக்கு ஒன்று:

அகர வீற்றுப் பெயர்களின் முன்னர் க ச த ப க் களை முதலில் கொண்டுள்ள மொழிகள் வருமொழிகளாக வருமானால், அக்கசதபக்கள் இடைக்கண் மிக்குமுடியும். இம் முடிபு அல்வழிக் கும் வேற்றுமைக்கும் பொது. "அகர விறுதிப்பெயர்" (எழு. 204) என்னும் சூத்திரம் அல்வழி முடிபுக்கும், "வேற்றுமைக் கண்ணும் அதனோரற்றே" (எழு. 217) என்னும் சூத்திரம் வேற்றுமை முடிபுக்கும் கூறப்பட்டமை முன்னர்க்கண்டோம். மக+குறிது= மகக்குறிது என அல்வழியிலும் மக+கை=மகக்கை என வேற்றுமையிலும், வருமொழி வல்லெழுத்து மிக்கு முடிந்தது காணலாம். எனவே ஆசிரியர் அகரவீற்றுப் பொது முடிபாக வருமொழியில் க ச த ப த் தோன்றின் அவைமிக்கு முடியும் என்றார். அதன்படி மக+கை=மகக்கை என்று முதலில் முடிந்து விட்டது. பின்னர் மக என்பது இன்சாரியை பெறும் என இச்சூத்திரத்தில் ஆசிரியர் கூறுகிறார். அப்படியாயின் மக+இன்+க்+கை என வரவேண்டும். அவ்வாறு வாராமையின் பொது விதியால் வந்தமர்ந்த க க ர ஒற்றை 'இன்' வருகையால் நீக்கல் வேண்டும். மக+இன்+க்+கை என்பனவற்றில் க் என்பது பொதுவிதியால் வந்த வல்லெழுத்து. அதனால் அது இயல்பு அல்லது இயைபு வல்லெழுத்து எனப்படும். அதை நீக்குவதே இயைபு வல்லெழுத்து வீழ்த்தலாம்.

இவ்வாறு கூறாது விடின் வரும் குறையாது எனின், அகர விறுதிப் பெயர் வல்லெழுத்துவரின் அது மிக்கு முடியும்

என்றறிந்த மாணவன் மக+கை=மகக்கை எனக் கொண்டிருக்கும் போது, மக என்பது இன்சாரியையுடனும் வரும் என இடையே ஒரு கருத்துக்கூறின், அவன் மக+இன்+கை எனவரின் முன்னர் வந்த ககர ஒற்று என்னாகும் என ஐயுறுவான் ஆகலின் அதுவே குறையாம். அக்குறை போக்குவதே உரையாளர்கள் கூற்று.

சாஸ்திரியார் **ன்க்** என ஈரொற்றுடனிலை யாவதில்லை யாதலின் உரையாளர் கூற்று பொருந்தாதென்றார். மாணவன் பொது முடிபின்படி மக+கை=மகக்+கை எனக் கொண்டு விட்டவன், இன்சகரியையினை மகக்+இன்+கை எனக் ககர ஒற்றின் பின்னர் அமைக்கலாமோ என ஐயப்படின் ஈரொற்றுடனிலைவாதம் எடுபடாதாம். அதனாலும் உரையாளர் கூற்றுப் பொருந்துவதேயாம். அடுத்த சூத்திரத்தில் மகத்துக்கை என வருவதிலும் அவ்வாறே கொள்ளவேண்டும்.

மக+கை=மகக்+கை=மகக்+அத்து+கை எனக் கொண்டு, ககர ஒற்றைக் கெடுத்து மகத்து+கை என அமைத்து, அத்தே வற்றே என்னும் புணரியற் சூத்திரத்தின் (31) படி அத்தின் பின்னர் வல்லெழுத்துக் ககரம் மிக்கதாகக் கொண்டு, மகத்து+க்+கை=மகத்துக்கை என அமைத்துக் கொள்ளல்வேண்டும்.

**220 அத்து அவண் வரினும் வரைநிலையின்றே (17)**

**ஆ. மொ: இல.**

If 'aththu' comes in between, it is not forbidden

**க. சு.**

It is not objectionable if attu occurs in that position

**இளம்**

இதுவும் அது.

இ—ள்; அத்து அவண் வரினும் வரை நிலை இன்று—மேற்கூறிய இன்னேயன்றி அத்து என்னும் சாரியை இயைபு வல்லெழுத்தினோடு அம்மக என்னும் சொல்லிடத்து வந்து முடியினும் நீக்கும் நிலைமை இன்று.

உ—ம்: மகத்துக்கை, செவி, தலை, புறம் எனச்செய்கை யறிந்து முடிக்க.

'அவண்' என்றதனால், †மகப்பால்யாடு என வல்லெழுத்துப் [1]பேறும், மகவின்கை என மேல் இன்சாரியை பெற்றவழி இயைபு வல்லெழுத்து வீழ்வும், *உருபிற்குச் சென்ற சாரியை பொருட் கண் வந்த வழி விளவின் கோடு என இயைபு வல்லெழுத்து வீழ்வும் கொள்க. நிலை என்றதனால் மகம்பால்யாடு என மெல்லெழுத்துப்பேறும் கொள்க.

நச்.

இஃது ஈற்று வல்லெழுத்தும் அத்தும் வகுத்தலின் எய்திய தன்மேற் சிறப்பு விதி கூறுகின்றது.

இ—ள் : முற்கூறிய மகவிடத்து, இன்னேயன்றி அத்துச் சாரியையும் ஈற்று வல்லெழுத்தும் வந்து முடியினும் நீக்கும் நிலைமையின்று; எ—று.

உ—ம் ; மகத்துக்கை, செவி, தலை, புறம் எனவரும்.

'அவண்' என்றதனால் மகப்பால்யாடு' என வல்லெழுத்துப் பேறும், †மகவின்கை யென மேல் (218) இன் சாரியை பெற்றுழி

---

சு. வே.

1. பெறலும்.

† மகப்பால்யாடு = மகவுக்காக வளர்க்கப்படும் பால்யாடு. குழந்தைக்குப் பால் வேண்டி யாடு வளர்க்கும் வழக்கை இது காட்டும்.

* "உருபிற்குச் சென்ற சாரியை பொருட்கண் வந்தவழி விளவின்கோடு என இயைபு வல்லெழுத்து வீழ்வும்" என்னும் பகுதி தமக்குக் கிடைத்த ஏடுகளில் காணப்பட வில்லை என்பர் திரு — அடிகளாசிரியர்.

† "மகவின் கையென மேல் இன்சாரியை பெற்றுழி இயைபு வல்லெழுத்து வீழ்வும்" என்ற தொடர் மகாலிங்க அய்யர் பதிப்பில் இல்லை.

இயைபு வல்லெழுத்து வீழ்வும், விளவின் கோடு என உருபிற்குச் சென்ற சாரியை பொருட்கண் சென்றுழி இயைபு வல்லெழுத்து வீழ்வும் கொள்க.

'நிலை' என்றதனால் மகம்பால்யாடு என மெல்லெழுத்துப் பேறும் கொள்க.

**சிவ.**

மகப்பால்யாடு என்பதை "வேற்றுமைக்கண்ணும் அதனோ ரற்றே" என்னும் ஈற்றுப் பொதுமுடிபாலும், மகம் பால்யாடு என்பதை இலேசினாலும் கொள்ளலாம்.

நச்சினார்க்கினியர் இச்சூத்திரம் ஈற்று வல்லெழுத்தும் அத்தும் வகுப்பதாகக் கூறுவர். அத்து மட்டுமே வகுப்பது இச் சூத்திரம். மகத்துக்கை என்பதில் உள்ள ககர ஒற்று சாரியை யால் வந்த வல்லெழுத்தாகும். வரினும் என்பதின் உம்மை இன்சாரியையினையும், சாரியையாற்பெறும் வல்லெழுத் தினையும் தழுவியது.

அகர ஈற்றுப் பன்மைச் சொற்கள்.

**221. பலவற்று இறுதி உருபியல் நிலையும் *** (18)

**ஆ. மொ. இல.**

The ending of the words, denoting many
maintains the course of case-relation

**க. சு.**

The ending of the (words) pala (etc)
maintains (the same) manner (in) case-relationship

பல்லவை நுதலிய அகர இறுபெயர்
வற்றொடு சிவணல் எச்சம் இன்றே.

---

† உருபியல் சூத்திரம்
பல்லவை நுதலிய அகர இறுபெயர் வற்றொடு சிவணல் எச்சம் இன்றே

**பி. இ. நூ.**

**இல. வி. 150**

பல்லவை நுதலிய அகர இறுபெயர்
*அற்றொடு சிவணல் எச்சம் இன்றே.

**முத்து 4. 50**

அகர இறுபெயர் *அற்றொடு சிவணும்.

**இளம்.**

இது, [1]அவ்வீற்றுள் ஒன்றற்கு எய்தியது விலக்கிப் பிறிது விதி வகுத்தல் நுதலிற்று.

இ—ள் ; பலவற்று இறுதி உருபு இயல் நிலையும்—பல என்னும் அகர வீற்றுச் சொல் உருபு புணர்ச்சிக்கண் வற்றுப் பெற்றுப் புணர்ந்த இயல்பின்கண்ணே நிற்கும்.

எ—ம் : பலவற்றுக் கோடு, செவி, தலை, புறம் எனவரும்.

**நச்.**

இஃது, ஈற்று வல்லெழுத்தும் வற்றும் வகுத்தலின் எய்திய தன் மேற் சிறப்பு விதி கூறுகின்றது.

இ—ள் : பல்ல பல சில உள்ள இல்ல என்னும் பலவற்றை யுணர்த்தும் அகரவீற்றுச் சொற்களின் இறுதி, உருபியற்கண் வற்றுப் பெற்றுப் புணர்ந்தாற் போல உருபினது பொருட் புணர்ச்சிக் கண்ணும் வற்றுப் பெற்றுப் புணரும்; எ—று.

ஈற்று வல்லெழுத்து அதிகாரத்தாற் கொள்க.

உ—ம் : பல்லவற்றுக்கோடு பலவற்றிக்கோடு, சிலவற்றுக் கோடு, உள்ளவற்றுக்கோடு, இல்லவற்றுக்கோடு செதிள், தோல் பூ என ஒட்டுக. உருபு விரிந்துழி நிற்குமாறு போலன்றி அவ் வுருபு தொக்கு அதன் பொருள் நின்று புணருங்கால் வேறுபாடு உடைமையின் அவ் வேறுபாடு ஈண்டு ஓதினார் இத்துணையும் என்று உணர்க.

---

* பிற்கால இலக்கண நூலார் யாவரும் வற்றுச் சாரியை யினை அற்றுச் சாரியை யென்றே கொண்டனர், வற்றுச் சாரியையே சிறப்புடையது என்பதை, தொல். எழுத்து. புணரியல் உரைவள நூலில் பக்கம் xviii இல் காண்க.

சு. வே ; 1. அகரவீற்றுள்

**பி. கு.**

இச்சூத்திரத்தும் ஈற்று வல்லெழுத்து வகுப்பதாகக் கூறினர் நச்சினார்க்கினியர். வற்று ஒன்றே வகுப்பதாகக் கொள்ளலே பொருந்தும். ஈற்று வல்லெழுத்துப் பொது விதியாற் பெறப் படுவது. "ஈற்று வல்லெழுத்து அதிகாரத்தாற் கொள்க" எனக் கூறும் அவர் இச்சூத்திரம் ஈற்று வல்லெழுத்து வகுப்பதாகக் கூறுவது மாறுபட உள்ளது.

## 2. ஆகார ஈறு

அல்வழியில் ஆகார ஈற்றுப் பெயர்

**222. *ஆகார இறுதி அகர இயற்றே. (19)**

**ஆ. மோ: இல.**

The 'ā' ending is like that of 'a' ending.

**க். சு.**

The ending 'ā' is of the same nature as 'a'

**பி. இ. நூ.**

சூ. 204. — இன் கீழ் உள்ளன வற்றைக் கொள்க.

**இளம்.**

இது ஆகார ஈற்றுப் பெயர் அல்வழிக்கண் முடியுமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ—ள்: ஆகார இறுதி அகர இயற்று—ஆகார ஈற்றுப் பெயர் (அல்வழிக்கண்) அகரஈற்று அல்வழியது இயல்பிற்றாய் வல்லெழுத்துப் பெற்று முடியும்.

உ-ம்: [1]தாராக்கடிது, சிறிது, தீது, பெரிது எனவரும்.

---

* "ஆகார விறுதி யகர விறுதி யியற்றே" என்னாது "ஆகார விறுதி யகரவியற்றே" என்பதும்........ சேடமாம். இவ்வாறு உரைத்ததனாற் பிறிதோர் இலக்கணமும் கொள்ளுதல் உரைகாரர் மதம் என்க. (பிரயோக விவேகம். 44-உரை)

சு. வே: 1. தராக்கடிது. தாரா, மூங்கா=பறவைகள்

**நச்.**

இஃது ஆகாரவீற்றுப் பெயர் அல்வழிக்கண் முடியுமாறு கூறுகின்றது.

இ—ள்: ஆகார ஈற்றுப் பெயர் அல்வழிக்கண் அகர ஈற்று அல்வழியது இயல்பிற்றாய் வல்லெழுத்து வந்துழித் தத்தம் ஒத்த ஒற்று இடைமிகும்; எ—று.

உ-ம்: மூங்காக்கடிது, தாராக்கடிது, சிறிது, தீது பெரிது என ஒட்டுக.

ஆகார ஈற்று வினை.

**223 செய்யா வென்னும் வினையெஞ்சு கிளவியும்**
**அவ்வியல் திரியாது என்மனார் புலவர் (20)**

**ஆ. மொ: இல.**

Even the adverbial participle 'Seyyā'
will not deviate from that (of doubling
hard consonants)

**க. சு.**

Seholars maintain that even the gerund of
the type 'Ceyyā'
will not deviate from the rule

**இளம்.**

இது, அவ்வீற்று வினைச் சொல் முடிபு கூறுதல் நுதலிற்று.

இ—ள்: செய்யா என்னும் வினையெஞ்சு கிளவியும்—(பெயரே யன்றி) செய்யா என்று சொல்லப்படும் ஆகார வீற்று வினையெச்சச் சொல்லும், அ இயல் திரியாது என்மனார் புலவர்—வல்லெழுத்து மிக்கு முடியும் அவ்வியல்பில் திரியாதென்று சொல்லுவர் புலவர்.

உ—ம் *உண்ணாக் கொண்டான், சென்றான், தந்தான், போயினான் எனவரும்.

'திரியாது' என்றதனான், 'செய்யா' என்னும் பெயரெச்ச மும் அவ்வாறு முடியும் எனக் கொள்க.

†உண்ணாக் கொற்றன் எனவரும்.

நச்.

இஃது ஆகாரவீற்று வினைச்சொல் முடிபு கூறுகின்றது.

இ—ள்: செய்யா வென்னும் வினையெச்சமாகிய சொல்லும், உம்மையால் ஈறுகெட்ட பெயரெச்சமறையாகிய சொல்லும், வல்லெழுத்து மிக்கு முடியும் அவ்வியல்பிற்றியாதென்று சொல்லு வர் புலவர்; எ—று.

உ—ம்: உண்ணாக் கொண்டான், சென்றான், தந்தான் போயினான் எனவும்; உண்ணாக் கொற்றன் சாத்தன், தேவன், பூதன் எனவும் வரும்.

சாப்.

செய்யா என்ற வினையெச்ச வாய்பாட்டினை,

> **செய்து செய்யூச் செய்பு செய்தெனச்**
> **செய்யியர் செய்யிய செயின்செயச் செயற்கென**
> **அவ்வகை ஒன்பதும் வினையெஞ்சு கிளவி** (சொல். 228)

என்ற சூத்திரத்தில் ஆசிரியர் கூறாராயினும், ஈண்டுக் கூறியிருக் கின்றமையான் அவ்வாய்பாடும் ஆசிரியர் காலத்தே வழங்கப் பட்டதெனக் கொள்ளல் வேண்டும். ஆகலினன்றே அச்சூத்திர வுரையில் "அஃது உண்ணா என ஆகாரமாயும் வரும்" எனச் சேனாவரையர் கூறினர்.

'செய்யாத' என்ற பெயரெச்சம் தகரம் குன்றிச் 'செய்யா' ஆக, அதுவும் புணர்ச்சியில் அவ்வுருவங் கொண்ட வினையெச்சத் தின் செய்கை பெற, அதனை இளம்பூரணர் "திரியாது என்ற தனால் 'செய்யா' என்னும் பெயரெச்சமும் அவ்வாறு முடியும்

---

* உண்ணாக் கொண்டான்—உண்டு கொண்டான்

† உண்ணாக் கொற்றன்—உண்ணாத கொற்றன்.

எனக் கொள்க. உண்ணாக் கொற்றன்'' எனவும், நச்சினார்க் கினியர், ''உம்மையாற் பெயரெச்ச மறையாகிய சொல்லும்'' எனவும் கூறினர். உம்மை யெச்சவும்மையாகலான், அஃது ஆகார விறுதியைக் குறித்தல் நேரிதேயன்றி, இச்சூத்திரத்தின் முன்னரோ பின்னரோ காணப்படாத பெயரெச்சத்தைக் குறிக்கும் என்றது நேரிதாகாது. அதனை அறியாப் பொருள் (சொல் 31) வினை வேறுபடாப் பல பொருள் ஒரு சொல் (சொல் 54) முதலிய ஆசிரியர் வழக்காற் கொள்ளின் நலம். அறியாப் பொருள் போன்றவற்றைத் தொகை மொழியாகக் கொண்டு செய்யும் செய்த (எழுத். 492) என்றதனாற் செய்கை செயினும் பொருந்தும்.

## அடிகளாசிரியர்

ஆசிரியர் வினையியலில் 'செய்து செய்யூ என்னும் நூற்பாவில் வினையெச்ச வாய்பாடுகளை எடுத்தோதும் பொழுது, இச் செய்யா என்னும் வினையெச்ச வாய்பாட்டை எடுத்தோதிலர். அதனால் அந்நூற்பாவுரையுள் நச்சினார்க்கினியர் ''உண்ணா வந்தான் எனவும், கல்லாக் கழிப்பர் எனவும், நிலங்கிளையா நாணி நின்றோள் எனவும் ஆகாரம் வினையெச்சமாய் வருதல் 'செய்யா வென்னும்...... புலவர்' (உயிர்ம. 20) என்பதனால் பெறப்படும் என்றனர்.

நன்னூலாரும் நேமிநாத நூலாரும், இலக்கண விளக்கமுடை யாரும் 'செய்யா' என்னும் வினையெச்ச வாய்பாட்டைச் 'செய்து' முதலிய வினையெச்ச வாய்பாட்டுடன் சேர ஓதினர். 'செய்யா' என்னும் எச்சம், பின்வருந் தொழிற்கு இடையின்றி விரைவு உணர்த்தி, முன்வருந் தொழில்மேல் இறந்த காலம் பற்றி வரும் என்றனர். (இல. வி. 246. உரை)

தெய்வச் சிலையார் 'செய்யூ என்பது இறந்த காலமும் நிகழ்காலமும் காட்டும். 'செய்யா என்னும் வினையெஞ்சு கிளவி யும்' என எழுத்ததிகாரத்து ஓதுதலின் அவ்வாய்பாடும் இப் பொருட்டாக வருதலின் அதுவும் கொள்க, என்றனர்(சொல். 221). 'செய்யா' என்னும் சொல் எச்சமாகாது முற்றாயின் வல்லெழுத்துமிக்கு முடியாது இயல்பாகும் என்பதை இவ்வியலில் 'ஆவும் மாவும்' (25) என்னும் நூற்பாவால் உணரலாம்.

சிவ.

உண்ணாக் கொற்றன் என்பதற்கு இச்சூத்திரத்தில் அமைதி காட்டாமல் 'அறியாப் பொருள்' (சொல். ६1) முதலிய ஆசிரியர் வழக்காற் கொள்ளலாம் என்பர் சாஸ்திரியார். ஆசிரியர் வழக்குக்கும் அமைதி வேண்டுமாதலின் இளம்பூரணர் கூற்று ஏற்புடையதேயாம்.

'உண்ணாத கொற்றன்' என்பது 'உண்ணாக் கொற்றன்' எனப் பெயரெச்ச ஈறு (விகுதி) தொக்கி வருதலின் உண்ணாக் கொற்றன் என்பதைத் தொகைச் சொல்லாகக் கொண்டு, தொகைச் சொற்கள் பிரித்துப் புணர்க்கப்படா என்று கூற வந்த "உயிரும் புள்ளியும் இறுதியாகி" (482) என்னும் புறனடைச் சூத்திரத்துச். "செய்யும் செய்த என்னும் கிளவியின் மெய் யொருங்கியலும் தொழில் தொகு மொழியும்" என்பதனால் அமைக்கலாம் என்றும் அவர் கூறினார். ஆசிரியர் தொழில் தொகுமொழி என்றது வினைத் தொகையை; ஈறுகெட்ட எதிர் மறைப் பெயரெச்சத்தை யன்று. அன்றியும் ஈறுகெட்ட எதிர் மறைப் பெயரெச்சத்தில் தொழிலில்லாத போது தொழில் தொகுதல் யாண்டையது? ஆதலினாலும் அவர் கூற்று ஏற்புடைத்தாகாது.

### உம்மைத் தொகைமுடிபு.

224. உம்மை எஞ்சிய இருபெயர்த் தொகைமொழி
மெய்ம்மை யாக அகரம் மிகுமே. (21)

**ஆ. மோ: இல.**

In the compound of two nouns having
'um' disappeared 'a' appears truly

க. சு.

(in) the compounds of two words (with) 'um'
removed,
'ạ' iṣ iṇ fạct iṇserteḍ,

பி. இ நூ.

முத்து. பு. 88

எச்ச வும்மை இருபெயர்த் தொகைச்சொற்கு
அகரச் சாரியை உரித்தா கும்மே.

இளம்.

இது, அவ்வீற்று அல்வழிக்கண் உம்மைத்தொகை முடிபு கூறுதல் நுதலிற்று.

இ—ள்: உம்மை எஞ்சிய இருபெயர்த் தொகைமொழி— உம்மை தொக்க இருபெயராகிய தொகைச்சொல், மெய்ம்மை யாக அகரம் மிகும்—மெய்யாக நிலைமொழியீற்று அகரம் மிக்கு முடியும்.

உ-ம்: †உவாஅப்பதினான்கு.

மெய்ம்மையாக என்றதனால் வல்லெழுத்துக் கொடுக்க. 'உம்மை தொக்க' என்னாது 'எஞ்சிய' என்ற வாய்பாட்டு வேற்றுமையான் இம்முடிபு இருபெயரொட்டுப் பண்புத் தொகைக்கும் கொள்க. அராஅப் பாம்பு என வரும்.

இன்னும் [1]அதனான், எழுவாய் முடிபிற்கும் பெயரெச்சத்திற் கும் அகரப்பேறு கொள்க. [2]இராஅக் கொடிது, [3]இராஅக்காக்கை என வரும்.

நிலைமொழி எழுத்துப் பேறு வருமொழிவரையாது கூறின வழி நான்கு கணத்துக்கண்ணும் செல்லுமாகலின், இயல்பு கணத்துக்கண்ணும் அகரப்பேறு கொள்க. *இறாஅ வழுதுணங் காய் என வரும்.

---

சு. வே:

1. அதனானே ஓரெழுவாய்
2. உவாஅக்கடிது;
3. உவாஅக்காக்கை

† உவா—பிறை

* இறாஅ வழுதுணங்காய் = இறாமீனும் வழுதுணங்காயும்

**நச்.**

இஃது ஆகார வீற்று அல்வழிக்கண் உம்மைத் தொகைமுடிபு கூறுகின்றது.

இ—ள்: உம்மை தொக்கு நின்ற இருபெயராகிய தொகைச் சொற்கள், மெய்யாக நிலைமொழியீற்றில் அகரம் மிக்கு முடியும்; எ—று.

உ-ம்: உவாஅப் பதினான்கு, இராஅப் பகல் என வரும். 'மெய்ம்மையாக' என்றதனான் வல்லெழுத்துக் கொடுக்க. இஃது எழுவாயும் பயனிலையுமின்றி உம்மைத் தொகையாதலின் மாட்டேற்றான் வல்லெழுத்துப் பெறாதாயிற்று.

'உம்மை தொக்க' என்னாது 'எஞ்சிய' என்ற வாய்பாட்டு வேற்றுமையான் 'அராஅப் பாம்பு' எனப் பண்புத் தொகைக்கும், 'இராஅக் கொடிது' எனஎழுவாய் முடிபிற்கும், 'இராஅக் காக்கை' எனப் பெயரெச்ச மறைக்கும் அகரப்பேறு கொள்க. †வழிமொழி வரையாது கூறினமையின் இயல்பு கணத்துக்கண்ணும் அகரப் பேறு கொள்க. 'இறாஅ வழுதுணங்காய்' எனவரும். இஃது உம்மைத் தொகை. 'அராஅக் குட்டி' என்பது பண்புத் தொகையும் வேற்றுமைத் தொகையுமாம். 'உவாப்பட்டினி' என்பது வேற்றுமைத் தொகை.

**சுப்.**

'மெய்ம்மையாக' என்றதனால் வல்லெழுத்துக் கொடுக்க' என இளம்பூரணரும் நச்சினார்க்கினியரும் கூறினர். வல்லெழுத்து வாராமைக்குக் காரணம் "இஃது எழுவாயும் பயனிலையும் இன்றி உம்மைத் தொகையாதலின் மாட்டேற்றான் வல்லெழுத்துப் பெறாதாயிற்று" என நச்சினார்க்கினியர் கூறினர். ஈண்டு அல்வழிப் புணர்ச்சியைப் பற்றி ஆசிரியர் கூறுகின்றமையானும், அல்வழிப் புணர்ச்சிச் சொற்கள் எழுவாயும் பயனிலையாயும் இருக்குமிடத்தேதான் என்ற நியதி இல்லாமையானும் நச்சினார்க்கினியர் கூறும் காரணம் பொருந்தாதென்க. அன்றியும் இஃது அகரவீறாதலின், மாட்டேற்றான் வல்லெழுத்துப் பெறமுடியா தென்பதும் அறிக.

† வழிமொழி—வருமொழி

'உவா' என்றது 'உவாஅ' என மாறின் அஃது அகரவீற்றுப் பெயராகலின், "அகரவிறுதிப் பெயர்நிலை முன்னர்"(204) என்ற சூத்திரத்தான் வல்லெழுத்து மிகும் எனக் கொள்ளுதல் குற்ற மாகாது.‡

"உம்மை தொக்க என்னாது எஞ்சிய ...... அராஅப்பாம்பு எனவரும்" "இன்னும்மதனான்......உவாஅக்காக்கை எனவரும்" என இளம்பூரணரும்,"உம்மைதொக்க......அகரப்பேறு கொள்க" என நச்சினார்க்கினியரும் கூறினர். பின்னர்த் 'தொகைமொழி' என்றிருக்கின்றமையின் 'உம்மை தொக்க' என்னாது 'உம்மை எஞ்சிய' எனக்கூறினார் எனிற் குற்றம் யாது?

அராஅப் பாம்பு, உவாஅக் காக்கை இவற்றை உயிரும் புள்ளியும் (482) என்ற சூத்திரத்தாற் கொள்ளல் தகும்.

**அடிகளாசிரியர்**

உவாஅப் பதினான்கு என்னும் சொல் சூடாமணி உள்ள முடையான் என்னும் சோதிட நூலில் "ஒன்றிய சேயின் வாரத் துவாஅப் பதினான்கு தன்னில்" (174) என்று வந்துள்ளது. இச் சொல்வேறு எந்த நூலிலும் வந்துள்ளதாக எனக்கு இப்பொழுது தெரியவில்லை. இளம்பூரணர் இங்கே உதாரணமாய் எடுத் தாண்டசொல், மேற்கண்ட நூலில் உள்ளதாயின், இளம்பூரணர் காலம் சூடாமணி உள்ள முடையான் காலமாகிய கி. பி. 1178 க்குப் பின்னதாகும். சூடாமணி உள்ளமுடையான் சாலியவாகன சகம் 1100ல் இயற்றப்பட்டது. உவாஅப்பதினான்கு என்னும் சொல்லில் வந்த அகரத்தைப் பிற்காலத்தார் எழுத்துப் பேறு அள பெடை என்பர்.

**தே. ஆண்டியப்பன்**

"இது (உவாஅப் பதினான்கு என்பது) உம்மை எஞ்சிய சொல் ஆகுமா? உவாவும் பதினான்கும் என்பது பொருந் தாதே? பிறை ஏழு என்றால் ஏழாம்பிறை என்போம். உவாப் பதினான்கு என்றால் பதினான்காம் உவா என்போம்.

‡ உவாஅ என்பதை அகரவீறு என்பது தவறு; வரிவடிவ நிலை இங்குக் கருதப்படவில்லை; ஒலிவடிவ நிலையே கருதப்படுவது ஆதலின்,

எனவே வேறு சான்று வேண்டும். இறாஅ வழுதுணங்காய் என்று இயல்பு கணத்தில் உதாரணம் தந்துள்ளனர்; அது பொருந்தும்.!' (காப்பியர் நெறி—எழுத்தியல். பக். 80)

சிவ.

"இன்னும் அதனானே எழுவாய் முடிபிற்கும் பெயரெச்சத் திற்கும் அகரப்பேறு கொள்க; இராஅக்கொடிது இராஅக்காக்கை எனவரும்" என இளம்பூரணர் (நச்சினார்க்கினியரும்) எழுதினர். இச்சூத்திரம் அல்வழி முடிபாதலின்,

"குறியதன் முன்னரும் ஓரெழுத்து மொழிக்கும்
அறியத் தோன்றும் அகரக்கிளவி" (227)

என்னும் வேற்றுமை முடிபு பற்றிய சூத்திரத்தில் அடங்காமை யின் இங்கு எழுதினர்

உவா என்பது பிறையையும் பதினான்கு என்பது அதன் கலை எண்ணிக்கையையும் குறிக்கும். அதனால் பதினான்கு உவா என்னும் சொற்கள், (இல்முன் என்பது முன்றில் என்றாயது போல) உவாப் பதினான்கு என்றாயின என்று மரூஉமுடிபாகக் கொள்ளலாம்.

இயல்பாகும் ஆகார ஈறுகள்

225. ஆவும் மாவும் விளிப்பெயர்க் கிளவியும்
யாவென் வினாவும் பலவற் றிறுதியும்
ஏவல் குறித்த உரையசை மியாவும்
தன்தொழில் உரைக்கும் வினாவின் கிளவியொடு
அன்றி யனைத்தும் இயல்பென மொழிப. (22)

ஆ. மொ. இல

The words ā, mā. the noun in the vocative ease
The interrogative 'yā' the adjectival participle of negative in plural
The descriptive explative 'miyā' denoting command and
The interrogative word used in self expression - All these - have the natural joining, say the learned.

க. சு.

The words 'ā' 'cow' and 'mā' beast, nouns in vocative,
the interrogative 'yā' the ending (ā) of non-personal
(Plural finite verbs)
the explative particle 'miyā' denoting command
(and) interrogative words denoting the action of the speaker
(have) no (change): all such (expressions)
(have) the natural joining; thus it is said.

பி. இ. நூ.

நன். 177.

*அல்வழி ஆமா மியாமுற்று முன்மிகா*

இ. வி. 89

*அல்வழி மியாமுற்று இறுதி*
*யாவினா இவற்றுமுன் வல்லெழுத் தியல்பாகும்.*

தொன். 32

*ஆமா அல்வழி ஆஈறு முற்றும்*
*மியாஇவை முன்வலி மிகாதியல் பாகும்*

முத்து. பு. 89

*ஆவும் மாவும் அழைப்பும் வினாவும்*
*மியாவும் பலவும் மிகாது இயல்பாகும்.*

இளம்.

இது, [1]அவ்வீற்றிற் சிலவற்றிற்கு இயல்பு கூறி எய்தியது விலக்கலும் எய்தாதது எய்து வித்தலும் நுதலிற்று.

இ-ள் ; ஆவும் மாவும் விளிப்பெயர்க்கிளவியும்—ஆ என்னும் பெயர்ச் சொல்லும் மாஎன்னும் பெயர்ச் சொல்லும் விளித்தலை யுடைய பெயராகிய உயர்திணைச் சொல்லும், யாஎன் வினாவும் —யாஎன்னும் வினாப் பெயரும், பலவற்றிறுதியும்—அஃறிணைப் பன்மைப் [2]பொருளை உணர்த்தும் ஆகார வீற்று முற்று வினைச் சொல்லும், ஏவல் குறித்த உரையசைமியாவும்—முன்னிலையில் ஏவல்வினைச் சொல்லைக் குறித்து வரும் உரையசையாகிய மியா என்னும் ஆகாரவீற்று இடைச் சொல்லும், தன் தொழில்

சு. வே ;

1. அவ்வீற்றுச்

உரைக்கும் வினாவின் கிளவியொடு அன்றி அனைத்தும்—தனது தொழிலினைச் சொல்லும் ஆகார வினாவினையுடைய வினைச் சொல்லுமாகிய அவ்வனைத்தும், இயல்பு என மொழிப— இயல்பாய் முடியும் என்று சொல்லுவர் புலவர்.

உ—ம் : ஆகுறிது, சிறிது, தீது, பெரிது எனவும்; மாகுறிது, சிறிது, தீது, பெரிது எனவும்; ஊராகொள், செல், தா, போ எனவும் வரும். யாகுறிய, சிறிய, தீய, பெரிய எனவும்; கேண்மியா கொற்றா, சாத்தா, தேவா, பூதா எனவும் வரும்.

விளிப் பெயர்க்கிளவியும், பலவற்றிறுதியும், ஏவல் குறித்த உரையசைமியாவும், தன் தொழில் உரைக்கும் [3]வினாவின் கிளவியும் எய்தாதது எய்துவிக்கப்பட்டன.

ஊராகொள் என்பது 'உயிரீறாகிய உயர்திணைப் பெயரும் (தொகை மரபு. 11) என்பதனுள் அடங்காதோ எனின், [4]முன் கூறிற்றே (உயிர் ம. 8) கூறுக.

நச்.

இஃது எய்தியது விலக்கலும் எய்தாதது எய்துவித்தலும் உணர்த்துகின்றது.

இ—ள் : ஆவென்னும் பெயரும், மாவென்னும் பெயரும், விளித்தலையுடைய பெயராகிய உயர்திணைச் சொல்லும், யா வென்னும் வினாப் பெயரும், பன்மைப் பொருளை யுணர்த்தும் ஆகாரவீற்றுப் பெயரெச்ச மறையும் முற்றுமாகிய வினைச் சொல்லும், முன்னிலையேவல் வினையைக் கருதி எதிர் முகமாக்குஞ் சொல்லினைச் சேர்ந்த மியா என்னும் ஆகார வீற்று இடைச்சொல்லும், தனது தொழிலினைச் சொல்லும் ஆகார வீற்று வினாச் சொல்லோடுகூட, அவ்வெழுவகையாகிய சொல்லும், இயல்பாய் முடியும் என்று சொல்லுவர் புலவர்; எ—று.

உ—ம் ; ஆ குறிது, மா குறிது, சிறிது தீது பெரிது; குறிய சிறிய தீய பெரிய என ஒட்டுக. இஃது ஆகார வீற்றுப் பெயராக

---

2. பெயரை
3. வினாவும்
4. முன் கூறியவற்றுட் கண்டு கொள்க. பக். 29—ல் பார்க்க

வின் மிக்குமுடிவன மிகாவென †எய்தியது விலக்கிற்று. ஊராகேள் செல் தா போ என இஃது இயல்பாம் என்ற உயர்திணைப் படர்க்கைப் பெயர் திரிந்து முன்னிலையாய் விளியேற்றலின் எய்தாதது எய்துவித்தது. யாகுறிய, சிறிய, தீய, பெரிய என இதுவும் பெயராதலின் எய்திய இயைபு வல்லெழுத்து விலக்கிய தாம். உண்ணாகுதிரைகள், செந்நாய்கள், தகர்கள், பன்றிகள் என இஃது எய்தியது விலக்கிற்று; செய்யா என்னும் சூத்திரத்து உம்மையாற் பெற்ற வல்லெழுத்தினை விலக்கலின். கேண்மியா கொற்றா, சாத்தா, தேவா, பூதா எனவும்; உண்கா கொற்றா, சாத்தா, தேவா, பூதா எனவும் இவ்விடைச் சொற்கள் முடியாமையின் எய்தாதது எய்து வித்ததுமாம். உண்கா என்பது யானுண்பேனா என்னும் பொருட்டு. இயல்பு கணத்துக்கண்ணா யின் ஞ ந ம ய வ (எழு. 144) என்பதனான் முடிபெய்தும்.

**சுப்.**

உயர்திணைப் பெயரே விளியில் ஆகாரத்தை ஈற்றிற் கொள்ளுமாகவின், விளிப்பெயர்க் கிளவி என்றதனான் உயர் திணை விளிப்பெயர்க் கிளவி என்பது பெறப்படும்.

'பலவற்றிறுதிப் பெயர்' எனக்கூறாது 'பலவற்றிறுதி' எனக் கூறினமையான் பன்மையைக் குறிக்கும் ஆகாரவீற்று வினை முற்றுக்களையும், வினையாலணையும் பெயரையும் கொள்ளல் தகும்.

ஏவல்குறித்த உரையசை என்றதும் முன்னிலையசைச்சொல் (சொல். 274) என்றதும் ஒருபொருட் கிளவியாகும்.............

இச்சூத்திரத்துள்ள 'பலவற்றிறுதி' என்பதற்கு, "அஃறி ணைப் பன்மைப் பொருளை உணர்த்தும் ஆகாரவீற்று முற்று வினைச் சொல்லும்" என்ற பொருளைக் கூறிய இளம்பூரணர் 211, 221 ஆவது சூத்திரங்களிலுள்ள 'பலவற்றிறுதி' என்றதனாற் 'பல' என்ற ஒரு சொல்லையே கொண்டதற்குக் காரணந் தெரிய வில்லை. நச்சினார்க்கினியர் பலவற்றிறுதி என்பதற்குப் "பன்மைப் பொருளை யுணர்த்தும் ஆகாரவீற்றுப் பெயரெச்ச மறையாகிய முற்று வினைச்சொல் எனப் பொருள் கூறினர்.

---

† எய்தியது என வருவது ஆகார இறுதி அகர இயற்று என வந்த வல்லெழுத்து மிகுதியை.

பன்மைப் பொருளைக் குறிக்கும் பெயரெச்சந் தொடக்கத்தில் *ஆகாரவீற்று வினையாலணையும் பெயராய் இருத்தற்கு உரித்தாகலின் 'பெயரெச்சம்' என்ற சொல்லை அவர் ஈண்டுக் கூறாதிருப்பின் நலம். ''செய்யா வென்னும் சூத்திரத்து உம்மையாற் பெற்ற வல்லெழுத்தினை விலக்கலின்'' என்ற அவர்தங் கூற்றும் பொருத்தம் இன்று.

## அடிகளாசிரியர்

நன்னூலாசிரியர் யா என்னும் வினாவினை, வினா எழுத்து என்றனர். தொல்காப்பியர் யாது யா யாவை என்னும் பெயரும் (பெயரியல் 13) என்று பெயராகவே ஓதி, ''யா வென் வினாவும் ஆயியல் திரியாது'' (உருபியல் 3) என்னும் நூற்பாவால் அது உருபொடு புணரும்வழி வற்றுச் சாரியை பெறுமாறும் கூறினார். பரிமேலழகர் ''யாகாவா ராயினும்'' என்னும் குறள் உரையில் 'எல்லாவற்றையும்' என்று வற்றும், ஐகார வேற்றுமையும் விரித்துப் பொருள்கூறி, 'யா' என்பது அஃறிணைப் பன்மை வினாப் பெயர் என்றனர்.

'தன் தொழில் உரைக்கும் வினாவின் கிளவி' என்பதற்குத் ''தனது தொழிலினைச் சொல்லும் ஆகாரவீற்றுத் தன்மையாகிய வினாச்சொல்'' என்று போருள் கூறி, உண்கா கொற்றாஎன உதாரணந் தந்து, 'உண்கா' என்பது, 'யான்உண்பேனா' என்னும் பொருட்டு என்றனர். (நச்) எனவே, 'யான் உண்கு' என்னுந் தொடரிலுள்ள தன்மை ஒருமை வினை வினா எழுத்தை ஏற்று, 'யான் உண்கா' என நின்றதாம். இத் தன் தொழில் உரைக்கும் வினாவின் கிளவி ஆகார ஈற்றில் வருவதன்றி, 'உண்கே' என்று ஏகாரவீற்றிலும், 'மலையிடைப்பிறவா மணியே என்கோ' என ஓகார வீற்றிலும் வரும்.

## பி. சூ.

'ஏவல் குறித்த உரையசைமியாவும்' என்பதற்கு இவர் (நச்.) உரை பொருந்தாது. உரையாசிரியர் உரையே பொருத்தமாம்.

---

* ''நில்லா, மரங்கள்'' என்பன முன்னர் 'நில்லாதனவான மரங்கள்' என்ற பொருளில் இருந்திருத்தல்கூடும். அப்போது 'நில்லா' என்பது வினையாலணையும் பெயராகும்—சாஸ்திரியார் குறிப்பு

என்னை? எதிர்முகமாக்குஞ் சொல் என்னும் பொருளுக்குச் 'சென்மியா' பொருந்தாமையின்—கணேசய்யர்.

வேற்றுமையில் ஆகார ஈறு

**220 வேற்றுமைக் கண்ணும் அதனோ ரற்றே (23)**

**ஆ. மொ: இல.**

Even in case relations the same course takes place.

**க. சு.**

In Case-relationship, too, the same rule applies.

**பி. இ. நூ.**

சூ. 204—இன் கீழ் உள்ளவற்றைக் கொள்க.

**இளம்.**

இது, அவ்வீற்று வேற்றுமை முடிபு கூறுதல் நுதலிற்று.

இ—ள்: வேற்றுமைக் கண்ணும் அதன்ஓர் அற்று—(ஆகார வீற்றுப் பெயர் அல்வழிக்கண்ணே யன்றி) [1]வேற்றுமைக் கண்ணும் அகரவீற்று அல்வழியோடு ஒரு தன்மைத்தாய் வல்லெழுத்து வந்த வழி வல்லெழுத்து மிக்கு முடியும்.

உ—ம் ; தாராக்கால், சிறகு, தலை, புறம் எனவரும்.

**நச்.**

இஃது ஆகாரவீறு வேற்றுமைப் பொருட் புணர்ச்சிக்கண் முடியுமாறு கூறுகின்றது.

இ—ள் : ஆகாரவீற்றுப் பெயர் அல்வழிக்கண்ணேயன்றி வேற்றுமைப் பொருட் புணர்ச்சிக் கண்ணும், அகர வீற்று அல்வழி யோடு ஒரு தன்மைத்தாய் வல்லெழுத்து வந்துழி அவ் வல்லெழுத்து மிக்கு முடியும்; எ—று.

உ—ம் : *தாரா, மூங்கா, வங்கா என நிறுத்திக் கால், செவி, தலை, புறம் என வருவித்து வல்லெழுத்துக் கொடுத்து ஒட்டுக.

---

சு. வே ;

1. வேற்றுமைப் பொருட் புணர்ச்சிக் கண்ணும்

* தாரா முதலியன பறவைகள். மாக்கடவினை (புறநா 239) என்பதை உதாரணம் காட்டுவர் சாஸ்திரியார்.

குறிற்கீழ் ஆவும் தனி ஆவும்

**227.** **குறியதன் முன்னரும் ஓரெழுத்து மொழிக்கும்**
**அறியத் தோன்றும் அகரக் கிளவி** **(24)**

**ஆ.** மொ: இல.

'a' appears after 'ā' following a short letter and after the one letter word Ā

**க. சு.**

(After the standing word) 'a' appears (after ā)
When a short vowel preceds or with a one letter word.

**பி. இ. நூ.**
**முத்து.** பு. 90.

ஓரெழுத்து மொழியும் குறிற்கீழ் ஆவும்
அகரச் சாரியை பெறும்என மொழிப.

**இளம்.**

இது அவ்வீற்றிற் சிலவற்றிற்கு எய்தியதன்மேல் சிறப்புவிதி கூறுதல் நுதலிற்று.

இ—ள்: குறியதன் முன்னரும் ஓரெழுத்து மொழிக்கும்— குற்றெழுத்தின்முன் நின்ற ஆகாரவீற்றிற்கும் [1]ஓரெழுத்தொரு மொழி ஆகாரவீற்றிற்கும், அகரக்கிளவி அறியத் தோன்றும்— (நிலைமொழிக்கண்) அகரமாகிய எழுத்து அறியத் தோன்றும்.

உ—ம்: பலாஅக்கோடு, செதிள், தோல், பூ எனவும்; காஅக் குறை, செய்கை, தலை, புறம், எனவும் வரும்.

ஓரெழுத் தொருமொழி முற்கூறாதவதனால், அதன்கண் அகரப்பேறு சிறுபான்மையெனக் கொள்க. 'அறிய' என்றதனால் அவ்விருவழியும் அகரம் பொருந்திய வழியே வருதலும் [2]அவ் வீற்று வேற்றுமையுள் எடுத்தோதாதவற்றின் முடிபும், இவ் வீற்றுள் உருபிற்குச் சென்ற சாரியை பொருட்கண் சென்றவழி இயைபு வல்லெழுத்து வீழ்வும், இவ்வுயிரீற்றுள் வரும் உருபீற்றுச் செய்கையும் கொள்க.

---

சு. வே: 1. ஓரெழுத்தொருமொழியாகிய
2. இவ்வீற்று

உ—ம் : *அண்ணாத்துக் குளம், உவாஅத்துஞான்றுகொண்டான், உவாஅத்தாற் கொண்டான், யாவற்றுக்கோடு என இவை பிற முடிபு.

[3]மூங்காவின் றோல் [4]என்பது வல்லெழுத்து வீழ்வு.

[5]இடாவினுட் கொண்டான் என்பது உருபீற்றுச் செய்கை.

நச்.

இஃது அவ்வீற்றிற்கு எய்தியதன் மேற் சிறப்புவிதி கூறுகின்றது, அகரமும் வல்லெழுத்தும் பெறுதலின்.

இ—ள் : குற்றெழுத்தின் முன் நின்ற ஆகார ஈற்றிற்கும், ஓரெழுத்தொருமொழியாகிய ஆகார ஈற்றிற்கும், நிலை மொழிக்கண் அகரமாகிய எழுத்து விளங்கத் தோன்றும்; எ—று.

உ—ம் : பலாஅக்கோடு, செதிள், தோல், பூ எனவும்; காஅக் குறை, செய்கை, தலை, புறம் எனவும் வரும். ஓரெழுத்தொரு மொழி அகரம் பெறுதல் சிறுபான்மை யென்றற்கு அதனைப் பிற் கூறினார். இது நிலைமொழிச் செய்கை யாதலின் பலா அ விலை, பலாஅநார் என இயல்பு கணத்துங் கொள்க. அறிய என்றதனால் அவ் அகரம் ஈரிடத்தும் பொருந்தின வழிக் கொள்க.

இன்னும் இதனானே 'அண்ணாஅத்தேரி', †திட்டாஅத்துக் குளம்' என அத்துக் கொடுத்தும், உவாஅத்தாற் கொண்டான், உவாஅத்துஞான்று கொண்டான் என அத்தும் ஆனும் ஞான்றும் கொடுத்தும், இடாஅவினுட் கொண்டான் என இன்னும் ஏழனுருபும் கொடுத்தும் செய்கை செய்துமுடிக்க.

இன்னும் இதனானே மூங்காவின்கால், மூங்காவின்றலை என உருபிற்குச் சென்ற சாரியை பொருட்கண் சென்றவழி இயைபு வல்லெழுத்துக் கேடுங் கொள்க.

பி. கு.

குற்றெழுத்திற்கும் ஆகாரத்திற்கும் இடையில் மெய் இருப்பினும் அதன் பின்னர் உள்ள உயிர் என்ற கருத்தினான் "குறிய தன் முன்னர்'' என்றனர் ஆசிரியர்—சாஸ்திரியார்

சு. வே : 3. மூங்காவின் கால்
4. என்பது இயைபு வல்லெழுத்து
5. தடாவினுட்

*அண்ணாத்துக்குளம்—அண்ணா என்னும் ஊரில் உள்ள குளம். உவாஅத்துஞான்று — உவாஅக்காலத்தில்.
†திட்டா = ஊர்ப்பெயர்.

"ஆசிரியர் 'அகரக்கிளவி தோன்றும்' என்று கூறியிருப்ப, அண்ணாஅத்தேரி என அத்துச் சாரியையும், உவாஅத்து ஞான்று கொண்டான் என அத்தும் ஞான்றும் வருதலைக் கொள்ளுமாறு உரையாசிரியர்கள் கூறுவது ஆசிரியர் கருத்திற்குப் பொருந்தும் எனத் தோன்றவில்லை. இவற்றை இவ்வதிகாரப் புறனடையால் அமைத்துக் கொள்ளுதல் தகும்''—வேங்கடராசுலு ரெட்டியார்.

இரா

**228. இராவென் கிளவிக்கு அகரம் இல்லை.** (25)

**ஆ. மொ. இல.**

The word 'irā' has not the said 'a'

**க, சு.**

The word 'irā' 'night' has not the Phoneme 'a'

**பி. இ. நூ.**

**முத்து.** பு. 93.

இராப் பெய ருக்கில வாமென மொழிப.

**இளம்.**

இது, அவ்வகரப் பேற்றிற்கு ஒருவழி யெய்தியது விலக்குதல் நுதலிற்று.

இ—ள் ; இரா என் கிளவிக்கு அகரம் இல்லை—இரா என்னும் ஆகாரவீற்றுச் சொல்லிற்கு முன்கூறிய அகரப் பேறு இல்லை.

உ—ம் : இராக் கொண்டான் என வரும்.

**நச்.**

இஃது ஆகாரவீற்றுப் பெயர்க்கு ஒருவழி எய்தியது விலக்குகின்றது.

இ—ள் : இரா என்னும் ஆகார வீற்றுச் சொல்லிற்கு, முற்கூறிய அகரம் பெறுதல் [1]இன்றி வல்லெழுத்துப் பெற்று முடியும்; எ—று.

---

சு. வே : 1. இன்று

உ—ம் : இராக் கொண்டான், சென்றான், தந்தான், போயினான் எனவரும். †இராஅக்காக்கை, இராஅக்கூத்து எனப் பெயரெச்ச மறைப்பொருள் தராது இராவிடத்துக் காக்கை, இராவிடத்துக் கூத்து என அகரம் பெறாதென்றுணர்க.

**வேங்.**

மேல், 'குறியதன் முன்னரும்...அறியத் தோன்றும் அகரக் கிளவி' என்ற விதியினால் இரா என்னும் சொற்கு அகரம் வருமாகலின், இச்சூத்திரத்தால் அதனை விலக்கினார். ஆயின், 'இராஅப் பகல்' என்பதில் அகரம் வருதல் என்னையோ எனின், 'இராப் பகல்' என்பது 'தாய் தந்தை' என்பது போல உம்மை தொக்க இருபெயர்த் தொகை மொழி யாதலின்,

உம்மை யெஞ்சிய இருபெயர்த் தொகை மொழி

மெய்ம்மை யாக அகரம் மிகுமே' (உயிர் ம. 21) என்னும் சூத்திரத்தால் அகரம் தோன்றப்பெற்றது; ஈண்டு 'இராக் கொண்டான்' என்பது போல, வினை கொண்டு முடியும்வழி வரும் முடிபு கூறப்பட்டது என வேறுபாடு அறிக.

*செ. வை. சண்முகம்.

இரா அ (நற். 128) இரா (குறுந். 387) இரவு (குறுந். 90) இர (குறுந். 387) என்ற மாற்று வடிவங்கள் வந்துள்ளன. இவை யெல்லாம் 'இர' என்ற அடிப்படை வடிவம் கொண்டவை.

இர + உ → இர + அ

இரண்டு வேறு உயிர் இருந்தால் வருமொழி உயிர் நிலைமொழி உயிராக மாறும். ஒரே இரண்டு உயிர் இருந்தால் (இரண்டு குறில் சேர்ந்தால் அளபெடையுண்டாம் என்ற விதி மூலம்) அள

† இராஅக்காக்கை—இல்லாத காக்கை—பெயரெச்சமறை. இராக் காக்கை—இ ரா வி ட த் து க் காக்கை—7ஆம் வேற்றுமை. பொருள் வேறுபாடறியவே முன்னர் அகரப் பேறு கூறப்பட்டது.

* எழுத்திலக்கணக்கோட்பாடு பக். 101, 102, இக்கருத்து மொழியியல் அடிப்படையில் அமைந்தது. ஆசிரியர் இரா என்பதையே இயற் சொல்லாகக் கொண்டு இலக்கணம் செய்தார்.

பெடையுண்டாகிறது. (இர+அ=இராஅ) அளபெடை பெற்ற வடிவம் இன்னொரு உயிரோடு வரும் போது குறில் கெட்டுப் போய் விடுகிறது. அதாவது நெடிலுக்குப் பிறகு வருகிற குற்றெழுத்து மற்றொரு உயிரோடு புணரும் போது கெடும்.

*நிலா*

**229. நிலாவென் கிளவி அத்தொடு சிவணும் (26)**

**ஆ மோ: இல்.**

The word 'ṉilā' joins with 'aththu'

**க. சு.**

The word 'nilā' 'moonshine, combines with attu'

**பி. இ. நூ.**

**முத்து.** பு. 92

*நிலாப்பெயர் இன்னொடு நிலவுதல் வரையார்.*

**இளம்.**

*இது அவ்வீற்றுள் [1]ஒருவழி அகரம் விலக்கி அத்து வகுத்தல் நுதலிற்று.*

*இ—ள்: நிலா என் கிளவி அத்தொடு சிவணும்—நிலா என்னும் சொல் அத்துச் சாரியையோடு பொருந்தி முடியும்.*

*உ-ம்: நிலாத்துக் கொண்டான், சென்றான், தந்தான், போயினான் என வரும்.*

[2]*நிலைமொழித் தொழிலை நிலைமொழித்தொழில் விலக்கு மாகலின் அத்து வகுப்ப அகரம் வீழ்ந்தது.*

**நச்.**

*இஃது அகரம் விலக்கி அதிகார வல்லெழுத்தினோடு அத்து வகுத்தலின் எய்தியதன்மேற் சிறப்புவிதி கூறுகின்றது.*

*இ—ள்: நிலா வென்னுஞ்சொல் அத்துச் சாரியையோடு பொருந்தி முடியும்; எ—று.*

*உ-ம்: நிலாஅத்துக்கொண்டான், சென்றான், தந்தான், போயினான் என வரும்.*

நிலை மொழித் தொழிலும் நிலைமொழித் தொழிலை விலக்குமாதலின் அத்து வகுப்ப அகரம் வீழ்ந்தது. இதற்கு ஏழனுருபு விரிக்க.

நிலாஅக்கதிர் என்பது வேற்றுமைக் கண்ணும் (எழு. 225) என்பதனான் ஈற்று வல்லெழுத்துப் பெற்றது. நிலாஅ முற்றம் என்பது 'ஒட்டுதற் கொழுகிய வழக்கன்மையின் (எழு. 132) அத்துப் பெறாதாயிற்று.

ஈண்டு வருமொழி வரையாது கூறினமையின் நிலாஅத்து ஞான்றான் என இயல்பு கணத்துக்கண்ணும் ஏற்பன கொள்க.

**சிவ.**

நிலைமொழித் தொழிலை நிலைமொழித் தொழில் விலக்குதல் என்பது, முன்னர்க் கூறப்பட்ட நிலைமொழி பற்றிய விதியினைப் பின்னர்க் கூறப்படும் நிலைமொழி பற்றிய விதி விலக்குவதாம். 'குறியதன் முன்னர்...அகரக்கிளவி அறியத் தோன்றும்' என்பது முன்னர்க் கூறப்பட்ட நிலைமொழித் தொழில். நிலா என்பது 'நிலாஅ' என அகரம் பெறுதல் முன்னர்க் கூறப்பட்டது. இச்சூத்திரம் அந்நிலா என்பது அத்துச்சாரியை பெறும் என்பது. அப்படியானால் நிலாஅஅத்து என அச்சொல் வரவேண்டும். நிலைமொழித் தொழிலை நிலைமொழித் தொழில் விலக்கும் என்னும் சட்டப்படி அத்து வர நிலாஅ என்பதின் அகரம் விலக்கப்பட்டது. பின்னர் நிலாஅத்து என வந்தது.

தற்காலச்சட்டம் ஒன்று இங்கே நினைவு கூரலாம். சொத்து பற்றித் தன் விருப்பத்தை எழுதிப் பதிவு செய்தல் உண்டு. அவ் விருப்பம் ஆங்கிலத்தில் உயில் (will) எனப்படும். இக்காலத்தில் அது எளிதாக யாவராலும் உயில் எழுதுதல் என வழங்கப் படுகிறது. முன்னர் எழுதிய உயில் பின்னர் எழுதும் உயிலால் நீக்கப்படும் என்பது சட்டம். உயிலே உயிலை நீக்குதல்போல நிலைமொழித் தொழிலை நிலைமொழித் தொழில் விலக்கும் எனக் கொள்க. இத்தொடர் "மெல்லொற்று வலியா மரப்

---

சு. வே:

1. ஒருமொழிவழி
2. நிலைமொழித் தொழில் வருமொழித் தொழிலை விலக்குமாகலின், நிலைமொழித் தொழில் நிலை வருமொழித் தொழிலை விலக்குமாகலின்.

பெயரும் உளவே'' (எழு. 417) என்னும் சூத்திரத்தும் ஆளப் பட்டுள்ளது.

சில மரப்பெயர்கள்

230. யாமரக் கிளவியும் பிடாவும் தளாவும்
ஆமுப் பெயரும் மெல்லெழுத்து மிகுமே. (27)

ஆ. மொ: இல.

The words 'yā' 'Pitā' and 'Thalā'
These three nouns which denotc trees
have the soft Consonants, after them.

க சு.

The three nouns — the word 'yā' (denoting) a tree,
'Pitā' and 'talā' — have the nasals inserted

பி. இ. நூ.

முத்து. பு. 94

யாவும் பிடாவும் தளாவும் மெலிமிகும்

இளம்.

இது அவ்வீற்றிற் சிலவற்றிற்கு வல்லெழுத்து விலக்கி மெல் லெழுத்து விதித்தல் நுதலிற்று.

இ—ள்: யாமரக்கிளவியும் பிடாவும் தளாவும் ஆ முப் பெயரும்— யா என்னும் மரத்தை உணர நின்ற சொல்லும் பிடா என்னுஞ் சொல்லும் தளா என்னும் சொல்லுமாகிய அம்மூன்று பெயரும், மெல் எழுத்து மிகும் — வல்லெழுத்து மிகாது மெல் லெழுத்து மிக்கு முடியும்.

உ—ம்: யாஅங்கோடு, பிடாஅங்கோடு, தளாஅங்கோடு, செதிள், தோல், பூ என வரும்.

[1]மெல்லெழுத்துப் பேறு வருமொழித் தொழிலாகலின் வரு மொழி வல்லெழுத்தை விலக்கிற்று.

---

சு. வே:

1. மெல்லெழுத்துப பேறு வருமொழி வல்லெழுத்தை விலக்கிற்று,

நச்.

இது [2] வருமொழி வல்லெழுத்து விலக்கி மெல்லெழுத்து வகுத்தலின் எய்தியது விலக்கிப் பிறிது விதி வகுக்கின்றது

இ—ள் : யா என்னும் மரத்தை யுணர நின்ற சொல்லும், பிடா என்னுஞ் சொல்லும், தளா என்னும் சொல்லும் ஆகிய மூன்று பெயரும் வல்லெழுத்து மிகாது மெல்லெழுத்து மிக்கு முடியும்; எ—று.

உ—ம் : யாஅங்கோடு, பிடா அங்கோடு; தளாஅங்கோடு, செதிள், தோல், பூ எனவரும். வருமொழித் தொழிலாகிய மெல் லெழுத்து வகுப்பவே வல்லெழுத்து விலக்கிற்றாம். இதற்கு ‡விலக்காமையின் அகரம் பெற்றது.

சுப்.

இச்சூத்திரம் "வேற்றுமைக் கண்ணும் அதனோரற்றே" (227) என்ற சூத்திரத்துக்குப் புறனடையாகாமையின் அகரக் கிளவி ஈண்டுந் தோன்றியது.

கசதபத் தோன்றின் என்பது அதிகரித்தது.

'யாவென் கிளவியும்' என்னாது 'யாமரக்கிளவியும்' என்றார்; யா என்ற வினாவை விலக்குதற்கு என்க.

அவற்றுக்கு மேலும் ஓர் முடிபு

**231. வல்லெழுத்து மிகினும் மானம் இல்லை.** (28)

**ஆ. மொ. இல.**

There is no harm even if hard consonants appear there.

க. சு.

There is no harm even if a plosive is inserted

**பி. இ நூ.**

**முத்து. பு.** 95

வல்லெழுத்து மிகினும் மானம் இல்லை.

---

சு. வே :

2. வல்லெழுத்து விலக்கி.

‡ இதற்கு அகரம் விலக்காமையின்

இளம்.

இது மேலனவற்றிற்கு வல்லெழுத்தும் சிறுபான்மை மிக்கு முடியும் என இறந்தது காத்தல் நுதலிற்று.

இ—ள் : வல்லெழுத்து மிகினும் மானம் இல்லை—மேற் கூறிய மூன்று பெயரும் மெல்லெழுத்தே யன்றி வல்லெழுத்து மிக்கு முடியினும் குற்றம் இல்லை.

உ—ம் : யாஅக்கோடு, பிடாஅக்கோடு, தளாஅக்கோடு, செதிள், தோல், பூ என வரும்.

'மானமில்லை' என்றதனால், யாமுதலிய மூன்றற்கும் உருபிற்குச் சென்ற சாரியை பொருட்கண் சென்றவழி இயைபு வல்லெழுத்து வீழ்க்க.

உ—ம் : ‡யாஅவின் கோடு. பிடாஅவின்கோடு, தளாஅவின் கோடு எனவரும்.

இன்னும் அதனானே 'யாஅத்துக் கோடு' எனச்சிறுபான்மை [1]அத்துப்பேறு உண்டேனும் கொள்க. அவ் வகரப் பேற்றோடு [2]வல்லெழுத்துப் பெறுதலின், 'யாமரக்கிளவி' என்பதனைக் "குறி யதன் முன்னரும்" என்பதன்பின் வையாத விதனால், இராவிற் கொண்டான், நிலாவிற்கொண்டான் என உருபிற்குச் சென்ற சாரியை பொருட்கண் சென்றவழி இயைபு வல்லெழுத்து வீழ்க்க. 'நிலாவிற் கொண்டான்' என்பதற்கு 'நிலாத்துக் கொண்டான்' என்பழி ஈற்றுப் பொது முடிபாயினவாறறிக.

நச்.

இஃது எய்தியது இகந்தபடாமற் காத்தது; அகரத்தொடு மெல்லெழுத்தேயன்றி வல்லெழுத்தும் பெறும் என்றலின்.

இ—ள்: முற்கூறிய மூன்று பெயர்க்கும் மெல்லெழுத்தே யன்றி வல்லெழுத்து மிக்கு முடியினும் குற்றம் இல்லை; எ—று.

‡ இவ்வுதாரணங்கள் அச்சுப் புத்தகத்திற்கண்ட பாடம் என்றும் அவை யாவின் கோடு, பிடாவின்கோடு, தளா வின்கோடு என்பது ஓலைச் சுவடியிற் கண்டபாடம் என்றும் கூறுவர் திரு. அடிகளாசிரியர். யா அக்கோடு என மேலே உதாரணம் உண்மையின் யாவின்கோடு என (அகரம்) இருப்பதில் தவறில்லை.

சு. வே: 1. அகரப்

2. மெல்லெழுத்துப்

உ-ம்: †யாஅக்கோடு, பிடாஅக்கோடு, தளாஅக்கோடு, செதிள், தோல், பூ என வரும். மானமில்லை என்றதனால் இம்மூன்றற்கும் உருபிற்குச் சென்ற சாரியை பொருட்கண் சென்றுழி இயைபு வல்லெழுத்து வீழ்க்க. யாவின்கோடு, பிடாவின் கோடு, தளாவின்கோடு என வரும். சாரியை பெறவே அகரம் வீழ்ந்தது.

இன்னும் இதனானே யாஅத்துக்கோடு, பிடாஅத்துக்கோடு, தளாஅத்துக்கோடு என அத்துப் பெறுதலும் கொள்க; அகரமும் வல்லெழுத்தும் பெறுதலின்.

யாமரக்கிளவி என்பதனைக் குறியதன் முன்னர் (226) என்பதன்பின் வையாத வதனால், 'இராவிற் கொண்டான்,' 'நிலாவிற்கொண்டான்' என உருபிற்குச்சென்ற சாரியை பொருட் கண் சென்றுழி இயைபு வல்லெழுத்து வீழ்க்க.

சுப்.

இச்சூத்திரத்தை ஆசிரியர் கூறாதிருப்பினும், முதற்சூத்திரத் துள்ள "மெல்லெழுத்து மிகுமே" என்றதை "மெல்லெழுத்தும் மிகுமே" எனப் பிரிப்பின் உம்மையால் "வேற்றுமைக்கண்ணு மதனோரற்றே" (226) என்ற சூத்திரத்திற் கூறப்பட்ட வல்லெழுத்து மிகுதி உணர்த்தப்படுமாதலான் இச்சூத்திரத்தை ஏன் ஆசிரியர் கூறினர் எனின், அவ்வாறாயின் வல்லெழுத்து மிகுதி பெரும்பான்மை யென்றும், மெல்லெழுத்து மிகுதி சிறு பான்மை என்றும் ஆகும். அஃது ஆசிரியர்க்கு உடம்பாடின்று.

"மானமில்லை என்றதனால்... யாஅவின்கோடு...எனவரும்" என்கின்றனர் உரைகாரர்கள். யாஅவினதுகோடு' என்ற

† அகரமும் வல்லெழுத்தும் பெறுதலின்—அத்துப்பேற்றில் 27 ஆம் நூற்பாவிற்கேற்ப அகரமும், அத்தின் முதல் எழுத்து 28 ஆம் நூற்பாவிற்கேற்ப வல்லெழுத்தும் இருத்தலின் வல்லெழுத்துப்பேறு அத்திற்கும் வரு மொழிக்கும் இடைப்பட்டது. (பாவாணர்)

'Partial assimilation மொழிவாழ்வில்complete assimilation ஆகும் நிலையைப் பார்க்கிறோம்.யாஅம்+கோடு என்பது யாஅங்கோடு ஆகும்போது மகரம் ஙகரமாவது பாதி அடைவு (partial assimilation).யாஅக்கோடு என மகரம் ககரமாவது முழு அடைவு (complete assimilation)— தே. ஆண்டியப்பன் (காப்பியர் நெறி,எழுத்தியல்.பக். 78

விடத்தில் 'அது' என்ற ஆறனுருபு கெடினும், அதனால் வந்த சாரியை கெடாது நிற்கும் எனக் கொள்ளுதல் நேரிதாகலான், சாரியை பெறுதலை ஈண்டும் ஒருமுறை ஆசிரியர் கூறாது விடுத்தனர் என்னலாம். ஆகலின் 'மானமில்லை' என்றதனால் அதனைப் பெறுதல் வேண்டாம்.

"இன்னும் அதனானே யாஅத்துக்கோடு எனச் சிறுபான்மை அத்துப் பேறுண்டேனும் கொள்க" என்றனர் உரைகாரர்கள். 'யாமரத்தின்கண் உள்ளகோடு' என அதற்குப் பொருள் கொள்ளின், 'யாஅத்துக் கண்கோடு' என்ற விடத்துள்ள 'கண்' தொக்கு 'யாஅத்துக்கோடு' என ஆயிற்று என்னலாம். ஆங்கு அத்துச் சாரியை "அ ஆவென்னும் மரப்பெயர்க் கிளவிக்கு" (எழு. 182) என்ற சூத்திரத்தால் கொளல் தகும்.

"குறியதன் முன்னரும்......இயைபு வல்லெழுத்து வீழ்க்க" என்றனர் உரைகாரர்கள். இராவின்கண் கொண்டான் என்றது 'இராவிற் கொண்டான்' என ஆயிருக்கின்றது. ஆங்கு இன்சாரியை 'அஆ...' (எழு. 174) என்ற சூத்திரத்தால் வருமாகலான் உரைகாரர்கள் அவ்வாறு கொள்ளவேண்டுவதின்று.

**வேங்.**

'மானமில்லை' என்றதனால், 'யாஅத்துக்கோடு' என அத்துச் சாரியை பெறும். என்றனர் உரையாளர் இருவரும். ஆசிரியர், நிலா என்னும் சொல் ஒன்றற்கு மட்டுமே அத்துச் சாரியை விதித்தாரேயன்றி, இவ்வீற்றுச் சொற்களுக்குப் பொதுவிதியாக விதித்திலர். அதனால் அஃது ஆசிரியர் கருத்தாகாது.

'யாமரக் கிளவியும்' எனனும் சூத்திரத்தை, 'குறியதன் முன்னரும் ஓரெழுத்து மொழிக்கும்' என்னும் சூத்திரத்தையடுத்து வைக்காததனால் "இராவிற் கொண்டான்' என உருபிற்குச் சென்ற சாரியை பொருட்கண் சென்றுழி இயைபு வல்லெழுத்து வீழ்க்க" என்றனர் உரைகாரர் இருவரும். ஆசிரியர், 'குறியதன் முன்னரும்' என்னும் சூத்திரத்தால் இருவகை ஆகார வீற்றுப் பெயர்கள் முன்னும் அகரம் தோன்றும் என்றாராகலின், அதனை யடுத்து, அகரம்வரப் பெறாத சொல்லைக் கூறுதல் முறையாகும் ஆதலின், 'இராவென் கிளவிக் ககரமில்லை' என்று கூறினார். ஆகலின் உரையாளர் கூறிய நியாயம் அமைவதன்று.

சிவ.

'நிலாவிற் கொண்டான் என்பதற்கு நிலாத்துக் கொண்டான் என்பது ஈற்றுப் பொது முடிபாயினவாறு அறிக''—இளம்.

**விளக்கம்:** ''நிலா என்பது 'கொண்டான்' என்பதோடு புணரும்போது வேற்றுமை வழியில் அத்துச் சாரியை வரும் என்பது, ''நிலா வென் கிளவி அத்தொடு சிவணும்'' (எழு 229) என்பதாற் பெறப்பட்டது. உதாரணம் 'நிலாத்துக் கொண்டான்' என்பது. அத்துச் சாரியை யடுத்து வருமொழி வல்லெழுத்து மிக்கது. இவ்வல்லெழுத்து அத்துச் சாரியை பற்றி வந்த வல்லெழுத்தாகுமோ என்ற ஐயம் வரலாம்.

''அத்தேவற்றே'' (எழு. 131) என்ற நூற்பாவில் நிலை மொழி மெய்யீறாயின் அத்து இடைவரும் போது அவ்வீற்று மெய்கெட வருமொழி வல்லெழுத்து மிக்கு முடியும் என்பது கூறப்பட்டது. (உ—ம் கலத்துக் குறை) அவ்வல்லெழுத்து சாரியை நோக்கி வந்ததாம். 'நிலாத்துக் கொண்டான்' என்பதில் உள்ள வல்லெழுத்து ஈறுபற்றி வந்தது. ஆகாரவீற்று முன்னர் வருமொழி வல்லெழுத்து வேற்றுமை வழியில் மிக்கு முடியும் என்பது பொதுவிதி. அதற்கேற்ப 'நிலா' என்ற ஆகார வீற்று முன்னர்க் 'கொண்டான்' என்பதில் உள்ள முதல் வல்லெழுத்து மிக்கு 'நிலாக் கொண்டான். என முடிதல் வேண்டும். இடையில் 'அத்து' வரவே 'நிலாத்துக் கொண்டான்' என முடிந்தது. ஆதலின் வல்லெழுத்து ஈற்றுப் பொது முடிபால் வந்தது எனக் கொள்ளவேண்டும். அன்றியும் 'உருபிற்குச் சென்ற சாரியை பொருட்கண் சென்ற வழி இயைபு வல்லெழுத்து வீழ்க்க வேண்டும்' என்பதற் கேற்பவும் வல்லெழுத்து ஈற்றுப் பொது முடிபால் வந்தது என்ன வேண்டும். ''நிலாவிற் கொண்டான்'' என்புழி இன்சாரியை வந்தமையின் ஆகாரவீற்றுப் பொது விதி பெறும் வல்லெழுத்தை வீழ்க்க வேண்டும். எனவே 'நிலாவிற் கொண்டான்' என்பதை நோக்கும் போது 'நிலாத்துக் கொண்டான்' என்பதில் உள்ள வல்லெழுத்து மிகுதியானது சாரியை நோக்கி வந்ததின்றி ஈற்றுப் பொது முடிபால் வந்ததென்க.

நிலாவிற் கொண்டான் என்பதில் 'இன்' சாரியை நீங்கின் நிலாக் கொண்டான் என வல்லெழுத்துமிக்கு வரும். அது போலவே 'நிலாத்துக் கொண்டான்' என்பதில் அத்துச்சாரியை நீக்கின் நிலாக்கொண்டான் என்றே வரும். எனவே இன்சாரியைத் தகுதியில் அத்துச்சாரியை இருத்தலின் இளம் பூரணர் அவ்வாறு எழுதினார்.

மா (மரம்) ஆ, மா (விலங்கு)

**232.** **மாமரக் கிளவியும் ஆவும் மாவும்**
**ஆமும் பெயரும் அவற்றோ ரன்ன**
**அகரம் வல்லெழுத் தவையவண் நிலையா**
**னகரம் ஒற்றும் ஆவும் மாவும்** (29)

ஆ, மொ: இல.

The word 'Mā' denoting a tree and; 'Ā' and 'Mā'
These three nouns take the eourse of the above
'a' and the hard consonants do not stand there
'n' joins 'Ā' and 'Mā.'

க. சு.

The word 'mā' (denoting) a tree and (the words) 'ā' and 'mā
These three nouns are like those (above in behaviour);
the phoneme a' and the plosive, they do not remain in that position;
(and) the phoneme n̲ combines with 'ā' and 'mā'

பி. இ. நா.

முத்து. பு. 96.

ஆமா னகரமெய் அடையப் பெறுமே.

நன். 248

ஆமா கோனவ் வணையவும் பெறுமே.

இ. வி. 151. ஷை ஷை

**இளம்.**

இது அவ்வீற்றில் சிலவற்றிற்கு எய்தியது விலக்கிப் பிறிது விதி கூறுதல் நுதலிற்று.

இ—ள்: மாமரக் கிளவியும் ஆவும் மாவும் ஆமுப் பெயரும் அவற்று ஓர் அன்ன—மாமரமாகிய சொல்லும் ஆ என்னும் சொல்லும் மா என்னும் சொல்லுமாகிய அம்மூன்று பெயர்ச் சொல்லும் மேற்கூறிய யா முதலிய மூன்றனோடும் ஒரு தன்மையவாய் வல்லெழுத்துப் பெறாது, மெல்லெழுத்துப் பெற்று [1]முடிதலும் உடைய, ஆவும் மாவும் அகரம் வல்லெழுத்து அவை அவண்

சு, வே; 1, முடிதலை

நிலையா னகரம் ஒற்றும்—அவற்றுள் ஆவும் மாவும் முன் பெற்று நின்ற அகரமும் வல்லெழுத்துமாகிய அவை அவ்விடத்து நிலை பெறாவாய் னகரம் ஒற்றாகப் பெற்று முடியும்.

உ-ம்; மாஅங்கோடு, செதிள், தோல், பூ எனவும்; ஆன்கோடு, மான்கோடு, செவி, தலை, புறம் எனவும் வரும்.

'அறிய' (உயிர்ம. 44) என்றதனால், சிறுபான்மை மாங்கோடு' என [2]அகரமின்றியும் வரும்.

இனி, 'அவண்' என்றதனால் காயாங்கோடு, ஆணாங்கோடு, நுணாங்கோடு என்றாற்போலப் பிறவும் மெல்லெழுத்துப் பெறுதலும்; அங்காக் கொண்டான், இங்காக் கொண்டான், உங்காக் கொண்டான், எங்காக் கொண்டான் என இவ்வீற்று ஏழாம் வேற்றுமை [3]இடப்பொருள் உணரநின்ற இடைச் சொற்கள் வல்லெழுத்துப் பெறுதலும்; ஆவின்கோடு, மாவின் கோடு எனச் சிறுபான்மை இன்பெறுதலும்; பெற்றவழி வல்லெழுத்து வீழ்வும் கொள்க.

'அவற்றோரன்ன' என்ற மாட்டேற்றால் பெற்று நின்றது மெல்லெழுத்தாதலின் 'அகரம் வல்லெழுத்தவை யவணிலையா' என்று [4]ஓதற் பாலதன்றெனின், மேல், "ஊவென் ஒருபெயர் ஆவொடு சிவணும்" (உயிர் 67) என்றவழி, அம்மாட்டேற்றானே அதன் வல்லெழுத்து வீழ்வும் கொளல் வேண்டித் "திரிந்ததன் திரிபது" என்னும் நயத்தானே மெல்லெழுத்தை வல்லெழுத்தாக ஓதினான் எனக் கொள்க.

நச்.

இஃது எய்தியது விலக்கி எய்தாத தெய்துவித்தது. இம் மூன்றும் வல்லெழுத்துப் பெறா என்றலின் எய்தியது விலக்கிற்று. மாமரத்துக்கு அகரமும் ங ஞ ந ம ஒற்றும், ஏனையவற்றிற்கு னகர ஒற்றும் வரும் என்றலின் எய்தாதது எய்துவித்தது.

---

சு. வே:

2. அகரமன்றியும்
3. இடத்துப்பொருள்
4 ஓதற்பாற்றன்றெனின்

இ—ள் : மாமரமாகிய சொல்லும் ஆவென்னுஞ் சொல்லும் மாவென்னும் சொல்லுமாகிய மூன்று பெயரும் யாமரம் முதலிய மூன்றனோடும் ஒருதன்மையவாய் மெல்லெழுத்துப் பெற்று முடியும்; அவற்றுள் ஆவும் மாவும் புணர்ச்சி யிடத்து அகரம் நிலை பெறாவாய் னகர ஒற்றுப் பெற்று முடியும்; எனவே அருத்தா பத்தியான் மாமரத்திற்கு அகரம் நிலை பெற்று ங ஞ ந ம ஒற்றுப் பெறும் என்பதும் ஆயிற்று; அம்மூன்று பெயரும் முற்கூறிய வல்லெழுத்துப் புணர்ச்சியிடத்து நிலை பெறாவாய் வரும்; எ—று.

'அவணிலையா' என்றதனை இரண்டிடத்தும் கூட்டுக.

உ-ம்: மாஅங்கோடு, செதிள், தோல், பூ; ஆன்கோடு, மான்கோடு, செவி, தலை, புறம் எனவரும்.

'ஆமுப்பெயரும் அவற்றோரன்ன' என்று ஞாபகமாகக் கூறிய வதனால் 'மாங்கோடு' என அகரம் இன்றியும் வரும்.

இனி 'அவண்' என்றதனால் காயாங்கோடு, நுணாங்கோடு, ஆணாங்கோடு என்றாற்போலப் பிறவும் மெல்லெழுத்துப் பெறுதலும்; அங்காக் கொண்டான், இங்காக் கொண்டான், உங்காக் கொண்டான், எங்காக் கொண்டான் என இவற்றுள் ஏழாம் வேற்றுமை இடப்பொருள் உணர நின்ற இடைச்சொற்கள் வல்லெழுத்துப் பெறுதலும்; ஆவின்கோடு மாவின்கோடு எனச் சிறுபான்மை இன்பெறுதலும், பெற்றுழி வல்லெழுத்து வீழ்வும் கொள்க.

மாட்டேற்றான் மூன்று பெயரும் வல்லெழுத்துப் பெறாது மெல்லெழுத்துப் பெற்றவாறும் மாமரம் அகரம் பெற்றவாறும் இச்சூத்திரத்தின் கண்ணழிவான் உணர்க.

சுப்·

அவற்றொடு ஒருதன்மைப் பட்டன என்றமையான் இம் மூன்றன் பின்னரும் பெரும்பான்மை மெல்லெழுத்து மிகுதியும், சிறுபான்மை வல்லெழுத்து மிகுதியும் வரும். அவை வரும்போது "ஒரெழுத்தொருமொழிக்கும்..." (எழு 227) என்றதனான் அகரமும் வரும். அவை மூன்று சொற்கும் வரத் தெரிய, ஆ, மா என்ற சொற்களுக்கு அகரமும் வல்லெழுத்தும் வாரா என்றும், னகரமாகிய மெல்லெழுத்து வரும் என்றும் கூறினமையின், மாமரக்கிளவி ஒன்றே யாமரக்கிளவி முதலிய மூன்றனையும் ஒக்கும்.

.............................................

"அவற்றோரன்ன என்ற மாட்டேற்றாற் பெற்று நின்றது மெல்லெழுத்தாகலின், 'அகரம் வல்லெழுத்தவை யவணிலையா' என்று ஓதற்பாற்றன்றெனின்" என ஐயம் எழுப்புகின்றார் இளம்பூரணர்.

இதற்கு முன்னர் உள்ள சூத்திரம் "வல்லெழுத்துமிகினும் மானமில்லை" (எழு. 231) என்றிருக்கவும், மாட்டேற்றால் பெற்று நின்றது மெல்லெழுத்து எனக் கூறுதல் எவ்வாறு பொருந்தும்? அவ்வையத்தைப் போக்க மேல் "ஊவென் ஒரு பெயர் ஆவொடு சிவணும்" '(எழு. 270) என்றவழி அம் மாட்டேற்றானே அதன் வல்லெழுத்து வீழ்வும் கொளல் வேண்டித் 'திரிந்ததன் திரிபது என்னும் நயத்தானே மெல் லெழுத்தை வல்லெழுத்தாக ஓதினான் என்க" என்ற விடையை நோக்கி, நச்சினார்க்கினியர் சூத்திரத்திலுள்ள இறுதி இரண்டடி களை "ஆவும் மாவும் அகரம் அவண் நிலையா னகரம் ஒற்றும், அவை வல்லெழுத்து அவண் நிலையா" என அந்நுவயித்தார். இது சூத்திர முறைக்கு நேரிதன்று என்பது வெளிப்படை.

"அவண் என்றதனால் காயாங்கோடு......இன்பெறுதலும், பெற்ற வழி வல்லெழுத்து வீழ்வும் கொள்க" என்றனர் உரைகாரர்கள். குறிப்புரையிற் பொருள் கூறியவழி அவண் என்ற சொல் மிகைபின்மையான், காயாங்கோடு, அங்காக் கொண்டான் முதலியவற்றைக் "கிளந்தவல்ல" (எழு. 482) என்ற புறனடைச் சூத்திரத்தானும், ஆவின் கோடு மாவின்கோடு என்ற விடத்தில் இன்சாரியையை "அ ஆ......" (எழு. 174) என்ற சூத்திரத் தானும், அவ்விடத்து வல்லெழுத்து வீழ்வை யரழவென்னும் (எழு 48) என்ற சூத்திரத்தானும் கொள்ளல் தகும்.

நச்சினார்க்கினியத்தில் "எனவே அருத்தாபத்தியான் மாமரத் திற்கு அகரம் நிலைபெற்று ங ஞ ந ம ஒற்றும் பெறுமாயிற்று" என்று உள்ளது. முதல் இரண்டடிகளால் மாமரத்திற்கு இவை வரும் என்று விதித்தலும் சூத்திரத்தின் இறுதியிரண்டடிகளும் இவற்றைப் பெற்ற ஆ, மா என்ற சொற்களுக்கு இவற்றை விலக்குதலும் காண்கின்றதனால் ஈண்டு அருத்தாபத்தியான் என்பது பொருந்தாது.

"ஆவும் மாவும் அவற்றோரன்ன என்று ஞாபகமாகக் கூறிய வதனால் மாங்கோடு என அகரம் இன்றியும் வரும்" என நச்சினார்க் கினியத்தில் எள்ளது. ஆ, மா இவற்றைப்பற்றி மிகை

யாகக் கூறியதன் பயன் மாமரத்தைப் பற்றிய 'மாங்கோடு' என்ற தற்கு எனக் கூறுதல் எவ்வாறு பொருந்தும்? அதனைக் "குறியதன்" (எழு 227) என்ற சூத்திரத்துள்ள 'அறிய' என்ற சொல்லாற் கொண்டனர் இளம்பூரணர்.

**வேங்.**

'ஆமுப் பெயரும் அவற்றோ ரன்ன' என்னும் மாட்டேற்றால் யா, பிடா, தளா என்னும் பெயர்கள் அகரம் பெற்று மெல் லெழுத்து துக்கும், வல்லெழுத்துமிக்கும் முடிந்தாற்போல, மரப் பெயராகிய மா, ஆ, மா என்பனவும் அகரம் பெற்று மெல் லெழுத்துமிக்கும் வல்லெழுத்துமிக்கும் முடிவான் செல்லு மாகலின், 'அகரம் வல்லெழுத்தவையவ ணிலையா' என்று விலக்கினார். அதனால், மா (மரம்) முதலிய மூன்று பெயர்களும் அகரம் பெறாமல் மெல்லெழுத்துமிக்கு முடியப் பெறும்; ஆயின் ஈற்றடியினால், ஆ, மா என்னும் இரண்டு பெயர்களும் னகர ஒற்றோடு நிற்கும் என்றதனால், மா என்னும் மரப்பெயர் ஒன்றே மெல்லெழுத்துமிக்கு முடியும் என்றவாறாயிற்று.

'னகரம் தோன்றும்' என்னாது 'னகரம் ஒற்றும்' என்றதனால் னகரமெய் அவ்விருமொழியிலும் உறுப்புப்போல நிற்கும் என்ற தாயிற்று. அதனால் ஆசிரியர், 'ஆனொற்றகரமொடு' (உயிர்ம30) என்றும். "ஆன்முன் வரூஉம்" (உயிர் 31) என்றும் ஆண்டுள்ளார்,

இச் சூத்திரத்தில் 'அகரம் வல்லெழுத்தவையவணிலையா' என்றது ஆவிற்கும் மாவிற்குமே என்று கொண்டு, 'அவற்றுள் ஆவும் மாவும் முன் பெற்று நின்ற அகரமும் வல்லெழுத்தும் ஆகிய அவை அவ்விடத்து நிலை பெறாவாய், னகரம் ஒற்றாகப் பெற்று முடியும்' என்று உரையாசிரியர் (இளம்) உரை கூறினார். அவர் கூறிய உரையை விடுத்து, நச்சினார்க்கினியர், பின்னிரண்டடி களை,

ஆவும் மாவும் அகரம் அவண்நிலையா னகரம் ஒற்றும், அவை வல்லெழுத்து அவண் நிலையா எனப் பிரித்துக் கூட்டி,

> "அவற்றுள் ஆவும் மாவும் புணர்ச்சியிடத்து அகரம் நிலை பெறவாய் னகர ஒற்றுப் பெற்று முடியும். எனவே, அருத்தா பத்தியான் மாமரத்திற்கு அகரம் நிலைபெற்று ங ஞ ந ம ஒற்றும் பெறுமாயிற்று.
> அம்மூன்று பெயரும் முற்கூறிய வல்லெழுத்து, புணர்ச்சி யிடத்து நிலை பெறவாய் வரும்"

என்று பொருள்கூறி, 'அவண் நிலையா என்றதனை இரண்டிடத்தும் கூட்டுக' என்று எழுதினார். இவ்வாறு சிதைத்துப் பிரித்துச் சொற்களைக் கூட்டுமாறு ஆசிரியர் சூத்திரம் செய்வதிலர் ஆகலின், நச்சினார்க்கினியர் உரையும் ஆசிரியர் கருத்திற்கு ஒத்ததன்று.

'அகரம் வல்லெழுத்தவை யவணிலையா' என்றது ஆவும் மாவும் ஆகிய இரண்டற்கே என்று கொள்ளின், மாமரக்கிளவி அகரம் பெற்று, வல்லெழுத்து மிக்கும் முடிதல் வேண்டும். அது வல்லெழுத்துப் பெறுதல் இன்மையின், 'அகரம் வல்லெழுத்தவை யவணிலையா' என்றது மூன்று பெயர்கட்கும் பொதுவாகக் கொண்டு உரைகூறுதல் அமைவுடையதாகும்.

இனி உரையாசிரியர், 'அவற்றோரன்ன என்ற மாட்டேற்றால் பெற்றுநின்றது மெல்லெழுத்தாகலின், அகரம் வல்லெழுத்தவையவணிலையா'' என்றோதற் பாலதன்று எனச் சங்கித்து, அதற்குச் சமாதானம் கூறினார். அவர் சங்கித்தவாறு மாட்டேற்றாற் பெறுவது மெல்லெழுத்து மாத்திரம் அன்று; யாமரக்கிளவி முதலியவற்றிற்கு 'வல்லெழுத்து மிகினுமானமில்லை' என்று விதித்ததனான், வல்லெழுத்துப் பேறும் எய்தும். அதுகருதியே ஆசிரியர் 'வல்லெழுத்தவை யவணிலையா' என்று விலக்குவாராயினர்.

உரையாளர்கள் 'அவண்' என்றதனான், காயாங்கோடு முதலிய பலவற்றை ஈண்டமைத்தனர். அவை அச்சொல்லாற்றலாற் போதராமையின் ஈண்டுக் கோடலமையாது.

சிவ.

இளம்பூரணர் கூறிய திரிந்ததன் திரிபு என்பதன் விளக்கம்.

'திரிந்ததன் திரிபு அது என்றல்' என்பது, விகாரப்பட்ட எழுத்தின் விகாரத்தை விகார எழுத்தாகவே கொள்ளாமல் மூல எழுத்தாகக் கொள்ளுதல். உதாரணமாக, 'கஃறீது' என்ற இரு சொற் புணர்ச்சியைக் கொள்ளலாம். இது, கல்+தீது எனப் பிரிக்கப்படும். நிலைமொழியீற்றிலுள்ள லகர ஒற்றைக் கண்ட வருமொழி முதலில் உள்ள தகரஒற்று, லகர ஒற்றாக மாறும் என்பது விதி, லகர தகர ஒற்றுகள் இடைநிலை மயக்கம் பெறா. ஆய்தமும் தகர ஒற்றும் மயக்கம் பெறும், அஃது என்பதில் மயங்கியது காண்க. 'கஃறீது' என்பதில் நிலைமொழியீற்று லகரம் ஆய்தமாகத் திரிந்தது. தகரம் றகரமாகத் திரிய

வேண்டுவதில்லை. என்றாலும் நிலைமொழி லகரத்திரிபாகிய ஆய்தத்தை, வருமொழித் தகரமானது ஆய்தமாகக் கருதாது, அதன் முன்னையை வடிவாகிய லகரஎழுத்தாகவே கருதியது. அதனால் றகரமாகத் திரிந்தது. இதுவே திரிந்ததன் திரிபு அது என்பதாகும். திரிந்ததன் திரிபு அது எனக் கருதுதல் வருமொழி முதல் எழுத்தின் செயலாகக் கொள்க. இதற்குச் சிவப்பிரகாசரின் பிரபுலிங்கலீலைப் பாட்டொன்றும் சான்று பகரும்.

> "குறில் வழி லகரம் தனிநிலை யாயும் கூடிய தகரமுன் எழுத் தென்று
> அறிகுறி வடிவம் திரிதல் போல் நந்தி அடல்விடை மெய் திரிந்துறினும்
> நறுமலர் விழியால் கண்டவ ரெல்லாம் நந்தியே என்றுள மகிழ்ந்தார்."

என்பது அப்பாடல். கயிலை வாழ் நந்தியெம்பெருமான் மண்ணுலகில் குழந்தையாக வந்தவதரித்தார். அக்குழந்தையைக் கண்ட தேவர் மண்ணுலகக் குழந்தையாகக் காணாமல் பழைய நிலையான நந்தியெம்பெருமானாகவே கண்டனராம். இது எது போன்றது எனின், 'கல் என்பதின் லகரம் கஃஎன ஆய்தமாகத் திரிந்தாலும், தீது எனும் மொழியில் உள்ள தகரம் அவ்வாய்தத்தை ஆய்தமாகக் கருதாமல் முன்வடிவாகிய லகரமாகக் கருதித் தான் றகரமாகத் திரிந்தது போன்றது' என்பது அப்பாடலின் கருத்து. சிவப்பிரகாசர் வாக்கும் திரிந்ததன் திரிபு அது எனக் கருதுதல் வருமொழிச் செயல் என்பதைத் தெரிவிக்கும்.
சொற்புணர்ச்சி யிடத்து மட்டும் அன்றி ஆசிரியர் ஆட்சியிலும் இந்நயத்தைக் காணலாம். அதை இச்சூத்திரத்தில் அமைத்துக் காட்டினார் இளம்பூரணர்.

"அவற்றோரன்ன' என்ற மாட்டேற்றால்......வல்லெழுத்தாக ஓதினான் என்க" : —

மா, ஆ, மா ஆகிய மூன்று பெயர்களும் யா முதலிய மூன்று பெயர்களோடு மாட்டேற்றப் பட்டன.

யா முதலிய மூன்றும் வருமொழி வல்லெழுந்தோடு புணருமிடத்து (வேற்றுமையில்) மெல்லெழுத்து மிகும் என்பது முன்னர்க் கூறப்பட்டது (130). அவைபோலவே மா, ஆ, மா என்பனவும் வருமொழிவல்லெழுத்தோடு புணருமிடத்து மெல்லெழுத்துப் பெறும் என்பதாயிற்று. அதனுடன், "குறியதன் முன்னரும்

ஓரெழுத்து மொழிக்கும் அறியத் தோன்றும் அகரக்கிளவி'' என்னும் சூத்திர விதிப்படி அகரமும் பெறும். அதன்படி மாஅங்கோடு ஆஅங்கோடு, மாஅங்கோடு எனவரும். இது ''மாமரக் கிளவியும் ஆவும் மாவும்; ஆமுப் பெயரும் அவற்றோரன்ன'' என்பதன் விளக்கம்.

அடுத்து, ஆவும் மாவும் என்னும் இரண்டும் அகரமும் வல்லெழுத்தும் நிலையாமல் னகர ஒற்றுப் பெற்று ஆன்கோடு மான்கோடு எனவரும் என்பது கூறப்பட்டது. இதில் ஓர் மாறுபாடு உண்டு. மாட்டேற்றின்படி அகரமும் மெல்லெழுத்தும் இருக்க, அவ்விரண்டும் நிலையா என்னாமல் மெல்லெழுத்துக்குப் பதில் வல்லெழுத்தைக் கொண்டு 'அகரமும் **வல்லெழுத்தும்** நிலையா' என்றது மாறுபாடுதானே? இம்மாறுபாட்டுக்குக் காரணம் ஊகார இறுதி பற்றிப் பின்னர்க் கூறும் போது, ''ஊ என் ஒரு பெயர் ஆவொடுசிவணும்'' என மாட்டேற்ற வேண்டியிருப்பதேயாம். 'ஊ' என்னும் பெயர் 'குறை' என்னும் சொல்லுடன் புணரும் போது னகர எழுத்துப் பெற்று ஆன்கோடு போல 'ஊன்குறை' என வரும் என்பது அதன் பொருள். ஊகார இறுதி வேற்றுமைப் புணர்ச்சியில் வருமொழி வல்லெழுத்து மிக்கு முடியும் என்பது விதி. (எழு. 267) அன்றியும் ஓரேழுத்து மொழியாதலின் உகர எழுத்தும் பெற்று வரும் என்பதும் ஒரு விதியுண்டு (எழு. 268). அவற்றின் படி வரும் உகரமும் வல்லெழுத்தும் (ஊஉக்) னகர ஒற்று வரும் போது நிலைத்தல் இல்லை. அதற்கு என விதி கூறுவதாயின் சூத்திரம் ஒன்று மிகுதிப்படும். அதைக் குறைக்க வேண்டி '':ஊவென் ஒரு பெயர் ஆவொடு சிவணும்'' என மாட்டேற்றால் கூறினார்.

இச்சூத்திரத்தில் 'அகரம் மெல்லெழுத்து அவையவண் நிலையா'' என்று கூறியிருந்தால் ''ஊவென் ஒரு பெயர் ஆவொடு சிவணும்'' என மாட்டேற்றமுடியாது. ஊ என்பதுமெல்லெழுத்து மிகுதல் இல்லை. மாட்டேற்றுக் கேற்பவே 'அகரம் **வல்லெழுத்து** அவை அவண் நிலையா' என்றார்.

ஆயின் ஊ என்பதை மாட்டேற்று வதற்காக மாறுபடக் கூறுதல் பொருந்துமோ எனின், 'திரிந்ததன் திரிபு அது' என்னும் நயத்தாற் கூறுதலின் பொருந்தும் என்னலாம். மாமரக்கிளவி மூன்றும் மெல்லெழுத்துப் பெற்றாலும் ஆகாரவீற்றுப் பொதுச் சூத்திர விதிப்படி (எழு. 266) வேற்றுமையில் வல்லெழுத்துப் பெறுவன. அதனாலேயே மெல்லெழுத்து மிகும் என்ற யாமரக் கிளவியும் (எழு 230) என்பதையடுத்து வல்லெழுத்து மிகினும் மானமில்லை (231) என்றார் ஆசிரியர்.

எனவே தொல்காப்பியர் யா முதலியவற்றிற்கு வல்லெழுத்து மிகுதல் இயல்பு என்றும் மெல்லெழுத்து மிகுதல் திரிபு என்றும் கொண்டார். மெல்லெழுத்து மிகுதலாகிய திரிபு பொதுச் சூத்திர விதிப்படி வல்லெழுத்து மிகுதலாகிய இயல்பில் திரிந்ததாம். ஆதலின் அந்திரிபை வேறுபட்ட தனித்திரிபாகக் கருதாமல் முன்னைய வல்லெழுத்து மிகுதலாகவே கருதினார். அதனால் தான் 'வல்லெழுத்து அவண் நிலையாது' என்றார். இது 'திரிந்த தன் திரிபு அது' என்னும் நயத்தாற் கூறியதாம். 'ஊ' என்ற பெயரை மாட்டேற்றுவதற்குத் துணை செய்தலின் இந்நயத்தை மேற்கொண்டார் ஆசிரியர். இதில் திரிந்தது யாதெனின் வல்லெழுத்து மிகுதி (மாஅக்); அதன் திரிபாவது மெல்லெழுத்து மிகுதல் (மாஅங்); அது என்றலாவது மெல்லெழுத்தாகிய மிகுதியை (மாஅங் என்பதைப்) பழைய வல்லெழுத்து மிகுதியாகவே (மாஅக் என்பதாகவே) கருதுதல்.*

## சு. சுந்தரமூர்த்தி

நிலை மொழியும் வருமொழியுமாகப் புணர்க்கப்பட்ட புணர் மொழிகளில் ஓரெழுத்திற்குத் திரிபுகூறி, அதற்கு மீண்டும் திரிபு கூறுங்கால் அங்ஙனம் திரிந்த எழுத்தைக் கூறாது திரியப்பட்ட எழுத்திற்கே திரிபு கூறுதல் திரிந்ததன் திரிபு அது என்பதாகும்†

அவற்றோரன்ன என்னும் மாட்டேற்றால் ஆ, மா என்னும் சொற்கள் மெல்லெழுத்தொன்றே பெற்று முடியும் என இளம்பூரணர் கருதுகின்றனர். ஆதலின் அவர் ஒரு ஐயத்தை எழுப்புகின்றனர். மெல்லெழுத்து மட்டுமே பெற்று முடியும் ஆ, மா என்பனவற்றிற்கு, வல்லெழுத்து வாரா என விலக்க வேண்டியது ஏன் என்னும் வினாவை எழுப்பிக் கொண்டு அதற்கு விடை தருகின்றார்,

'னகரம் ஒற்றும் ஆவும் மாவும்' என்பதால் ஆ, மா என்பன ஆன், மான் என நிற்குமேனும், முன்னர் 'அவற்றோரன்ன' எனக் கூறும் மாட்டேற்றான் ஆ, மா என்பன மெல்லெழுத்தும்

---

* இளம்பூரணர் எழுத்துரை (பக். 64, 65) மாணிக்கம் பதிப்பகம் சென்னை 7 1967)

† இவ்விளக்கத்துக்குத் திரிந்தது, அதன் திரிபு, அது என்றல் என்னும் பிரிவுகளுக்கேற்ற அமைதியின்மை காண்க.

பெறும் எனக் கொள்ளக் கிடக்கின்றது. ஆயினும் அவை னகரமே பெறும் எனப் பின்னர்க் கூறுதலின் மாட்டேற்றான் பெற்று நின்ற மெல்லெழுத்தையே விலக்க வேண்டும். அங்ஙனமாகவும் ஆசிரியர் 'வல்லெழுத்து அவை அவண் நிலையா' என வல்லெழுத்து வருதலை விலக்குகிறார். ஏன்? இதற்கு அவர் தரும் விடை இரண்டு.

(1) "பின்னர் ஊவென் ஒரு பெயர் ஆவோடு சிவணும்" என்னும் நூற்பாவில், ஊகார இறுதிப் பெயரை இவ்வாகார இறுதிப் பெயரோடு மாட்டெறிகிறார் ஆசிரியர். இங்கு மெல் லெழுத்தியலா' என விலக்கின், இதனொடு மாட்டெறியப்படும் அவ்வூகார இறுதிப் பெயருக்கும் மெல்லெழுத்துப் பெறுதலே விலக்குண்ணும். ஆனால் அங்கு வல்லெழுத்து விலக்கப் பெற வேண்டும், அதனால் ஈண்டு 'வல்லெழுத்து நிலையா' எனக் கூறினர் என்பது.

(2) 'ஆவும் மாவும் அவற்றோரன்ன' என்னும் மாட்டேற் றான் மெல்லெழுத்துப் பெறுமேனும் அம்மெல்லெழுத்து வல்லெழுத்தின் திரிபேயாகும். எனவே 'அவற்றோரன்ன' என்ப தால் முதற்கண் மெல்லெழுத்து வரும் எனக் கூறிய ஆசிரியர், மீண்டும் அதற்குத் திரிபு கூறுங்கால் அங்ஙனம் திரிந்த மெல் லெழுத்தைக் கூறாது, திரியப்பட்ட வல்லெழுத்திற்கே திரிபு கூறி னார். இங்ஙனம் கூறற்கு விதிதிரிந்ததன் திரிபு 'அது' என்ப தாகும்.

**அடிகளாசிரியர் குறிப்பு:**

"ஆன்கோடு, மான்கோடு என்னும் சொற்கள் "அவற்றுள் இன்னின் இகரம்" (புணரியல் 18) என்னும் நூற்பாவிதியால் 'இன்' சாரியையின் முதல் கெட நின்ற தென்பதை அந்நூற்பா வுரை நோக்கியறிக"*

நேமிநாத உரையாசிரியர், ஆவும் மாவும் இயங்குதிணை யாயின் னகரம் பெறும், நிலைத்திணையாயின் னகரம் பெறாது என்று கூறி. 'முன்னிலை நெடிலும் மாவும், இன்மிகப் புணரும் இயங்குதிணையான் என்றாராகலின் என்பர் (நேமி எழு. 23)

* புணரியிலில் கூறப்பட்ட இன் என்பது னகரமாகும் என்னும் கருத்து இன் சாரியைக்கு. இங்குக் கூறப்பட்டது னகர ஒற்று எழுத்து; சாரியை யன்று.

**செ. வை. சண்முகம்**

"பசுவைக் குறிக்கும் ஆ, ஆன் என்ற இரண்டு மாற்று வடிவங்களில் ஆன் என்பது பிற சொற்களோடு வரும்போது மட்டுமே வருகிறது.

ஆனியற் பார்ப்பன மாக்கள் (புறம். 9. 1)
ஆனினம் (புறம் 138. 1)
ஆன்நிரை (புறம் 260. 18)
ஆன் முலை (புறம். 34. 1)

ஆனால், தனிச் சொல்லாக வரும்போது ஆ என்ற வடிவமே உள்ளதால், அதுவே அடிநிலைக் கிளவியாகக் கருதப்படுகிறது.

**மாமரக் கிளவியும் ஆவும் மாவும்**
**..........................**
**னகரம் ஒற்றும் ஆவும் மாவும்** (எழு. 231)

என்று னகரமெய் பெறுதல் புணர்ச்சி மாற்றமாக விளக்கப்பட்டுள்ளது.‡

ஆன்

**233. ஆனொற் றகரமொடு நிலையிடன் உடைத்தே. (30)**

**ஆ மோ: இல்.**

The 'consonant 'n' of 'Ān' remains with 'a'

**க. சு.**

'ā' with the consonant n̲ will have (its proper) placc with the phoneme'a'.

**பி. இ நூ.**

**முத்து. பு. 97**

ஆன்ஒற்று அகரமொடு நிலையிடன் உடைய

**இளம்.**

இது [1]அவ்வீற்றுள் ஆ என்றதற்கு எய்தியதன் மேற் சிறப்பு விதி கூறுதல் நுதலிற்று.

---

‡ எழுத்திலக்கணக் கோட்பாடு. பக். 80

சு. வே:

1. அவற்றுள் ஆன்

இ—ள் : ஆன்ஒற்று அகரமொடும் நிலை இடன் உடைத்து— முன்பு பெற்று நின்ற [2]ஆன் என்னும் சொல்லினது னகரஒற்று அகரத்தொடு [3]நிற்கும் இடன் உடைத்து.

'இடனுடைத்து' என்றதனான், வன்கணம் ஒழிந்த கணத்து இம்முடிபு எனக் கொள்க.

உ—ம் : *"ஆனநெய் தெளித்து நானநீவி" எனவரும்.

'அகரமொடும்' என்ற உம்மையான், அகரமின்றி வருதலே பெரும்பான்மை எனக் கொள்க.

நச்.

இஃது அவற்றுள் ஆன்என்றதற்கு எய்தியதன் மேற் சிறப்பு விதி கூறுகின்றது.

இ—ள் ; ஆவென்னும் சொல் முன்னர்ப் பெற்று நின்ற னகர வொற்று, அகரத்தோடு கூடி நிற்கும் இடனும் உடைத்து; எ—று.

இடனுடைத் தென்றவதனால் வன்கண மொழிந்த கணத்திம் முடிபெனக் கொள்க.

உ—ம் : 'ஆனநெய் தெளித்து நானநீவி' 'ஆன மணி கறங்கும் கானத் தாங்கண்' எனவரும். 'அகரமொடும்' என்ற உம்மையால் அகரமின்றி [4]வருதலே பெரும்பான்மை. ஆனெய் தெளித்து, ஆன்மணி, ஆன்வால் எனவரும்.

**234. ஆன்முன் வரூஉம் ஈகார பகரம்**
**தான்மிகத் தோன்றிக் குறுகலும் உரித்தே.** (31)

**ஆ. மொ: இல.**

'Pi' which comes after 'Ān' may shorten itself
having the consonants doubled dropping 'n'

**க. சு.**

If the word 'ān' is followed by the word 'P' and 'ī'
it is proper to shorten (it) after that very (p) has appeared

---

சு. வே :

2. ஆ என்னும்
3. கூடி நிற்கும்
4. வருதல்

* இதனை எழுத்துச் சாரியை பெற்றது என்பர் மயிலைநாதர் (நன் 252)

பி. இ. நூ.

முத்து. பு. 98

ஆமுன் பகரவீ அனைத்தும்வரக் குறுகும்.

இளம்.

இது இன்னும் [1]ஆன் என்பதற்கு எய்தியது விலக்கிப் பிறிது விதி [2]வகுத்தல் நுதலிற்று.

இ—ள்: ஆன்முன் வரும் ஈகார பகரம்—[3]ஆன் என்னும் சொல் முன்னர் வருமொழியாய் வருகின்ற ஈகாரத்தொடு கூடிய பகரமாகிய மொழி, தான் மிகத்தோன்றி குறுகலும் உரித்து—அப் பகரமாகியதான் மிகத்தோன்றி அவ்வீகாரம் இகரமாகக் குறுகி முடிதலையும் உடைத்து.

'தோன்றி' என்றதனால், நிலைமொழிப்பேறாகிய னகர ஒற்றின் கேடு கொள்க.

உ—ம்; ‡ஆப்பி எனவரும்.

உம்மையான் ஆன்பீ என்பதே பெரும்பான்மையெனக் கொள்க.

நச்.

இஃது ஆன் என்பதற்கு எய்தியது விலக்கிப் பிறிது விதி கூறுகின்றது.

இ—ள்: ஆன் என்னும் சொல்முன்னர் வருமொழியாய் வருகின்ற ஈகாரத்தோடு கூடிய பகரமாகிய மொழி, அப்பகர மாகிய தான் மிக்குநிற்ப நிலை மொழி னகரத்திற்குக் கேடு தோன்றி, ஈகாரம் இகரமாகக் குறுகி நிற்றலும் உரித்து; எ—று.

உ-ம்: ஆப்பி எனவரும்.

உம்மை எதிர்மறையாகலான் ஆன்பீ என்றுமாம்.

---

சு. வே:

1. ஆஎன்பதற்கு
2. கூறுதல்
3. ஆஎன்னும்

‡ "ஆப்பி நீரோடு அலகு கைக்கொண்டிலர்"—அப்பர் தேவாரம்,

சூப்.

பொருள்: ஆவின் பின்னர் வரும் ஈகாரம் ஏறிய பகரம், தான்மிக்கு, குன்றலும் உரித்து; உயிர்மெய் குன்று மெனின், அதன் உயிரே குன்றுமெனக் கொள்ளல் தகும்.

உ-ம்: ஆ + பீ = ஆப்பீ (புறநா. 249)

ஆன்முன் என்றதற்கு உரைகாரர்கள் 'ஆன் என்னும் சொல் முன்னர்' எனப் பொருள் கூறினர். 232 ஆவது சூத்திரப்படி 'ஆவினது முன்' என்றது 'ஆன்முன்' என ஆகுமாகலான் அவர்தங் கூற்றுப் பொருந்தாது. 232 ஆவது சூத்திரத்தில் வருமொழி வல்லெழுத்தாயிருக்க ஆவின் பின்னர் னகரம் வருமெனக் கூறியிருக்கிறதேயன்றி, மெல்லெழுத்தாயிருக்கக் கூறவில்லையே யெனின், உண்மையே. ஆயினும் 233 ஆவது சூத்திரத்து உதாரணமாகிய 'ஆன நெய் தெனித்து' 'ஆன்மேல்' (புறநா.259) என்ற இலக்கியங்களில் மெல்லொற்றின் முன்னரும் னகரம் வரும் என்றதற்கு, 'ஆன்முன்' என்றதே ஞாபகம் ஆகும் எனக் கொள்ளல்தகும். அன்றியும் 'ஆன்' என்பதே நிலைமொழியாயின், அதனைப் புள்ளி மயங்கியலில் ஆசிரியர் படித்திருப்பர். நச்சினார்க்கினியர், 'மிக' என்றதற்குப் பகரத்தையும், 'தோன்றி' என்றதற்கு 'னகரத்திற்குக்கேடு' என்றதையும், 'குறுகலும்' என்றதற்கு 'ஈகாரம்' என்றதையும் எழுவாயாகக் கொண்டு, இரண்டாமடிக்கு "அப்பகரமாகிய தான் மிக்கு நிற்ப நிலைமொழி னகரத்திற்குக் கேடு தோன்றி ஈகாரம் இகரமாகக் குறுகி நிற்றலும் உரித்து" எனப் பொருள் கூறினர். அவ்வாறு கூறுதல் பொருந்தாது என்பது வெளிப்படை.

'மிகத் தோன்றிக் குறுகலும்' என்ற உம்மையான் மிகாதவழி "மாமரக்கிளவியும்" (எழு. 232) என்ற சூத்திரத்தான் னகரம் பெற்று 'ஆன்பீ' என வரும்.

ஆன் என்றதை நிலைமொழியாகக் கொண்டமையான் "தோன்றி என்றதனால் நிலைமொழிப் பேறாகிய னகர ஒற்றின் கேடு கொள்க" எனக் கூறினர் இளம்பூரணர். ஆ என்றதை நிலைமொழியாகக் கொள்ளின் இவ்வாறு கொள்ள வேண்டுவதின்று.

பி. கு.

'திரிந்ததன் திரிபுஅது' என்னும் நயத்தால், ஆ என்பதனையே ஆன் என்றதனால் குறித்தார். இந்நயத்தால் முன்னரும் (எழு. 457) கூறுவர். இவ்வாறன்றி, 'தோன்றி' என்றதனால்

னகரக்கேடு கொண்டனர் உரையாளர்''—வேங்கடராசுலு ரெட்டியார்.†

சில, உகரம்பெறுதல்

**235.** ***குறியதன் இறுதிச் சினைகெட உகரம்**
**அறிய வருதல் செய்யுளுள் உரித்தே. (32)**

ஆ, மொ: இல.

The final limb of short letter shortens and the aqpearance of 'u' takes place in poetry.†

க. சு.

In poetry it is proper that the final 'ā' of the preeceding word.

which has a short vowel is shortened to 'a' and 'u' is inserted (after it)

---

† ஆ என்பது ஆன் எனத் திரிந்தது. இச்சூத்திரத்தில் ஆ என்பது பகர ஈகாரத்துடன் வரும்போது பகர ஒற்று மிக ஆப்பி எனவரும் என்பது சொல்லப்படவேண்டுவது. அதனால் ஆமுன் வரூஉம் ஈகாரபகரம் என்றே ஆசிரியர் சொல்லவேண்டும். முன்னர் ஆ என்பது ஆன் என்வரும் என்று சொல்லி வந்த காரணத்தால் ஆ என்பதற்குப் பதில் ஆன் எனச் சொன்னார். சொன்னாலும் ஆ எனச் சொன்னதாகக் கொள்ளவேண்டும். அது 'திரிந்ததன் திரிபது' என்னும் நயம்.
திரிந்தது ஆ என்பது ஆன் எனவந்தது. அதன்திரிபாவது னகர ஒற்றுப் பெற்றது. ஆசிரியர் ஆன் என்பதன் முன்னயை வடிவமாகிய ஆ என்பதையே (அதாவது ஆன் என்பது ஆவாகிய அதுவே எனக்) கருதி ஆன் எனக் கூறினார். இரெட்டியாரின் இக்கருத்து மிகச் சிறந்ததாகும்—சிவ.

† The final limb of short letter : a word of two letters in which the initial letter is short and the final letter is long : 'puṟā' : 'Pu' is a short letter 'ṟā' is a long letter 'ṟā' shortens into 'ṟa' and the 'u' appears : Puṟavu (v appears to prevent hiatus)

* இரா + குறி = இரவுக்குறி என வந்தமைக்கு இச் சூத்திரம் மேற்கோள். (இறை. கள. 19 உரை)

**பி. இ. நூ.**

**வீர.** 24:

ஆவும் அவ்வாய்த் தாவிய ஐந்தாம்
உயிர்பின் பெறுவன தாமும் உண்டே

**நேமி** 23

உற்ற ஆகாரம் அகரமாய் ஓங்கு உகரம்
பெற்றிடும்

**நன்.** 172

குறியதன் கீழ்ஆக் குறுகலும் அதனோடு
உகரம் ஏற்றலும் இயல்புமாம் தூக்கின்

**இ.வி.** 90. ஷை ஷை

**முத்து. பு.** 91. ஷை ஷை

**தொன்.** 33

தனிக்குறில் ஈற்றுஆத் தகும்பெயர் செய்யுட்கே
ஆ அவ்வாதலும் அதனோடு உவ்வணைதலும் ஆம்.

**இளம்.**

இது [1]அவ்வீற்றிற் சிலவற்றிற்குச் செய்யுள்முடிபு கூறுதல் நுதலிற்று.

இ—ள் : குறியதன் இறுதிச் சினை கெட—குறியதன் இறுதிக்கண் நின்ற ஆகாரத்தினது சினையாகிய அகார மாத்திரை கெட, உகரம் அறிய வருதல் செய்யுளுள் உரித்து—ஆண்டு உகரம் அறிய வருதல் செய்யுளிடத்து உரித்து.

உ—ம் : ''இறவுப் புறத்தன்ன பிணர்படுதடவு முதல்'' என வரும்.

'அறிய' என்றதனான், உகரம் பெறாது சினை கெடுதலும் கொள்க. 'அரவணி' கொடி என வரும்.

'பிணவு நாய் முடுக்கிய' என்றாற்போல வரும் அல்வழி முடிபு கிளந்தவல்ல (எழு. குற்றிய. 77) என்னும் புறனடையது எனக் கொள்க.

---

சு. வே :

1. ஆ வீற்றுட்
2. இந்நிலைமொழித்

**நச்.**

இஃது ஆகார வீற்றுட் சிலவற்றிற்குச் செய்யுள் முடிபு கூறுகின்றது.

இ—ள் : குற்றெழுத்தின் இறுதிக்கண் நின்ற ஆகாரத்தினது இரண்டு மாத்திரையில் ஒருமாத்திரை கெட்டு அஃது அகரமாய் நிற்ப, ஆண்டு உகரம் புலப்பட வருதல் செய்யுளிடத்து உரித்து; எ—று.

உ—ம் : **"இறவுப் புறத்தன்ன பிணர்படு தடவு முதல்**
**சுறவுக் கோட்டன்ன முள்ளிலைத் தாழை"** (நற். 19)
**'புறவுப் புறத்தன்ன புன்காய் உகாஅய்"** (குறு. 264)

எனவரும். உகரம் வகுப்பவே நிலைமொழி அகரம் கெட்டது. அதிகார வல்லெழுத்து விலக்காமையின் நின்று முடிந்தது. [2]இனி நிலை மொழித் தொழில் வரையாது கூறினமையின் இயல்பு கணத்திற்கும் இவ்விதி எய்திற் றாகலின் ஆண்டு வரும் உகரம் புலப்பட வாராமையும் உணர்க. †சுறவுயர் கொடி, அரவுயர் கொடி, முழவுறழ் தோள் என இவை குறியதனிறுதிச் சினை கெட்டு, வருமொழி உயிர் முதன்மொழியாய் வருதலின் வகர உடம்படுமெய் பெற்று உகரம் பெறாது முடிந்தன. இவற்றிற்கு இரண்டாம் உருபு விரிக்க; மூன்றாவதுமாம். *

**வேங்.**

இச்சூத்திரத்தில் 'இறுதிச்சினை' என்றது ஈற்றெழுத்தாகிய நெட்டெழுத்தின் ஒரு கூற்றை. இரண்டு குற்றெழுத்து ஒரு நெட்டெழுத்தாகலின், நெட்டெழுத்திற்குக் குற்றெழுத்துச் சினையாயிற்று.

நெட்டெழுத்துக் குற்றெழுத்தாதலைச் 'சினை கெட' என்றாற்போல, குற்றெழுத்து நெட்டெழுத்தாதலைச் சினை

---

* இறவுப்புறம்—இறாமீனின் முதுகுப்புறம், சுறவுக்கோடு —சுறாமீனின் கொம்பு (முள்)
புறவுப்புறம்—புறாவின் முதுகுபுறம்.

† சுறவுயர் கொடி—சுறாவை உயர்த்தியகொடி 2 ஆம் வேற்றுமை; சுறாவால் உயர்த்தப்பட்ட கொடி 3 ஆம் வேற்றுமை,

நீண்டது என்பர். "சுட்டுச்சினை நீடிய மென்றொடர் மொழி" (எழு 427) என்பது காண்க.

சிவ.

'இரண்டு குற்றெழுத்து ஒரு நெட்டெழுத்து என்பது பொருந்தாது. குற்றெழுத்தின் ஒலிக்கால அளவை நீட்டின் அது நெட்டெழுத்தாகும் என்பதே பொருந்தும். குறிலை நீட்டுதல் என்பது குற்றெழுத்தின் ஓசையை இருந்தவாறே (குறுமை நிலையிலேயே) நீட்டுதல் இல்லை; அகரத்துக்கு வாயை அங்காத்திய நிலையினை மேலும் அங்காத்துவதே ஆகாரத்துக் குரியதாம். 'ங்' என்பதை நீட்டுவதாயின் ங்ங் என ஓசை (மாத்திரை) நீளுமேயன்றி முயற்சி மாறுபாடில்லை. ஆனால் குற்றெழுத்தை நீட்டுவதாயின் சிறிது முயற்சி வேறுபாடுண்டு.

இச்சூத்திரத்தில் சினை என்பது மாத்திரையைக் குறிக்கும். இறா என்பதில் குறியதன் இறுதி ஆ. அதன் மாத்திரை இரண்டு. இரண்டில் ஒரு மாத்திரை கெடுவதைச் 'சினை கெட' என்றார் ஆசிரியர். எனவே சினை என்பதற்குக் கூறு என்பது பொருளாம்.

சுட்டுச்சினை நீடிய மென்தொடர்மொழி, அது ஆங்கு' என்பது. அங்கு என்பது சுட்டு முதல் மென் தொடர்மொழி. அ, ங், கு என மூன்று உறுப்புகளையுடையது. அவற்றுள் அ என்பது சுட்டுச்சினை எனப் பட்டது. அது நீடி ஆ என வந்தது. இவ்விடத்தும் சினை என்பது கூறு (உறுப்பு) என்னும் பொருளதேயாம்.

'இறுதிச்சினை' என்பதற்கு இறுதி எழுத்தாகிய ஆகாரத் தின் ஒரு கூறு (ஒருமாத்திரை) என்றே பொருள் கொள்ளல் சாலும்.

## 3. இகர ஈறு

வேற்றுமையில் இகர இறுதி.

**236.** **இகர இறுதிப் பெயர்நிலை முன்னர்**
**வேற்றுமை யாயின் வல்லெழுத்து மிகுமே.** (33)

ஆ· மொ: இல.

Before the nouns whieh end in 'i'
The hard Consonants appear if joined in ease relation

க, சு.

If the standing word is a noun in
case-relationship
and end ini, the plosivo is inserted

பி. இ. நூ.

சூ· 204-இன் கீழ் உள்ளன கொள்க.

இளம்.

இது இகரவீற்றுப் பெயர்க்கு அல்வழிமுடிபு ‡தொகை மரபினுட்கூறி நின்றமையின் அதன் வேற்றுமை முடிபு கூறுதல் நுதலிற்று.

இ—ள்: இகர இறுதிப் பெயர்நிலை முன்னர்—இகரவீற்றுப் பெயர்ச்சொல் முன்னர் அதிகாரத்தால் [1]க ச த ப முதல் மொழி வந்தவழி, வேற்றுமை யாயின் வல்லெழுத்து மிகும்—வேற்றுமைப் பொருட்புணர்ச்சியாயின் தமக்குப் பொருந்தின [2]வல்லெழுத்து மிக்கு முடியும்.

உ-ம்: கிளிக்கால், சிறகு, தலை, புறம் எனவரும்.

நச்.

இஃது இகரவீற்றுப் பெயர்க்கு அல்வழிமுடிபு தொகைமரபிற் [4]கூறி ஈண்டு வேற்றுமை முடிபு கூறுகின்றது.

இ—ள்: இகரவீற்றுப் பெயர்ச்சொல் முன்னர் அதிகாரத்தாற் க ச த ப முதன்மொழி வந்துழி, வேற்றுமைப் பொருட்புணர்ச்சி யாயின் தமக்குப் பொருந்தின வல்லெழுத்து மிக்கு முடியும்;எ—று

உ—ம் : கிளிக்கால், சிறகு, தலை, புறம் எனவரும். புலி, நரி என்றாற் போல் வனவும் அவை.

---

‡ இவ்வரி ஒருதலையாய் அமைந்ததற்கு மேற்கோள் (தொல்-பொருள். 665 பேரா.)

‡. தொகைமரபு சூ. 16, 17 பார்க்க

சு. வே:

1. க ச த ப மொழி
2. வல்லெழுத்துக்கண், வல்லெழுத்துமிகும்
4. கூறி வேற்றுமைமுடிபு

இனிக் கிளிகுறுமை, கிளிக் குறுமை எனக் குணம் பற்றி வந்த உறழ்ச்சி முடிபு மேல் 'வல்லெழுத்து மிகினும்' (எழு. 247) என்னும் சூத்திரத்து 'ஒல்வழியறிதல்' என்பதனாற் கொள்க,

சுப்.

அல்வழிப் புணர்ச்சியிற் பொதுவாக வரும் மாறுதல்களை வழக்கம் போல் ஏன் இகர விறுதிக்குங் கூறவில்லை ஆசிரியர் எனின், அதனைத் தொகைமரபில் 159 ஆவது சூத்திரத்தில் உணர்த்தினமையின் எனலாம். அவ்வாறாயின் இச்சூத்திரத்தை அல்வழிப்புணர்ச்சியிற் சிறப்பு விதிகளைக் கூறியபின்னர் ஆசிரியர் கூறவேண்டியது முறை எனின், ஆம். அஃதே முறையாகும்; ஆயினும் வேற்றுமை வழிப் பொது விதியின் பின்னர் அல்வழிச் சிறப்பு விதிகளைக் கூறுதலும் முறையாகும் என்றெண்ணி ஆசிரியர் அவ்வாறு கூறினர் போலும்.†

வினைச் சொல்லும் இடைச் சொல்லும்

**237 இனி அணி என்னும் காலையும் இடனும்**
**வினையெஞ்சு கிளவியும் சுட்டும் அன்ன. (34)**

**ஆ. மொ: இல.**

The word 'ini' 'Aṇi' which donote
time and place
**Adverbial participle and**
**demonstrative are similar**

---

† அகர இறுதி முதலியவற்றிற்கு அல்வழியிலும் வேற்றுமையிலும் தனித்தனிப் பொதுச் சூத்திரங்கள் கூறுதலின் இகரவிறுதிக்கும் அவ்வாறு பொதுச் சூத்திரங்கள் கூறுதல் வேண்டும். இகர வீற்று அல்வழிப் பொது முடிபு தொகைமரபில் கூறப்பட்டுவிட்டதால் வேற்றுமைப் பொது முடிபினை முதற்கண் கூறினார். அதன் பின்னர் அல்வழிக்குரிய சிறப்பு விதிகளையும் வேற்றுமைக் குரிய சிறப்பு விதிகளையும் கூறினார் எனக் கொள்ளல் சாலும்—சிவ.

க சு.

Similarly the words ini now and aṇi 'near'
denoting time and place.
The gerund (in i) and demonstrative (root—i).

பி. இ. நூ

முத்து. பு. 99

*இனி அணி இகரச் சுட்டும் ஒற்றிடை மிகும்.*
*சுட்டுக்கு 205—209 ஆம் சூத்திரங்களில் உள்ளவற்றைக் கொள்க.*

இளம்.

இது இவ்வீற்றுள் சில இடைச்சொல்லும் வினைச் சொல்லும் முடியுமாறு கூறுதல் நுதலிற்று.

இ—ள் ; இனி அணி என்னும் காலையும் இடனும்—இனி யென்றும் அணி யென்றும் சொல்லப்படுகின்ற காலத்தையும் இடத்தையும் உணர நின்ற இடைச்சொல்லும், வினையெஞ்சு கிளவியும்—இவ்விகரவீற்று வினையெச்சமாகிய சொல்லும், சுட்டும்—[1]இவ்வீற்றுச் சுட்டாகிய இடைச் சொல்லும், அன்ன—மேற்கூறியவாறே வல்லெழுத்து [2]மிக்கு முடியும் தன்மைய.

உ-ம்; இனிக் கொண்டான், அணிக் கொண்டான், சென்றான், தகதான், போயினான் எனவும்; [3]தேடிக்கொண்டான் சென்றான், தந்தான், போயினான் எனவும்; இக்கொற்றன், சாத்தன், தேவன். பூதன் எனவும் வரும்.

நச்.

இஃது எய்தாதது எய்துவித்தது, இவ்வீற்று இடைச்சொற்கும் வினைச்சொற்கும் முடிபு கூறுதலின்.

இ—ள்: இனியென்றும் அணியென்றும் சொல்லப்படுகின்ற காலத்தையும் இடத்தையும் உணர நின்ற இடைச்சொல்லும்,

---

சு. வே:

1. இவ்வீற்றுட் சுட்டெழுத்தினையுடைய சொல்லும்
2. மிக்குமுடியும்.
3. ஓடிக்கொண்டான்.

இவ்வீற்று வினையெச்சமாகிய சொல்லும், [1]இவ்வீற்றுச் சுட்டாகிய இடைச்சொல்லும், முற்கூறியவாறே வல்லெழுத்து மிக்கு முடியும்; எ—று.

உ-ம்: இனிக் கொண்டான், அணிக் கொண்டான், தேடிக் கொண்டான் சென்றான், தந்தான், போயினான் எனவும்; இக் கொற்றன், சாத்தன், தேவன், பூதன் எனவும் வரும். இவ்விடைச் சொல் மூன்றும் இப்பொழுது கொண்டான், அணிய இடத்தே கொண்டான், இவ்விடத்துக் கொற்றன் என உருபின் பொருள் பட வந்த வேற்றுமையாதலின் வேறோதி முடித்தார்.

சுப்·

இச்சூத்திரம் 'வினையெஞ்சுகிளவியும்' (எழு. 205) என்ற சூத்திரம்போல் அல்வழிப் புணர்ச்சியைக் கூறினும் நச்சினார்க்கினியர் "இவ்விடைச்சொல் மூன்றும்......... வேற்றுமையாதலின் வேறோதி முடித்தார்" எனக்கூறினர். அவர்தங்கூற்று ஆராய்தற் பாலது.‡

இன்றி

**238 இன்றி என்னும் வினையெஞ்சு இறுதி**
**நின்ற இகரம் உகரம் ஆதல்**
**தொன்றியல் மருங்கின் செய்யுளுள் உரித்தே (35)**

**பி. இ நா.**

The 'i' standing at the end of the adverbial participle 'Inri', changes into 'u' in poetry traditionally.

**க. சு.**

The i standing at the end of the gerund i͟n͟ri is changed to u in the old traditioal poetry.

---

சு. வே: 1. இகரவீற்றுச்

‡ நச்சினார்க்கினியர் கூறியது பொருந்துவதன்று இனி அணி என்பன உருபின் பொருள்படவரினும் இடைச் சொற்களே யாதலின் இடைச்சொல் முடிபு கூறும் இச்சூத்திரம் அல்வழிமுடிபு கூறுவதாகவே கொள்ளல் நன்று. இளம்பூரணரும் அல்வழிமுடிபாகவே கொண் டனர்—சிவ.

பி. இ. நூ.

நன் 183

அன்றி யின்றியென் வினையெஞ் சிகரம்
தொடர்பினுள் உகர மாய்வரின் இயல்பே

இ. வி. 91

ஷை ஷை

முத்து. பு. 100

யாப்பினுள் இன்றியும் அன்றியும் உகர
மாய்வரின் மிகாதியல் பாம் என மொழிப

இளம்.

இது இவ்வீற்றுள் வினையெச்சக் குறிப்பினுள் ஒன்றற்குச் செய்யுள் முடிபு கூறுதல் நுதலிற்று.

இ—ள்: இன்றி என்னும் வினையெஞ்சு இறுதி நின்ற இகரம்- இன்றி என்று சொல்லப்படும் வினையெச்சத்து இறுதிக்கண் நின்ற இகரம், உகரம் ஆதல்—உகரமாய்த் திரிந்து முடிதல், தொன்று இயல் மருங்கின் செய்யுளுள் உரித்து—பழக நடந்த கூற்றையுடைய செய்யுட்களிடத்து உரித்து.

உ—ம்: "உப்பின்று புற்கை யுண்கமா கொற்கையோனே" எனவரும்.

நின்ற என்றதனான், முன் (236-ல்) பெற்று நின்ற வல்லெழுத்து வீழ்க்க. 'தொன்றியல் மருங்கு' என்றதனால், ‡அன்றி என்பதும் [2]செய்யுளுள் இம்முடிபிற்றாதல் கொள்க. "நாளன்று போகிப் புள்ளிடை தட்ப" எனவரும்.

---

சு. வே:

1. கூற்றென்றவாறு.

2. செய்யுள் முடிபிற்றாதல், செய்யுளிடத்து உகரமாய்த் திரிந்து முடியுமென்க

* உப்பு இல்லாமல் உண்பானாக, கொள்கையோன்.

‡ நன்னூலார் இன்றி அன்றி (உயிரீற்று 23) என இரண்டையுமே கூறினர்.

**நச்.**

இஃது இவ்வீற்று வினையெச்சத்துள் ஒன்றற்குச் செய்யுள் முடிபு கூறுகின்றது.

இ—ள்: இன்றி என்று சொல்லப்படும் வினையெச்சக் குறிப்பின் இறுதிக்கண் நின்ற இகரம் உகரமாகத் திரிந்து முடிதல் பழக நடந்த கூற்றையுடைய செய்யுளுள் உரித்து; எ-று.

உ—ம்: "உப்பின்று புற்கையுண்கமா கொற்கை யோனே" நின்ற என்றதனால் வினையெச்சத்திற்கு முன் எய்திய வல்லெழுத்து வீழ்க்க.

தொன்றியல் மருங்கின் என்றதனான் அன்றி என்பதூஉம் [3]செய்யுளில் இம்முடிபு எய்துதல் கொள்க. "இடனன்று துறத்தல் வல்லியோரே", "வாளன்று பிடியா வன்கணாடவர்" "நாளன்று போகி" (புறம்124) என வரும். முற்றியலிகரந் திரிந்து குற்றிய லுகரமாய் நின்றது.†

**சுப்.**

வருமொழியைப் பற்றி இச்சூத்திரத்தில் ஆசிரியர் கூறாமை யின், இன்றி என்ற சொல்லினுள்ள இரண்டு இகரம் காதிற்கு இனிமையாயில்லாது, ஒன்று உகரமாய் மாறியதோ? எனத் தோன்றுகின்றது. அவ்வாறாயின்'அன்றி' என்றதிலுள்ள இகரம் உகரமாய்த் திரியவேண்டுவதில்லை. ஆசிரியர் காலத்து 'அன்றி' என்பதும் 'அன்று' ஆகத்திரிந்திருப்பின் 'இன்றியன்றி என்னு மிறுதி' எனச்சூத்திரித்திருப்பர். இன்மை ஸம்ஸர்க்க பாவத்தை யும், அன்மை அந்நியோந்நியா பாவத்தையும் குறித்தலின், இன்றி இன்றாக மாறுதலைப் பார்த்துப் பிற்காலத்துச் செய்யுளில் அன்றி அன்று ஆக வழங்கப்பட, அஃதும் இச்சூத்திரத்தாற் குறிக்கப் பட்டதெனக் கொள்வதற்கு, "தொன்றியல் மருங்கு என்றதனால் அன்றி என்பதும் செய்யுளுள் இம் முடிபிற்றாதல் கொள்க" என்றனர் உரைகாரர்கள் எனத் தோன்றுகிறது. "முற்றியலிகரந் திரிந்து குற்றியலுகரமாய் நின்றது" எனக் கூறினர் நச்சினார்க்கினியர். ஆசிரியர் எனக் கூறாது எகரம்

---

சு. வே:

3. செய்யுளிடத்து முடிபு

† அன்றி—முற்றியலிகரம்; அன்று—குற்றிய லுகரம்

என்றே கூறினமையின், அவர் காலத்து அது முற்றியலுகரமாக ஒலிக்கப் பட்டதென்றே கொள்ளல்தகும்.

**பி. கு.**

'உப்பின்றி+புற்கை என்பன தொடர் இணைப்பில் பு எனும் ஒலியின் காரணமாக இகரம் உகரமாயிற்று' இதனை வேறு படல் (dissimilation) என்பதற்குச் சான்றாகக் கூறுவர். ஒருவகை யில் ஒத்திசைப்பு நோக்கம் எனலாம்—தே. ஆண்டியப்பன் (காப்பியர் நெறி, எழுத்தியல் பக். 76)

சுட்டுப் பெயர்

**239. சுட்டின் இயற்கை முற்கிளந் தற்றே. (36)**

ஆ. மொ: இல.

The nature of the demonstrative 'i'
is the same as that of 'a' already stated.

க. சு.

The nature of the demonstrative 'i'
is the same as that mentioned before.

பி. இ. நூ.

சூ; 206 முதல் 209 வரையுள்ளவற்றின் கீழ் உள்ள நூற்பாக் களைக் கொள்க.

**இளம்.**

இது இவ்வீற்றுச் சுட்டுப் பெயர் இயல்புகணத்தோடு முடியு மாறு கூறுதல் நுதலிற்று.

†இ—ள்: சுட்டின் இயற்கை முன்கிளந்த அற்று—இகரவீற்றுச் சுட்டினது இயல்பு இயல்புகணம் வரும்வழியும் உயிர்க்கணம் வரும் வழியும் முன் அகரவீற்றுச் சுட்டிற்குச் சொல்லப்பட்ட தன்மைத் தாம்.

† திருப்பாதிரிப்புலியூர், ஞானியார் மடத்துச் சுவடியில் கண்ட உரையாகப் பின்வருவதைக் குறித்தார் திரு—அடிகளாசிரியர்.
"இகர ஈற்றுச் சுட்டினது இயல்பு வன்கணம் வரும்வழி முன் அகர வீற்றுச் சுட்டிற்குச் சொல்லப்பட்ட தன்மைத்

என்றது மென்கணம் வரும் வழி அம்மெல்லெழுத்துமிக்கும் (உயிர் ம 3) இடைக்கணம்வரும் வழியும் உயிர்க்கணம் வரும்வழியும் நிலைமொழி வகரம் பெற்றும் (உயிர்; ம. 45) செய்யுட்கண் வகரம் கெட்டுச் சுட்டு நீண்டு (உயிர் ம 6) முடியும் என்றவாறு.

உ—ம்: இஞ்ஞானம், இந்நூல், இம்மணி எனவும்; இவ்யாழ், இவ்வட்டு எனவும்; இவ்வடை, இவ்வாடை, இவ்வெளவியம் எனவும், ஈவயினான எனவும் வரும்.

நச்.

இஃது இகரவீற்றுச் சுட்டுப்பெயர் இயல்புகணத்தோடு முடியுமாறு கூறுதலின் எய்தாதது எய்துவித்தது.

இ—ள்: இகர வீற்றுச் சுட்டின் இயல்பு, முன் அகரவீற்றுச் சுட்டிற்குக் கூறிய தன்மைத்தாம்; எ—று.

என்றது 'சுட்டின் முன்னர் ஞ ந மத்தோன்றின்' (எழு 225 என்பது முதலிய நான்கு சூத்திரத்தானும் கூறிய இலக்கணங்களை. அவை மென்கணத்து மெல்லெழுத்து மிகுதலும், இடைக்கணத்தும் உயிர்க்கணத்தும் வகரம் பெறுதலும், செய்யுட்கண் வகரங்கெட்டுச் சுட்டு நீடலுமாம்.

உ—ம்: இஞ்ஞாண், நூல், மணி எனவும்; இவ்யாழ், இவ்வட்டு எனவும்; இவ்வடை, இவ்வாடை, இவ்விலை இவ்வீயம், இவ்வுரல், இவ்வூர்தி இவ்வெழு, இவ்வேணி, இவ்வையம், இவ்வொடு, இவ்வோக்கம், இவ்வெளவியம் எனவும்; ஈவயினான எனவும் வரும்.

*'ஈகாண் தோன்று மெஞ் சிறுநல் லூரே'

என்றதும்,

**கள்வனோ வல்லன் கணவனென் காற்சிலம்பு**
**கொள்ளும் விலைப்பொருட்டாற் கொன்றாரே யீதொன்று**

(சிலப் ஊர் சூழ்வரி 7)

---

தாய் இக்கொற்றன் சாத்தன் தேவன் பூதன் என்றது (உயிர்ம 34) மென்கணம் வரும் வழி அம்மெல்லெழுத்து மிக்கும், இடைக்கணம் வரும் வழியும் உயிர்க்கணம் வரும் வழியும் நிலைமொழி வகரம் பெற்றும் செய்யுட்கண் வகரம் கெட்டுச் சுட்டு நீண்டும் முடியும்; எ—று.''

* ஈ — இதோ ஈ என்பதே அண்மைச் சுட்டின் முதல் வடிவம்; இத்தகைய முதல் வடிவங்கள் சில செய்யுளில் அருமையாகப் போற்றப் பட்டுள்ளன—பாவாணர்

என்றதும் 'இது' வென்னும் சுட்டுமுதல் உகர வீறாதலின் அது செய்யுளகத்துப் புறனடையான் முடியும் என உணர்க.

**சுப்.**

இச்சூத்திரத்தானே வருமொழிமுதல் வல்லெழுத்தாக வருவழி வல்லெழுத்து மிகுதியும் கொள்ளல் தகும்; ஆதலால் 'இனியணி'...... (எழு 237) என்ற சூத்திரத்துச் சுட்டு என்பது வேண்டாஎனின், உண்மையே; ஆசிரியர் வினையெஞ்சு கிளவியும் (எழு. 225) என்ற சூத்திரத்தில் சுட்டின் இறுதியும் எனத் தனியாகக் கூறினமையான், ஈண்டும் அவ்வாறே கூறினர்.

தூணி, பதக்கு

**240 பதக்குமுன் வரினே தூணிக் கிளவி**
**முதற்கிளந் தெடுத்த வேற்றுமை யியற்றே (37)**

**ஆ. மொ: இல.**

If the word 'Padhakku' comes after the word 'Thūni'
It is in the nature of the case relation already described

**க. சு.**

If the word tūni a measure of 4 marcals' preceds
the word Patakku 'a measure of 2 marcals',
it is the same as the ease—relation mentioned before

**பி. இ: நூ,**

**முத்து.** பு. 101

பதக்கு வரின்மிகும் தூணிக் கிளவி

**இளம்.**

இது, இவ்வீற்று அல்வழிகளில் அளவுப் பெயருள் ஒன்றற்கு மேல் தொகை மரபினுள் எய்திய ஏவென்சாரியை விலக்கி வேறு முடிபு கூறுதல் நுதலிற்று.

இ—ள்; பதக்கு முன்வரின்—பதக்கு என்னும் சொல் தன் முன்வரின், தூணிக்கிளவி—தூணி என்னும் [1]சொல்லளவு, முதல் கிளந்து எடுத்த வேற்றுமை இயற்று—முன்பு விதந்தெடுத்த வேற்றுமை முடிபின் இயல்பிற்றாய் வல்லெழுத்து மிக்கு முடியும்.

உ—ம்: தூணிப்பதக்கு எனவரும்.

வருமொழி முற்கூறியவதனால், இருதூணிப்பதக்கு என அடையடுத்து வந்த வழியும் இவ்விதி கொள்க.

'கிளந்தெடுத்த' என்றதனால், தூணி முன்னர்ப்பிற பொருட் பெயர் வந்த வழியும், ஆண்டு நிலைமொழி அடையடுத்து வந்த வழியும், தன் முன்னர்த் தான் வந்த வழியும் இம்முடிபு கொள்க. இன்னும் அதனானே தன் முன்னர்த் தான் வந்தவழி இக்குச் சாரியைப் பேறும் கொள்க.

உ—ம் : தூணிக் கொள், தூணிச்சாமைஎனவும்; இரு தூணிக் கொள் எனவும்; தூணித்தூணி எனவும்; தூணிக்குத்தூணி எனவும் வரும்.

**நச்.**

இஃது இவ்வீற்று அளவுப் பெயருள் ஒன்றற்குத் தொகை மரபினுள் அல்வழியில் எய்திய ஏ யென் சாரியை விலக்கி வேறு முடிபு கூறுகின்றது.

இ—ள் : தூணியாகிய அளவுப் பெயரின் மூன்னர்ப் பதக்கு என்னும் அளவுப்பெயர் வருமாயின், முன்பு விதந்தெடுத்த வேற்றுமை முடிபின் இயல்பிற்றாய் வல்லெழுத்து மிக்கு முடியும்; எ—று.

உ—ம் : தூணிப்பதக்கு எனவரும்; இஃது உம்மைத் தொகை.

வருமொழி முற்கூறியவதனான் அடையொடு வந்துழியும் இவ்விதி கொள்க; இருதூணிப் பதக்கு, முத்தூணிப் பதக்கு என ஒட்டுக. கிளந்தெடுத்த வென்றதனால் தூணிக்கொள், சாமை, தோரை, பாளிதம் எனப் பொருட்பெயர் முன் வந்துழியும், இருதூணிக்கொள் என அதுதான் அடை யடுத்துழியும், தூணித்தூணி, தொடித்தொடி, காணிக்காணி, பூணிப்பூணி எனத் தன் முன்னர்த் தான் வந்துழியும் இவ்விதி கொள்க.

இன்னும் இதனானே தன் முன்னர்த்தான் வந்துழியும் அது தான் அடையடுத்து வந்துழியும் இக்குச் சாரியை பெறுதலும் கொள்க' தூணிக்குத் தூணி, இருதூணிக்குத் தூணி எனவரும். இவற்றுட் பண்புத் தொகையும் உள.

---

சு. வே;

1. சொல்முதல்

பி. கு.

"வருமொழி முற்கூறியவதனால்" என்று தொடங்கி உரையாளர் இருவரும் கூறிய கருத்தை "நிறுத்த சொல்லும்" (எழு. 111) என்னும் சூத்திரத்தானும், "கிளந்தெடுத்த" என்றதனால், "இன்னும் அதனானே" என்று தொடங்கிய உரையாளர் கூறிய கருத்துகளைக் "கிளந்தவல்ல" (எழு 482) என்னும் சூத்திரத்தானும் கொள்ளலாம் என்பர் சுப்பிரமணிய சாஸ்திரியார்.

கருங்கொள்ளும் செங்கொள்ளும் **தூணிப் பதக்கென்**

றொருங்கொப்பக் கொண்டானாம் ஊரன்" (நாலடி. 387)

எனவரும் நாலடியார்ப்பாடலில் தூணிப்பதக்கு ஆட்சி காண்க.

நாழி முன்னர் உரி

**241. உரிவரு காலை நாழிக் கிளவி**
**இறுதி இகரம் மெய்யொடும் கெடுமே**
**[1]டகாரம் ஒற்றும் ஆவயி னான.** (38)

ஆ. மொ: இல.

The word 'nāḻi' drops it final 'i' with its consonant and the consonant 'd' appears there if there if 'uri' joins

க. சு.

If the word nāḻi 'a corn—measure' is followed by the word uri 'a corn—measure' the final i and the consonant are dropped and ṭ takes their place.

பி. இ. நூ:

வீர. 22

"ஆவிமுன் ஆவியோடும் கூறா ழகாரம்
அழிந்து டகாரம் குறுகிடுமே"

---

சு. வே ;

1. டகரம் ஒற்றும் (நச்). 'னகரம் ஒற்றும்' (232) என முன்னர் வந்தமையின் இங்கும் டகரம் என்றே அமையுலாம்.

நேமி. 19.

உரிவரின் நாழியின் ஈற்றுயிர்மெய் ஐந்தாம் *

நன். 174

"உரிவரின் நாழியின் ஈற்றுயிர்மெய்கெட
மருவும் டகாரம்"

இல. வி. 79

ஷ்ஷி ஷ்ஷி

முத்து பு. 102

உரிவரின் நாழியின் ஈற்றுயிர் மெய்
மருவும் டகாரமாம் வல்லினப் புள்ளிகெட

இளம்.

இதுவுமது.

இ—ள் ; உரிவரு காலை நாழிக்கிளவி இறுதி இகரம் மெய்யொடுங் கெடும்—உரியென்னும் சொல் வருமொழியாய் வருங்காலத்து நாழி என்னும் சொல் தன் ஈற்றில் நின்ற இகரம் தான் ஊர்ந்து நின்ற மெய்யோடும் கெடும்; அ வயின் டகாரம் ஒற்றும்—அவ்விடத்து டகரம் ஒற்றாய் வரும்.

உ—ம் : நாடுரி எனவரும்.

வருமொழி முற்கூறிய வதனான், நிலைமொழி அடையடுத்து 'இருநாடுரி' என்ற வழியும் இம்முடிபு கொள்க. 'இகரம்' என்னாது 'இறுதி இகரம்' என்றதனால் ஈண்டை நிலைமொழி யும் வருமொழியும் நிலைமொழிகளாய் நின்று பிறபொருட் பெயரோடு வல்லெழுத்துமிக்கு முடிதலும் கொள்க. [1]நாழிக் காயம், உரிக்காயம் என வரும்.

நச்.

இதுவும் அது.

---

* நாழியின் ஈற்றுயிர்மெய் ஐந்தாம் என்பதற்கு நாழி என்பதன் ஈற்றில் உள்ள 'ழி' என்பது நீங்க, ஆங்கு ஐந்தாம் மெய்யாகிய டகரமெய் வந்து பொருந்தும் என்பது கருத்து.

சு, வே :

1. நாழிக்காய், உரிக்காய்

இ—ள் : நாழி முன்னர் உரி வருமொழியாய் வருங் காலத்து, அந்நாழி என்னும் சொல், தன் இறுதியில் நின்ற இகரம் தானேறிய மெய்யொடுங் கெடும்; அவ்விடத்து டகரம் ஒற்றாய் வரும்; எ—று.

உ—ம் : நாடுரி, முந்நாடுரி எனவரும் இதனான் [2]யகாரமும் விலக்குண்டது.

வருமொழி • முற்கூறிய வதனான் இருநாடுரி, முந்நாடுரி எனவும் ஒட்டுக.

†இறுதி யிகரம் என முன்னும் ஓர் இகரம் உள்ளதுபோலக் கூறியவதனான் ஈண்டை நிலைமொழியாய் நின்று பெயரோடு வல்லெழுத்து மிக்கு முடிதலும் கொள்க. நாழிக்காயம், உரிக்காயம், சுக்கு, தோரை, பாளிதம் என வரும்,

**வேங்.**

உயிரீற்றின்முன் உயிர் முதன் மொழி வருமிடத்து உடம்படு மெய் வரும்; அல்லது நிலைமொழியின் ஈற்று உயிர்மெய் கெடும். இவையே புணர்ச்சியின் இயல்பு. ஈண்டு, நாழி என்னும் சொல் லில் ழகர மெய் கெடுதலும், டகரமெய் புதிதாகத் தோன்றுதலும் அமையுமாறில்லை. இச்சொல்லிலுள்ள ழகரமெய் டகரமெய் யாகத் திரிந்தது என்றலே அமைதி. அவ்வாறாகுமிடத்து நாடி + உரி = நாடுரி என நிலைமொழியின் ஈற்று உயிர் கெட்டு வரும். கட்டி + அகல் = கட்டகல் என்று நச்சினார்க் கினியர் உதாரணம் காட்டியிருத்தல் (246 சூ உரை) ஈண்டைக்கு நோக்கத்தகும், ழகரம் டகரமாகத் திரிதலை ஏழு—ஏடு, கூழு—கூடு, பாழு—பாடு, நீழல்—நீட, ஊழியம்—ஊடியம் எனத் தமிழில் ழகரமாயிருப்

---

2. ஏகாரம் விலக்குண்டது

† இக்கருத்தை "வேற்றுமையல்வழி" (எழு. 159) என்ற சூத்திரத்தாற் கொள்ளல் தகும் என்பர் சுப்பிரமணிய சாஸ்திரியார். நாழி + உரி = நாழுரி→ நாடுரி (மரூஉ அல்லது போலி) என்று கொள்ளவும் இடம் உண்டு— பாவாணர் நாழி + உரி = நாழியுரி என வருமாதலின் உடம்படுமெய்யான யகாரம் விலக்குண்டது என்க. ஏகாரம் விலக்குண்டது என்னும் பாடத்துக்கு "உயிரும் புள்ளியும் (எழு. 164)என்ற சூத்திரத்தில், 'ஒத்த தென்ப ஏயென் சாரியை' என்பதனால் பெறும் ஏகாரம் விலக்குண்டது என்க,

பவை தெலுங்கில் டகரமாய்த் திரிந்து வழங்குதலானும் அறிய லாகும்.

பி. கு

"துயிலெழுநிலை, தொல்காப்பியத்தில் துயிலெடை என்று வருகின்றது. எழுப்புதல் எடுப்புதல் ஆவது இலக்கிய வழக்கு. †கோழி பிறமொழியில் கோடி ஆகும். எனவே இகரம் அழிந்து ழகரம் டகரம் ஆயிற்று"—தே. ஆண்டியப்பன் (காப்பியர் நெறி எழுத்தியல், பக், 76)

பனி

**242.** **பனியென வரூஉம் கால வேற்றுமைக்கு**
**அத்தும் இன்னும் சாரியை யாகும்** **(39)**

ஆ. மோ: இல.

The word 'Pani' when denoting season takes 'aththu' and 'in' as increments (i<u>n</u> case relations)

க. சு.

The word 'Pani' denoting (dewy) season takes the empty-morphs attu and in in case relationship.

பி இ. நூ

முத்து. பு: 103

இன்னும் அத்தும் பனியொடு சிவணும்

இளம்.

இது, இவ்வீற்று வேற்றுமையுள் ஒன்றற்கு வல்லெழுத்தி னொடு சாரியை பெறும் என எய்தியதன் மேற்சிறப்பு விதி கூறு தல் நுதலிற்று.

இ-ள்: பனி என வரும் கால வேற்றுமைக்கு அத்தும் இன் னும் சாரியை ஆகும்—பனியென்று சொல்ல வருகின்ற பனிக் காலத்தை யுணர நின்ற வேற்றுமை முடிவுடைய பெயர்க்கு வரும் சாரியை அத்தும் இன்னும் ஆகும்.

உ-ம்; பனியத்துக் கொண்டான், பனியிற்கொண்டான், சென்றான், தந்தான், போயினான் என வரும்.

---

† தெலுங்கில் கோடி என்பது கோழியைக் குறிக்கும்.

வேற்றுமை என்றதனான், இன்பெற்றவழி இயைபு வல்லெழுத்தை வீழ்க்க.

**நச்.**

இஃது இகர வீற்று வேற்றுமையுள் ஒன்றற்கு வல்லெழுத்தினொடு சாரியை பெறும் என எய்தியதன் மேற்சிறப்பு விதி கூறுகின்றது.

இ-ள்: பனியென்று சொல்ல வருகின்ற நோயன்றிக் காலத்தை யுணர நின்ற வேற்றுமை முடிவுடைய பெயர்க்கு, அத்தும் இன்னும் சாரியையாக வரும்; எ-று.

உ-ம்: பனியத்துக் கொண்டான், பனியிற் கொண்டான், சென்றான், தந்தான், போயினான் என வரும்.

வேற்றுமையென்றதனான் இன்பெற்றுழி இயைபு வல்லெழுத்து வீழ்க்க.

**சுப்.**

கால வேற்றுமைக்கு என்றதற்குக் "காலத்தை யுணர நின்ற வேற்றுமை முடிவுடைய பெயர்க்கு" எனப் பொருள் கூறினர் உரைகாரர்கள். 'கால வேறுபாட்டினை யுணர்த்தும் சொற்கு' எனப் பொருள் கூறலாம் எனத் தோன்றுகின்றது. "வேற்றுமை மருங்கிற் போற்றல் வேண்டும்" என்ற விடத்து (சொல் 115) வேறுபாடு என்ற பொருளில் வேற்றுமை என்றதை ஆசிரியர் வழங்கியிருத்தல் காண்க. கீழ் அல்வழியே வந்தமையின் இங்கு வேற்றுமையில்தான் எனக் கொள்ள வேண்டாமா, கொள்ளாவிடின் 'பனி தோன்றிற்று' போன்றன வந்து விடாவா எனின், அல்வழிக்கண் வருவனவற்றை "வேற்றுமையல்வழி (159) என்ற சூத்திரத்தில் ஆசிரியர் கூறினமையின் அவ்வாறு வாராதென்க.

"வேற்றுமை என்றதனான் இயைபு வல்லெழுத்து வீழ்க்க" என்றனர் உரைகாரர்கள். அதனை "ய ர ழ..." (எழு. 48) என்ற சூத்திரத்தாற் கொள்ளலாம் என முன்னரே கூறப்பட்டது.

"நாண்முற்றோன்றும் தொழில்நிலைக் கிளவிக்கு" (எழு 248) என்ற விடத்துப் போன்று இச்சூத்திரத்திலும் வருஞ் சூத்திரத்திலும் 'தொழில்நிலைக் கிளவிக்கு' என ஆசிரியர் கூறாராயினும் உரைகாரர்கள் அதனைக் கொண்டே உதாரணம் கூறியுள்ளனர்.

**பி. கு.**

"இதனை மாறனலங்காரவுரையாசிரியர் உய்த்துக் கொண்டுணர்தல் என்னும் உத்தி என்பர். உய்த்துக்கொண்டுணர் தல் என்பது ஒரு சூத்திரத்தான் ஒன்றற் கிலக்கணம் கூறியவழி அதற்குப் பொருந்தாமையுளதாகத் தோன்றின், அதனையும் அதற்குப் பொருந்தின வழியாகக் கூட்டுதல்; அஃதாவது 'பனியென... சாரியையாகும்' என்பதன்கண் உணர்க. என்னை? பனியத்துக் கொண்டான், பனியின்கட் சென்றான், பனியிற் சென்றான் எனவரும். அவற்றுள் இன்பெற்றுழி முன்னர்க்கூறிய நாழிக்காயம், உரிக்காயம் என்பதுபோல வல்லெழுத்து மிகாது வீழ்க்க என்பதற்குப் பொருந்த உய்த்துணர்தல் என்பர்" (மாற. 25 உரை) — திரு அடிகளாசிரியர்.

வளி

**243.** **வளியென வரூஉம் பூதக் கிளவியும்**
**அவ்வியல் நிலையல் செவ்விது என்ப** **(40)**

**ஆ. மோ. இல.**

The word 'Vaḷi' when denoting element is perfect in having the same '(aththu and in') say the learned.

**க. சு.**

They say that it is most appropriate that the word vaḷi when denoting an element is of the same nature.

**பி. இ. நூ.**

**முத்து. பு. 104**

வளிப்பெயர்க் கிளவியும் அவற்றோ ரற்றே

**இளம்.**

இதுவுமது.

இ—ள்: வளி என வரூஉம் பூதக்கிளவியும்—வளி என்று சொல்ல [1]வருகின்ற *இடக்கரல்லாத ஐம்பெரும் பூதங்களில்

சு. வே:

1. வருகின்ற பூதங்களில்

* இடக்கரல்லாத...சொல் = மலவாய்க்காற்று

[2]ஒன்றை உணரநின்ற சொல்லும். அ இயல் நிலையல் செவ்விது என்ப— [3]மேற்கூறிய அத்தும் இன்னும் பெறும் அவ்வியல்பின் கண் நிற்றல் செவ்விது என்று சொல்லுவர் புலவர்.

உ—ம் : வளியத்துக் கொண்டான், வளியிற் கொண்டான், சென்றான் தந்தான், போயினான் எனவரும்.

செவ்விது என்றதனால், இன்பெற்றுழி இயைபு வல்லெழுத்து வீழ்க்க,

நச்.

இதுவுமது.

இ—ள் ; வளி என்று சொல்ல வருகின்ற இடக்கர் அல்லாத ஐம்பெரும் பூதங்களில் ஒன்றை யுணரநின்ற சொல்லும், முன்னைக்கூறிய அத்தும் இன்னும் பெறும் அவ்வியல்பின்கண் நிற்றல் செவ்விதென்று கூறுவர் புலவர் ; எ—று.

உ—ம் ; வளியத்துக் கொண்டான், வளியிற்கொண்டான், சென்றான், தந்தான், போயினான் எனவரும்.

செவ்விது என்றதனான் இன்பெற்றுழி இயல்பு வல்லெழுத்து வீழ்க்க.

உதிமரம்

**244. உதிமரக் கிளவி மெல்லெழுத்து மிகுமே** **(41)**

**ஆ. மொ: இல.**

The ‘uthi’ denoting a tree has the soft consonant.

**க. சு.**

The word uti denoting a tree has the nasal inserted

**பி. இ. நூ.**

**முத்து. பு. 105**

உதியெனும் மரம்மெலி மிகுமென மொழிப.

**இளம்.**

இது. இவ்வீற்று மரப்பெயர் ஒன்றற்கு வல்லெழுத்து விலக்கி மெல்லெழுத்து விதித்தல் நுதலிற்று.

---

2. ஒன்றனை

3. மேற்சொன்ன, முன்னைக் கூறிய

இ—ள் : உதிமரக்கிளவி மெல்லெழுத்து மிகும் — உதி என்னும் மரத்தினையுணர நின்ற சொல் வல்லெழுத்து மிகாது மெல்லெழுத்து மிக்கு முடியும்.

உ—ம் ; உதிங்கோடு, செதிள், தோல், பூ எனவரும்.

**நச்.**

இது மரப்பெயரில் ஒன்றற்கு வல்லெழுத்து விலக்கி மெல்லெழுத்து விதிக்கின்றது.

இ—ள் ; உதித்தல் என்னும் தொழிலன்றி உதி என்னும் மரத்தினை யுணரநின்ற சொல், வல்லெழுத்து மிகாது மெல்லெழுத்து மிக்கு முடியும்; எ—று.

உ—ம் : உதிங்கோடு, செதிள், தே ·ல், பூ எனவரும்.

* அம்முச்சாரியை விதிக்கின்ற புளிமரத்தினை இதன்பின் வைத்தமையான் உதியங்கோடு என இதற்கும் அம்முப்பெறுதல் கொள்க. இஃது இக்காலத்து ஒதி என மருவிற்று.

**வேங்.**

"அம்முச் சாரியை விதிக்கின்ற புளி மரத்தினை இதன்பின் வைத்தமையான், உதியங்கோடு என இதற்கும் அம்முப் பெறுதல் கொள்க" என்றார் நச்சினார்க்கினியர். அம்முப் பெறுதல் ஆசிரியர்க்குக் கருத்தாயின், அவர் அதனைக் கூறுவர்.

ஆரும் வெதிரும் சாரும் பீரும்
மெல் லெழுத்து மிகுதல் மெய்பெறத் தோன்றும்
(எழுத். 363)

என்றவர், அதனையடுத்து,

"பீரென் கிளவி அம்மொடும் சிவணும்" (எழு. 365)

என்று கூறியிருப்பது காண்க.

உதிமரக் கிளவிக்கு அம்முச் சாரியையேற்றி, அதனொடு மாட்டெறிந்த ஒடுமரக்கிளவிக்கும் அவ்வம்முச் சாரியை வரும் என்ற நச்சினார்க்கினியர், அதன் மாட்டேறு பெற்ற சே மரக் கிளவிக்கும் அம்முச் சாரியை வரும் எனல் வேண்டுமே!

† உதிமரக்கிளவி அம்முச்சாரியை பெறுதல் பிற்கால வழக்கு. உரையாசிரியர் இது கூறாது விடுத்தது நோக்கத்தகும்.

---

* முன்உள்ள இருசூத்திரங்களும் சாரியைப் பேறு கூறின மையின் அவற்றையடுத்துப் 'புளிமரக்கிளவிக்கம்மே சாரியை' என்பது கூறப்படவேண்டும்.

† சாஸ்திரியாரும் இவ்வாறே கூறினர்.

புளிமரம்

**245 புளிமரக் கிளவிக்கு அம்மே சாரியை (42)**

**ஆ. மொ: இல.**

The word 'Puḷi denoting the tree has
the increment 'am'

**க. சு.**

The word Puḷi 'tamarind tree' has
the empty – morph – am.

**பி. இ. நூ.**

**முத்து. பு.** 106.

அம்முச் சாரியை அடையும் மரப்புளி.

**இளம்.**

இது இவ்வீற்று மரப்பெயர் ஒன்றற்கு மேல் எய்திய வல்லெழுத்து விலக்கிச் சாரியை விதித்தல் நுதலிற்று.

இ—ள் : புளிமரக் கிளவிக்கு சாரியை அம்—புளி என்னும் மரத்தினை யுணர நின்ற சொல்லிற்கு வரும் சாரியை அம்முச் சாரியை.

உ—ம் : புளியங்கோடு, செதிள், தோல், பூ எனவரும்.

*சாரியைப் பேற்றிடை எழுத்துப்பேறு கூறியவதனால் அம்முப்பெற்ற வழி இயைபு வல்லெழுத்து வீழ்க்க.

**நச்.**

இது வல்லெழுத்து விலக்கி அம்முவகுத்தலின் எய்தியது விலக்கிப் பிறிது விதி வகுத்தது.

இ—ள் : சுவையின்றிப் புளி என்னும் மரத்தினை உணர நின்ற சொல்லிற்கு அம்மென்னும் சாரியை வரும்; எ—று.

உ—ம் : புளியங்கோடு, செதிள், தோல், பூ எனவரும்.

சாரியைப் பேற்றிடை முன்னர்ச் சூத்திரத்து எழுத்துப் பேறு கூறியவதனால் அம்முப் பெற்றுழி இயைபு வல்லெழுத்து வீழ்க்க.

---

* சாரியைப்பேறு கூறிவரும் சூத்திரங்கள் 242, 24 , 245 ஆம் எண் உள்ளன; எழுத்துப்பேறு கூறிய சூத்திரம். 244 ஆம் எண் உள்ளது.

பி. கு.

',யரழ...'' (எழு. 48) என்ற சூத்திரத்தான் அம்மின் பின்னர் வல்லெழுத்து மிகுதி வாராதென்க'' என்பர் சுப்பிரமணிய சாஸ்திரியார்.

''சாரியைப் பேற்றிடை....இயைபு வல்லெழுத்து வீழ்க்க'' என்றனர் உரையாளர். இச்சிறப்பு விதியால் பொதுவிதி செல்லாதொழிந்தது என்று கூறாது, முன்னர்ச் சூத்திரத்துக் கூறும் எழுத்துப் பேற்றால், மேற்பொது விதியான் (எழு. 236) வந்த வல்லெழுத்துக் கெடும் என்றது தகுவதன்று''—வேங்கட ராசுலு ரெட்டியார். பொது விதியை முன்னர்ப் பயன்படுத்திப் பின்னர்ச் சிறப்பு விதியைப் பயன்படுத்த வேண்டும் என்பதும் சிறப்பு விதியைப் பயன்படுத்திய பின்னரே பொதுவிதி யினை விலக்க வேண்டும் என்பதும் உரையாளர் கொள்கையாத லின் ''சாரியைப் பேற்றிடை......இயைபு வல்லெழுத்து வீழ்க்க'' என்றனர் இருவரும்—**சிவ.**

புளிச்சுவை.

**246! ஏனைப் புளிப்பெயர் மெல்லெழுத்து மிகுமே. (43)**

**ஆ. மொ: இல.**

The other '**Puḷi**' (which denotes taste)
has soft consonant.

**க. சு.**

The Puḷi (denoting) other (things)
has the nasal inserted

**பி. இ நூ.**

**நன்.** 175

சுவைப்புளி முன்இன மென்மையும் தோன்றும்

| | | |
|---|---|---|
| **இ. வி.** 92 | ஷை | ஷை |
| **முத்து. பு.** 107 | ஷை | ஷை |

**இளம்.**

இது, அம்மரப் பெயரல்லாத புளிப்பெயர்க்கு வேறு முடிபு கூறுதல் நுதலிற்று.

இ—ள்: ஏனை புளிப்பெயர் மெல்லெழுத்து மிகும்—அம்மரப் பெயரன்றி ஒழிந்த சுவைப்புளி உணர நின்ற பெயர் வல்லெழுத்து மிகாது மெல்லெழுத்து மிக்கு முடியும்.

உ-ம்: ‡புளிங்கூழ், சோறு, தயிர், பாளிதம் எனவரும்.

நச்.

இது வல்லெழுத்து விலக்கி மெல்லெழுத்து விதித்தலின் எய்தியது விலக்கிப் பிறிது விதி வகுத்தது.

இ—ள்: அம்மரப் பெயரன்றிச் சுவையை யுணரநின்ற புளிப் பெயர்முன் வல்லெழுத்து மிகாது மெல்லெழுத்து மிக்கு முடியும்; எ—று.

உ-ம்: புளிங்கூழ், சோறு, தயிர், பாளிதம் எனவரும். †பாளிதம்—பாற்சோறு. இவற்றிற்கு இரண்டாம் உருபு விரிக்க.

**247 வல்லெழுத்து மிகினும் மானம் இல்லை**
**ஒல்வழி யறிதல் வழக்கத் தான (44)**

ஆ. மொ: இ.

There is no mistake if hard consonant appeares
(after the word 'Puḷi' which denotes taste)
**It** can be found in accordance with the usage.

**க. சு.**

There is no mistake if a stop is inserted;
it is in accordance with usage.

**பி. இ. நூ.**

**நன்.** 175

''சுவைப்புளி முன்இன மென்மையும் தோன்றும்''
மென்மையும் என்னும் உம்மையால் வன்மை வருதல் கொள்ளப்பட்டது.

**இ. வி.** 92 ஷை ஷை

---

‡ ''திணைமக ளட்ட பாவல் புளிங்கூழ்'' (புறநா. 394)

† பாளிதம் என்பதற்குப் பாற்சோறு என்னாது சோறு என்று பொருள் கூறும் பிங்கலம். ''கண்ட சர்க்கரையும் **சோறும்** கர்ப்பூரமும், பட்டு வருக்கமும் பாளிதம் என்ப'' (பிங். 10-1947)

முத்து. பு. 107 ஷ ஷ

இளம்.

இது, மேலதற்கு வல்லெழுத்து மிகும் என எய்தியதன்மேற் சிறப்பு விதி கூறுதல் நுதலிற்று.

இ—ள்: வல்லெழுத்து மிகினும் மானம் இல்லை—ஏனைப் புளிப்பெயர்முன் எய்திய மெல்லெழுத்தே யன்றி வல்லெழுத்து மிக்கு முடியினும் குற்றம் இல்லை; ஒல்வழி அறிதல் வழக்கத்தான—பொருந்தும் இடம் அறிக [1]வழக்கிடத்து.

உ-ம்: புளிக்கூழ், சோறு, தயிர், பாளிதம் எனவரும்.

‡'ஒல்வழியறிதல்' என்றதனால் புளிச்சோறு என்றதுபோல மற்றையவை வழக்குப் பயிற்சி[2]யில என்பதும் கொள்க. 'வழக்கத் தான' என்றதனான், இவ்வீற்றுள் எடுத்தோத்தும் இலேசும் இல்லாதனவற்றின் முடிபு வேற்றுமையெல்லாம் கொள்க. கூதாளங்கோடு எனவும், கணவிரங்கோடு எனவும், துளியத்துக் கொண்டான் எனவும், பருத்திக்குச் சென்றான் எனவும், கப்பி தந்தை கப்பிந்தை எனவும், கட்டி அகல் கட்டகல் எனவும், குளிகுறுமை குளிக்குறுமை எனவும், இன்னினிக் கொண்டான் அண்ணணிக் கொண்டான் எனவும், [3]புளியங்காய் எனவும் வரும்.

இன்னும் அதனானே, இவ்வீற்றுள் உருபிற்குச் சென்ற

---

சு. வே:

1. வழக்கத்திடத்து
2. யிலவெனக் கொள்க; இலவென்பது சிலவெனக்
3. புளிங்காய். புளியங்காய்-அச்சு புத்தகப்பாடமாகும்; இங்கு இது பொருந்துவதன்று; 'புளிமரக்கிளவிக்கு அம்மே சாரியை' என்னும் விதியைப் பெறுதலின் —திரு. அடிகளாசிரியர்.
புளிங்காய் = புளிப்புச்சுவையுடையகாய்.

‡ இதுமுதல் வருவனவற்றை அதிகாரப் புறனடையாற் கொள்ளலாம் என்பர் சாஸ்திரியாரும், இரெட்டியாரும். உதாரணங்களின் விளக்கத்தை நச். உரையில் காண்க.

சாரியை [4]பொருட்கண் சென்றவழி இயைபு வல்லெழுத்து வீழ்தலும் கொள்க; கிளியின்கால் எனவரும்.

நச்.

இது எய்தியதன்மேற் சிறப்பு விதி கூறுகின்றது.

இ—ள் : சுவைப்புளி மெல்லெழுற்தேயன்றி வல்லெழுத்து மிக்கு முடியினும் குற்றம் இல்லை; பொருந்தும் இடம் அறிக வழக்கிடத்து; எ—று.

உ-ம்: புளிக்கூழ், சாறு, தயிர், பாளிதம் எனவரும்.

'ஒல்வழி' என்றதனால் புளிச்சாறுபோல ஏனைய வழக்குப் பயிற்சி இல என்று கொள்க.

'வழக்கத்தான' என்றதனான் இவ்வீற்றுக்கண் எடுத்தோத்தும் இலேசுமின்றி வருவன எல்லாவற்றிற்கும் ஏற்குமாறு செய்கையறிந்து முடித்துக் கொள்க. அவை இன்னிக் கொண்டான், அண்ணணிக் கொண்டான் என்பன அடையடுத்தவின் இனியணி (231) என்ற வழி முடியாவாய் வல்லெழுத்துப் பெற்றன. கப்பி தந்தை, சென்னிதந்தை என்பன அஃறிணை விரவுப் பெயர் (155) என்பதனுள் இயல் பெய்தாது ஈண்டு வருமொழித் தகர அகரங்கெட்டுக் கப்பிந்தை சென்னிந்தை என முடிந்தன.

கூதாளி கணவிரி என்பனவற்றிற்கு அம்முக்கொடுத்து இகரங் கெடுத்துக் கூதாளங்கோடு கணவிரங்கோடு செதிள், தோல், பூ என முடிக்க. கூதளநறும்பூ எனக் குறைந்தும் வரும். இனி இவை மகர வீறாயும் வழங்கும். அது, "வெண் கூதாளத்துத் தண்பூங் கோதையர்" (பட்டின. 85) என அத்துப்பெற்று மகரங் கெட்டுங் "கணவிரமாலை யிடூஉக் கழிந்தனன்" (அகம் 31) என மகரங் கெட்டும் கணவிரங்கோடு எனமெல்லெழுத்துப் பெற்றும் நிற்கும்.

கட்டி என நிறுத்தி இடி, அகல் எனத்தந்து டகரத்தில் இகரங் கெடுத்துக் கட்டிடி, கட்டகல் என முடிக்க. பருத்திக்குச் சென்றான் என ஈற்று வல்லெழுத்தும் இக்கும் கொடுத்து முடிக்க. துளியத்துக் கொண்டான். துளியிற் கொண்டான் என அத்தும் இன்னும் கொடுத்து முடிக்க. 'புளிங்காய் வேட்கைத்தன்று' எனவும், புளிம்பழம் எனவும் அம்முப் பெறாது மெல்லெழுத்துப்

---

4. பொருட்கு

பெற்று முடிதலும் கொள்க. இன்னும் இதனானே. உருபிற்குச் சென்ற சாரியை பொருட்கண் சென்றுழி இயைபு வல்லெழுத்துக் கெடுத்துக் 'கிளியின்கால்' 'புளியின்கோடு' 'உதியின்கோடு' என முடிக்க.

நாட்பெயர்

**248 நாள்முன் தோன்றும் தொழில்நிலைக் கிளவிக்கு
ஆன்இடை வருதல் ஐயம் இன்றே (45)**

ஆ. மொ: இல.

Before the names of the days
(weich end in 'i')
When the verbs appear, the appearance of 'ān'
between them is not doubt.

க. சு.

There is no doubt that 'āṉ' occurs
beetween a verb and any noun
denoting a day ending in—i

பி. இ. நூ.

முத்து. பு. 108

தொழிற்பெயர் வரின்நாள் ஆனொடு சிவணும்

இளம்.

இது [1]இவ்வீற்றுட் சிலவற்றிற்குச் சாரியை விதித்தல் நுதலிற்று.

இ—ள்: நாள் முன் தோன்றும் தொழில் நிலைக் கிளவிக்கு— இகரவீற்றுள் நாட்பெயர்களின் முன்னர்த் தோன்றும் வினைச் சொல்லிற்கு, ஆன் இடை வருதல் ஐயம் இன்று—ஆன்சாரியை இடை வந்து முடிதல் ஐயம் இல்லை.

உ—ம்: பரணியாற் கொண்டான், சென்றான், தந்தான் போயினான் எனவரும்.

[2]'ஐயமின்று என்றதனான் இயைபு வல்லெழுத்து வீழ்க்க.

சு. வே;

1. இவ்வீற்றிற்
2. ஐயமில்லை

நச்.

இஃது ஈற்று வல்லெழுத்து விலக்கி ஆன்சாரியை விதிக்கின்றது.

இ—ள் : இகர ஈற்று நாட்பெயர்களின் முன்னர்த் தோன்றும் தொழிற்சொற்கு, ஆன்சாரியை இடை வந்து முடிதல் ஐயமின்று; எ—று.

உ-ம், பரணியாற் கொண்டான், சோதியாற் கொண்டான் சென்றான், தந்தான், போயினான் எனவரும்.

'ஐயமின்று' என்றதனால் இயைபு வல்லெழுத்து வீழ்க்க. இதற்குக் கண் என் உருபு விரிக்க

பி. கு.

'ஐயமின்று' என்றதனால் இயைபு வல்லெழுத்து வீழ்க்க'' என்றனர் உரையாசிரியர்கள். அது வேண்டாக்கூற்று; இச்சிறப்பு விதியால், பொது விதி ஈண்டுச் செல்லா தொழியும்— வேங்கடராசுலுரெட்டியார்.

பரணியாற் கொண்டான்—பரணிநாளின்கண் கொண்டான் எனப் பொருள் விரிக்க என்பார், இதற்குக் கண் என் உருபு விரிக்க என்றார் நச்சினார்க்கினியர்.

திங்கட் பெயர்.

**249. திங்கள் முன்வரின் இக்கே சாரியை** (46)

**ஆ. மொ: இல.**

Before the names of the month,
if the verbs appear, the increment is 'ikku' only.

க. சு:

If the name of the months precede
a verb, ikku is the empty—morph.

இளம்,

இதுவும் அது.

இ—ள்; திங்கள் முன் வரின் இக்கு சாரியை-திங்களை உணரநின்ற இகர வீற்றுப் பெயர் முன்னர்த் தொழில் நிலைக் கிளவி வரின் வரும் சாரியை இக்குச் சாரியை,

உ-ம்: ஆடிக்குக் கொண்டான், சென்றான், தந்தான், போயினான் எனவரும்.

நச்.

இஃது இயைபு வல்லெழுத்தினோடு இக்கு வகுத்தலின் எய்தியதன்மேற் சிறப்பு விதிவகுத்தது.

இ-ள்: திங்களை உணரநின்ற இகர ஈற்றுப் பெயர்களின் முன்னர்த் தொழில் நிலைக்கிளவி வரின் வருஞ் சாரியை இக்குச் சாரியையாம்; எ-று.

உ-ம்: ஆடிக்குக் கொண்டான், சென்றான், தந்தான் போயினான் என இயைபு வல்லெழுத்துக் கொடுத்து முடிக்க ‡இதற்குங் கண் என் உருபு விரிக்க

பி கு.

ஆடிக்குக் கொண்டான் என்பதில் உள்ள இக்குச் சாரியை பற்றி இருவேறு கருத்து மொழியியலாரிடையே நிலவுகிறது. ஆடிக்கு என்பதை ஆடி + இக்கு எனப் பிரித்தது பிழை; ஆடி + கு என்றே பிரிக்க வேண்டும்; கு என்பது நான்கன் உருபு எனினும் ஏழன் உருபின் பொருளில் வந்துள்ளது என்பது ஒருசார் கொள்கை.

ஆடி + இக்கு என்றே பிரிக்க வேண்டும்; இக்கு என்பது சாரியையே என்பது மற்றொருசார் கொள்கை. இவ்விருசார் கொள்கை பற்றியும் டாக்டர் செ. வை. சண்முகம் கூறுவன வற்றைக் காணலாம்.

செ. வை. சண்முகம்

'சாரியைகள் வேற்றுமை உருபோடு வடிவம் ஒத்து இருக்கக் கூடாது என்பதற்காகவே ‡கற்பித வடிவத்தைத் தொல்காப்பியர் அமைத்துக் கொண்டுள்ளார். ஆடிக்குக் கொண்டான் என்பதை ஆடி + க் + கு + கொண்டான் எனப் பிரித்துக் கு' என்பது

---

‡ பரணியாற் கொண்டான் (248) என்பதற்குக் கண் உருபு விரித்தது போல இதற்கும் விரிக்க. ஆடிக்கண் கொண்டான் என்க.

‡ ஒருபயன் நோக்கித் தானே படைததுக் கொள்ளும் வடிவம்

நான்கனுருபு ஏழன் பொருளில் வந்தது எனக்கூறி விடலாமா யினும் அக் கு என்பதை உருபாகக் கொள்ளத் தொல்காப்பியர்க்கு உடன்பாடில்லை என்று கூறிப் பின்வரும் விரிந்த விளக்கத்தைத் தருவர் செ. வை. சண்முகம்.

‡பதப்புணர்ச்சியில் மட்டும் வரும் சாரியைகளில் 'இக்கு' என்பதும் ஒன்று. இந்தச் சாரியைக்கு 'ஆடிக்குக் கொண்டான்' 'சித்திரைக்குக் கொண்டான்' என்றே உரையாசிரியர்களும் இலக்கண ஆய்வாளர்களும் உதாரணம் கொடுக்கிறார்கள். இது இகர (248) ஐகார (286) ஈற்றுத் திங்கள் (மாதம்) பெயர்க்குப் பின்னால் வருவதாகவே தொல்காப்பியரால் கூறப்படடுள்ளது. நச்சினார்க்கினியர் 126 ஆம் சூத்திர உரையில், "இஃது இடப் பொருட்டு" என்றும், 248 ஆம் சூத்திரவுரையில் அதே உதாரணங்களைக் கொடுத்து "இதற்குக் கண் உருபு விரிக்க" என்றும் எழுதுகிறார். உண்மையில் இந்தவுரை விளக்கங்களுக்கு இடையே வேறுபாடுண்டு. பின்னால் உள்ள விளக்கப்படி (248) அந்தத் தொடர்கள் ஏழாம் வேற்றுமைத் தொகையாகவே அமையும். எனவே உருபை விரித்து அந்த பொருளைப் பெற வேண்டும் என்பதே அதற்குப் பொருள். அப்படியானால் அந்த தொடர்களே ஏழாம் வேற்றுமை உருபுப் பொருளைத் தரவில்லை என்று ஆகிவிடுகிறது. எனினும், இன்று பலரும் அந்த தொடர் ஏழாம் வேற்றுமைப் பொருளையே தருவதாக எடுத்துக் கொண்டு விளக்குகிறார்கள்‡. இஸ்ரேல் தொல்காப்பியத்தில் உள்ள,

> **காலத்தின் அறியும் வேற்றுமைக் கிளவியும்**
> ...............................................................
> ............................ **நான்கன் உருபில்**
> **தொன்மொழி மரபின தோன்ற லாறே**
> (தொல். சொல் வேற். ம. 27, 6, 8, 9.)

என்ற சூத்திரத்தை எடுத்துக்காட்டி, 'இக்கு' என்பதை—கு என்ற வடிவமாகவே கருதலாம் என்று விளக்கியுள்ளார். அப்படியானால் தொல்காப்பியத்தில் முரண் இருப்பதாக ஆகிறது. மேலும்,

‡ எழுத்திலக்கணக் கோட்பாடு, பக் 265-267 (1980)

‡ இஸ்ரேல் 1973, கந்தசாமி 1973. எழுத்திலக்கணக் கோட்பாடு—குறிப்பு. பக். 264

சொல்லதிகாரத்தில் கூறிய கருத்தை மறந்து, எழுத்ததிகாரத்தில் இக்கு (உண்மையில் எழுத்ததிகாரத்தில் சாரியை என்றுகூறியதை மறந்து சொல்லதிகாரத்தில் பொருள் உடையது என்று முரணாகக் கூறியது)என்ற புதிய வடிவம் கொண்டு, அதில் இகரம் கெடுவதற்கு இரண்டு புணர்ச்சி விதியும் (126, 127) அனாவசிய மாகச் சொல்லியுள்ளார் என்றும் ஆகிவிடும்.........

"நான்காம் வேற்றுமை, ஏழாம் வேற்றுமைப் பொருளில் வரும் என்பதைத் தொல்காப்பியர் உணர்ந்திருந்தும், 'ஆடிக்குக் கொண்டான்' போன்ற உதாரணங்களில் அப்படி நான்காம் வேற்றுமை வடிவமான 'கு' ஏழாம் வேற்றுமைப் பொருளில் வருவதாகக் கொள்ளக்கூடாது என்பதை வலியுறுத்துவதற்காகத் தானே 'இக்கு' என்ற கற்பித வடிவத்தைப் படைத்து, மிகைபடக் கூறல் என்ற குற்றம் நேர்ந்தாலும் பரவாயில்லை என்று, இகரம் கெடுவதற்கு இரண்டு சூத்திரம் வகுத்திருக்கிறார் என்றால், அந்த கருத்தில் (பொருள் இல்லை—பொருள் இருப்பதாகக் கொள்ளக் கூடாது என்பதில்) அவர் எவ்வளவு தூரம் பிடிவாதமாக இருக் கிறார் என்பது புலப்பட்டு விடுகிறது. எனவே, 'அவர் ஏன் அவ்வளவு பிடிவாதமாக இருக்கிறார்?' என்பதை நாம் புரிந்து கொள்ள முயலவேண்டும்.

"இக்குச் சாரியை திங்கள் பெயரோடு மட்டுமே வருகிறது என்பது மேலே குறிப்பிடப்பட்டது. ஆகவே ஏழாம் வேற்றுமை யின் ஒரு பொருளான இடப் பொருளை உணர்த்துவதற்கு வேறு உருபு தேவையில்லை; என்று அவர் கருதியிருக்க வேண்டும். மேலும் திங்கள் பெயர் உருபு இல்லாமலும் இடப்பொருளை யுணர்த்தும் இலக்கியப் பயிற்சியையும் நினைத்திருக்கலாம்.

**தைஇத் திங்கள்.........தரினும்** (குறுந். 196:4)

(தைமாதத்தில் தந்தாலும்) போன்ற பயிற்சிகளையும் மனதில் கொண்டே தொல்காப்பியர் திங்கள் பெயரோடு வரும்—கு (நான்காம் வேற்றுமையுருபு) ஏழாம் வேற்றுமை உருபுப் பொருளில் வருவதாகக் கொள்ளக்கூடாது என்று கருதியிருக்க வேண்டும். பெயர்ச்சொல்லே அந்த பொருளைப் பெற்றிருந்தால் உருபு வேண்டியதில்லை. வேறு உருபு இருந்தால் அது சாரியை யாகக் கருதப்பட வேண்டும் என்று தொல்காப்பியர் பொதுவான எண்ணம் உடையவராக இருந்திருக்க வேண்டும். மேலும் ஆடிக்குக் கொண்டான் என்ற தொடர் 'பொருட்டு'ப் பொருளில் வந்தாலும் (ஆடிமாதத்துக்காகக் கொண்டான்) அதையும் (ஆடி

மாதத்தில் பயன்படுத்துவதற்காகக் கொண்டான்) ஏழாம் வேற்றுமைப் புற நிலையில் உடைய வாக்கியத்திலிருந்து உண்டானதாகவும் விளக்கலாம். எனவேதான் தொல்காப்பியர்—'கு' என்பது பொருளற்றது—சாரியை என்று கருதி, இக்கு என்ற கற்பித வடிவம் படைத்திருக்க வேண்டும்''

## 4. ஈகார ஈறு

அல்வழியில் ஈகாரம்

**250. ஈகார இறுதி ஆகார இயற்றே.** (47)

**ஆ. மொ: இல.**

The ending of 'ī' is like that of 'ā'

**க. சு.**

The ending ī is like the ending ā

**பி. இ. நூ.**

சூ. 204—இன் கீழ் உள்ளன கொள்க.

**இளம்.**

இது ஈகார ஈற்றுப்பெயர் அல்வழியின்கண் முடியுமாறு கூறுதல் நுதலிற்று.

இ—ள் : ஈகார இறுதி ஆகார இயற்று—ஈகார ஈற்றுப் பெயர் அல்வழிக்கண் ஆகாரவீற்று அல்வழியின் முடிபிற்றாய் வல்லெழுத்து [1]வரும்வழி வல்லெழுத்து மிக்கு முடியும்.

உ-ம்: தீக்கடிது சிறிது, தீது பெரிது எனவரும்.

**நச்.**

இஃது ஈகார ஈற்றுப் பெயர் அல்வழிக்கண் ஆகார ஈற்று அல்வழியின் இயல்பிற்றாய் வல்லெழுத்து வந்துழி அவ் வல்லெழுத்து மிக்கு முடியும், எ-று.

உ-ம்: ஈக்கடிது; தீக்கடிது சிறிது, தீது பெரிது எனவரும்.

**சுப்.**

ஆகார வீற்றையுடைய சொல் அல்வழிப் புணர்ச்சியில் அகர வீற்றையுடைய சொல்லை ஒத்திருத்தலால் 'அகர வியற்றே' என்னாது 'ஆகார வியற்றே' என ஏன் ஆசிரியர் கூறினார் எனின்,

சு. வே:

1. வந்த வழி

இயைபு பட்ட சூத்திரங்களைப் படிப்போனுக்கு நினைவு மூட்டு வதற்காகப் பல விடங்களிலும் அம்முறையையே ஆள்வர்.‡

நீ, மீ, முதலிய பெயர்.

**251. நீயென் பெயரும் இடக்கர்ப் பெயரும்**
**மீயென மரீஇய இடம்வரை கிளவியும்**
**ஆவயின் வல்லெழுத் தியற்கை யாகும்.** (48)

ஆ. மொ: இல.

The nouns 'nī' and 'ldakkar' (pl) and
The word 'mī' which limits to
space have not the appearance of
hard consonant.

க.சு.

The (pro) noun nī, the indecent
noun, and the word mī denoting
place-relationship—they have no
additional plosive inserted.

பி. இ. நூ.

நன். 178

"பவ்வீ நீமீ முன்னர் அல்வழி இயல்பாம்"

இ. வி. 93

பல்வீ அல்வழி யியல்பும் மீமுன் இயல்பும்.

முத்து. பு. 109, 111

"ஈகார பகரமும் நீயும் இயல்பே"
"மீ இயல் பாதலும்"

இளம்.

இது இவ்வீற்றுட் சிலவற்றிற்கு [1]எய்தியது விலக்கிப் பிறிது முடிபு கூறுதல் நுதலிற்று.

---

‡ அவ்வாறு ஆளும்போது குறிலுக்குக் குறிலோடும் நெடிலுக்கு நெடிலோடும் மாட்டெறிதல் ஆசிரியர் இயல்பு என்பது அறிக. —**சிவ**

சு. வே: 1. முடிபுவேற்றுமை கூறுதல்

இ—ள்: நீ என் பெயரும் இடக்கர்ப் பெயரும் மீஎன மரீஇய இடம்வரை கிளவியும்—நீ என்னும் பெயரும் [2]இடக்கர்ப் பெயராகிய (பீ என்னும்) ஈகாரவீற்றுப் பெயரும் மீ என்று [3]சொல்ல வருஉம் மருவாய் வழங்கின ஓர் இடத்தினை வரைந் துணர்த்தும் சொல்லும், ஆ வயின் வல் எழுத்து இயற்கை ஆகும்—மேல் இவ்வீற்றுட் கூறிய வல்லெழுத்துப் பெறாது இயல் பாய் முடியும்.

உ-ம்: நீகுறியை, சிறியை, தீயை, பெரியை எனவும்; பீகுறிது, சிறிது, தீது, பெரிது எனவும்; *மீகண், செவி, தலை, புறம் எனவும் வரும்.

‡'நீகுறியை' என்பது மேல் "அஃறிணை விரவுப் பெயர் இயல்புமா ருளவே" (தொகைமரபு. 13) என்றவழி அடங்காதோ வெனின், மேல் வேற்றுமைக்கண் நின்கை எனத்திரிந்து முடிதலின் அடங்காதாயிற் றென்க. மீகண் என்பது அல்வழிமுடிபன் றெனினும் இயல்பாதல் நோக்கி உடன் கூறப்பட்டது.

நச்.

இஃது எய்தியது விலக்கலும் எய்தாதது எய்துவித்தலும் கூறுகின்றது.

இ—ள்: நீஎன்னும் பெயரும் இடக்கர்ப் பெயராகிய ஈகார ஈற்றுப் பெயரும் மீ என்று சொல்ல மருவாய் வழங்கின ஓரிடத்தை வரைந்து உணர்த்தும் சொல்லும், புணருமிடத்து முற்கூறிய வல்லெழுத்துப் பெறாது இயல்பாய் முடியும்; எ—று.

உ-ம்: நீகுறியை, சிறியை, தீயை, பெரியை எனவும்; பீகுறிது, சிறிது, தீது, பெரிது எனவும் இவையிற்றுக்குப் பொது வான் எய்திய வல்லெழுத்து விலக்குண்டன. மீகண், செவி, தலை புறம் இஃது இலக்கணத்தோடு பொருந்திய மருவாதலின் எய்தாத தெய்துவித்தது.

---

சு. வே:

2. இடக்கர்ப் பெயராகிய ஈகார
3. சொல்ல வருஉம்

* இதனை மயிலை நாதர் முதலியோர் இலக்கணப் போலி என்பர். (நன்னூல். 266)

‡ சங்கர நமச்சிவாயரும் இக்கருத்தினரே (நன். 178)

நீஎன்பது அஃறிணை விரவுப் பெயருள் அடங்காதோவெனின் மேல் நின்கை எனத்திரிந்து முடிதலின் அடங்காதாயிற்று. $மீகண் என்பது மேலிடத்துக்கண் என வேற்றுமை யெனினும் இயல்பு பற்றி உடன் கூறினார்.

சுப்.

நீ குறியை என்றது 'அஃறிணை விரவுப் பெயர் இயல்புமா ருளவே'' (எழு. 156) என்ற சூத்திரத்தாற் பெறப்படும்; ஈண்டு 'நீ யென்பெயரும்' என்றதைக் கூறல் வேண்டாம் எனின், அச் சூத்திரத்து 'இயல்பும்' என்ற உம்மையான் இயல்பின்மையும் குறிக்கப்படுதலான், இச்சூத்திரத்திலுள்ள 'நீயென்பெயரும்' இயல்பினையே நியமிக்கின்றதாகலின், ஈண்டு அது வேண்டும் என்க.

''நீகுறியை என்பது மேல் அஃறிணை விரவுப் பெயர் இயல்புமா ருளவே'' என்றவழி அடங்காதோ வெனின், மேல் வேற்றுமைக்கண் நின்கை எனத் திரிந்து முடிதலின் அடங்கா தா யிற்றென்க'' என்றனர் உரைகாரர்கள். ''மீகண் என்பது அல்வழி முடிபன்றெனினும் இயல்பாதல் நோக்கி உடன்கூறப்பட்டது'' என்றனர் உரைகாரர்கள். கண் என்பதற்கு 'மேலிடத்துக்கண்' எனப் பொருள் கூறினர் நச்சினார்க்கினியர். 'கண்' என்றதும் இடப்பொருளுணர்த்தும் பெயராயும் வழங்குதலின் மீகண் என்ப தற்கு மேலிடம் எனப் பொருள் கொண்டு அதற்குச் 'சாரைப் பாம்பு' என்றதற்குப் போன்று மீ ஆகிய கண்'' எனத் தொகை விரி கூறின் வரும் குற்றம் யாது? அல்வழியில் வேற்றுமையினை யும் கூறினார் என்றல் எவ்வாறு பொருந்தும்?.

வே. ங்.

'மீ என மரீஇய...கிளவி' என்றதனான், இஃது இயல்பாய சொல் லன்று என்பது அறியப்படும். ‡மேற்கு எனும் சொல் மீ என மருவிற்று என்றார் நச்சினார்க்கினியர். மேல் என்பது மீ என்று மருவியிருக்கலாம். ஈற்று மெய் கெடுதலும் எகர ஏகாரங்கள் இகர ஈகாரங்களாகத் திரிதலும் இயல்பாதலின்.

---

$ உரை முடிவில் பி. கு. பார்க்க.

‡ குற்றியலுகரப் புணரியல் சூ. 27

இடம் வரைந்துணர்த்துதல் என்பது இவ்வாறு எனல் தெளிவாக விளங்க வில்லை.

மீ என்பதற்கு அல்வழி முடிபே ஈண்டுக் கொள்ளுதல் வேண்டும், அல்வழி விதிக் குரியவற்றோடு வேற்றுமைக் குரிய வற்றை விரவிக் கூறாார் இவ்வாசிரியர் ஆகலின்

பி. சூ.

"மீகண் என்பது கண்ணினது மேலிடம் எனப் பொருள் தந்து நிற்குமேனும் ஆறனுருபின் பயனிலையாம் 'மீ' என்னும் வரு மொழி நிலைமொழியாய் நின்று வல்லெழுத்துமிகாது புணர்ந்தமையின் இலக்கணப் போலியாய் அல்வழியாயிற்று—" சங்கரநமச்சிவாயர்.

விரவுப் பெயர் வருமொழி வல்லெழுத்துடன் புணரும்போது இயல்பாகப் புணரும். சாத்திகுறியள் எனவரும். இதனை 'அஃறிணை விரவுப் பெயர் இயல்புமாருளவே' (எழு. 156) என்னும் சூத்திரத்தால் விதித்தார். நீ என்பதும் உயர்திணை அஃறிணைகட்குப் பொதுப் பெயராதலின் 'நீ குறியை' என்பது அச்சூத்திர விதிப்படி இயல் பிற் புணர்ந்தது என்று கூறி விடலாம் அவ்வாறு கூறி விடாமல் இச்சூத்திரத்தால் இயல்பிற் புணரும் எனக்கூற வேண்டியது ஏன் என்னும் வினாவிற்கு விடையே, "மேல் வேற்றுமைக்சுண் நின்கை எனத்திரிந்து முடிதலின் அடங்காதாயிற்று' என்பது. சாத்தி முதலிய விரவுப் பெயர்கள் வேற்றுமைப் புணர்ச்சியிலும் திரியாமல் அப்படியே இருப்பன; நீ என்னும் பெயரோ அல்வழியில் அப்படியே இருக்க வேற்றுமை யில் 'நின்' எனத்திரியும்.

இடம் வரைந்துணர்த்துதல் என்பது இவ்வாறு எனத் தெளிவாக விளங்கவில்லை" என்பர் இரெட்டியார். மீகண் என்பது கண்மீ என்பதன் மாற்றம். கண்ணினது மேலிடம் என்பது அதன் பொருள். கண்ணின் மேற்பகுதி என்பது கருத்தாகலின் இடம் வரைந்துணர்த்தியது என்னலாம். மேலிமைப் பகுதியில் உள்ள கண் பகுதி மீகண் என்க.

மீ

**252 இடம்வரை கிளவிமுன் வல்லெழுத்து மிகூஉம்**
**உடனிலை மொழியும் உளவென மொழிப. (49)**

ஆ மோ: இல.

Before the word which limits the
space ('Mī'), there may come the word which makes
the appearance of the hard consonant

க. சு.

It is said that there are words before
which a plosive is insrted after the
Word denoting place—relation ship

பி. இ நூ.

நன் 178

*வலிமெலி மிகலுமாம் மீக்கே*

இ. வி. 93

*மீ முன்......வலிமெலி மிகலுமாம் வேற்றுமை*

முத்து. பு. 111

*மீ......மெலிவலி மிகுதலும்*
*ஆகும் என்மனார் அறிந்திசி னோரே*

இளம்.

இது மேற் கூறியவற்றுள் மீ என்பதற்கு வேறொரு முடிபு கூறுதல் நுதலிற்று.

இ-ள்: இடம் வரை கிளவிமுன்—இடத்தினை வரைந் துணர்த்தும் மீ என்னும் சொல் முன், வல்லெழுத்து மிகூஉம் உடன் நிலை மொழியும் உளஎன மொழிப—இயல்பாய் முடிதலே யன்றி வல்லெழுத்து மிக்கு முடியும் தம்மில் இயைந்து நிற்றலை யுடைய மொழிகளும் உளவென்று சொல்லுவர்.

உ-ம், மீக்கோள், [1]மீப்பல் எனவரும்.

உடனிலை என்றதனால் மீங்குழி, மீந்தோல் என மெல்லெழுத்துப் பெற்று முடிவனவும் கொள்க.

நச்.

இது வல்லெழுத்து மிகுக என்றலின் எய்தியது இகந்து படாமற் காத்தது.

---

சு. வே:

1. மீப்பாய், மீப்பார்.

இ-ள்: இடத்தை வரைந்துணர்த்தும் மீ என்னும் சொல்லின் முடிபும் இயல்பாய் முடிதலேயன்றி வல்லெழுத்து மிக்கும்முடியும், தம்மில் ஓசையியைந்து நிற்றலையுடைய மொழிகளும் உள வென்று கூறுவர் ஆசிரியர், எ—று.

உ—ம்: மீக்கோள் [1]மீப்பல் எனவரும்.

உடனிலை என்றதனான் மீங்குழி மீந்தோல் என மெல் லெழுத்துப் பெற்று முடிவனவும் கொள்க.

சு. வே: 1 மீப்பா

வேற்றுமையில் ஈகார ஈற்றுப் பெயர்

**253 வேற்றுமைக் கண்ணும் அதனோ ரற்றே (50)**

**ஆ, மொ: இல.**

Even the ease relation, it follows the same rule

**க· சு.**

The same is the ease even in ease-relationship.

**பி இ· நூ·**

சூ. 204 இன் கீழ் உள்ளன கொள்க.

**இளம்.**

இது அவ்வீற்றுப் பெயர் வேற்றுமைக்கண் முடியுமாறு கூறுதல் நுதலிற்று.

இ—ள்: வேற்றுமைக்கண்ணும் அதன் ஓர் அற்று-[1]ஈகாரவீற்றுப் பெயர் வேற்றுமைப் பொருட்புணர்ச்சிக் கண்ணும் ஆகார வீற்று அல்வழியோடு ஒரு தன்மைத்தாய் வல்லெழுத்து வந்தவழி [2]வல் லெழுத்துப் பெற்று முடியும்.

உ-ம்: ஈக்கால், சிறகு, தலை, புறம் எனவரும்.

**நச்·**

இஃது ஈகார வீற்றுப் பெயர் வேற்றுமைக்கண் முடியுமாறு கூறுகின்றது.

---

சு. வே:

1. ஈகாரப் பெயர்
2. வல்லெழுத்து முற்றுப் பெற்று

இ-ள்: ஈகார வீற்றுப் பெயர் வேற்றுமைப் பொருட்புணர்ச்சிக் கண்ணும் ஆகார வீற்று அல்வழிபோல வல்லெழுத்து வந்துழி [3]அவ்வல்லெழுந்து மிக்கு முடியும்; எ-று.

உ—ம்: ஈக்கால்; சிறகு, தலை, புறம்; தீக்கடுமை, சிறுமை, தீமை் பெருமை எனவரும்.

சுப்·

இச்சூத்திரத்தில் 'அதனோரற்றே' என்பதற்கு 'ஆகார வீற்றுப் பெயரோடு ஒருதன்மைத்து' எனக் கூறாது 'ஆகார வீற்றல் வழியோடு ஒரு தன்மைத்து' என உரைகாரர்கள் பொருள் கூறுவதற்குக் காரணந் தெரியவில்லை.‡ அல்வழியிலும் வேற்றுமைப் புணர்ச்சியிலும் செய்கை ஒன்றாயிருப்பினும் வேற்றுமைப் புணர்ச்சியில் ஈகார விறுதி ஆகார விறுதியை ஒத்தது எனக் கூறுவதே நேரிதாகும் எனத் தோன்றுகிறது.

நீ

**254 நீயென் ஒருபெயர் உருபியல் நிலையும்
ஆவயின் வல்லெழுத்து இயற்கை யாகும் (51)**

**ஆ. மொ: இல.**

'Ni the word of one letter stands in
having the nature of the case relation
The hard consonant does not appear.

**க. சா.**

The single lettered word nī bchaves as before case suffixes
In that ease no plosive is inserted
உருபியற் சூத்திரம்

நீயென் ஒரு பெயர் நெடுமுதல் குறுகும்
ஆவயின் னகரம் ஒற்றா கும்மே

---

சு. வே : 3. வல்லெழுத்து

‡ அகர வீற்று வேற்றுமைப் புணர்ச்சியை, "வேற்றுமைக கண்ணும் அதனோரற்றே" (எழு 217) என அல்வழி யோடு மாட்டெறிந்தமையின் இங்கும் அல்வழியோடு மாட்டெறிந்து உரை கூறினர் உரைகாரர்கள்; இதுவே காரணம்—**சிவ.**

**பி. இ. நூ.**

**முத்து. பு 53**

நீ எனும் ஒரு பெயர் நின்எனத் திரியும்

**இளம்.**

இது அவ்வீற்று வேற்றுமை முடிபினுள் ஒன்றற்கு வேறு முடிபு கூறுதல் நுதலிற்று.

இ—ள்: நீஎன் ஒருபெயர் உருபு இயல் நிலையும்—நீ என நின்ற ஒரு பெயர் உருபு புணர்ச்சிக்கண் நெடுமுதல் குறுகி னகர வொற்றுப் பெற்று முடிந்த இயல்பின்கண்ணே நின்று முடியும்; ஆ வயின் வல்லெழுத்து இயற்கை ஆகும்—அவ்வாறு முடிந்த விடத்து இயைபு வல்லெழுத்து மிகாது.

உ-ம்: நின்கை, செவி, தலை, புறம் என வரும்.

**நச்.**

இஃது எய்தியது விலக்கிப் பிறிது விதி வகுத்தது, வல்லெழுத்து விலக்கி னகரவொற்றே பெறுக என்றலின்.

இ—ள்: நீஎன்னும் ஓரெழுத் தொருமொழி உருபு புணர்ச்சிக்கண் நெடுமுதல் குறுகி னகரம் ஒற்றி நின்றாற்போல ஈண்டுப் பொருட்புணர்ச்சிக்கண்ணும் முடியும்; அவ்வாறு முடியும் வழி இயைபு வல்லெழுத்து மிகா; எ—று.

உ-ம்: நின்கை, செவி, தலை, புறம் எனவரும்.

இஃது ஈகாரவீறு இகரவீறாய் இகரவீறு னகரவீறாய் நின்றுழியும் 'நீயென் ஒருபெயர்' என்றலிற் றிரிந்ததன் திரிபதுவே யாயிற்று.

இயற்கையாகும் எனவே நிலைமொழித் தொழில் அதிகார வல்லெழுத்தை விலக்காதாயிற்று.

**சுப்.**

நீ+அது என்றிருக்க 'நீயென்ஒரு பெயர்......' (எழு 180) என்ற சூத்திரத்தானே 'நின்+அது' எனஆகுமாகலான் 'நினதுகை என்ற விடத்து 'அது' என்ற உருபு கெடினும் 'நின்' என்பது நிற்கும் ஆகலான், 'நின்கை' என்ற உருவம் நிலைக்கும் ஆகலானும், 'நின்' பின்னர் வல்லெழுத்துமிகாது என்பது 'யரழ... (எழு 48) என்ற சூத்திரத்தாற் பெறப்படும் ஆகலானும் இச் சூத்திரம் வேண்டாமெனின், அற்றன்று. நினது கை என்ற

இரண்டு சொற்களும் தொகையாம்போது 'நீகை' என்றிருக்க, ஈண்டு வேற்றுமையுருபின்மையான் 'நீக்கை' என ஆகுமோ வென்ற ஐயத்தைப் போக்கி 'நின்கை' என ஆகும் என்பதை உணர்த்தற்கு இச்சூத்திரம் வேண்டும் என்க.

**வேங்.**

உருபியல் நிலையும் என்ற மாட்டேறு, மேல் உருபியலில்,

> **"நீயென் ஒருபெயர் நெடுமுதல் குறுகும்**
> **ஆவயின் னகரம் ஒற்றா கும்மே"**

என்ற சூத்திரத்தைக் குறித்தது. நான்கன் உருபாகிய கு வரும்போது 'நினக்கு' என வல்லெழுத்து மிகுதலின், மாட்டேற்றான் ஈண்டும் வல்லெழுத்து மிகுதல் வருமாகலின், அதனை நீக்க, 'வல்லெழுத்தியற்கையாகும்' என்றார். இவ்வாறே, முன்னர் உருபியலொடு மாட்டெறியும் இடங்களில் வல்லெழுத்து மிகாமைக்கு விதி கூறுவார்.

> **சுட்டுமுத லிறுதி உருபியல் நிலையும்**
> **ஒற்றிடை மிகாஅ வல்லெழுத் தியற்கை** (உயிர்ம. 61)
> **உருபியல் நிலையும் மொழியுமா ருளவே**
> **ஆவயின் வல்லெழுத் தியற்கை யாகும்** (உயிர்ம. 92)

என்பன காண்க.

**பி. கு.**

நச்சினார்க்கினியர் இச்சூத்திரத்தில் சிறப்பு உரையில் கூறிய 'திரிந்ததன் திரிபது' என்பனதக் கணேசய்யர் விளக்குவது வருமாறு:

"திரிந்ததன் திரிபு அதுவென்றலாவது:—நிலைமொழி வருமொழிகளில் யாங்காயினும் ஒரெழுத்திற்குத் திரிபு கூறி அம்மொழிகளுள் ஒன்றற்கு, மீளவும் திரிபு கூறுங்கால் அத்திரிபெழுத்து (திரியப்பட்ட எழுத்து) மொழியை யெடுத்துக்கூறாமல் திரியப்பட்ட எழுத்து மொழி அத்திரிந்த எழுத்து மொழியுமாம் என்னும் நயம்பற்றி அத்திரிந்த எழுத்து மொழியையே யெடுத்துப் புணர்ச்சிகூறல். உதாரணம் உருபியலில் 'நீயென் ஒருபெயர் நெடுமுதல் குறுகும், ஆவயின் னகரம் ஒற்றாகும்மே (7) என்னும் சூத்திரத்தால் 'நீ' 'நின்' எனத்திரியும் எனக்கூறி, மீளவும் அந்த 'நீ' என்பதற்குப் பொருட்புணர்ச்சி விதி கூறுங்

கால், முற்கூறிய 'நின்' என்னும் திரிபு மொழியை எடுத்துக் கூறாமல் 'நின்' எனத் திரிந்ததும் 'நீயே' என்பது பற்றி அதனையே யெடுத்து 'நீயென் ஒருபெயர் உருபியல் நிலையும்' எனக் கூறல் காண்க''

நச்சினார்க்கினியர் இச் சூத்திரத்தில் 'திரிந்ததன் திரிபது' என்பதைக் கூறினும் இளம்பூரணர் கூறினாரில்லை. அவர் அந்நயம் இதில் இருப்பதாகக் கொள்ளாமையே காரணம். திரிந்ததன் திரிபு அது, பிறிது, அதுவும் பிறிதும என்னும் நயங்கள் நிலை வருமொழிகளுள் வருமொழிச் செயலாகக் கையாளப்படுவன என்பது இளம்பூரணர் கொள்கை. * கணேச அயய்ர் விளக்கம் கொண்டு பார்க்கும் வோது, அந்நயங்கள் நூலாசிரியரே கருதிக் கூறுவன என்பது தெரிகிறது. நச்சினார்க் கினியர் அவ்வாறு கருதியே எழுதினர்போலும்.

எனினும், இந்நயம் இச்சூத்திரத்தில் இல்லை என்பதே பொருந்தும். ஆசிரியர் தொல்காப்பியர் உருபியலில் நீ என்பது உருபுகளுடன் புணரும்போது 'நி' எனக் குறுகிப் பின்னர், ஒற்றுப் பெற்று 'நின்' என்று வரும் என்றார். இங்கு நீ என்பது பொருட் புணர்ச்சியில் வருங்கால் எவ்வாறாம் என்பது கூறப்படுகின்றது. உருபியலில் நீ' என்பது 'நின்' என வந்துவிட்டமையின் அந்த நின் என்பதையே இங்கும் கூற வேண்டும் என்பது பொருந்தாது. ஏன் எனின் 'ஆவயின் வல்லெழுத்து இயற்கையாகும்' என்னும் விதி கூறுவது, அதாவது நின் என்பதன் முன்னர் வருமொழி வல் லெழுத்து மிகாது எனக்கூறுவது தவறாகும்; ஏன் எனின், னகரமும் இன்னொரு வல்லொற்றும் ஈரொற்றுடனிலை பெறா வாகலின். எனவே. 'நீ' என்னும் பெயர்க்கு இங்கு விதி கூற வேண்டுமாதலின் ஆசிரியர் 'நீ என் ஒரு பெயர்' என்றார். நின் என்பதை நீ என்றார் இல்லை. அதனால்தான் இளம்பூரணர் இந் நயத்தைக் கொள்ளவில்லை— **சிவ.**

## 5. உகர ஈறு

அவ்வழியில் உகர ஈறு.

**255. உகர இறுதி அகர இயற்றே.** (52)

ஆ. மொ: இல:

The encling of 'u' is like that of 'a'

---

* பக். 96, 97-இல் அதன் விளக்கம் காண்க.

க. சு.

The encling 'u' is the same as 'a'

பி. இ. நா.

சூ. 204 இன் கீழ் உள்ளன கொள்க.

இளம்

இது, உகரவீற்றுப் பெயர் அல்வழிக்கண் முடியுமாறுகூறுதல் நுதலிற்று.

இ-ள் : உகர இறுதி அகர இயற்று—உகர ஈற்றுப் பெயர் அல்வழிக்கண் அகர ஈற்று அல்வழியின் இயல்பிற்றாய் வல்லெழுத்து வந்தவழி வல்லெழுத்து மிக்கு முடியும்.

உ-ம் ; கடுக்குறிது, சிறிது, தீது, பெரிது எனவரும்.

நச்.

இஃது உகர ஈற்றுப் பெயர் அல்வழிக்கண் முடியுமாறு கூறுகின்றது.

இ-ள்: உகர ஈற்றுபபெயர் அல்வழிக்கண் அகர ஈற்று இயல்பிற்றாய் வல்லெழுத்து வந்துழி அவ்வல்லெழுத்து மிக்கு முடியும், எ—று.

உ-ம் ; கடுக்குறிது, சிறிது, தீது, பெரிது எனவரும்.

சுட்டின் முன்னர்வன்கணம்

**256 சுட்டின் முன்னரும் அத்தொழிற் றாகும்** (53)

ஆ. மொ: இல.

Before the demonstrative the same function takes place (when hard consonants appear)

க. சு.

Atter the demonstrative (u) the same function operates.

பி. இ. நா.

205 209 ஆம் சூத்திரங்களின் உள்ளவற்றைக் கொள்க.

இளம்.

இது [1]இவ்வீற்றுச் சுட்டு வன்கணத்தோடு கூடி முடியுமாறு கூறுதல் நுதலிற்று.

இ—ள்: சுட்டின் முன்னரும் அத்தொழிற்று ஆகும்—உகர ஈற்றுச் சுட்டின் முன்னரும் வல்லெழுத்து வரும் வழி அவ்வகர வீற்று அல்வழியின் [2]தொழிற்றாய் வல்லெழுத்துமிக்கு முடியும்.

உ-ம்: உக்கொற்றன், சாத்தன், தேவன், பூதன் எனவரும்.

நச்.

இஃது உகரவீற்றுச் சுட்டு வன்கணத்தோடு முடியுமாறு கூறுகின்றது.

இ-ள் : உகரவீற்றுச் சுட்டின் முன்னும் வல்லெழுத்து வந்துழி அவ்வல்லெழுத்து மிக்கு முடியும்; எ-று.

உ-ம்: உக்கொற்றன், சாத்தன், தேவன், பூதன் எனவரும்.

சுட்டின் முன்னர் மென்கணம் முதலியன
**257 ஏனைய வரினே மேல்நிலை [3]யியல்பே** (54)

ஆ. மொ. இல.

If others (other group of the letters) come
The positions cited above continue

க. சு.

If other (sounds and plosives) occur,
the above—said situation applies.

பி. இ. நூ

சூ. 206—209 வரையுள்ளன வற்றின்கீழ் உள்ளன கொள்க.

இளம்.

இது, [4]அவ்வீற்றுச்சுட்டு தெரிந்த கணத்தோடு முடியுமாறு கூறுதல் நுதலிற்று.

---

சு. வே:

1. உவ்வீற்று
2. தொழிலிற்றாய்
3. இயல (நச்)
4. அவ்வீற்றுள் சுட்டு

இ—ள்: ஏனவைவரின் மேல்நிலை இயல்பு—[2]உகரவீற்றுச் சுட்டின் முன் ஒழிந்தகணம் வருமொழியாய் வரின் மேல் அகர வீற்றுச் சுட்டு முடிந்துநின்ற நிலைமையின் இயல்பையுடையவாய் முடியும்.

உ—ம்: உஞ்ஞாண், உந்நூல், உம்மணி, எனவும்; உவ்யாழ், உவ்வட்டு எனவும்; உவ்வடை உவ்வாடை, உவ்வெளவியம் எனவும்; ஊவயினோன எனவும் வரும்.

நச்.

இஃது உகரவீற்றுச் சுட்டு ஒழிந்த கணங்களோடு முடியுமாறு கூறுகின்றது.

இ—ள்: உகரவீற்றுச் சுட்டின் முன் வல்லெழுத்தல்லாத மென் கணம் முதலிய மூன்றும் வரின், அகரவீற்றுச்சுட்டு முடிந்தாற் போல ஞ ந மத்தோன்றின் ஒற்றுமிக்கும் யவ்வரினும் உயிர் வரினும் வகரம் ஒற்றியும் செய்யுளில் நீண்டும் முடியும்; எ—று.

உ—ம்; உஞ்ஞாண, நூல், மணி எனவும்; உவ்யாழ், உவ்வட்டு எனவும்; உவ்வடை, உவ்வாடை எனவும்; ஊவயினோன எனவும் வரும்.

சுப்.

'சுட்டின் முன்னரும் அத்தொழிற்றாகும்' என்ற ஒரு சூத்திரத்தானே இவ் விரண்டு சூத்திரப் பொருளையும் கொள்ள லாம் எனினும், அகரச்சுட்டின் பின்னர் வல்லெழுத்து வரும்போது வரும் செய்கையைப் பிரித்து ஆசிரியர் கூறினமையான் மாணாக்கர் ஐயமின்றி யறிய ஈண்டும் பிரித்துக் கூறினார் என்க.

சிவ.

'மேல் நிலை இயல்பே' என்னும் பாடத்தினும் நச்சினார்க் கினியர் கொண்ட 'மேனிலையியல' என்னும் பாடமே சிறக்கும். இயல்பு—ஒருமை. இயல—பன்மை. அகரச் சுட்டின்முன் ஞநமத் தோன்றின் மெல்லெழுத்து மிகுதலும், யகரமும் உயிரும் வரின் வகரம் மிகுதலும், செய்யுளில் நீண்டு முடிதலும் நிகழ்வனபோல உகரச் சுட்டின் முன்னரும் நிகழும் என்றலின்—பல நிகழ்ச்சிகளைக் குறித்தலின் இயல்பு என்ற ஒருமைச் சொல்லினும் 'இயல' என்னும் பன்மைச் சொல்லே சிறக்கும்; ஏனைய எழுவாய். இயல

---

சு. வே:

2. உகர வீற்றுள் சுட்டின் முன்

பயனிலை. உகரச்சுட்டு எழுவாய் எனின் இயல்பு பயனிலை யாம்.

உகர ஈற்றுச் சுட்டுப் பெயர்

**558. சுட்டுமுதல் இறுதி இயல்பா கும்மே, (55)**

ஆ. மொ: இல·

'U' ending, having the demonstratives as initials, stands without change (where the hard consonants form the initials of the coming words)

க·சு.

The final (u) with demonstratives as initials will remain unchanged.

பி. இ. நூ.

நன். 179

"சுட்டு ஈறாகும் உகர முன்னர் இயல்பாம்"

இளம்.

இது [1]இவ்வீற்றுட் சிலவற்றிற்கு வல்லெழுத்து விலக்கி இயல்பு கூறுதல் நுதலிற்று.

இ-ள் : சுட்டு முதல் இறுதி இயல்பு ஆகும்—சுட்டெழுத்தினை முதலாகவுடைய உகர ஈற்றுப் பெயர் மேற் கூறிய வல்லெழுத்து மிகாது இயல்பாய் முடியும்.

உ-ம் : அது குறிது, இது குறிது, உது குறிது, சிறிது, தீது, பெரிது எனவரும்.

நச்.

இஃது இவ்வீற்றுட் சிலவற்றிற்கு வல்லெழுத்து விலக்கி இயல்பு கூறுகின்றது.

இ-ள்: சுட்டெழுத்தினை முதலாகவுடைய உகர ஈற்றுப் பெயர், முற்கூறிய வல்லெழுத்து மிகாது இயல்பாய் முடியும், எ—று.

உ-ம் : அதுகுறிது, இதுகுறிது, உது குறிது, சிறிது தீது, பெரிது எனவரும்.

---

சு, வே : 1. இவ்வீற்றுச்

‡ முற்கூறியவை (256, 257) சுட்டு மாத்திரை; இவை சுட்டுப் பெயர் எனவுணர்க

பி. கு.

"முன் இரண்டு சூத்திரங்களிலும் உக் கொற்றன், உஞ்ஞாண் முதலிய தொகை மொழிகளில் 'உ' என்றதின் பின்னர் உள்ள மாறுதல்களையும், ஈண்டு அது, இது, உது என்ற தனி மொழி களின் பின்னர் வரும் புணர்ச்சிகளையும் கூறினர்"—சுப்பிரமணிய சாஸ்திரியார்.

"அது இது உது வென வரூஉம் பெயரும்

அவை முதலாகிய ஆய்தப் பெயரும் (சொல் 164) என்று உகர வீற்றுச் சுட்டுப் பெயர் இரண்டு வகையவாம். இரண்டுள் ஒன்று முற்றியலுகர வீறு; மற்றொன்று குற்றிய லுகரவீறு இவை உருபேற்றுப்புணர்வதை உருபியல் 4, 28, ஆம் நூற்பாவாலும், முற்றியலுகரவீறு அல்வழியிலும் வேற்றுமையிலும் புணர்தலை உயிர் மயங்கியல் 55, 56, 61 ஆம் நூற்பாவாலும். குற்றியலுகர வீறு வேற்றுமையிலும் அல்வழியிலும் புணர்தலைக் குற்றிய லுகரப் புணரியல் 17, 18, 19 ஆம் நூற்பாவாலும் தொல்காப் பியர் கூறியுள்ளார்— திரு. அடிகளாசிரியர்.

செய்யுளிற் சுட்டுப் பெயர்.

**259.** **அன்றுவரு காலை ஆவா குதலும்**
**ஐவரு காலை மெய்வரைந்து கெடுதலும்**
**செய்யுள் மருங்கின் உரித்தென மொழிப** (56)

ஆ. மொ: இல.

When 'Anru' Comes, it ('U' of athu ) Changes into 'ā' and When 'ai' comes, it disappears leaving the consonant. These oceur in poetry - so say the learned.

க. சு.

It is said to be proper that in poetry (it = the final u) is changed to ā when anṟu follows,
and disappears leaving the consonant when ai follows.

‡ பி. கு. - பார்க்க

பி. இ. நூ:

நன். 180

அதுமுன் வரும் அன்று ஆன்றாம் தூக்கின்

இ. வி. 95

அன்றுவரு காலை ஆவா குதலும்
ஐவரு காலை மெய்வரைந்து கெடுதலும்
செய்யுள் மருங்கின் உரித்தென மொழிப

முத்து. 4. 112

அன்று அதுமுன் வரின் ஆவாகலும் ஐ
வரின் உகரம் கெடுதலும் ஆம் தூக்கின்.

இளம்.

இது, [1]இவ்வீற்றுச் சுட்டு முதற் பெயர்க்கு ஓர் செய்யுள் முடிபு கூறுதல் நுதலிற்று.

இ—ள்: அன்று வருகாலை ஆ ஆகுதலும்—[2]அதிகாரத்தான் நின்ற சுட்டுமுதல் உகரவீற்றுப் பெயர் அன்று என்னும் சொல் வருமொழியாய் வருங்காலத்து [3]அவ்வுகரம் ஆகாரமாகித் திரிந்து முடிதலும், ஐவருகாலை மெய்வரைந்து கெடுதலும்—ஐ என்னும் சாரியை இடை வந்து முடியுங்காலத்து அவ்வுகரம் தான் ஊர்ந்த மெய்யை ஒழித்துக் கெட்டு முடிதலும், செய்யுள் மருங்கின் உரித்து என மொழிப—[4]அவ்விரு முடிபும் செய்யுட்கண் உரித்தென்று சொல்லுவர்.

உ-ம்: அதாஅன்றம்ம, இதாஅன்றம்ம, உதாஅன்றம்ம எனவும்; அதைமற்றம்ம, இதைமற்றம்ம, உதைமற்றம்ம எனவும் வரும்.

நச்.

இஃது இவ்வீற்றுச் சுட்டுமுதற் பெயர்க்கு ஒரு செய்யுள் முடிபு கூறுகின்றது.

---

சு. வே:

1. இவ்வீற்றுட், அவ்வீற்றுச்
2. அதிகாரத்து
3. உகரம் ஆகாரமாகி முடிதலும்
4. இவ்விருமுடிபும்

இ—ள்: அதிகாரத்தால் நின்ற சுட்டுமுதல் உகர ஈற்றின் முன்னர் அன்று என்னும் வினைக் குறிப்புச் சொல் வருங்காலத்து அத்தகர ஒற்றின்மேல் ஏறிநின்ற உகரம் ஆகாரமாய்த் திரிந்து முடிதலும், அதன் முன்னர் ஐ என்னுஞ்சாரியை வருங்காலத்து அத்தகர வொற்று நிற்க அதன்மேல் ஏறிய உகரங் கெடுதலும் செய்யுட்கண் உரித்தென்று சொல்லுவர் ஆசிரியர்; எ—று.

உ-ம்: [5]அதாஅன்றம்ம, இதாஅன்றம்ம, உதாஅன்றம்ம, ''அதா அன்றென்ப வெண்பா யாப்பே'' எனவும்; அதைமற்றம்ம, இதைமற்றம்ம, உதைமற்றம்ம எனவும் வரும்.

'மொழிந்த பொருளோ டொன்ற அவ்வயின் மொழியா ததனை முட்டின்றி முடித்தல்' என்பதனால் *அதன்று, இதன்று, உதன்று என உகரங் கெட்டுத் தகர வொற்று நிற்றலும் கொள்க.

**வேங்.**

அது என்னும் சொல்முன் அன்று என்பது வருமாயின், அது வன்று என்றாவது, அஃதன்று என்றாவது முடிதலே முறை. அவ்வாறன்றி, அது என்பதிலுள்ள உகரம் ஆகாரமாதற்கு நியாயம் இன்று. இதனை நோக்கின் இதன் உண்மைத்தன்மை வேறாதல் வேண்டும் என்பது புலனாகும்.

†அது இது உது என்னும் வல்லுகரவீற்றுச் சொற்களெல்லாம் மூலத்திராவிட மொழியில் மெய்யீற்றுச் சொற்களா யிருந்தன வாகும். இதனை விளக்கிக் 'குற்றியலுகரம்' என்னும் கட்டுரை யிலும், 'திராவிடமொழியின் மூவிடப்பெயர்' என்னும் நூலிலும் எழுதியுள்ளேன். வல்லெழுத்தீற்றுச் சொற்களை ஒலிப்பின் ஈற்று வல்லெழுத்தின்ஒலி கேட்போருக்கு விளங்காதாகலின், அவர்க்குப் புலனாகுமாறு ஓர் உயிரொலியைத் துணையாகச் சேர்த்து ஒலிக்கலாயினர். இம்முறைப்படி, அத், இத், உத் என்னும் சுட்டுச் சொற்களோடு அகரம் சேர்த்து வடமலையாளத்

---

சு. வே:

5. அதான்றம்ம, இதான்றம்ம, உதான்றம்ம.

* இது பிற்காலத்து வழக்கு.

† அது என்பது மூலத்திராவிட மொழியில் அத் என்றிருந்த தாகும் என்பது எப்படி? வல்லொற்றிறுதிச் சொற்கள் தமிழில் இல்லை. அதனால் அது அல்லது அத என்பதே மூலச் சொல் எனக் கொள்ளலாம். அது என்பது அத எனத் திரிந்ததாகக் கொள்ளலாம்—சிவ.

திலும், இகரம் சேர்த்துத் தெலுங்கிலும் ஒலிக்கின்றனர். உகரஞ் சேர்த்துச் செந்தமிழிலும் கன்னடத்திலும் வழங்குகின்றனர்.

அது இது உது என்பன வடமலையாளத்திற் போலவே அத, இத, உத என்று தமிழ் நாட்டிலும் சில விடங்களில் வழங்கி யிருத்தல் கூடும். அகரவீற்றின் முன் அகரம் வரின் ஒரு சொல் நீர்மையில், அவ்விரண்டு அகரமும் ஓர் ஆகாரமாகி வழங்கும். ஆதலின், அத + அன்று = அதான்று என்று வந்தது, மர + அடி = மராடி என்றாயதுபோல. அதான்று என்னுஞ் சொல்லின் நிலையைக் கண்டு ஆசிரியர் இவ்வாறு விதி கூறினாராவர்.

ஆயின், அதாஅன்று என்று இடையே அகரம் இட்டு எழுதுதல் என் எனின், அதான்று என்பதில் வருமொழியிது எனத் தெளிவாகாமையின் அதனை அறிவித்தற்காக அகரம் அறிகுறி யளவில் எழுதப்பட்டதாகும்.

வேற்றுமையில் உகர ஈறு

**260. வேற்றுமைக் கண்ணும் அதனோ ரற்றே (57)**

**ஆ. மொ: இல.**

Even in the case relations it follows the same rule.

**க. சு.**

And in case-relationship It is the same as that.

**பி. இ. நூ.**

சூ 2C4- இன் கீழ் உள்ளன கொள்க.

**இளம்.**

இது இவ்வீற்றுப் பெயர் வேற்றுமைக்கண் முடியுமாறு கூறுதல் நுதலிற்று.

இ-ள் : வேற்றுமைக் கண்ணும் அதன் ஓர் அற்று—உகர வீற்றுப் பெயர் வேற்றுமைப் பொருட்புணர்ச்சிக் கண்ணும் அவ் அகரவீற்று அல்வழியோடு ஒரு தன்மைத்தாய் வல்லெழுத்துமிக்கு முடியும்.

உ-ம் : கடுக்காய், செதிள், தோல், பூ எனவரும்.

**நச்.**

இஃது இவ்வீற்றுப் பெயர் வேற்றுமைக்கண் முடியுமாறு கூறு கின்றது.

இ-ள் : உகர வீற்றுப் பெயர் வேற்றுமைப் பொருட்புணர்ச்சிக் கண்ணும், அகரவீற்று அல்வழியோடு ஒரு தன்மைத்தாய் வல்லெழுத்து மிக்கு முடியும்; எ—று.

உ-ம் *கடுக்காய், செதிள், தோல், பூ எனவும்; கடுக் கடுமை எனவும்வரும்,

எரு, செரு

**261** **எருவும் செருவும் அம்மொடு சிவணித்**
**திரிபிடன் உடைய தெரியும் காலை**
**அம்மின் மகரம் செருவயின் கெடுமே**
**தம்மொற்று மிகூஉம் வல்லெழுத் தியற்கை** (58)

**ஆ. மொ:** இல.

'Eru' and 'seru' having 'am' are liable to change.
It is to be found on examining.
'm' of 'am' disappears with 'seru' and the hard consonant of the coming word doubles

**க. சு.**

when one examines the pertinent cases, then eru 'manur' and ceru 'battle' having am are liable to change. The—m of—am disappears in ceru and the plosive doubles

**பி. இ. நூ.**

**முத்து. பு.** 113, 114

"செருவும் எருவும் அம்மொடு சிவணும்"

"அம்மிறு மகரம் செருவயின் அழியும்"

**இளம்**

இது இவ்வீற்றுள் ஒன்றற்கு வல்லெழுத்து விலக்கிச் சாரியை விதியும் ஒன்றற்கு வல்லெழுத்தினோடு சாரியை விதியும் கூறுதல் நுதலிற்று.

---

* கடுக்காய் - பொருள்வேற்றுமை. கடுக்கடுமை—குண வேற்றுமை.

இ—ள்: எருவும் செருவும் அம்மொடு சிவணித்திரிபு இடனுடைய தெரியும் காலை—எரு என்னும் சொல்லும் செரு என்னும் சொல்லும் அம்முச்சாரியையொடு பொருந்தி முன் சொன்ன வேற்றுமைப் பொது விதியின் வேறுபட்டு முடியும் இடனுடைய ஆராயுங்காலத்து, அம்மின் மகரம் செருவயின் கெடும்—அவ்வம்முச் சாரியையது ஈற்றின் மகரம் செரு என்னும் சொல்லிடத்துக் கெட்டு முடியும்; வல்லெழுத்து இயற்கை தம் ஒற்று மிகூஉம்—அவ்வாறு கெட்டவிடத்துச் செரு என்பது வல்லெழுத்தாகிய [1]இயல்பையுடைய [2]தமது ஒற்று மிக்கு முடியும்

உ-ம்: எருவங்குழி, [3]சேறு, தாது, பூழி எனவும்; செருவக்களம் சேனை, தானை, பறை எனவும் வரும்.

'தெரியுங்காலை' என்றதனால், எரு என்பதற்குப் [4]பெரும் பான்மை மெல்லெழுத்துப் பேறும், சிறுபான்மை வல்லெழுத்துப் பேறும், செரு என்பதற்குச் சிறுபான்மை வல்லெழுத்துப் பேறும் கொள்க. எருங்குழி, எருக்குழி, செருக்களம் எனவரும்.

'வல்லெழுத்தியற்கை' என்றதனான், உருபிற்குச் சென்ற சாரியை பொருட்கண் சென்றவழி அவ்விரு மொழிக்கும் ‡[5]அதிகார வல்லெழுத்து வீழ்வும் கொள்க. எருவின்கடுமை, செருவின் கடுமை எனவரும்.

நச்.

இஃது அவ்வீற்றுள் ஒன்றற்கு வல்லெழுத்து விலக்கிச் சாரியை விதியும், ஒன்றற்கு வல்லெழுத்தினோடு சாரியை விதியும், சாரியை பெறாதவழி வல்லெழுத்து மெல்லெழுத்துப் பேறும் கூறுகின்றது.

---

சு. வே;

1. இயல்புடைய
2. தம் ஒற்று
3. செறு
4. சிறுபான்மை மெல்லெழுத்துப் பேறும், வல்லெழுத்துப் பேறும்
5. வல்லெழுத்து
6. என்று

‡ அதிகார வல்லெழுத்து—முன் சூத்திரந்தொடங்கி வரும் வல்லெழுத்து.

இ—ள்: எருவென்னும் சொல்லும் செருவென்னும் சொல்லும் அம்முச் சாரியையொடு பொருந்தி, அதிகார வல்லெழுத்துப் பெறாமல் திரியும் இடனுடைய ஆராயுங்காலத்து; ஆண்டு அம்முச்சாரியையினது ஈற்றின் மகரம் செருவென்னுஞ் சொல்லிடத்துக் கெட்டு முடியும்; ஆண்டுச் செருவின்கண் வல்லெழுத்து மிக்கு முடியும்; அம்முப் பெறாதவழி இரண்டிற்குந் தமக்கு இனமாகிய வல்லொற்றும் மெல்லொற்றும் மிக்கு முடியும் எ—று.

உ-ம்: எருவென நிறுத்திக் குழி, சேறு, தாது, பூழி எனத் தந்து அம்முக்கொடுத்து 'அம்மின் இறுதி கசதக்காலை' (எழு.129) என்பதனால் எருவங்குழி, சேறு, தாது பூழி என முடிக்க. செரு வென நிறுத்திக் களம், சேனை தானை, பறை எனத்தந்து இடை அம்முக் கொடுத்து, மகரம் கெடுத்து, வல்லெழுத்துக் கொடுத்துச் [1]செருவக்களம், சேனை, தானை, பறை என முடிக்க. இனி அம்முப் பெறாதவழி எருக்குழி, எருங்குழி என வல்லெழுத்தும் மெல்லெழுத்தும் கொடுத்து முடிக்க. இனிச் செருவிற்கு ஏற்புழிக் கோடல் என்பதனால் செருக்களம் என வல்லெழுத்தே கொடுத்து முடிக்க.

'தெரியுங்காலை' என்றதனால் எருவின் குறுமை, செருவின் கடுமை என உருபிற்குச் சென்ற சாரியை பொருட்கண் சென்றுழி வல்லெழுத்து வீழ்தலும்; எருவஞாற்சி, செருவஞாற்சி என இயல்பு கணத்துக்கண் அம்முப் பெறுதலும் கொள்க. மகரம் 'மென்மையும் இடைமையும்' (எழு. 130) என்பதனாற் கெடுக்க.

'தம் ஒற்றுமிகூஉம்' என உடம்பொடு புணர்த்துச் சூத்திரஞ் செய்தலின் உகரம் நீடவருதலும் கொள்க. வரூஉம், தரூஉம், படூஉம் எனவரும்.

ழகர உகர ஈறு

**262** **ழகர உகரம் நீடிடன் உடைத்தே**
**உகரம் வருதல் ஆவயி னான** (59)

**ஆ. மோ:** இல.

There may be places where the lengthening of 'lu' may occur and there appears 'u' after it

---

சு. வே: 1. செருவக்களம் என முடிக்க. ஏனையவும் அன்ன.

க. சு.

(If the standing wordee ends in) ḻ (u), the sound u may be lengthened and in such positions (another) u appears

பி. இ. நூ.

முத்து. பு: 116

உகர ழகரம் நீடிடன் உடைத்தே

இளம்.

இது இவ்வீற்றில் சிலவற்றிற்குச் செய்யுளுள் எய்தியதன் மேல் சிறப்பு விதி கூறுதல் நுதலிற்று.

இ—ள்: ழகர உகரம் நீடு இடன் உடைத்து—இவ்வீற்று மொழிகளுள் ழகரத்தொடு கூடிய உகரவீற்று மொழி அவ்வுகரம் ஊகாரமாய் நீண்டு முடியும் இடன் உடைத்து, ஆவயின் உகரம் வருதல்—அவ்விடத்து உகரம் வந்து முடிக.

†இடனுடைத்து என்றதனான் இது செய்யுளிடத் தெனக் கொள்க.

உ—ம்: 'பழூஉப்பல் அன்ன பருவுகிர்ப்பாவடி' என வரும்.

நச்.

இஃது எய்தியதன் மேற் சிறப்பு விதி வகுத்தது; வல் லெழுத்தினோடு உகரம் பெறுதலின்.

இ—ள்: உகரவீற்றுச் சொற்களுள் ழகரத்தோடு கூடிய உகர வீற்றுச் சொல் நீண்டு முடியும் இடன் உடைத்து: அவ் விடத்து உகரம் வந்து முடியும்; எ—று

---

† உலக வழக்கில் வருவதாயின் ழகர உகரம் நீடும் என்றே கூறியிருப்பர். இடமும் உண்டு என்பதனால் அவ்விடம் செய்யுள் இடமே என்பது இத்தொடர்க் கருத்து பழூ-பேய்; பழூஉப்பல்=பேய்ப்பல். "பேயின் பல் போன்ற பருத்த நகத்தையுடைய பரந்த கால்" என்பது இவ்வரியின் பொருள். இது யானையின் கால் பற்றியது. "பழு என்பது பழூ என்றாகிப் பின்னர் பழூஉ என அளபெடுத்தது எனக் கொண்டு குற்றெழுத்தளபெடை என்பதும் உண்டு." (இல-வி-90உரை)

உ—ம்: எழூஉக் கதவு, சிறை, தானை, படை எனவரும்.

'நீடிடனுடைத்து என்றதனால் நீளாதும் உகரம் பெறாதும் வருவதுமாயிற்று. குழுத் தோற்றம் எனவரும்.

இன்னும் இதனாற் பழுக்காய் என அல்வழிக்கண்ணும் இவ் விதியன்றி வருதல் கொள்க.

ஆவயினானே என்றதனாற் பெரும்பான்மை செய்யுட்கண் நீண்டு உகரம் பெற்று

எழூஉத் தாங்கிய கதவுமலைத்தவர்
குழூஉக் களிற்றுக் குறும்புடைத்தலின் (புறநா 97)

எனவும்,

'பழூஉப்பல் லன்ன பருவுகிர்ப் பாவடி (குறுந் 180) எனவும் வருதல் கொள்க.

**பி. கு.**

"இச்சூத்திரம் வல்லெழுத்து மிகுதியை உணர்த்தும் சூத்திரத் திற்குப் புறனடையின்மையான் வல்லெழுத்து மிகுதியும் ஈண்டு வரும்.

"இன்னும் இதனாற் பழுக்காய் என அல்வழிக்கண்ணும் இவ் விதியன்றி வருதல் கொள்க என நச்சினார்க்கினியத்தில் உள்ளது. இஃது, 'உகர விறுதி அகர வியற்றே" (எழு 255) என்ற சூத்திரத்தாற் கொள்ளப்படும்"—சுப்பிரமணிய சாஸ்திரியார்.

"எழு தழு என்பது போன்ற உகரவீற்றுச் சொற்கள் விகுதி உகரத்தோடு சேர்ந்து எழூ தழூ என நீண்டவிடத்து, அவற்றை ஊகார வீற்றன எனவும் கருதுதல் கூடுமாகலின், அவை உகர வீற் றனவேஎன்பது அறிவித்தற்கு ஆண்டு உகரம் இட்டு எழுதுவாரா யினர். இஃது 'உகரம் நீடிடனுடைத்து', 'ஆவயினான உகரம் வருதல்' என்பதனால் உய்த்துணரப்படும்"—வேங்கடராசுலு ரெட்டியார்.

ஒடுமரம்

**263. ஒடுமரக் கிளவி உதிமர இயற்றே.** (60)

**ஆ. மொ:** இல.

The word 'Odu' denoting a tree is like that of 'uthi', a tree.

**க. சு.**

The word 'Odu, (denoting) a tree is like uti (denoting) a tree.

பி. இ. நூ.

முத்து. பு. 115

ஒடுமரப் பெயர்உதி மரவியல் நிலையும்.

இளம்

இது, இவ்வீற்று மரப்பெயருள் ஒன்றற்கு வல்லெழுத்து விலக்கிப் பிறிது விதி கூறுதல் நுதலிற்று.

இ—ள் : ஒடு மரக்கிளவி உதிமர இயற்று—ஒடு என்னும் [1]மரத்தினை உணர நின்ற சொல் உதி என்னும் மரத்தின் இயல்பிற்றாய் மெல்லெழுத்துப் பெற்று முடியும்.

உ—ம் : ஒடுங்கோடு, செதிள், தோல், பூ என வரும்.

நச்.

இஃது அவ்வீற்று மரப்பெயர் ஒன்றற்கு வல்லெழுத்து விலக்கி மெல்லெழுத்து விதித்தது.

இ—ள் : ஒடு வென்னும் மரத்தினையுணர நின்ற சொல், உதி என்னும் மரத்தின் இயல்பிற்றாய் மெல்லெழுத்துப் பெற்று முடியும்; எ—று.

உ—ம் : ஒடுங்கோடு, செதிள், தோல், பூ என வரும். மரம் என்றார் ஒடு என்னும் நோயை நீக்குதற்கு.

முன்னர் *உதிமரத்தின் பின்னர் அம்முப் பெறுகின்ற †புளிமரம் வைத்த இயைபான் இதற்கு அம்முப்பேறுங் கொள்க. $ஒடுவங்கோடு எனவரும்.

---

சு. வே: 1. மரப்பொருள்

* சூ. 244

† சூ. 245

$ ஒடுவங்கோடு என்றது பிற்காலத்து வழக்கென்றும் அது புளியங் கோட்டின் ஒற்றுமைப் போலியான் வந்த தென்றுங் கொள்ளல் தகும்-சுப்பிரமணிய சாஸ்திரியார்.

சுட்டுப் பெயர்க்குச் சாரியை

**264. சுட்டுமுதல் இறுதி †உருபியல் நிலையும்
ஒற்றிடை மிகாஅ வல்லெழுத் தியற்கை. (61)**

**ஆ. மோ: இல.**

The final of the word, having
demonstrative as initial
stands in the nature of case relation.
The doubling of hard consonants
does not occur.

**க. சு.**

The final (u) commeneing with a
demonstrative stands in the
nature of case-relations.
The plosive consonant will not double.

**இளம்.**

இது இவ்வீற்றுட் சிலவற்றிற்கு வல்லெழுத்து விலக்கிச் சாரியை வகுத்தல் நுதலிற்று.

இ—ள் : சுட்டுமுதல் இறுதி உருபியல் நிலையும்—சுட்டெழுத்தினை முதலாகவுடைய உகரவீற்றுச் சொற்கள் உருபு புணர்ச்சியிற் சொன்ன இயல்பிலே நின்று அன்சாரியை பெற்று உகரம் கெட்டு முடியும், வல்லெழுத்து இயற்கை ஒற்று இடை மிகாஅ— அவ்விடத்து வல்லெழுத்து இயற்கையாகிய ஒற்று இடைக்கண்மிகா.

உ—ம்; அதன் கோடு, இதன் கோடு, உதன்கோடு; செதிள் தோல், பூ என வரும்.

'ஒற்று இடைமிகா' என்றதனால், சாரியை வகுப்ப வல்லெழுத்து வீழாது என்பது பெற்றாம். 'வல்லெழுத்தியற்கை' என்றதனால் இவ்வீற்றுள் உருபிற்குச் சென்ற சாரியை பொருட்

† உருபியல சூத்திரம் (4)
சுட்டுமுதல் உகரம் அன்னொடு சிவணி
ஒட்டிய மொய்யொழித் துகரம் கெடுமே.

கண் சென்ற வழி இயைபு வல்லெழுத்து வீழ்க்க. கடுவின் குறை [1]ஒடுவின்குறை எனவரும்.

நச்.

இது சுட்டுப் பெயர்க்கு வல்லெழுத்து விலக்கிச் சாரியை வகுத்தது.

இ—ள்: சுட்டெழுத்தினை முதலாகவுடைய உகரவீற்றுச் சொற்கள் பொருட் புணர்ச்சிக்கண்ணும் உருபு புணர்ச்சியிற் கூறிய இயல்பிலே நின்று அன்சாரியை பெற்று உகரங்கெட்டு முடியும்; வல்லெழுத்தியற்கையாகிய ஒற்று இடைக் கண் மிகா; எ—று;

உ-ம்: அதன்கோடு. இதன்கோடு, உதன்கோடு, செதிள், தோல், பூ எனவரும். 'ஒற்றிடை மிகா' எனவே சாரியை வகுப்ப வல்லெழுத்து மிகா என்பது பெற்றாம்.

வல்லெழுத்தியற்கை என்றதனான் உகர வீற்றுள் எருவும் செருவும் ஒழித்து ஏனையவற்றிற்கும் உருபிற்குச் சென்ற சாரியை பொருட்கண் சென்றுழி இயைபு வல்லெழுத்து வீழ்க்க. கடுவின் குறை, ஒடுவின் குறை, எழுவின்புறம், கொழுவின் கூர்மை எனவரும். இன்னும் இதனானே உதுக்காண் என்றவழி வல் லெழுத்து மிகுதலும் கொள்க.

சுப்.

இச் சூத்திரத்தாற் கூறப்பட்டது "சுட்டு முதலுகரம்" (எழு. 177) என்ற சூத்திரத்தாற் பெறப்படாதோ வெனின், அதற்கு 254 ஆவது சூத்திரத்திற் கூறியவாறு கூறுக.

சிவ.

"ஒற்றிடை மிகா என்பதனால் சாரியை வகுப்ப வல்லெழுத்து வீழாது என்பது பெற்றாம்" இதற்கு விளக்கம்:

உகர வீற்றுப் பெயர்களின் முன்னர் வருமொழி வல்லெழுத் தானது வேற்றுமைப் புணர்ச்சியில் மிக்கு முடியும் என்பது பொது விதி. உதாரணம் கடுக்காய்' என்பது. இச்சூத்திரத்தில் சுட்டு

சு. வே:

1. 'இதனையடுதது, பூவின் கடுமை' என்ற எடுத்துக் காட்டு ஞானியார் சுவடி 1-ல் காணப்படுகின்றது—திரு. அடிகளாசிரியர்.

முதல் இறுதி உகரமானது உருபுடன் சேரும்போது பெறும் அன் சாரியை பெற்று முடியும். அது+கோடு=அதன்கோடு எனக் காண்க. அவ்வாறு அன்சாரியை பெறும்போது வருமொழி வல்லெழுத்து மிகுதல் இல்லை. வல்லெழுத்து சாரியை வகுத்ததால் மிகவில்லை என்று கூறுவர் சிலர். அதனால் அவர்கள் 'சாரியை வகுப்பப் பொதுவிதிப்படிப் பெறும் வல்லெழுத்து வீழும்' என ஒரு கொள்கையைக் கூறுவர். இக்கொள்கையினை ஆசிரியர் தொல்காப்பியர் உடன்படுவாரல்லர். அதனால் அவர் ''சுட்டு முதல் இறுதி உருபியல் நிலையும்'' என்ற அளவில் நில்லாது 'ஒற்றிடைமிகாஅ வல்லெழுத்தியற்கை' என வல்லெழுத்து மிகாது என்பதையும் சொல்லி வைத்தார். ஆசிரியர் கருத்து இதுவே எனக் கூறவேண்டி இளம்பூரணர் அவ்வாறு எழுதினார்.

உருபியல் நிலையும் மொழியுமா ருளவே
ஆவயின் வல்லெழுத்து இயற்கை யாகும் (எழு 295)

என்ற சூத்திரத்தின் கீழ்,

'இதனானும் பெற்றாம் சாரியைப் பேறு வரு மொழி
வல்லெழுத்து விலக்காமை''

என எழுதியதற்கும் இப்படியே விளக்கம் காண்க.

## 6. ஊகார ஈறு

அல்வழியில் ஊகார ஈற்றுப் பெயர்.

**265. ஊகார இறுதி ஆகார இயற்றே (62)**

ஆ. மொ: இல.

'ūs ending is in the nature of 'ā's ending.

க. சு.

The ending in the long sound ū is the same as the long sound ā.

பி. இ நூ.

சூ. 204-இன்கீழ் உள்ளன கொள்க.

இளம்.

இது ஊகாரவீற்றுப் பெயர் அல்வழிக்கண் முடியுமாறு கூறுதல் நுதலிற்று.

இ—ள்: ஊகார இறுதி ஆகார இயற்று—ஊகாரஈற்றுப் பெயர் அல்வழிக்கண் ஆகார ஈற்று அல்வழியின் இயல்பிற்றாய் வல்லெழுத்து வந்தவழி வல்லெழுத்து மிக்கு முடியும்.

உ-ம்: †கொண்மூக்கடிது; சிறிது, தீது, பெரிது எனவரும்.

இது நிறுத்த முறையானே ஊகாரவீறு அல்வழிக்கண் புணருமாறு கூறுகின்றது.

இ—ள்: ஊகாரவீற்றுப் பெயர் அல்வழிக்கண் ஆகாரவீற்று அல்வழியின் இயல்பிற்றாய் வல்லெழுத்து வந்துழி [1]அவ்வல் லெழுத்து மிக்கு முடியும்; எ—று.

உ-ம்: கழூஉக்கடிது; கொண்மூக்கடிது; சிறிது, தீது, பெரிது என வரும்.

வினைச் சொல்.

**266. வினையெஞ்சு கிளவிக்கும் முன்னிலை மொழிக்கும்**
**நினையுங் காலை அவ்வகை வரையார். (63)**

**ஆ. மோ: இல.**

The adverbial participle and the second personal pronoun (which end in ū) are not barred in having the consonants being doubled, if we examine.

**க சு.**

When one thinks (of it), the gerund and the second person finite verb are not prevented from that change.

**பி. இ. நூ.**

**முத்து. பு. 117**

ஊகார இறுதி முன்னிலை மொழியும்
வினையெஞ்சு கிளவியும் மிகுமென மொழிப.

**இளம்.**

இது, இவ்வீற்று [1]வினைச் சொற்கு முடிபு கூறுதல் நுதலிற்று.

---

ச. வே: 1. வல்லெழுத்து

† கொண்மூ—மேகம்

சு. வே: 1. வினைச்சொல் முடியுமாறு உணர்த்துதல், நுதலிற்று. வினைச் சொல் முடியுமாறு கூறுதல்

இ—ள்: வினையெஞ்சு கிளவிக்கும் முன்னிலை மொழிக்கும் —ஊகாரவீற்று வினையெச்சமாகிய சொல்லிற்கும் முன்னிலை மொழியாகிய வினைச் சொல்லிற்கும், நினையுங்காலை அவ்வகை வரையார்—ஆராயுங்காலத்து அவ்வல்லெழுத்து மிக்கு முடியும் கூற்றினை நீக்கார்.

உ-ம்: உண்ணூக் கொண்டான்; சென்றான், தந்தான், போயினான் எனவும்; [2]கைதூக் கொற்றா, சாத்தா, தேவா, பூதா எனவும் வரும்.

நினையுங்காலை என்றதனால், இவ்வீற்று உயர்திணைப் பெயர் அல்வழிக்கண் வல்லெழுத்து மிக்கு முடிவன கொள்க. ஆடூஉக்குறியன், மகடூஉக்குறியள் எனவரும்.

நச்.

இஃது இவ்வீற்று வினையெச்சத்திற்கு மிக்கு முடியும் என்றலின், எய்தாத தெய்துவித்ததூஉம், முன்னிலை வினைக்கு இயல்பும் உறழ்பும் மாற்றுதலின் எய்தியது விலக்கியதூஉம் நுதலிற்று.

இ—ள்; ஊகாரவீற்று வினையெச்சமாகிய சொற்கும், முன்னிலை வினைச் சொற்கும், ஆராயுங்காலத்து அவ்வல் லெழுத்து மிக்கு முடியும் கூற்றினை நீக்கார்; எ—று.

உ—ம்; உண்ணூக் கொண்டான், சென்றான், தந்தான், போயினான் எனவும்: கைதூக்கொற்றா, சாத்தா, தேவா, பூதா எனவும் வரும்.

நினையுங்காலை என்றதனான் இவ்வீற்று உயர்திணைப் பெயர்க்கும் அல்வழிக்கண் வல்லெழுத்துக் கொடுத்து முடிக்க. ஆடூஉக் குறியன், மகடூஉக் குறியள் என வரும். உயர்திணைப் பெயர் எடுத்தோதி முடிப்பாராதலின் அம்முடிபு பெறாமை கருதி ஈற்றுப் பொது விதியான் முடியாது இலேசான் [2]முடித்தாம்.

---

2. கைதூஉக் கொற்றா.

சு. வே :

1. பெயர்க்கு
2. முடித்தார்.

சுப்.

"நினையுங்காலை என்றதனால்...மகடூஉக்குறியள் என வரும்" என்றனர் உரைகாரர்கள். இவற்றை ஊகாரவிறுதி ஆகாரவியற்றே (265) என்றதனாற் கொள்ளலாகாதோ வெனின், "உயிரீறாகிய உயர்திணைப் பெயரும்" (154) என்ற சூத்திரத்தான் உயர்திணைப் பெயர்க்குச் செய்கை கூறின்மை யின் அச் சூத்திரம் அஃறிணைப் பெயர்க்கே யாம் எனக் கொள்க. அவ்வாறாயின் இயல்பில்லாத இவ்விடத்து நினையுங்காலை என்றதனாற் பெறப்பட்டதாகக் கொள்ளலாமா எனின், பின்னர் வரும் "ஆடூஉ மகடூஉ" (72) என்ற சூத்திரம் வல்லெழுத்து மிகுதிக்குப் புறனடையாக ஆசிரியர் கூறியதாக உரைகாரர்கள் கொண்டமையின் அவ்வாறு கூறினர். "உயிரீறாகிய உயர் திணைப் பெயரும்" (154) என்றதற்கு "ஆடூஉ மகடூஉ" (272) என்றதனைப் புறனடையாகக கொள்ளின், வல்லெழுத்து மிகுதி யைப் பிற்காலத்து வழக்காகக் கொள்ளல் தகும். பண்டைய வழக்கெனக் கொள்ளச் சான்று இருப்பின் "கிளந்தவல்ல" (483) என்ற அதிகாரப் புறனடையாற் கொள்ளலாம்.

வேற்றுமையில் ஊகாரஈறு.

**267. வேற்றுமைக் கண்ணும் அதனோ ரற்றே. (64)**

ஆ. மொ: இல.

Even in case relation the same
condition prevails-

க. சு.

In case-relationship, too, it is the same like that

பி. இ. நூ.

சூ. 204—இன்கீழ் உள்ளன கொள்க.

**இளம்.**

இது, ஊகாரவீறு வேற்றுமைக்கண் முடியுமாறு கூறுதல் நுதலிற்று.

இ—ள் ; வேற்றுமைக்கண்ணும் அதன் ஓரற்று—ஊகார வீறு வேற்றுமைப் பொருட்புணர்ச்சிக்கண்ணும் அவ் ‡ஆகார

‡ அவ்வாகார வீற்று வேற்றுமையோடு ஒத்த இயல்பிற்று எனக்கூறல்ாம்—சாஸ்திரியார்,

வீற்று அல்வழியோடு ஒத்த இயல்பிற்றாய் வல்லெழுத்து வந்த வழி வல்லெழுத்துமிக்கு முடியும்.

உ—ம் ; கொண்மூக்குழாம்; செலவு, தோற்றம், *பறைவு எனவரும்.

நச்.

இஃது ஊகாரஈறு வேற்றுமைக்கண் முடியுமாறு கூறுகின்றது.

இ—ள் : ஊகாரவீறு வேற்றுமைப் பொருட்புணர்ச்சிக் கண்ணும் ஆகார வீற்று அல்வழிபோல வல்லெழுத்து மிக்கு முடியும்; எ—று.

உ—ம் : கழூஉக்கடுமை, சிறுமை, தீமை, பெருமை; கொண்மூக்குழாம், செலவு, தோற்றம், பறைவு எனவரும்.

குறிற்கீழ் ஊகாரமும் தனிமொழி ஊகாரமும்

**268.** **குற்றெழுத் [1]திம்பரும் ஓரெழுத்து மொழிக்கும்**
**நிற்றல் வேண்டும் உகரக் கிளவி.** (65)

**ஆ. மொ: இல.**

The letter 'u' must stand after 'ū'
following a short letter (word) and
after the one letter word (U)

**க. சு.**

The sound u must occur (after ū)
following after the one-letter word
and after a short-vowel (word).

**இளம்.**

இது இவ்வீற்றிற் சிலவற்றிற்கு எய்தியதன் மேற்சிறப்பு விதி கூறுதல் நுதலிற்று.

---

* பறைவு—ஒலி.

சு. வே : 1. தும்பரும்

இ—ள் ; குற்றெழுத்து இம்பரும் ஓர் எழுத்து மொழிக்கும் உகரக் கிளவி நிற்றல் வேண்டும்—குற்றெழுத்தின் பின் நின்ற ஊகாரவீற்று மொழிக்கும் ஓரெழுத்தொரு மொழியாகிய ஊகார வீற்று மொழிக்கும் உகரமாகிய எழுத்து' நிற்றலை வேண்டும்.

உ—ம் ; †உடூஉக்குறை, தூஉக்குறை, [2]செய்கை, தலை, புறம் எனவரும்.

'நிற்றல்' என்றதனால் இவ்வீற்று உயர்திணைப் பெயர் வேற்றுமைக்கண் வல்லெழுத்து [3]மிகுவனவும் கொள்க. ஆடூஉக் கை, மகடூஉக்கை, செவி, தலை. புறம் எனவரும்.

**நச்.**

இஃது இயைபு வல்லெழுத்தினோடு உகரம் வகுத்தலின் எய்தியதன்மேற் சிறப்புவிதி கூறுகின்றது.

இ—ள் : குற்றெழுத்தின் பின் வந்த ஊகார வீற்று மொழிக் கும், ஓரெழுத்தொரு மொழியாகிய ஊகார வீற்று மொழிக்கும் உகரமாகிய எழுத்து நிற்றலை விரும்பும் ஆசிரியன்; எ—று.

உ—ம் : உடூஉக் குறை, செய்கை, தலை, புறம் எனவும்; தூஉக்குறை, செய்கை, தலை, புறம் எனவும் வரும்.

நிற்றல் என்றதனான் உயர்திணைப் பெயர்க்கும் வல்லெழுத் தும் உகரமுங்கொடுக்க. ஆடூஉக்கை, மகடூஉக்கை, செவி, தலை புறம் எனவரும்.

தொகை மரபினுள் இயல்பாதல் எய்தியவற்றை (தொகை மரபு 11) ஈண்டு இருவழிக்கண்ணும் முடித்தார், ஈற்றுப் பொது ஒப்புமை கண்டு.

**சுப்.**

"நிற்றல் என்றதனால் இவ்வீற்றுயர்திணைப் பெயர் வேற்றுமைக்கண் வல்லெழுத்துமிக்கு முடிவன என்பது; ஆடூஉக்கை. மகடூஉக்கை எனவரும்" என இளம்பூரணரும், "நிற்

---

சு.. வே :

2. செயற்கை
3. மிக்கு முடிவனவும், மிக்குமுடிவனவென்பது.

† உடூஉ—உடு = நாண்மீன், தூ = ஊன்.

றல் என்றதனான் உயர்திணைப் பெயர்க்கும் வல்லெழுத்தும் உகரமும் கொடுக்க'' என நச்சினார்க்கினியரும் கூறினர். இளம்பூரணர் கொள்கையை நோக்கின் 'ஆடூஉ மகடூஉ' என்பனவே அப்பெயர்களின் இயற்கையுருவம் எனத் தோன்றுகின்றது. அதற்குச் சான்றாக ''ஆடூஉ மகடூஉ'' (எழு 272) என்ற சூத்திரமும் இருக்கலாம் நச்சினார்க்கினியர் கொள்கைப்படி அவற்றின் உருவம் 'ஆடூ', 'மகடூ' எனத் தோன்றுகின்றது. அதற்குச் சான்று ஊகார விறுதிப் பெயர்களின் புணர்ச்சியைப் பற்றிக் கூறும் இவ்விடத்து ''ஆடூஉ மகடூஉ'' என்ற சூத்திரத்தைப் படித்தல் ஆகும். அங்கு 'ஆடூஉ மகடூஉ' என இருக்கின்றனவே எனின், அங்குள்ள இறுதி உகரம் ''நிகழூஉ நின்ற'' (சொல் 173) என்றவிடத்துப் போன்று அளபெடையாய் இருத்தல் கூடும். பிற்காலத்து ஆடூஉ மகடூஉ இவையே இயற்சொல் எனக் கருதியிருத்தல் கூடும். ஆடூஉக்கை முதலியவற்றைக் ''கிளந்தவல்ல'' (எழு. 483) என்றதனாற் கொள்ளின் நலம். ''ஆடூ மகடூ வாயிருபெயரும்'' போன்று 272 ஆவது சூத்திரத்தின்கண் ''ஆடூ மகடூ வாயிருபெயர்க்கும்'' என்ற பாடமும் இருத்தல் கூடும்.

பூ

**266 பூஎன் ஒருபெயர் ஆஇயல் பின்றே**
**ஆவயின் வல்லெழுத்து மிகுதலும் உரித்தே** (66)

**ஆ. மொ: இல.**

The noun 'Pū' fails to have the above rules
The appearance of hard consonant may also occur
(The appearance of respective soft consonant is natural)

**க. சு.**

The change does not take place with the one noun 'Pū' 'flower'; in that place, the stop may be inserted

**பி. இ. நூ.**

**நன்** 200

பூப்பெயர் முன்இன மென்மையும் தோன்றும்

**இ. வி.** 96

பூப்பெயர் முன்இன மெல்லெழுத்து மிகுதலும்
போற்றல் வேண்டும் வேற்றுமைக் கண்ணே

**முத்து. பு.** 118

பூப்பெயர் முன் இன மென்மையும் தோன்றும்

**இளம்.**

இது அவற்றுள் ஒன்றற்கு உகரமும் வல்லெழுத்தும் விலக்கிப் பெரும்பான்மை மெல்லெழுத்தும் சிறுபான்மை வல்லெழுத்தும் பெறும் என எய்தியது விலக்கிப் பிறிது விதி வகுத்தல் நுதலிற்று.

இ—ள்; பூ என் ஒரு பெயர் அ இயல்பு இன்று—பூ என்னும் ஊகார வீற்றையுடைய ஒரு பெயர் மேற்சொன்ன உகரமும் வல்லெழுத்தும் பெற்று முடியும் அந்த இயல்பில்லாமையை உடைத்து; எனவே வேறு ஓர் இயல்பிற்றாய் மெல்லெழுத்து மிக்கு முடியும்; ஆவயின் வல்லெழுத்து மிகுதலும் உரித்து—அவ் விடத்து அம்மெல்லெழுத்தேயன்றி வல்லெழுத்து மிக்கு முடிதலும் உரித்து.

மெல்லெழுத்துப் பெறும் என்றது, உரையிற் கோடலால் கொள்ளப் பட்டது.

உ-ம்: பூங்கொடி, பூக்கொடி, செய்கை, தாமம், பந்து என வரும்.

**நச்.**

இஃது ஊகாரவீற்றுள் ஒன்றற்கு உகரமும் இயைபு வல் லெழுத்தும் விலக்கிப் பெரும்பான்மை மெல்லெழுத்துஞ் சிறு பான்மை வல்லெழுத்தும் பெறும் என எய்தியது விலக்கிப் பிறிது விதி வகுத்தது.

இ—ள்: பூஎன்னும் ஊகாரவீற்றையுடைய ஒரு பெயர் மேற்கூறிய உகரமும் வல்லெழுத்தும் பெற்று முடியும் அவ்வியல் பின்மையை உடைத்து; அவ்விடத்து மெல்லெழுத்துமிக்கு முடிதலேயன்றி வல்லெழுத்துமிக்கு முடிதலும் உரித்து; எ—று.

உ-ம்: பூங்கொடி, சோலை, தாமம், பந்து எனவும்; பூக் கொடி, செய்கை தாமம், பந்து எனவும் வரும்.

பூ என்பது பொலிவென்னும் வினைக் குறிப்பை உணர்த்தாது நிற்றற்கு ஒரு பெயர் என்றார்.

**சுப்.**

மெல்லெழுத்து மிகும் என்பதை இளம்பூரணர் உரையிற் கோடலாற் கொள்ளப்பட்டதென்றும், நச்சினார்க்கினியர் உம்மை

யாற் பெறப்பட்டதென்றும் கூறினர். நச்சினார்க்கினியர் கூற்றே பொருத்தமானது. மிகுதலும் என்ற உம்மையால் வல்லெழுத்து மிகுதல் சிறுபான்மை எனக் குறிக்கப் படுகின்றது.

ஊகார விறுதி ஓரெழுத்தொரு மொழியுள் பூ என்றதே உகரக் கிளவி பெறாது என்றதை உணர்த்த 'ஒருபெயர்' என்றதைச் சூத்திரத்தில் ஆசிரியர் கூறினும் "பூவென்பது பொலி வென்னும் வினைக் குறிப்பை உணர்த்தாது நிற்றற்கு ஒரு பெயர் என்றார்" என நச்சினார்க்கினியர் கூறுதல் பொருத்தமின்று. அவ்வாறாயின் 'பெயர்' ஒன்றே கூறியிருப்பர் ஆசிரியர். வல் லெழுத்து மிகுதலும் என்ற உம்மையான் மெல்லெழுத்து மிகுதல் எவ்வாறு பெறப்பட்டது எனின், வேற்றுமைக் கண் ஊகாரவிறுதி ஆகார வியற்றேயெனவும் ஆகார விறுதியைப் பற்றிய சூத்திரங் களில் 'அகரக்கிளவி தோன்றும்' எனவும் கூறிய சூத்திரங்களின் பின்னர் 'மெல்லெழுத்து மிகுமே' (எழு 230) என்றும் வல்லெழுத்து மிகினுமான மில்லை" (எழு 231) என்றும் கூறினமையின் என்னலாம்.

ஊ என்பெயர்

**270 ஊஎன் ஒருபெயர் ஆவொடு சிவணும்.** (67)

ஆ. மொ: இல.

The one letter word ·U' follows 'ā'
(in having 'ṉ' after it)

க. சு.

The one noun 'ṉ' flesh joins with ā

பி. இ. நூ.

முத்து. பு. 118.

ஊன்கரத்தொடும் ஒழுகும் என்ப

இளம்.

இது, [1]இன்னும் அவ்வீற்றுள் ஒன்றற்கு உகரமும் வல்லெழுத்தும் விலக்கி நிலைமொழி னகரம் பெறும் என எய்தியது விலக்கிப் பிறிது விதி வகுத்தல் நுதலிற்று.

சு. வே ;
1. இன்னம்

இ—ள் : ஊஎன் ஒருபெயர் ஆவொடு சிவணும்—ஊ என்று சொல்லப்படும் ஊகாரவீற்றையுடைய ஒரு பெயர் ஆகார வீற்றில் ஆ என்னும் சொல்லொடு [2]பொருந்தி, உகரமும் வல்லெழுத்தும் பெறாது நிலைமொழி னகர ஒற்றுப் பெற்று முடியும்.

உ—ம் : ஊன்குறை, செய்கை, தலை, புறம் என வரும்.

நச்.

இஃது எய்தியது விலக்கிப் பிறிது விதி வகுத்தது, உகரமும் வல்லெழுத்தும் விலக்கி னகரம் விதித்தலின்.

இ—ள் : ஊ எனத் தசையை உணர்த்தி நின்ற ஓரெழுத்து ஒருமொழி, ஆகாரவீற்றில் ஆவென்னுஞ்சொல் வல்லெழுத்துப் பெறாது னகர ஒற்றுப பெற்று முடிந்தாற்போல னகர ஒற்றுப் பெற்று முடியும்; எ—று.

உ—ம் : ஊ வென நிறுத்தி னகர ஒற்றுக் கொடுத்து ஊன் குறை, செய்கை, தலை, புறம் என முடிக்க. ஊ என்பது தசையை யுணர்த்தி நின்ற வழக்கு ஆசிரியர் நூல் செய்த காலத்து வழக்கு. ‡அன்றித்தேய வழக்கேனும் உணர்க.

**271. அக்குஎன் சாரியை பெறுதலும் உரித்தே**
**தக்கவழி அறிதல் வழக்கத் தான. (68)**

**ஆ. மொ. இல.**

It will have the increment 'akku' also,
such usage is to be found in its
proper place.

**க சு.**

Know that in usage, in the proper
place, it should take the empty
morph akku

---

சு. வே :

2. பொருந்தி வல்லெழுத்துப்
‡ தேயவழக்கு—தமிழகத்திலேயே ஒரு பகுதி வழக்கு, பிற தேயவழக்கன்று, ஆசிரியர் அதற்கு இலக்கணம் கூறார் ஆதலின்.

பி. இ. நூ.

முத்து. பு. 120

அக்கொடு வருதலும் அதனியல் பாகும்.

இளம்.

இது இன்னும் அதற்கு எய்தியதன்மேற் சிறப்பு விதி கூறுதல் நுதலிற்று.

இ—ள் : அக்கு என்சாரியை பெறுதலும் உரித்து—அதிகாரத் தான் நின்ற ஊ என்னும் பெயர் மேற்கூறிய னகரத்தோடு அக்கு என்னும் சாரியை பெற்று முடிதலும் உரித்து; வழக்கந்தான் தக்க வழி அறிதல்—வழக்கிடத்து அம்முடிபு தக்க இடம் அறிக.

'தக்கவழியறிதல்' என்றதனால், சாரியை பெற்றவழி நிலை மொழி னகரம் விலக்குண்ணாது நிற்றலும் முன் †மாட்டேற்றால் விலக்குண்ட வல்லெழுத்துக் கெடாது நிற்றலும் கொள்க.

உ—ம் : ஊனக்குறை, செய்கை, தலை, புறம் எனவரும்.

'வழக்கத்தான' என்றதனால் இவ்வீற்று உருபிற்குச் சென்ற சாரியை பொருட்கண் சென்றவழி இயைபு வல்லெழுத்து வீழ்க்க; கொண்மூவின் குழாம் எனவரும்.

நச்.

இஃது எய்தியதன்மேற் சிறப்பு விதி கூறுகின்றது.

இ—ள்: அதிகாரத்தான் நின்ற ஊ என்னும் பெயர் முற் கூறிய னகரத்தோடு அக்கு என்னும் சாரியை பெற்று முடிதலும் உரித்து; அம்முடிபு வழக்கிடத்துத் தக்க இடம் அறிக; எ—று.

'தக்கவழி யறிதல்' என்றதனாற் சாரியை பெற்றுழி னகரம் விலக்குண்ணாது நிற்றலும், முன்மாட்டேற்றால் விலக்குண்ட வல்லெழுத்துக் கெடாது நிற்றலும் கொள்க.

உ-ம்: ஊனக்குறை, செய்கை, தலை, புறம் எனவரும்.

---

‡ மாட்டேற்றால் விலக்குண்ட வல்லெழுத்துக் கெடாது நிற்றலாவது, 'ஊ' என்பது 'ஆ'வோடு மாட்டேற்றப் பட்டதாதலின் அவ் 'ஆ' என்பதற்கு ' மாமரக் கிளவியும் ஆவும் மாவும்'' (எழு. 232) என்ற சூத்திரத்தில் "அகரம் வல்லெழுத்தவையவண் நிலையா'' என விலக்கப்பட்ட வல்லெழுத்து ஈண்டுக் கெடாது நிற்றலாம்.

'வழக்கத்தான' என்றதனான் ஊகாரவீற்றுச் சொல்லிற்கு உருபிற்குச் சென்ற சாரியை பொருட்கண் சென்றுழி இயைபு வல்லெழுத்துக் கெடுக்க. கொண்மூவின் குழாம், உடூஉவின்றலை, ஊவின்குறை எனவரும்.

**சுப்.**

உ-ம்: ஊ + குறை = ஊ + ன் + குறை (270) = ஊ + ன் + அக்கு + குறை = ஊ + ன் + அ + குறை (எழு 129) = ஊனக்குறை (எழு 267).

வேற்றுமைக்கண்ணும் அதனோரற்றே (எழு 267) என்ற சூத்திரத்தான் ஊஎன்ற நிலைமொழியின் பின்னர் வல்லெழுத்து மிகும் என்று இருக்கின்றமையானும் னகரம் அக்குச சாரியையும் பெற்றது 'ஊ' என்ற பெயரேயாதலின் 'ஊன்' என்பது அப் பெயரின் விகாரம் எனக் கொள்ளுதல் பொருந்துமாகலானும் அச்சூத்திரத்தானே வல்லெழுத்து மிகுதி கொள்ளலாம் எனத் தோன்றுகின்றது.

**வேங்.**

"வழக்கத்தான என்றதனால்...வல்லெழுத்து வீழ்க்க" என்றனர் உரையாளர். ஆசிரியர் மேல், "னகரம் ஒற்றும் ஆவும் மாவும்" (எழு. 231) என்றும், மேலைச் சூத்திரத்தில் 'ஊவென் ஒருபெயர் ஆவொடு சிவணும்" என்றும், இச்சூத்திரத்தில் "அக் கென்சாரியை பெறுதலும் உரித்தே" என்றும் பிறாண்டும் புணர்ச்சிக்கண் சாரியை பெறும் சொற்களை விதந்து கூறி விதித்த லின், பொருட் புணர்ச்சிக்கண் சாரியைப்பேறு விதியாதவற்றிற்கு உருபு புணர்ச்சியிற் கூறிய சாரியை வாராது.

ஆடூஉ, மகடூஉ

**272.** **ஆடூஉ மகடூஉ ஆயிரு பெயர்க்கும்**
**இன்னிடை வரினும் மானம் இல்லை.** (69)

**ஆ.** மொ: இல.

There is no harm in the appearance
of 'in' between those two nouns
'Adūu' and 'mahadūu'

க. சு.

There is no harm if the particle
in̲ occurs with the two words āṭūu
'man' and makaṭūu 'woman'.

பி. இ. நூ.

முத்து. பு. 121

ஆடூஉ மகடூஉ இன்னொடு நிலையும்.

இளம்.

இது அவ்விற்று உயர்திணைப் பெயர்க்கு முன் எய்திய வல்லெழுத்தேயன்றி, [1]சாரியையும் பெறும் என எய்தியதன் மேற் சிறப்புவிதி கூறுதல் நுதலிற்று.

இ—ள் ; ஆடூஉ மகடூஉ அ இரு பெயர்க்கும்—ஆடூஉ மகடூஉ வாகிய அவ்விரண்டு பெயர்க்கும், இன்இடை வரினும் மானம் இல்லை—மேல் [2]''குற்றெழுத்திம்பரும்'' (உயிர்ம. 65) என்னும் சூத்திரத்தின் நிற்றல் என்பதனால் வந்த வல்லெழுத்தேயன்றி இன்சாரியை இடைவரினும் குற்றம் இல்லை.

உ—ம் : ஆடூஉவின்கை, மகடூஉவின்கை, செவி தலை, புறம் எனவரும்.

மானமில்லை என்றதனான், இன்பெற்றவழி மேல் (268) இலேசினான் எய்திய [3]வல்லெழுத்து வீழ்க்க.

நச்.

இது குற்றெழுத்திம்பரும் (எழு 267) என்பதனுள் நிற்றல் என்ற இலேசான் எய்திய வல்லெழுத்தே யன்றிச் சாரியையும் வகுத்தலின் எய்தியதன்மேல் சிறப்பு விதி உணர்த்தியது.

---

சு. வே :

1. இன்சாரியை இடையே வரினும் குற்றம் இல்லை என எய்திய தன் மேல்
2. குற்றெழுத்தும்பரும்
3. வல்லெழுத்து வந்து......போல நின்றமையின் வினை யெஞ்சு கிளவியில் 'நினையுங்காலை' இலேசால் 'ஆடூஉ விற்கு' வல்லெழுத்து விதித்தார் (ஞானியார் மடத்துச் சுவடி-2 திரு. அடிகளாசிரியர் வசம் உள்ளது).

இ—ள் : ஆடூஉ மகடூஉ வாகிய உயர்திணைப் பெயர் இரண்டிற்கும், முன் எய்திய வல்லெழுத்தே யன்றி இன் சாரியை இடையே வரினும் குற்றமில்லை; எ—று.

உ—ம் : ஆடூஉவின்கை, மகடூஉவின்கை, செவி, தலை, புறம் என வரும்.

'மானமில்லை' என்றதனான் இன்பெற்றுழி மேல் எய்திய வல்லெழுத்து வீழ்க்க.

சுப்.

'வரினும் மானமில்லை' என்றதனால் இன்சாரியை வாராமலிருத்தலே பெரும்பான்மையாகும். இச்சூததிரம் 'குற்றெழுத்திம்பரும்' (267) என்ற சூத்திரத்துள்ள நிற்றல் என்றதனால் உரைகாரர்களாற் கொள்ளப்பட்ட வல்லெழுத்து மிகுதி, புறனடையென்பது அவர்தங் கொள்கை. "உயிரீறாகிய உயர்திணைப் பெயரும்" (எழு 154) என்ற சூத்திரத்தாற் கூறப்பட்ட இயல்பிற்கு இச்சூத்திரம் புறனடையாகக் கொள்ளலாம். அவ்வாறாயின் 'வரினும்' என்ற உம்மையான் கொள்ளப்படுவது வல்லெழுத்து மிகுதியாகாது, இயல்பேயாகும். அவ்வாறு கொள்ளின் வல்லெழுத்து மிகுதி எதனாற் கொள்ளப்படும் எனின் 'கிளந்தவல்ல'' (எழு 483) என்ற சூத்திரத்தான் என்க.

இச்சூத்திரத்தில் 'ஆடூஉ மகடூஉ' என்பது பாடமா, 'ஆடூ மகடூ' என்பது பாடமா என ஆராய்தற்பாலது. ஊகாரவதிகாரத்தில் இச்சூத்திரம் படிக்கப்பட்டமையானும் ஆடூ, மகடூ என்ற பாடமே சொல்லதிகாரத்துப் பெயரியலிற் சேனாவரையராற் கொள்ளப்பட்டமையானும், ஆடூஉ, மகடூஉ என்பன ஆசிரியர் கொள்கையில் உகரவீறாகாமையானும், இவை குற்றெழுத்தின் பின்னர் ஊகாரத்தைக் கொண்ட ஈரெழுத்தொரு மொழியாக இல்லாமையின் 'குற்றெழுத்திம்பரும்'' என்ற சூத்திரத்தான் உகரம் பெற்றன எனக் கூறலாகாமையானும் 'ஆடூ; மகடூ' என்பதே பாடமோ எனத் தோன்றுகிறது. ஆடூ, மகடூ என்பதே பாடமாயின் ஆங்கு உகரம் "நிகழூஉ நின்ற'' (சொல் 173) என்ற விடத்துப் போல அளபெடையாகும். அவ்வாறாயின் ''ஆடூஉவறி சொல்'' (சொல் 2) போன்றவிடங்களினும் உகரம் செய்யுளில் வந்த அளபெடையாகக் கொள்ளல் தகும்.

**வேங்.**

உயர்திணைப் பெயர்க்கு இன் சாரியை விதித்தா ராகலின் ஆடு மகடூ என்னும் பெயர்கட்கு இன் சாரியை வருதல் இயையா தாயினும், அவை சொல்லான் அஃறிணை போறலின் இன் சாரியை வருதல் குற்றமில்லை என்றார்.

சாரியை பெறுஞ் சொற்களை ஆசிரியர் எடுத்துக் கூறுதல் இச்சூத்திரத்தானும் அறியப்படும்.

## 7. எகர ஒகர ஈறு.

*அல்வழியில் எகர ஒகர ஈறுகள்.*

**273.** **எகர ஒகரம் பெயர்க்கு ஈறாகா**
**முன்னிலை மொழிய என்மனார் புலவர்**
**தேற்றமும் சிறப்பும் அல்வழி யான.** (70)

ஆ. மொ: இல.

'e' and 'o' shall not form the end of nouns.
Except in the second person — say the learned.
They appear denoting certainly and distinctiveness respectively in non-case relations.

க. சு.

The sounds e and o shall not stand at the end of nouns;
Scholars maintain (that they occur) in words of second person except when they (denote) certainly and distinctiveness.

பி. இ. நூ.

இ. வி. 97

தேற்றமும் சிறப்பும் அல்வழி யான
எகர ஒகரம் பெயர்க்கீ றாகா
முன்னிலை மொழிய என்மனார் புலவர்.

இளம்.

இது எகரவீற்றிற்கும் ஒகரவீற்றிற்கும் ஈறாகாத நிலையில் வேறுபாடு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்: ஏகரம் ஒகரம் பெயர்க்கு ஈறு ஆகா — எகரமும் ஒகரமும் பெயர்ச் சொற்கு ஈறு ஆகா, முன்னிலை மொழிய என்மனார் புலவர்—முன்னிலை மொழியிடத்தன என்று சொல்லுவர் புலவர்; தேற்றமும் சிறப்பும் அல்வழியான - தேற்றப் பொருண்மையில் வரும் இடைச்சொல் எகார வீறும் சிறப்புப் பொருண்மையில் வரும் இடைச்சொல் ஒகாரவீறும் அல்லாத விடத்து.

உ-ம் ; ‡ஏஎ எனவும், ஓஒ எனவும் வரும். இவை முன்னிலை வினை.

ஏஎ கொண்டான், ஓஒ கொண்டான் இவை இடைச்சொல்.

நச்.

இஃது எகர ஒகரம் ஈறாம் இடம் உணர்த்துகின்றது.

இ-ள்; தெளிவுப் பொருளும் சிறப்புப் பொருளும் அல்லாத வேற்றுமைப் பொருண்மையிடத்து அளபெடுத்துக் கூறுதலின் உளவாகிய எகர ஒகரங்கள் பெயர்க்கு ஈறாய் வாரா; வினைக்கு ஈறாய் வரும். அவைதாம் தன்மையினும் படர்க்கையினும் வாரா; முன்னிலைச் சொல்லிடத்தனவாம் என்று கூறுவர் புலவர்; எ-று.

எனவே, தெளிவுப் பொருளிலும் சிறப்புப் பொருளிலும் வந்து பெயர்க்கு ஈறாம் இடைச் சொல்லாகிய எகர ஒகரம் மூன்றிடத்திற்கும் உரியவாம் என்று பொருளாயிற்று; என இங்ஙனம் அருத்தாபத்தியாற் கொண்டதற்கு இலக்கணம் மேலைச் சூத்திரத்தாற் கூறுப.

உ-ம்: ஏஎக் கொற்றா ஓஒக் கொற்றா, சாத்தா, தேவா, பூதா என வரும்.

இவை 'எனக்கு ஒரு கருமம் பணி' எனவும், இங்ஙனம் செய்கின்றதனை ஒழி' எனவும் முன்னிலை ஏவற் பொருட்டாய் வந்தன. இதற்கு வல்லெழுத்துப் பெறுமாறு மேலே கூறுப.

சுப்.

தேற்றம். சிறப்பு இப்பொருள்களில் பெயரின் பின்னர் எகர ஒகரங்கள் "தெனிவின் ஏயும்" (சொல் 261) என்ற சூத்திரத்தான்

‡ ஏஎ + ஏவுக; ஓஒ + நீங்குக.

வரும் என்க. தேற்றப் பொருளில் ஏகாரமும், சிறப்புப் பொருளில் ஓகாரமுமே இடையியலிற் கூறப்பட்டனவேயன்றி எகர ஒகரங்கள் கூறப் படவில்லையெனின், இச்சூத்திரத்தானே அவற்றின் பின்னர் எகர ஒகரங்கள் அளபெடையாய் வரும் எனக் கொள்க. அவ் வறாயின் ஏஎ, ஓஒ என்பன மூன்று மாத்திரை பெற்ற எழுத் தல்லவோ எனின் "மூவள பிசைத்தல் ஓரெழுத்தின்றே" (எழு. 5) என ஆசிரியர் கூறினமையான், அவை இரண்டெழுத்துக்களால் ஆக்கப்பட்டன என்பதும், ஆதலின் அவை எகர ஒகர வீறாகக் கொள்ளப்பட்டன என்பதும் விளங்கும்.

இடைச் சொற்கள்.

**274.** **தேற்ற எகரமும் சிறப்பின் ஒவ்வும்**
**மேற்கூறு இயற்கை வல்லெழுத்து மிகா.** (71)

**ஆ. மொ: இல.**

'e' denoting certainly and 'o' denoting distinctiveness have not the occurrence of hard sounds.

**க. சு.**

The sound e (denoting) certainly and the o (denoting) distinctiveness will not have the occurrence of plosives.

**பி. இ. நூ.**

**இ. வி. 98.**

தேற்ற எகரமும் சிறப்பின ஒவ்வும்
மேற்கூ றியற்கை வல்லெழுத்து மிகா.

**இளம்.**

இது முன் ஈறாம் என்னப்பட்ட எகர, [1]ஒகர ஈற்று இடைச் சொற்கும் அவ்வீற்று முன்னிலை வினைச்சொற்கும் முடிவு கூறுதல் நுதலிற்று.

இ—ள் : தேற்ற எகரமும் சிறப்பின் ஒவ்வும்—தேற்றப் பொருண்மையில் வரும் எகரவீற்று இடைச்சொல்லும் சிறப்புப்

சு. வே ;

1. ஒகரஇடைச் சொற்கும்

பொருண்மையில் வரும் ஒகர வீற்று இடைச் சொல்லும், மேல் கூறு இயற்கை வல் எழுத்து மிகா—மேலை முன்னிலை வினைச் சொற்குக் கூறப்படும் [2]இயல்புடைய வல்லெழுத்து மிகாவாய் இயல்பாய் முடியும்.

'மேற்கூறியற்கை வல்லெழுத்து மிகா' என்றதனால் 'வந்தது கண்டு வாராதது உணர்க' என்னும் தந்திர வுத்தி வகையான் வல்லெழுத்து மிகும் என்பது கூறப்பட்டதாயிற்று.

உ—ம் : யானேஎ கொண்டேன், நீயேஎ கொண்டாய், அவனேஎ கொண்டான் எனவும்; ஓஒ கொண்டேன், ஓஒ கொண்டாய், ஓஒ கொண்டான் எனவும் வரும் இவை இடைச் சொல்.

ஏஎக் கொற்றா, ஓஒக்கொற்றா, சாத்தா, தேவா, பூதா என இவை முன்னிலைவினை. 'இயற்கை' என்றதனான் [3]அம் முன்னிலை வினைகளை அளபெடையாக நிறீஇக் கொள்க.

நச்.

இஃது எய்தியது இகந்துபடாமற் காத்து எய்தாதது எய்து வித்தது.

இ—ள் : முன்னர் அருத்தா பத்தியாற் பெயர்க்கண் வரும் என்ற தேற்றப் பொருண்மையில் எகரமும் சிறப்புப் பொருண் வையில் ஒகரமும் மூன்றிடத்தும் வரும் என்ற இலக்கணத்தன வாம்; வல்லெழுத்து மிக்கு முடியா எனவே முன்னிலைக்கண் வரும் என்ற எகர ஒகரங்கள் வல்லெழுத்து மிக்கு முடியும்; எ—று.

உ—ம் : யானேஎ கொண்டேன், நீயேஎ கொண்டாய், அவனேஎ கொண்டான் எனவும்; யானோஒ கொடியன், நீயோஒ கொடியை, அவனோஒ கொடியன் எனவும் பெயர்க்கண் ஈறாய் இயல்பாய் வந்தவாறு காண்க. இது முன்னர் ஏய்திய இலக்கணம் இகவாமற் காத்தார். முன் நின்ற சூத்திரத்தின் முன்னிலைக்கும் வல்லெழுத்து மிகுத்து எய்தாதது எய்து வித்தார். இச்சூத்திரத்திற்கு அளபெடுத்தல் 'தெளிவினேயும்'

சு. வே :

2. இயல்பையுடைய

3. முன்னிலைவினைகளை,

(சொல் 261) என்னுஞ் சூத்திரத்தாற் கொள்க. எனவே, முடிவு பெற்றுழி இங்ஙனம் இடைச்சொல்லும் எடுத்தோதிப் புணர்ப்பர் என்பதூஉம் பெற்றாம்.

**சுப்.**

பொருள் : தேற்றப் பொருளில் வரும் எகரமும், சிறப்புப் பொருளில் வரும் ஒகரமும் மேற் கூறப்பட்ட வல்லெழுத்து மிகுதியைக் கொள்ளா, க ச த ப வரின். இதனால் முன்னிலை வினைக்கண் வருவது வல்லெழுத்து மிகுதியைக் கொள்ளும் என்பது பெறப்பட்டது.

உ—ம் : யானேஎ கொண்டேன், அவனோஒ கொண்டான்; ஏஎக்கொற்றா, ஓஒக் கொற்றா.

'மேற்கூறியற்கை' என்றதற்கு "மேலைமுன்னிலை வினைச் சொற்குக் கூறப்படும் இயல்பு" என்ற இளம்பூரணர் பொருளும், "மூன்றிடத்து வரும் என்ற இலக்கணத்தனவாம்" என்ற நச்சினார்க்கினியர் பொருளும் பொருந்துவனவாகத் தோன்ற வில்லை. முன்னிலை வினைக்கண் வல்லெழுத்து மிகுதியை ' எகரமும் ஒகரமும் வல்லெழுத்துமிகா" என்பதனாற் கொள்ளப் பட வேண்டுதலானும், "கூறிய வல்லெழுத்தியற்கையாகும்" (எழு. 276) என்றவிடத்து நச்சினார்க்கினியரே "முற்கூறிய வல்லெழுத்துப் பெறாது இயல்பாய் முடியும்" எனப் பொருள் கொள்ளுதலானும் என்க.

எகர விறுதியைப் பற்றிய சூத்திரங்களில் ஒகர விறுதியைப் பற்றியும் உடன் கூறியதற்குக் காரணம் இரண்டும் ஒரே தன்மை யனவாய் இருத்தலே யாகும்.

## கு சுந்தரமூர்த்தி

'வந்தது கொண்டு வாராதது உணர்க' என்பது, 'பெற்ற தொரு விதியைக் கொண்டு பெறாத விதியை யுணர்க' என்னும் கருத்தினை விளக்குவதாம். இதனை அருத்தாபத்தி என்றும் கூறுவர். இவ்வுத்தியால் இருகருத்தைப் பெறலாம்.

1, தேற்றப் பொருளில் எகரமும், 'சிறப்புப் பொருளில் ஒகரமும் வாராதபொழுது, அவை பெயர்க்கு ஈறாகா என்பது முன்னைய நூற்பாவில் கூறப்பட்ட விதியாகும். இங்ஙனம் கூறப்பட்ட விதியால், அவ் எகர ஒகரங்கள் தேற்றப் பொருளி

லும் வரும் பொழுது பெயர்க்கு ஈறாகும் என்ற விதியைப் பெற முடிகின்றது.

2 தேற்றப் பொருளிலும் சிறப்புப் பொருளிலும் எகர ஒகரங்கள் வரும் பொழுது (அதாவது பெயரில் வரும் பொழுது) வல்லெழுத்துமிகா என்பது இந்நூற்பாவில் கூறப்படுகின்ற விதியாகும், இதைக் கொண்டு இவ் எகர ஒகரங்கள் முன்னிலை வினையில் வரும் பொழுது வல்லெழுத்து மிகும் என்பதும் பெறப் படுகின்றது.

பாவாணர்

அருத்தாபத்தி—இருவகைப் பொருள்களுள் ஒருவகைக்கு விதந்து கூறியதை இன்னொரு வகைக்கு இல்லையென்று கொள்ளுதல். முந்தின நூற்பாவில் தெளிவுப் பொருளினும் சிறப்புப் பொருளினும் வராது வினைக்கு ஈறாகும் எகர ஒகரம் முன்னிலைக் குரியவாம் எனவே, தெளிவுப் பொருளிலும் சிறப்புப் பொருளிலும் வந்து பெயர்க் கீறாம் இடைச்சொல்லாகிய எகர ஒகரம் மூன்றிடத்திற்கும் உரியவாம் என்று கொண்டது அருத்தாபத்தி.

சிவ.

'மேற்கூறியற்கை...கூறப்பட்டதாயிற்று''—இதற்கு விளக்கம்:

இச்சூத்திரத்தின் முன்னே யாண்டும் எகர ஒகரவீற்று முன்னிலை வினைச்சொற்கு வல்லெழுத்து மிகும் எனக் கூறப்படவில்லை. அப்படியாகவும் 'மேற்கூறியற்கை வல்லெழுத்து' என்றமையால், இதில் சொல்லியதைக் கண்டு இவ்விதி முன்னர்ச் சொன்னதாக வுணர்தல் வேண்டும். இச்சூத்திரத்தில் வந்தது 'மேற்கூறு இயற்கை வல்லெழுத்து' என்பது, வாராதது மேல் எங்கும் கூறப்படாமை. எனவே ஏகர ஒகர வீற்று முன்னிலை வினைச் சொற்கு வல்லெழுத்து மிகும் என்பது கூறப்பட்டிருக்க வேண்டும் என்பதும், அது எவ்வாறோ விடுபட்டிருக்க வேண்டும் என்பதும் அறியலாம்.

''இயற்கை என்றதனால்...அளபெடையாக நிறீஇக் கொள்க''— இதற்கு விளக்கம்;

எகர ஒகரம் பெயர்க்கீறாகா (எழு 273) எனவும், "ஏயென் இறுதிக்கு எகரம் வருமே" (எழு 278) எனவும் விதித்தலினாலும் இவ்வாறு அளபெடையாக நிறீஇக் கொள்க என்றார்.

## 8. ஏகார ஈறு

அல்வழியில் ஏகார ஈற்றுப் பெயர்

**275. ஏகார இறுதி ஊகார இயற்றே** (72)

ஆ. மொ: இல.

The ending of 'ē' is in the nature of 'ū'.

க. சு.

The ending in the long sound ē is
the same as the long sound ū.

பி. இ. நூ.

சூ. 204-இன் கீழ் உள்ளன கொள்க

இளம்.

இது ஏகாரவீற்று அல்வழி முடிபு கூறுதல் நுதலிற்று.

இ—ள்: ஏகாரஇறுதி ஊகார இயற்று—ஏகார வீற்றுப் பெயர் அல்வழிக்கண் ஊகாரவீற்று அல்வழி இயல்பிற்றாய் வல்லெழுத்து வந்தவழி வல்லெழுத்து மிக்கு முடியும்.

உ-ம்: *சேக்கடிது, சிறிது, தீது, பெரிது எனவரும்

நச்.

இது நிறுத்த முறையானே ஏகாரவீறு அல்வழிக்கண் புணருமாறு கூறுகின்றது.

இ—ள்: ஏகாரவீற்றுப் பெயர் அல்வழிக்கண், ஊகாரவீற்று அல்வழியின் இயல்பிற்றாய் வல்லெழுத்து வந்துழி அவ்வல்லெழுத்து மிக்கு முடியும்; எ—று.

உ-ம் †ஏக்கடிது, சேக்கடிது, சிறிது, தீது, பெரிது எனவரும்.

---

* சே—எருது

† ஏ=அம்பு

இடைச் சொற்கள்.

**276.** *[1]**மாறுகொள் எச்சமும் வினாவும் எண்ணும்
கூறிய வல்லெழுத்து இயற்கை யாகும்.** (73)

**ஆ. மொ: இல.**

ē denoting the sense of contradiction
interrogativeness and number
does not have the appearance of
hard consonants as stated above.

**க. சு.**

(The sound ē) denoting contradiction,
question and enumeration
does not have the occurrence of
plosives as stated above

**பி. இ. நூ.**

**முத்து. பு.** 122

ஏகாரத் தோற்றம் இயல்பா கும்மே.

**நன்.** 201

இடைச்சொல் ஏ... முன்வரின் இயல்பே

**இ. வி.** 99 ஷை ஷை

**இளம்.**

இது அவ்வீற்று இடைச்சொற்கு முடிபு கூறுதல் நுதலிற்று.

இ—ள்: மாறுகொள் எச்சமும் வினாவும் எண்ணும்—[2]மாறு பாடு கோடலையுடைய எச்சப் பொருண்மைக்கண் வரும் ஏகார வீற்று இடைச்சொல்லும் வினாப் பொருண்மைக்கண் வரும் ஏகாரவீற்று இடைச்சொல்லும் எண்ணுப் பொருண்மைக்கண் வரும் ஏகாரவீற்று இடைச்சொல்லும், கூறிய வல்லெழுத்து இயற்கையாகும்—மேற்கூறிய வல்லெழுத்துப் பெறாது இயல்பாய் முடியும்.

---

சு. வே:

1. மாறுகோள் (நச்)
2. மாறுகோடலை

* வராததனால் வந்தது முடித்தலுக்கு உதாரணம் (தொல் பொருள் 665 பேரா-உரை)

உ-ம்: யானே கொண்டேன், சென்றேன், தந்தேன், போயினேன் எனவும்; நீயே கொண்டாய், சென்றாய், தந்தாய், போயினாய் எனவும்; †கொற்றனே சாத்தனே தேவனே பூதனே எனவும் வரும்.

'கூறிய' என்றதனால் பிரிநிலைப் பொருண்மைக்கண்ணும் [2]ஈற்றசைக்கண்ணும் வரும் ஏகாரங்களின் இயல்பு முடிபு கொள்க.

‡அவனே கொண்டான் என்பது பிரிநிலை. கடலே பாடெழுந் [3]தொலிக்கும் என்பது ஈற்றசை.

நச்.

இஃது இடைச்சொற்கள் இயல்பாய்ப் புணரும் என எய்தாதது எய்துவித்தது.

இ—ள்: மாறுகோடலையுடைய எச்சப் பொருண்மைக்கண் வரும் ஏகாரவீற்று இடைச்சொல்லும், வினாப் பொருண்மைக்கண் வரும் ஏகாரவீற்று இடைச்சொல்லும். எண்ணுப் பொருண்மைக்கண் வரும் ஏகாரவீற்று இடைச்சொல்லும் முற்கூறிய வல்லெழுத்துப் பெறாது இயல்பாய் முடியும்; எ—று.

உ-ம்: யானே கொண்டேன், சென்றேன், தந்தேன், போயினேன் என்புழி யான் கொண்டிலேன் என மாறுகொண்ட ஒழிபுபட நின்றது. நீயே கொண்டாய், சென்றாய், தந்தாய், போயினாய் எனவும், $நிலனே நீரே தீயே வளியே, கொற்றனே சாத்தனே தேவனே பூதனே எனவும் வரும்.

கூறிய [4]என்றதனால் பிரிநிலை ஏகாரமும் ஈற்றிசைஏகாரமும் இயல்பாய் முடிதலும் கொள்க. ‡‡அவருள் இவனே கொண்டான்

---

† கொற்றனேச்சாத்தனே சாத்தனேத்தேவனே, தேவனேப் பூதனே என மிகாமல் இயல்பாய் வந்தமையறிக.

‡ அவனேக் கொண்டான் எனவும், கடலேப்பாடு எனவும் வாராமையறிக.

$ இதில் நீரே தீயே என்பதே உதாரணம்; அது நீரேத் தீயே என வாராமையறிக.

‡‡ இவனேக் கொண்டான் எனவும், கழியேச் சிறுகுரல் எனவும், கடலேப்பாடு எனவும் வாராமையறிக.

சு. வே:

2. ஈற்றிசைப் பொருட்கண்ணும்
3. திசைக்கும்
4. என்பதனால்

எனவும், கழியே சிறுகுரல் நெய்தலொடு பாடோவாதே, கடலே பாடெழுந்தொலிக்கும் எனவும் வரும்.

வேற்றுமையில் ஏகாரஈறு

**277. வேற்றுமைக் கண்ணும் அதனோ ரற்றே (74)**

**ஆ. மொ: இல:**

Even in case relations it has the
same position (of 'ū')

**க. சூ.**

In case-relationship, too, it is like that.

**பி. இ. நூ.**

சூ. 204-இன் கீழ் உள்ளன கொள்க.

**இளம்.**

இது இவ்வீற்று வேற்றுமை முடிபு கூறுதல் நுதலிற்று.

இ—ள்: வேற்றுமைக் கண்ணும் அதன் ஓர் அற்று—ஏகாரவீறு வேற்றுமைப் பொருட் புணர்ச்சிக் கண்ணும் அவ் ஊகார வீற்று அல்வழியோடு ஒரு தன்மைத்தாய் வல்லெழுத்து வந்தவழி வல் லெழுத்து மிக்கு முடியும்.

உ—ம்: ‡வேக்குடம், சாடி, தூதை, பானை எனவரும்.

**நச்.**

இஃது இவ்வீற்று வேற்றுமை முடிபு கூறுகின்றது.

இ—ள்; ஏகார வீற்று வேற்றுமைப் பொருட்புணர்ச்சிக் கண்ணும் ஊகாரவீற்று அல்வழிபோல வல்லெழுத்து வந்துழி அவ்வல்லெழுத்து மிக்கு முடியும்; எ—று.

உ-ம்! ‡ஏக்கடுமை, சிறுமை, தீமை, பெருமை எனவும்; வேக்குடம், சாடி; தூதை, பானை எனவும் வரும்.

வேக்குடம்—வேதலையுடைய குடம் என விரியும்.

---

‡ வேதல் என்பது வே என நின்றது; முதனிலைத் தொழிற் பெயர்.

‡ ஏக்கடுமை—குணவேற்றுமைப் புணர்ச்சி. வேக்குடம்—வேற்றுமைப் பொருட்புணர்ச்சி.

மேலும் ஓர் முடிபு

**278 [1]ஏயென் இறுதிக்கு எகரம் வருமே** (75)

**ஆ. மொ: இல.**

The ending of 'ē' may have 'e' after it.

**க. சு.**

The final ē will be followed by e.

**பி. இ நூ.**

**முத்து. பு.** 123

எகரச் சாரியை ஏ ஏற் கும்மே

**இளம்.**

இது அவ்வீற்றிற்கு எய்தியதன் மேற் சிறப்புவிதி கூறுதல் நுதலிற்று.

உ—ம்: ஏஎக்கொட்டில். சாலை, துளை, புழை எனவரும்.

உரையிற் கோடல் என்பதனால், அவ் எகரப் பேறு பொருந்தின வழிக் கொள்க.

**நச்.**

இது வல்லெழுத்தினோடு எகரம் விதித்தலின் எய்தியதன் மேற் சிறப்பு விதி கூறுகின்றது.

இ—ள்; அவ்வேற்றுமைக் கண் ஏயென்னும் இறுதிக்கு எகரம் வரும்; எ—று.

உ—ம்: ஏஎக் கொட்டில், சாலை, துளை, புழை எனவரும்.

‡உரையிற் கோடலால் எகாரம் ஏற்புழியும் வல்லெழுத்துப் பெறுதல் கொள்க. வருமொழி வரையாது கூறினமையின் இயல்பு கணத்துக்கண்ணும் வருமெனக் கொள்க.

ஏஎஞெகிழ்ச்சி, நேர்மை எனவரும்.

---

சு. வே: 1. ஏவென்

‡ ஏஎக் கொட்டில் என்பதில் எகரம் பெற்றமையும் பின்னர்'க்' பெற்றமையும் காண்க. முன் சூத்திரத்தில் எகரப் பேறு இன்மையால் இவ்வாறு எழுதினார். இளம்பூரணர் உரையிற்கோடல் என்பதனால் அவ்எகரப் பேறு பொருந்தின வழிக் கொள்க என்றதும் பார்க்க.

சேமரம்

**279 'சேயென் மரப்பெயர் ஒடுமர இயற்றே** (76)

ஆ. மொ: இல.

If it 'Cē' denoting tree has the
same position of 'odu' denoting tree

க. சு.

The noun 'cē' (denoting) a tree is of
The same nature as oṭu (denoting) a tree.

பி. இ. நூ.

முத்து. பு 124

சேமரம் ஒடுமரச் செய்கையின் இயலும்

இளம்.

இது அவ்வீற்றுள் ஒன்றற்கு வல்லெழுத்து விலக்கி மெல் லெழுத்து [2]விதித்தல் நுதலிற்று.

இ—ள் : சேவென் மரப்பெயர் ஒடுமர இயற்று—சே என்னும் மரத்தினை உணர நின்ற பெயர் ஒடுமரத்தின் இயல்பிற்றாய் மெல்லெழுத்து மிக்கு முடியும்.

உ-ம் ; சேங்கோடு, செதிள், தோல்; பூ எனவரும்.

நச்.

இஃது அவ்வீற்றுள் ஒன்றற்கு வல்லெழுத்து விலக்கி மெல் லெழுத்து விதித்தது.

இ—ள் : $பெற்றமன்றிச் சே வென்னும் மரத்தினை உணர நின்ற பெயர், ஒடுமரம்போல மெல்லெழுத்து மிக்கு முடியும், எ—று .

உ-ம் : சேங்கோடு, செதிள், தோல், பூ என வரும்.

---

சு. வே;

1. சேவென்
2. விதிகூறுதல்

$ பெற்றம்—ஆன் (மாடு)

**280. பெற்றம் ஆயின் முற்றஇன் வேண்டும்** (77)

**ஆ. மொ: இல.**

If it ('Cē') denotes 'ox' it
requires 'in'.

**க.சு.**

If it means perram 'bull',
it is neecssary (that it is followed)
by full in.

**பி. இ. நூ:**

**முத்து. பு.** 125

ஆன்பெய ராயின் இன்அடை யப்பெறும்

**இளம்.**

இது அம்மரப் பெயர் அல்லாத சே என்பதற்கு வேறு முடிபு கூறுதல் நுதலிற்று.

இ—ள்: பெற்றம் ஆயின் முற்ற இன் வேண்டும்—மேற் கூறிய சே என்பது பெற்றத்தினை உணர நின்ற பொழுதாயின் முடிய இன்சாரியை பெற்று முடியவேண்டும்.

உ—ம்: சேவின்கோடு, செவி, தலை, புறம் எனவரும்.

'முற்ற' என்றதனான் இச் சே என்பது *எடுத்தோத்தான் இன்பெற்ற வழியும், அதுவே மரப்பெயராய் உருபிற் கெய்திய சாரியை [1]பெற்ற வழியும், பிறசொல் அவ்வாறு இன் பெற்ற வழியும் இயைபு வல்லெழுத்து வீழ்க்க.

உ-ம்: சேவின்கோடு, செவி, தலை, புறம் எனவும்; சேவின் கோடு செதிள், தோல், பூ எனவும்; ஏவின் கடுமை, சிறுமை, தீமை, பெருமை எனவும் வரும்.

**நச்.**

இஃது இயைபு வல்லெழுத்து விலக்கி இன்வகுத்தது.

இ-ள்: முற்கூறிய சேவென்பது பெற்றத் தினை உணர்த்திய பொழுதாயின், முடிய இன்சாரியை பெற்று முடியவேண்டும்; எ—று.

---

* இச்சூத்திரத்தில் எடுத்து (விதந்து) ஓதியதனால்

சு. வே: 1. இன்பெற்ற வழியும்.

உ—ம்: சேவின் கோடு, செவி, தலை, புறம் எனவரும்.

'முற்ற' என்றதனானே முற்கூறிய சேவென்னும் மரப் பெயர்க்கும், ஏவென்பதற்கும், உருபிற்கு எய்திய சாரியை பொருட்கட் சென்றுழி இயைபு வல்லெழுத்து வீழ்தல் கொள்க. சேவின் கோடு, செதிள், தோல், பூ எனவும்; ஏவின் கடுமை, சிறுமை, தீமை, பெருமை எனவும் வரும்.

சாரியைப் பேறு, வருமொழி வரையாது கூறினமையின் இயல்பு கணத்தும் இன்பெறுதல் கொள்க. சேவினலம், மணி, வால், சேவினிமில், சேவினடை, சேவினாட்டம் எனவரும்.

இன்னும் இதனானே இயல்பு கணத்துக்கண் இன்பெறாது வருதலுங் கொள்க. செய்யுட்கண், † தென்றற்கு 'வீணைக்குச் **சேமணிக்குக்** கோகிலத்திற்—கன்றிற்கு' எனவரும்.

**வேங்.**

சே என்னுஞ் சொல் மரப்பெயரை உணர்த்தும்போது சாரியை பெறாமையின் 'பெற்றமாயின் முற்ற இன்வேண்டும் என்றார். இதனாலும் பொருட் புணர்ச்சியில் சாரியை பெறுவன வற்றை ஆசிரியர் எடுத்துக் கூறுவாராதல் அறியப்படும். ஆகலின் உரையாசிரியர்கள் ஏ என்னும் சொல்லும் இன்சாரியை பெறும் என்று காட்டியது பொருந்தாது.

நச்சினார்க்கினியர், "செய்யுட்கண் சேமணி...கன்றிற்கு" என்பது உதாரணமாகக் காட்டினார். ஆசிரியர் தனியே எடுத்து விதி கூறுதலின், 'சேமணி' என்று வருதல் அவர் கருத்திற்கு அமையாது. பிற்காலத்துச் செய்யுளில் வருவனவெல்லாம் ஆசிரியர் கருத்தாக அமைத்தல் கூடாதன்றே?

## 9. ஐகார ஈறு

வேற்றுமையில் ஐகார ஈறு

**281. ஐகார இறுதிப் பெயர்நிலை முன்னர்**
**வேற்றுமை யாயின் வல்லெழுத்து மிகுமே.** (78)

ஆ. மொ: இல.

Before the noun ending in 'ai' the appearance of hard consonants takes place if it is in case relation.

---

* இத்தொடரில் 'சேமணிக்கு' என்பதே உதாரணமாம். சே + மணிக்கு என்பது சேவின் மணிக்கு என இன்பெற்று வராமல் சேமணி என வந்தது காண்க. இதில் மகர மெல்லெழுத்து இயல்புகணம்.

க. சு.

After the standing noun ending in
—ai the Plosive will be doubled,
if it is in case-relationship.

பி. இ. நூ.

சூ. 204—இன் கீழ் உள்ளன கொள்க.

இளம்.

இது ஐகாரவீற்று அல்வழி முடிபு தொகைமரபினுட் (தொகை 16) கூறி நின்றமையின், அதன் வேற்றுமை முடிபு கூறுதல் நுதலிற்று.

இ—ள் : ஐகார இறுதிப் பெயர்நிலை முன்னர்—ஐகார வீற்றுப் பெயர்ச்சொல் முன்னர், வேற்றுமை ஆயின் வல் எழுத்து மிகும்—அதிகாரத்தாற் கசதப முதன்மொழி [1]வந்த வேற்றுமைப்[2] பொருட்புணர்ச்சியாயின் தமக்குப் பொருந்தின வல்லெழுத்து மிக்கு முடியும்.

உ—ம் : யானைக் கோடு, செவி, தலை, புறம் எனவரும்.

நச்.

இஃது ஐகார வீறு வேற்றுமைக்கண் முடியுமாறு கூறுகின்றது. தொகை மரபினுள் 'வேற்றுமை யல்வழி இஐ என்னும்' (எழு 159) என்பதன்கண் அல்வழி முடித்தார்.

இ—ள் : ஐகார வீற்றுப் பெயர்ச்சொல் முன்னர் அதிகாரத்தாற் கசதப முதன்மொழி வந்துழி, வேற்றுமைப் பொருட்புணர்ச்சியாயின் தமக்குப் பொருந்தின வல்லெழுத்துமிக்கு முடியும்: எ—று.

உ—ம் : யானைக் கோடு, செவி, தலை, புறம் எனவரும்.

'வேற்றுமையாயின்' என்றதனால் உருபு புணர்ச்சிக் கண்ணும் யானையைக் கொணர்ந்தான் என வல்லெழுத்து மிகுதல் கொள்க.

---

சு. வே ;

1. வந்தவழி. 2. பொருட்புணர்ச்சியில்.

சுப்.

உ—ம் : பனைக்கொடி (புறநா. 58) யானையைக் கண்டான்.

இது (யானையைக் கண்டான்) போன்றதையும், உருபு தொக்க தொகை மொழியிலுள்ள இரண்டு சொற்களுக்கும் உள்ளதையும், தொகையாகாத விடத்து உருபு தொகும் இடங்களில் வருவனவற்றையும் வேற்றுமைப் புணர்ச்சியால் ஆசிரியர் கொண்டனர் எனக் கொள்வதே நேரிதாகும். நச்சினார்க்கினியர் யானையைக் கொணர்ந்தான் என்றதை உருபு புணர்ச்சி எனக் கொண்டது நேரிதாகாது.

சுட்டுப் பெயர்.

**282. சுட்டுமுதல் இறுதி உருபியல் நிலையும் (79)**

ஆ. மொ: இல.

The demonstrative of 'ai' ending (when joining with the names of objects) have the same rules of case signs

க. சு

The final (ai) (of words) beginning with demonstratives has (the same) rules (as when it is followed by) a case-suffix.

உருபியற் சூத்திரம் (5)
சுட்டுமுத லாகிய ஐயென் இறுதி
வற்றொடு சிவணி நிற்றலும் உரித்தே

இளம்.

இது [1]இவ்வீற்றுச் சுட்டு முதற் பெயர்க்கு வல்லெழுத்தொடு வற்று வகுத்தல் நுதலிற்று.

இ—ள்: சுட்டுமுதல் இறுதி உருபியல் நிலையும்-சுட்டெழுத்தினை முதலாகவுடைய ஐகார வீற்றுப் பெயர் உருபு புணர்ச்சியிற் கூறிய (உருபி-5) இயல்பின்கண்ணே நின்று ஐகாரம் கெடாதும் கெட்டும் வற்றுப் பெற்று முடியும்.

சு. வே: 1. இவ்வீற்றுட்

உ-ம்: அவையற்றுக்கோடு, இவையற்றுக்கோடு, உவையற்றுக்கோடு, செவி, தலை, புறம் எனவும்; அவற்றுக்கோடு, இவற்றுக்கோடு, உவற்றுக்கோடு; செவி, தலை, புறம் எனவும் வரும்.

நச்.

இது வல்லெழுத்தினோடு வற்று வகுத்தலின் எய்தியதன்மேற் சிறப்பு விதி கூறுகின்றது.

இ—ள்: சுட்டெழுத்தினை முதலாகவுடைய ஐகார ஈற்றுப் பெயர், உருபு புணர்ச்சியிற் கூறிய இயல்பு போலப் பொருட் புணர்ச்சிக்கண்ணும் வற்றுப் பெற்று முடியும்; எ—று.

உ-ம்: அவையற்றுக் கோடு, இவையற்றுக் கோடு, உவையற்றுக்கோடு, செவி, தலை, புறம் எனவரும். இதனை 'வஃகான் மெய்கெட' (எழு 123) என்பதனான் முடிக்க.

பி. கு.

"அவற்றுக்கோடு முதலியவற்றை வகரவீற்றுச் சொற்களைப் பற்றிக் கூறும் "சுட்டுமுதலாகிய வகரவிறுதி" (எழு. 379) என்ற சூத்திரத்தில் ஆசிரியர் உணர்த்தினமையான் ஈண்டு அவற்றை உரைகாரர்கள் கொள்ளுதல் வேண்டா" என்பர் சுப்பிரமணிய சாஸ்திரியார். அவர் பார்த்த நச்சினார்க்கினியர் உரைச்சுவடியில் (அல்லது பதிப்பில்) அவற்றுக்கோடு முதலிய உதாரணங்கள் இருந்தன போலும். கழகம், கணேசய்யர் பதிப்புகளில் அவ்வுதாரணங்கள் இல்லை. இல்லாமையே சிறப்பு.

விசை, ஞெமை, நமை.

**283. விசைமரக் கிளவியும் ஞெமையும் நமையும்**
**[1]அவைமுப் பெயரும் சேமர இயல. (80)**

**ஆ. மோ: இல.**

The words 'Visai' 'Nemai' and 'Namai' denoting trees—these three nouns have the same position of 'cē' denoting tree.

---

சு. வே: 1. ஆமுப் (நச். பாடம்)

க. சு

The words vicai, ñemai and namai
(denoting) trees,
those three nouns behave like the
word cē (denoting) a tree.

பி இ. நூ

முத்து. பு: 126

விசை ஞெமை நமை ஒடுவிருக்கத் தியல்பே

இளம்.

இது இவ்வீற்றுள் மரப்பெயருட் சிலவற்றிற்கு வேறு முடிபு கூறுதல் நுதலிற்று.

இ—ள்: விசை மரக்கிளவியும் ஞெமையும் நமையும் அவை முப்பெயரும்—விசை என்னும் மரத்தினை யுணர நின்ற சொல்லும் ஞெமை என்னும் மரத்தினை யுணர நின்ற சொல்லும் நமை யென்னும் மரத்தினை யுணர நின்ற சொல்லும் ஆகிய அவை மூன்று பெயரும், சேமர இயல—மேற்கூறிய வல்லெழுத்து மிகாது சே என்னும் மரத்தினது இயல்பினவாய் மெல்லெழுத்து மிக்கு முடியும்.

உ-ம்: விசைங்கோடு, ஞெமைங்கோடு, நமைங்கோடு செதிள், தோல், பூ எனவரும்.

நச்.

இது வல்லெழுத்து விலக்கி மெல்லெழுத்து விதித்தலின் எய்தியது விலக்கிப் பிறிது விதி வகுத்தது.

இ—ள்: விசைத்தற் றொழிலன்றி விசை என்னும் மரத்தினையுணர நின்ற சொல்லும், ஞெமை யென்னும் மரத்தினை யுணர நின்ற சொல்லும் நமை யென்னும் மரத்தினை யுணர நின்ற சொல்லும் ஆகிய அம்மூன்று பெயரும், வல்லெழுத்துமிகாது சே மரம் போல மெல்லெழுத்து மிக்கு முடியும்; எ—று.

உ—ம்: விசைங்கோடு, ஞெமைங்கோடு, நமைங்கோடு, செதிள், தோல், பூ என வரும். இவை க ச த ப முதலிய மொழி மேல் தோன்றும் மெல்லெழுத்து (தொகை. 1) என்று உணர்க.

**பி. கு.**

"இமைக்கண் ஏதா கின்றோ ஞெமைத்தலை" (குறுந். 285)

என்புழி, பொதுவிதி பெற்றது" என்பர், திரு. அடிகளாசிரியர். ஞெமைந்தலை என்று வாராமல் ஞெமைத்தலை என வல்லெழுத்து மிக்கு வந்தது "ஐகார விறுதிப் பெயர் நிலை முன்னர்" (281) என்னும் பொது விதிப்படியாகும் என்பது அவர் கருத்து. ஞெமைத்தலை என்பது 'ஞெமைக்கண்; என்னும் ஏழாம் வேற்றுமைப் பொருளது. இதில் 'தலை' என்பது 'கண்' என்னும் உருபின் பொருள் படவந்தது. அதனால் 'தலை' என்பது கண்' என்பதன் தகுதி பெறும். எனவே அதனை உருபாகக் கொண்டு புணர்க்குமிடத்தில், "வல்லெழுத்து முதலிய வேற்றுமை யுருபிற்கு, ஒல்வழி ஒற்றிடை மிகுதல் வேண்டும்" என்னும் புணரியல் (12) சூத்திரத்தின்படி வல்லெழுத்து மிக்கதாகக் கொள்ளல் தகும்.

அன்றி, ஞெமையின் உச்சி எனப்பொருள் கொண்டு பொருட் புணர்ச்சியாகவே கொள்ளின், ஞெமைந்தலை என்பது, 'இமைக்கண்' என்றதற்கேற்ப ஒரூஉத் தொடைக்காக 'ஞெமைத் 'தலை' என வலித்தல் விகாரமாயிற்று எனினும் ஆம்.

பனை, அரை, ஆவிரை

**294.** **பனையும் அரையும் ஆவிரைக் கிளவியும்**
**நினையுங் காலை அம்மொடு சிவணும்**
**ஐ என் இறுதி அரைவரைந்து கெடுமே**
**மெய் அவண் ஒழிய என்மனார் புலவர்.** (81)

**ஆ. மோ:** இல.

The words 'Panai', 'Arai' and 'Āvirai' join
'am' when examined
'Ai' ending disappears in these words
except 'Arai' leaving the consonant
there, so say the poets.

**சு. சு.**

When one thinks (about it) the words
panai, arai and āvirai join with am;
scholars maintain that the final ai
disappears—except in arai—
and the consonant is preserved there

**பி. இ. நூ.**

சூத்திரம் 86—இல் காண்க.

**இளம்.**

இதுவுமது

இ—ள் ; பனையும் அரையும் ஆவிரைக் கிளவியும்—பனை என்னும் சொல்லும், அரை என்னும் சொல்லும் ஆவிரை என்னும் சொல்லும், நினையுங்காலை அம்மொடு சிவணும்—[1]மேற்கூறிய வல்லெழுத்து [2]மிகா ஆராயுங்காலத்து அம் என்னும் சாரியையொடு பொருந்தி முடியும், ஐ என் இறுதி அரை வரைந்து கெடும்—அவ்விடத்து ஐ என்னும்ஈறு அரை என்னும் சொல்லை நீக்கிக் கெடும், மெய் அவண் ஒழிய என்மனார் புலவர் —தன்னால் ஊரப்பட்ட மெய் [3]அச்சொல்லிடத்தே ஒழிய வென்று சொல்லுவர் புலவர்

உ—ம் : பனங்காய், செதிள், தோல், பூ எனவும் அரையங் கோடு, செதிள், தோல், பூ எனவும்; ஆவிரங்கோடு, செதிள், தோல், பூ எனவும் வரும்.

$'நினையுங்காலை' என்றதனால், பிறவும் தூதுணை, வழுதுணை, தில்லை, ஓலை என வருவனவற்றிற்கும் அம்முக் கொடுத்து ஐகாரம் கெடுத்துத் தூதுணங்காய், வழுதுணங்காய், தில்லங்காய், [4]ஓலம்போழ் என்று முடிக்க.

நச்.

இஃது இயைபு வல்லெழுத்து விலக்கி அம்மு வகுத்தது.

இ—ள் : பனையென்னும் பெயரும் அரையென்னும் பெயரும் ஆவிரை யென்னும் பெயரும், ஆராயுங்காலத்து வல்லெழுத்து மிகாது அம்முச்சாரியையொடு பொருந்தி முடியும், அவ்விடத்து ஐ யென்னும் ஈறு அரையென்னும் சொல்லை நீக்கி

---

சு. வே ;

1. ஆராயுங்காலத்து மேற்கூறிய வல்லெழுத்து
2. மிகாது
3. அச்சொல்லிடத்தை
4. ஓலம்போழ்—ஓலையின் பிளப்பு

$, ஆசிரியர் ஐகாரவீற்று மரப்பெயர் என்று கூறாமல், பனை முதலிய மூன்று மரப் பெயர்களை மட்டும்

ஏனை இரண்டிற்குங் கெடும், தன்னான் ஊரப்பட்ட மெய் கெடாது அச்சொல்லிடத்தே நிற்க என்று கூறுவர் புலவர்; எ—று.

உ-ம் : பனை ஆவிரை என நிறுத்தி, அம்மு வருவித்து, ஐகாரங் கெடுத்து, ஒற்றின்மேலே அகரமேற்றிப் பனங்காய் ஆவிரங்கோடு செதிள் தோல் பூ என வரும். அரையென நிறுத்தி அம்முக் கொடுத்து ஐகாரங் கெடாது அரையங்கோடு, செதிள், தோல், பூ என முடிக்க. வல்லெழுத்துச்கேடு மேலே ''கடிநிலையின்று'' (எழு 286) என்றதனாற் கூறுதும்.

'நினையுங்காலை' என்றதனால் தூதுணை, வழுதுணை, தில்லை, ஓலை, தாழை என நிறுத்தி அம்முக் கொடுத்து ஐகாரங் கெடுத்துத் தூதுணங்காய், வழுதுணங்காய், தில்லங்காய், ஓலம் போழ், தாழங்காய் என முடிக்க.

**சுப்.**

''நினையுங்காலை என்றதனாற்......ஓலம்போழ்,'' என்று முடிக்க என்றனர் உரைகாரர்கள்.'கொடிமுன் வரினே' (எழு.275) என்ற சூத்திரத்திலுள்ள 'அவண் என்றதனால் இளம்பூரணர் 'பனைத் திரள்' என்ற வல்லெழுத்துப் போற்றினைக் கொண்டனர். அதனை ஈண்டு 'நினையுங்காலை'' என்றதனாலும், வழுதுணங்காய் முதலியவற்றைக் ''கிளந்தவல்ல'' (எழு பு 83) என்ற புறனடைச் சூத்திரத்தானும் கொள்ளலாகும்.

பனை முன் அட்டு

**285. பனையின் முன்னர் அட்டு வரு காலை**
**நிலையின் றாகும் ஐயென் உயிரே**
**ஆகாரம் வருதல் ஆவயி னான.** (82)

ஆ .மொ: இல.

When 'Attu' comes before 'pana.'
'Ai' vowel drops away
'ā' comes there instead.

க. சு:

When aṭṭu 'cake of coarse sugar'
follows paṉai 'palmyra' the vowel

---

விதந்து கூறியிருத்தலின் பிறவற்றைக் கோடல் அவர்க்குக் கருத்தன்று. —வேங்கடராசுலு ரெட்டியார்

'ai' disappears and the long sonnd 'a'
occurs in that position

பி. இ. நூ.

சூத்திரம் 86-இல் காண்க.

இளம்.

இதுவுமது.

இ—ள்: பனையின் முன்னர் அட்டு வருகாலை—மேற்கூறிய வழியேயன்றி பனை என்னும் சொல்லின் முன்னர் அட்டு என்னும் சொல் வருமொழியாய் வருங்காலத்து, நிலை இன்று ஆகும் ஐ என் உயிர்—நிற்றல் இன்றாம் ஐ என்னும் உயிர்; ஆவயின் ஆனெ ஆகாரம் வருதல்—அவ்விடத்து ஆகாரம் வந்து அம்மெய்மேல் ஏறி முடிக.

உ—ம்: ‡பனாஅட்டு எனவரும்.

'ஆவயின்' என்றதனான், 'விச்சா வாதி' என்றாற் போல்வன வற்றது வேற்றுமை முடிபு கொள்க.

நச்.

இது நிலைமொழிச் செய்கை நோக்கி எய்தாதது எய்து வித்தது.

இ—ள்: முற்கூறியவா றன்றிப் பனையென்னும் சொல் முன்னர் அட்டு என்னும் சொல் வருமொழியாய் வருங்காலத்து நிற்றலில்லையாகும் ஐ என்னும் உயிர்; அவ்விடத்து ஆகாரம் வந்து அம்மெய்ம்மேல் ஏறி முடியும்; எ-று.

உ-ம்: பனாஅட்டு எனவரும். இதற்கு மூன்றாவதும் ஆறாவதும் விரியும்

ஆவயினான என்றதனால் *ஓராநயம் விச்சாவாதி என்னும் வேற்றுமை முடிபும், கேட்டாமூலம், பாறாங்கல் என்னும் அல்வழி முடிபும் கொள்க. இவற்றுள் வடமொழிகளை மறுத்தலும் ஒன்று.

---

‡ பனாஅட்டு=பனையினது தீங்கட்டி (நன். 204 சங்கர) பனைவெல்லம் என்பர் இக்காலத்தில்.

* ஓரை+நயம் கேட்டை+மூலம், பாறை+கல் எனப் பிரிக்க. ஓராநயம், விச்சாவாதி என்பன வடமொழி என்பர். அவை தமிழே எனக் கொள்க;

**சுப்.**

இச்சூத்திரவுரையில் "ஆவயினான என்றதனான் விச்சாவாதி என்றாற் போல்வனவற்றது வேற்றுமை முடிபு கொள்க" என இளம்பூரணர் உரையிலுள்ளது. அதனைச் "செய்யுள் மருங்கின்" (எழு 289) என்ற சூத்திரத்தில் இளம்பூரணர் கூறியதாலும், நச்சினார்க்கினியர் அதனை ஆங்குக் கூறாது இச்சூத்திரத்துட் கூறினமையானும் இத்தொடர் இளம்பூரணர் உரையில் இடைச் செருகல் என்பது விளங்கும்.‡

**வேங்.**

ஈற்று ஐகாரம், தனக்கு முன் உயிர் முதல் மொழி வந்து ஒரு சொற்றன்மைப்படப் புணருமிடத்துச் சொல்லின் இடையதாகலின் ஒரு மாத்திரையளவில் ஒலிக்கும். அதனால் பனை அட்டு என்பது பனஅட்டு என்றொலிக்குமாகலின், 'பன என்பதன்கண் உள்ள அகரமும் 'அட்டு' என்பதன்கண் உள்ள அகரமும் சேர்ந்து ஓர் ஆகாரமாகி, 'பனாட்டு' என்று ஒலிக்கின்றது என்பது உய்த்துணரத்தகும். ஆயின், 'பனாஅட்டு' என ஆகாரத்தின் முன்னர் அகர எழுத்து எழுதப்படுகின்றதால் எனின் 'பனாட்டு' என்பதில் வருமொழி முதலெழுத்து இன்னது என அறியப்படாமையின், அவ்வெழுத்து அகரம் என்பது அறிவிக்கும் பொருட்டு வரிவடிவில் எழுதப்படுகிறதேயன்றி, அஃது ஒலிக்கப்படுவதன்று. 'அட்டுறின் ஐகெட்டு அந்நீள்வுமாம் வேற்றுமை'(உயிரீற்றுப் 53) என்பதனால் பனாட்டு என அகரமின்றி வருவதற்கே நன்னூலார் விதி கூறியது ஈண்டு அறியத்தக்கது.

பனை முன் கொடி.

**286. கொடிமுன் வரினே ஐஅவண் நிற்பக்**
**கடிநிலை யின்றே வல்லெழுத்து மிகுதி.** (83)

---

‡ விச்சாவாதி-விச்சை+வாதி. வித்தையில் வல்லவாதி எனின் வேற்றுமைத் தொகை. இதுவே வித்தையும் அதில் வல்லவாதியும் எனப் பொருள்படுமாயின் உம்மைத் தொகையாகி அல்வழி முடிபு கொள்ளும். அல்வழி முடிபைச் "செய்யுள் மருங்கின்' (289) என்ற சூத்திரத்தில் எழுதிக்காட்டினார், இளம்பூரணர். எனவே வேற்றுமை முடிபுக்கு இங்குக் காட்டினமையின் இடைச் செருகலாகாது—சிவ

ஆ. மொ: இல.

If 'kodi, comes, there 'ai' stands.
The appearance of hard consonants
cannot be prevented.

க. சு.

If koṭi follows, the ai remains there;
the occerrence of plosives will not
be prevented.

பி. இ. நூ.

சூத்திரம் 284, 285, 286 எண்களுக்குச் சேர்ந்தன.

நன். 203

பனைமுன் கொடிவரின் மிகலும் வலிவரின்
ஐபோய் அம்மும் திரள்வரின் உறழ்வும்
அட்டுறின் ஐகெட்டு அநீள்வும்ஆம் வேற்றுமை

இ. வி. 84

பனைமுன் கொடிவரின் மிகலும் வலிவரின்
ஐபோய் அம்மும் திரள்வரின் உறழ்வும்
அட்டுறின் ஐகெட்டு ஆவுமாம் பிற

முத்து பு. 127, 128, 129, 130

ஆவிரை பனை அரை அம்மொடு சிவனும்
அவற்றுள்
ஆவிரை பனையிறு ஐஉயிர் அழியும்
பனைமுன் கொடிவரின் மிகுமென மொழிப
அட்டு வரின் ஆ ஆகும் என்ப.

இளம்.

இதுவுமது.

இ—ள் : கொடி முன்வரின்—கொடி என்னும் சொல் பனை என்னும் சொல் முன்வரின், ஐ அவண் நிற்ப வல் எழுத்து மிகுதி கடிநிலை இன்று—'மேற்கெடுக்க எனப்பட்ட ஐகாரம் ஆண்டுக் கெடாதே நிற்ப வல்லெழுத்து மிகுதி நீக்கும் நிலைமை யின்று.

உ—ம் : பனைக்கொடி எனவரும்.

---

சு. வே.

1, மேற்கெடும் எனப்பட்ட,

[2]'கடிநிலை' என்றதனான் 'இவ்வீற்றுள் எடுத்தோத்தானும் [3]இலேசினானும் அம்முச் சாரியையும் பிறசாரியையும் பெற்ற வழி இயைபு வல்லெழுத்து வீழ்க்க. இன்னும் இதனானே உருபிற்குச் சென்ற சாரியை பொருட்குச் சென்ற வழியும் இயைபு வல்லெழுத்து வீழ்க்க. பனையின் காய், அரையின் கோடு, ஆவிரையின் கோடு எனவும்; விசையின் கோடு, ஞெமையின் கோடு, நமையின் கோடு எனவும்: தூதுணையின் காய், வழுதுணையின்காய் எனவும்; வழையின் கோடு, வழையின்பூ எனவும் வரும். 'அவண்' என்றதனால் 'பனைத்திரள்' என வல்லெழுத்துப் பேறும் கொள்க.

நச்.

இது [4]மேல் ஐகாரங் கெடுத்து அம்முப் பெறும் என்றார், ஈண்டு அது கெடாது நிற்கும் என்றலின் எய்தியது இகந்து படாமற் காத்தது. அம்மு விலக்கி வல்லெழுத்து விதித்தலின் எய்தியது விலக்கிப் பிறிதுவிதி வகுத்ததுமாம்.

இ—ள் : பனையென்னும் சொல் முன்னர்க் கொடி என்னும் சொல்வரின், கேடு ஓதிய ஐகாரம் ஆண்டுக் கெடாது நிற்ப' வல்லெழுத்து மிக்கு முடிதல் நீக்கு நிலைமை இன்று; எ—று.

உ—ம் : பனைக் கொடி என வரும். இதற்கு இரண்டாவதும் மூன்றாவதும் விரியும்.

'கடி நிலை யின்று' என்றதனான் ஐகாரவீற்றுப் பெயர்களெல்லாம் எடுத்தோத்தானும் இலேசானும் அம்முச் சாரியையும் பிறசாரியையும் பெற்றுழி அதிகார வல்லெழுத்துக் கெடுத்துக் கொள்க.

இன்னும் இதனானே உருபிற்குச் சென்ற சாரியை பொருட்கண் சென்றுழி இயைபு வல்லெழுத்து வீழ்க்க. பனையின் குறை அரையின் கோடு, ஆவிரையின் கோடு, விசையின் கோடு, ஞெமையின் கோடு, நமையின் கோடு எனவும்; தூதுணையின் காய், வழுதுணையின் காய், உழையின் கோடு, வழையின் கோடு எனவும் வரும்.

பனைத்திரள், பனைந்திரள் என்னும் உறழ்ச்சி முடிபு தொகை மரபின் புறனடையாற் கொள்க அல்வழியுமாதலின். அன்றியீண்டு அவண் என்றதனாற் கொள்வாரும் உளர்.

சு.வே: 2. கடிநிலை யின்று என்றதனால்.
3. இலே சினாலும்.
4. மேலதைகாரங்,

வேங்.

'வல்லெழுத்து மிகுதி கடிநிலை யின்று' என்றதனால், பனை என்னும் சொற்குக் கூறிய பொது விதிப்படி 'பனங்கொடி' என்று வருதலே பெருவழக்கு என்பது அறியப்படும்.

உரையாசிரியர்கள் பனையின் குறை, அரையின் கோடு, ஆவிரையின் கோடு என, உருபிற்கு வரலாம் என்ற இன்சாரியை குறை என்பது முதலிய பெயர்கட்கும் வரும் என்றனர். அஃது ஆசிரியர் கருத்தாயின் 'பலவற்றிறுதி உருபியல் நிலையும் (எழு 220) 'நீயென் ஒரு பெயர் உருபியல் நிலையும்' (எழு 253) என்று மட்டெறிந்தாங்கு, இவற்றிற்கும் மாட்டேறு கூறுவர். அவ்வாறு கூறாமையின், அஃது ஆசிரியர் காலத்து வழக்கன்று என்பது போதரும்.

இனி, பனை என்னும் சொல்முன் திறள், காய் முதலிய வல்லெழுத்து முதன் மொழிகள் வருமிடத்து இடையே வல்லெழுத்து மிக்கு முடிதல் இச்சூத்திரத்தால் அமையும் என்பர் சிலர். அவர், 'பனையும் அரையும்' என்னும் சிறப்பு விதி அம்முப் பேறும் ஈற்று ஐகாரக் கேடும் விதிப்ப, அதன்பின் தோன்றிய 'பனையின் முன்னர்' என்னும் சிறப்பு விதி ஐகாரக் கேட்டை இகவாமற் காத்து அம்முப் பேற்றை விலக்கி எய்தாத ஆகாரப் பேற்றினை விதித்தது. பின்பு, "கொடி முன்வரினே" என்னும் சிறப்பு விதி முன்னைச் சிறப்பு விதியாற் காக்கப்பட்ட ஐகாரக் கேட்டையும் ஆகாரப் பேற்றையும் விலக்கிப் பொது விதியால் எய்தியதனை இகந்துபடாமற் காத்தது என்றும், சிற்றெல்லைத் தாகிய சிறப்பு விதியால் பேரெல்லைத்தாகிய பொதுவிதி கெடும் என்று கூறல் நிரம்பாமை பெறப்படும்' என்றும் கூறியுள்ளார். ஈண்டு 'கொடி முன்வரினே' என்னும் சிறப்பு விதி ஆகாரப் பேற்றை விலக்கியது என்றதே பொருந்தாது. என்எனின், ஆகாரப்பேறு பனை என்னும் சொன்முன் அட்டு என்னும் சொல் மட்டும் வந்து புணர்தற்குக் கூறிய விதி. அது, கொடி என்னும் சொல் புணருமிடத்து வாராதன்றே? இனி சிறப்பு விதியால் பொதுவிதி கெடாதாயின், சிறப்பு விதி கூறுதல் எற்றிற்கு? சிறப்பு விதி கூறப்பட்ட விடத்துப் பொது விதி செல்லாமை அனைவரும் அறிந்ததொன்றே.

அகர விறுதிப் பெயர்நிலை முன்னர்
வேற்றுமை யல்வழிக் கசதபத் தோன்றிற்
றத்தம் ஒத்த ஒற்றிடை மிகுமே. (உயிர்ம. 1)

என்பது அகரவீற்றுக் கெல்லாம் பொது விதி. அதனான் இது பேரெல்லையதாகுமன்றே? இப்பொது விதியான் எய்திய வல்லெழுத்து மிகுதலை,

"அன்ன என்னும் உவமக் கிளவியும்
அண்மை சுட்டிய விளிநிலைக் கிளவியும்
..............................................

அன்றி யனைத்தும் இயல்பென மொழிப" (உயிர்ம. 8) என்னும் சிறப்பு விதி விலக்கியவாறும், ஆண்டுப் பொது விதி செல்லா தொழிந்தவாறும் காண்க. இவ்வாறே சிறப்பு விதியால் பொது விதி கெடுதலை யாண்டும் காணலாகும்.

ஆசிரியர், 'ஐகாரவிறுதி' என்னும் சூத்திரத்தால் ஐகார வீற்றுப் பெயர்கட்குக் கூறிய பொதுவிதி பனை, அரை, ஆவிரை என்னும் ஐகாரவீற்றுப் பெயர்கட்குப் பொருந்தாததனானன்றே 'பனையும் அரையும்' என்னும் சூத்திரத்தான் அம்மூன்று பெயர்க்கும் சிறப்பு விதி கூறினார். (ஆதலின், அவற்றிற்கு ஐகார வீற்றுப் பொதுவிதி செல்லாது) அதனால், பனை முதலிய மூன்று பெயர்களுக்குமுன் வல்லெழுத்து மிகுதல் இல்லை என்பது பெறப்படும். அம்மூன்றனுள்ளும் பனை என்னும் பெயர்க்கு முன் மட்டும் 'அட்டு' என்னும் சொல் குறித்துவரு கிளவியாய் வருமிடத்து மேற்கூறிய விதி பொருந்தாமையின், அதற்கு (அட்டு என்பதற்கு) மட்டும் வேறு விதி கூறினார். மேலும், பனை என்பதன் முன், கொடி என்னும் சொல் வருமிடத்தும் அம்முப் பெறுதலும் ஐகெடுதலுமாகிய விதியே யன்றி ஐகாரவீற்றுப் பொதுவிதியும் வருதலின் அதற்குத் தனியே கூறினார். ஐகார வீற்றுப் பொது விதிதானே வருமாயின் இது கூறுதல் வேண்டா வன்றே? இவற்றால், பனை என்பதன்முன் அட்டு, கொடி என்பவை தவிர ஏனைச் சொற்கள் வருமிடத்து, 'பனையும் அரையும்' என்னுஞ் சூத்திரத்தாற் கூறிய விதியே வரும் என்பது துணியப்படும். ஆகலின், திரள் என்னும் சொல் வருமிடத்து, 'பனந்திரள்' என்றே வருதல் வேண்டும் என்பது நன்கு விளங்கும்.

திங்களும் நாளும்

**287. திங்களும் நாளும் முந்துகிளந் தன்ன** (84)

ஆ. மொ: இல.

The month and day (ending in 'ai')
have the same rules already
described

க. சு.

The (words denoting) month(s) and
day (s) have the same rules as
mentioned before

இளம்.

இது இயைபு வல்லெழுத்தினோடு சாரியைப் பேறும் வல்லெழுத்து விலக்கிச் சாரியைப் பேறும் கூறுகின்றமையின் எய்தியதன்மேற் சிறப்பு விதியும் எய்தியது விலக்கிப் பிறிது விதியும் வகுத்தல் நுதலிற்று.

இ—ள்: திங்களும் நாளும் முந்து கிளந்தன்ன—ஐகார வீற்றுத் திங்களை யுணர நின்ற பெயரும் அவ்வீற்று [1]நாள் உணர நின்ற பெயரும் முன் இகரவீற்றுத் திங்களும் நாளும் கிளந்த தன்மையவாய் இக்கும் ஆனும் பெற்று முடியும்.

உ-ம்: சித்திரைக்குக் கொண்டான், கேட்டையாற் கொண் டான், சென்றான், தந்தான், போயினான் எனவரும்.

நாள்முற்கூறாது திங்கள் முன்கூறியவதனால், கரியவற்றுக் கோடு எனவும்; அவையத்துக் கொண்டான் எனவும்; வழைங் கோடு எனவும்; கலைங்கோடு, கலைக்கோடு எனவும் இவ்வீற்று முடியாதனவெல்லாம் கொள்க.

நச்.

இஃது இயைபு வல்லெழுத்தினோடு இக்குச் சாரியையும் வல்லெழுத்து விலக்கி ஆன்சாரியையும் வகுத்தலின் எய்தியதன் மேற் சிறப்பு விதியும் எய்தியது விலக்கிப் பிறிது விதியும் கூறுகின்றது.

இ—ள் : ஐகார வீற்றுத் திங்களை யுணர நின்ற பெயரும் நாளையுணர நின்ற பெயரும், இகரவீற்றுத் திங்களும் நாளும் போல இக்கும் ஆனும் பெற்று முடியும்; எ—று.

உ—ம் ; சித்திரைக்குக் கொண்டான், கேட்டையாற் கொண்டான், சென்றான், தந்தான், போயினான் எனவரும். சித்திரைநாளாயின் ஆன்சாரியை கொடுக்க. வல்லெழுத்துக்கேடு முன்னர்க் 'கடிநிலையின்று' (285) என்றதனாற் கொள்க.

---

சு. வே: 1. நாளை

திங்கள் முற்கூறிய முறையன்றிக் கூற்றினால் †உழைங்கோடு அமைங்கோடு உடைங்கோடு என மெல்லெழுத்துக் கொடுத்துங், கலைங்கோடு கலைக்கோடு என உறழ்ச்சி யெய்துவித்தும், கரிய வற்றுக்கோடு குறியவற்றுக்கோடு நெடியவற்றுக் கோடு என ஐகார வீற்றுப் பண்புப்பெயர்க்கு வற்றுக் கொடுத்து ஐகாரங் கெடுத்து வற்றுமிசை ஒற்றென்று [1]ஒற்றுக் கெடுத்தும், அவை யத்துக் கொண்டான் அவையிற்கொண்டான் என அத்தும் இன்னும் கொடுத்தும், பனையின், மாண்பு கேட்டையினாட்டி னான்என இயல்பு கணத்துக்கண் இன் சாரியை கொடுத்தும் முடிக்க. ஐகாரவீறு இன்சாரியை பெறுதல் தொகை மரபினுட் கூறாமையின் ஈண்டுக் கொண்டாம்.

பி. கு.

"நாள் முற்கூறாது திங்கள் முற்கூறிய வதனான்......இவ்வீற்று முடியாதன வெல்லாம் கொள்க"—இப்பகுதியை "கிளந்தவல்ல" (483) என்ற புறனடைச் சூத்திரத்தாற் கொள்ளல் தகும் என்பர், சுப்பிரமணிய சாஸ்திரியார். மேலும்,

"ஐகார வீறு இன்சாரியை பெறுதல்...ஈண்டுக் கொண்டாம்' என நச்சினார்க்கினியத்திலுள்ளது. வேற்றுமை யல்வழிக்கண் ஐகாரவீற்றுப் பெயர்களின் செய்கைகள், தொகைமரபினுட் கூறப்பட்டனவேயன்றி வேற்றுமைப் புணர்ச்சியின் செய்கைகள் ஆங்குக் கூறப்படாமையின் இத்தொடர் இடைச் செருகலாய் இருக்கலாம் என்று தோன்றுகிறது" என்றும் கூறினார்.

"திங்கள் முற்கூறிய முறையன்றிக் கூற்றான், உழைங்கோடு அமைங்கோடு உடைங்கோடு கலைங்கோடு கலைக்கோடு முதலிய பலவற்றையும் கொள்க என்று உரையாளர் அமைப்பது பொருந்து வதன்று; ஆசிரியர் திங்கட் பெயர்க்கும் நாட்பெயர்க்குமே இச் சூத்திரத்தில் விதி கூறினாராகலின்" என்பர் வேங்கடராசுலு ரெட்டியார்.

---

† உழை, கலை இவை விலங்குகள்—(மான்)
அமை, உடை இவை மரங்கள்.
கரியவற்றுக்கோடு—கரியவை + வற்று + கோடு எனப் பிரிக்க.
குறியவற்றுக்கோடு-குறியவை + வற்று + கோடு எனப்பிரிக்க.
நெடியவற்றுக்கோடு—நெடியவை + வற்று + கோடு எனப் பிரிக்க

சு. வே : 1. ஒற்றுக் கெடுத்துச் செய்கை செய்தும்

மழை

**288. மழையென் கிளவி வளியியல் நிலையும் (85)**

**ஆ. மொ: இல.**

The word maḻai has the rules applied to 'vaḷi'.

**க. சு.**

The word maḻai 'rain' behaves in the same way as vaḷi.

**பி இ நூ.**

**முத்து. பு.** 131

இன்னொடு மழை யெதிர்ந் தியலும் என்ப

**இளம்.**

இது [1]இயைபு வல்லெழுத்தினோடு [2]அத்துப் பேறும் வல்லெழுத்து விலக்கி இன்னும் வகுக்கின்றமையின் எய்தியதன் மேற் [3]சிறப்பும் எய்தியது விலக்கிப் 'பிறிதும் கூறுதல் நுதலிற்று'

இ—ள்: மழை என் கிளவி வளி இயல் நிலையும்—மழை என்னும் ஐகாரவீற்றுச்சொல், இகரவீற்று வளி என்னும் சொல் அத்தும் இன்னும் பெற்று முடிந்த் இயல்பின்கண்ணே நின்று முடியும்.

உ-ம்: மழையத்துக் கொண்டான், மழையிற் கொண்டான், சென்றான், தந்தான், போயினான் எனவரும்.

**நச்.**

இது வல்லெழுத்தினோடு அத்து வகுத்தலின் எய்தியதன் மேற் சிறப்பு விதியும் இயல்பு வல்லெழுத்து விலக்கி இன் வகுத்தலின் எய்தியது விலக்கிப் பிறிது விதியும் கூறுகின்றது.

---

சு. வே:

1. இவையும் வல்லெழுத்தினோடு, வல்லெழுத்தினோடு
2. அத்தும் வல்லெழுத்து விலக்கி
3. சிறப்பு விதியும்
4. பிறிதுவிதியும்

**இ-ள்:** மழையென்னும் ஐகார வீற்றுச் சொல், வளியென்னும் சொல் அத்தும் இன்னும் பெற்று முடிந்த இயல்பின் கண்ணே நின்று முடியும்; எ—று,

உ—ம்: மழையத்துக் கொண்டான், மழையிற் கொண்டான் சென்றான், தந்தான், போயினான் எனவரும்.

ஈண்டு இன்பெற்றுழி வல்லெழுத்துக் கேடு 'கடி நிலையின்று' (எழு 285) என்றதனாற் கொள்க. சாரியைப் பேறு வருமொழி வரையாது கூறினமையின் இயல்புகணத்துக்கண்ணும் கொள்க. மழையத்து ஞான்றான், மழையின் ஞான்றான், நிறுத்தினான், மாட்டினான், வந்தான், அடைந்தான் என ஒட்டுக.

வேட்கை முன் அவா

289. செய்யுள் மருங்கின் வேட்கை என்னும்
ஐ என் இறுதி அவாமுன் வரினே
மெய்யொடும் கெடுதல் என்மனார் புலவர்
டகாரம் ணகாரம் ஆதல் வேண்டும். (86)

ஆ· மொ· இல.

The 'ai' ending of 'vēt kai' in poetry
Before rhe word 'Avā' disappears in the
company of its consonant, say the
poets. 't' changes into 'ṇ'.

க· சு.

scholars maintain that, in poetry,
in avā 'desir' following vēṭkai
'desire',
the final ai with the preceding consonant
is dropped and ṭ must be
changed to ṇ.

பி· இ· நா.

முத்து. பு. 133

அவாவரின் வேட்கை ஈறாவியும் மெய்யும்
அழிந்து டகரமெய் ணகரவொற் றாகும்.

இளம்.

இது இவ்வீற்றுள் ஒன்றற்கு அல்வழிக்கண் செய்யுள் முடிபு கூறுதல் நுதலிற்று.

இ—ள் : செய்யுள் மருங்கின் வேட்கை என்னும் ஐ என் இறுதி —செய்யுளிடத்து அல்வழிக்கண் வேட்கை என்னும் ஐகாரவீற்றுச் சொல்,அவாமுன்வரின்-அவா என்னும் சொல்தனக்கு [1]முன்வரின், மெய்யொடும் கெடுதல் என்மனார் புலவர்—அவ்வைகாரம் தான் ஊர்ந்த [2]மெய்யோடுங் கூட்டக்கெடுக வென்று சொல்லுவர் புலவர்; டகாரம் ணகாரம் ஆதல் வேண்டும்—அவ்விடத்து நின்ற டகார ஒற்று ணகாரவொற்றாய்த் திரிந்து முடிதல் வேண்டும்.

உ—ம்: வேணவா நலிய [3]வெய்ய வுயிரா (நற் 61) எனவரும் இதனை உம்மைத் தொகையாகக் கொள்க. அவா என்பது அவ் வேட்கையின் மிகுதி.

இவ்வல்வழியை வேற்றுமை முடிபிற்கு முன் கூறாததனால் விச்சாவாதி என்றாற் போல வரும் உம்மைத் தொகை அல்வழி முடிபும், பாறங்கல் என இரு பெயரொட்டு அல்வழிமுடிபும் கொள்க.

நச்.

இது வேற்றுமைக்கண் செய்யுள் முடிபு கூறுகின்றது.

இ—ள்: செய்யுளிடத்து வேட்கையென்னும் ஐகார வீற்றுச் சொல் அவா என்னும் சொற்கு முன்னர் வரின், அவ்வைகாரம் தான் ஊர்ந்த மெய்யொடுங் கூடக்கெடும் என்று கூறுவர் புலவர்; அவ்விடத்து நின்ற டகார ஒற்று ணகார ஒற்றாய்த் திரிதல் வேண்டும்; எ—று.

உ—ம்: 'வேணவா நலிய வெய்ய வுயிரா' எனவரும்.

வேட்கையாவது பொருள்கள் மேல் தோன்றும் பற்றுள்ளம். அவாவாவது அப்பொருள்களைப் பெறவேண்டும் என்று மேல் எழும் ஆசை. எனவே வேட்கையாலுண்டாகிய அவாவென மேல்மூன்றனுருபு விரிந்தது. இதனை வேட்கையும் அவாவும் என

---

சு. வே : 1 முன்னர்
2. மெய்யொடுகூட
3. வேண்டுபுலத்திறுத்து

அல்வழியென்பாரும் உளர்.‡ இங்ஙனம் கூறுவார் பாறாங்கல் என்பதனை அம்முக்கொடுத்து ஈண்டு முடிப்பர்.

**சிவ.**

இச் சூத்திரம் அல்வழிப்புணர்ச்சிக் குரியதாக இளம்பூரணரும், வேற்றுமைப்புணர்ச்சிக் குரியதாக நச்சினார்க்கினியரும் கொண்டனர். ஐகாரவீற்று அல்வழிப் புணர்ச்சி முடிபு தொகை மரபில் கூறப்பட்டமையின் ஈண்டு வேற்றுமைப்பொருட்புணர்ச்சி முடிபே கொள்ளல் வேண்டும் எனக் கருதி நச்சினார்க்கினியர் கொண்டார்.

தொகைமரபில் "வேற்றுமை யல்வழி இஐ என்னும்" (61) என்னும் சூத்திரத்தில் இகர ஐகார ஈறுகள் அல்வழியில் வருமொழி க ச த பக்களுள் ஒன்று பெற்றதாயின் அது இயல் பாகவோ, மிகுந்தோ உறழ்ச்சியாகவோ முடியும் என்னும் செய்தி சொல்லப்பட்டது. அதனால் வேட்கை+அவா என்பனவற்றின் புணர்ச்சிமுடிபு ஆண்டு அடங்காது. எனவே ஈண்டு அல்வழி முடிபாகக் கூறப்பட்டது என்பது இளம்பூரணர் கருத்து. அதனால் அவர் வேணவா என்பதற்கு வேட்கையும் அவாவும் என உம்மைத் தொகையாகக் கொண்டார்.

தொகைமரபினுள் அல்வழிமுடிபு கூறினும் ஆண்டு கூறாது எஞ்சியன அகத் தோத்துள் கூறுதலும் ஆசிரியர் வழக்கே.

இகர வீற்றுக்கு அல்வழிமுடிபு தொகைமரபிற் கூறியதே (16) யன்றி உயிர்மயங்கியலிலும், "இனியணி யென்னும்" (34) "இன்றி யென்னும்" (35) "பதக்குமுன்வரின்" (47) முதலிய சூத்திரங்கள் ஆசிரியர் கூறியுள்ளமை காணலாம். மேலும்,

மொழிமுத லாகும் எல்லா எழுத்தும்
வருவழி நின்ற ஆயிரு புள்ளியும்
வேற்றுமை யல்வழித் திரிபிட னிலவே (தொகை. 5)

என்னும் சூத்திரம் ண், ன், என்பன நிலை மொழியிறுதியில் நிற்க வருமொழி முதலில் எவ்வெழுத்து வரினும் அவ்விரண்டெழுத்தும் திரிதல் இல்லை என அல்வழிமுடிபு கூறுவது. உ-ம்: மண்கடிது, பொன்கடிது. ஆனால் புள்ளிமயங்கியலில் ணகர மெய்யீற்று வேற்றுமை முடிபு கூறியவிடத்தில் அதற்கே அல்வழி முடிபாக

‡ இளம்பூரணர்

வேற்றுமை யல்வழி எண்ணென் உணவுப்பெயர்
வேற்றுமை யியற்கை நிலையலும் உரித்தே (புள்ளி.13)

என்னும் சூத்திரம் அமைத்தார் ஆசிரியர். "எண்ணென்னும் சொல் வேற்றுமைப் பொருட்புணர்ச்சியில் எட்கடுமை எனத் திரிந்து வருதல் போலவே அல்வழிப் புணர்ச்சியிலும் எட்கடிது எனத் திரிந்து வரும்" என்பது சூத்திரப் பொருள்.

எனவே இளம்பூரணர் இச்சூத்திரம் அல்வழிமுடிபு கூறுவது எனக் கொண்டதில் தவறில்லை.

"வேட்கை என்பதன் முதனிலையாகிய வேள் என்பதன் ளகர மெய் ணகர மெய்யாகத் திரிந்து நின்று அவா என்னும் சொல்லோடு புணர்ந்து வேணவா என்று வந்தது. ளகரம் ணகர மாதல் ஆள்—ஆண், எள்—எண் முதலிய சொற்களிற் காண்க"

என்றெழுதினர் வேங்கடாசுலு ரெட்டியார். ஆசிரியர் வேட்கை+அவா என்பனவற்றிற்குப் புணர்ச்சிவிதி கூறுதலின் டகரம் ணகரம் ஆகும் என்றார். (எள்—எண் எனத்திரிந்ததா, எண்—எள் எனத் திரிந்ததா என்பது ஆய்வுக்குரியது.)

### செ. வை. சண்முகம்

†"வேணவா என்ற தொடருக்கு வேட்கை என்பதையே நிலைமொழியின் அடிநிலைக் கிளவியாகக் (Base form) கொண்டு புணர்ச்சி மாற்றம் விளக்கப்பட்டுள்ளது.

"செய்யுள் மருங்கின்வேட்கை......வேண்டும்"

இங்குச் செய்யுளில் வேணவா என்று வழங்குவதாகக் குறிப்பிடுவதால், அது முற்காலத்தில் பெயரடை+பெயர் என்றமுறை அதிகமாகப் பயிலப்பட்டுத் தன்னுடைய (தொல்காப்பியருடைய) காலத்தில் அந்தத் தொடர் மட்டுமே பயின்று வந்திருக்க வேண்டும். எனவேதான் தன்னுடைய காலத்தின் மொழி வழக்கை ஒட்டித் தொல்காப்பியர் வேட்கை என்ற கட்டிலா வடிவத்தை அடிநிலைக் கிளவியாகக் கருதியிருக்க வேண்டும். இதனால், தன் காலத்தில் அதிகமாகப் பயின்று வருகிற வடிவங்

† எழுத்திலக்கணக் கோட்பாடு, (பக். 212), அனைத்திந்தியத் தமிழ் மொழியியல் கழகம், அண்ணாமலை நகர் (1980) இக்கருத்து, வேண்+அவா என்றுமுடியாமல் வேட்கை+அவா என்று ஆசிரியர் முடித்ததற்கு ஒரு சிறந்த சான்றாகும்.

களையே அடிநிலைக் கிளவியாகத் தேர்ந்தெடுத்துள்ளார் எனக் கொள்ளலாம்.''

## 10. ஓகார ஈறு

### அல்வழியில் ஓகார ஈறு

**290. †ஓகார இறுதி ஏகார இயற்றே** (87

**ஆ. மொ. இல.**

The ending of 'ō' is in the nature of 'ē'.

**க. சு.**

The final ō is of the same nature as the long ē

**பி. இ. நூ.**

சூ. 204-இன் கீழ் உள்ளன கொள்க.

**இளம்.**

இது ஓகாரவீற்று அல்வழி முடிபு கூறுதல் நுதலிற்று.

இ—ள்: ஓகார இறுதி ஏகார இயற்று—[1]ஓகாரவீற்று அல்வழிப் பெயர்ச்சொல் ஏகாரவீற்று அல்வழி இயல்பிற்றாய் வல்லெழுத்துவந்தவழி வல்லெழுத்து மிக்கு முடியும்.

உ—ம், ‡ஓக்கடிது, சிறிது, தீது, பெரிது எனவரும்.

**நச்.**

இஃது ஓகாரவீற்று அல்வழி முடிபு கூறுகின்றது.

இ—ள்: ஓகாரவீற்றுப் பெயர்ச்சொல் ஏகாரவீற்று அல்வழியின் இயல்பிற்றாய் வல்லெழுத்து வந்துழி அவ்வல்லெழுத்து மிக்கு முடியும்; எ—று,

உ—ம்: ஓக்கடிது, சேக்கடிது, சிறிது, தீது, பெரிது என வரும்.

---

† ''குணவாயிற் கோட்டத்து...கோச்சேரல்'' (சிலப். பதி) என்பதன் உரையில் அடியார்க்கு நல்லார் மேற்கோள்.

சு. வே:

1. ஓகாரவீற்றுப் பெயர்ச் சொல்

‡ ஓ-மதகுநீர் தாங்கும் பலகை,

இடைச் சொல்

**291. மாறுகொள் எச்சமும் வினாவும் ஐயமும்
கூறிய வல்லெழுத்து இயற்கை யாகும் (88)**

ஆ. மொ: இல.

When 'ō' denote contradiction,
interrogation and doubt, the,
hard consonant does not appear

க. சு.

(The sound ō) denoting contradiction,
interrogation or doubt does not
have the occurrence of plosive as
stated above.

பி. இ. நூ.

நன். 201

இடைச்சொல்...ஓ முன்வரின் இயல்பே

இ. வி. 99

முத்து. பு. 132, 134

ஐய ஓவினா வலிமிகா தியல்பாகும்

மறு கொள் எச்சமும்
மிகாதியல் பாகும் என்மனாக் புலவர்

இளம்.

இது, இவ்வீற்று இடைச் சொல் முடிபு கூறுதல் நுதலிற்று.

இ—ள்: மாறு கொள் எச்சமும் வினாவும் ஐயமும்—மாறு பாட்டினைக் கொண்ட எச்சப் பொருண்மையுடைய ஓகாரமும் வினாப் பொருண்மையினையுடைய ஓகாரமும் ஐயப் பொருண்மை யினையுடைய ஓகாரமும், கூறிய வல் எழுத்து இயற்கை ஆகும்—முன் பெயர்க்குக் கூறிய வல்லெழுத்தின்றி இயல்பாய் முடியும்.

உ—ம்; யானோ கொண்டேன் எனவும், நீயோ கொண்டாய் எனவும், பத்தோ பதினொன்றோ எனவும் வரும்.

1 'கூறிய' என்றதனால், பிரிநிலையும் தெரிநிலையும் சிறப்பும் எண்ணும் ஈற்றசையும் இயல்பாய் முடிதல் கொள்க. அவனோ கொண்டான் எனவும், நன்றோ தீதோவன்று எனவும்,

ஒஓ கொண்டான் எனவும், "*குன்றுறழ்ந்த களிறென்கோ கொய்யுளைய மாவென்கோ" எனவும், யானோ தேறேன் எனவும் வரும்.

**நச்.**

இஃது இடைச்சொல் முடிபு கூறுதலின் எய்தாதது எய்துவித்தது.

இ—ள் : மாறுபாட்டினைக் கொண்ட எச்சப் பொருண்மையை ஒழிபாகவுடைய ஓகாரமும், வினாப்பொருண்மையையுடைய ஓகாரமும், ஐயப்பொருண்மையையுடைய ஓகாரமும் முற்கூறிய வல்லெழுத்தின்றி இயல்பாய் முடியும்; எ—று.

உ—ம் : யானோ கொண்டேன் எனவும்; நீயோ கொண்டாய் எனவும்; பத்தோபதினொன்றோ, புற்றோ புதலோ எனவும் வரும்.

2 கூறிய என்றதனான் "யானோ தேறேன் அவர் பொய் வழங்கலரே" (குறுந். 21) எனப் பிரிநிலையும், 'நன்றோ தீதோ கண்டது' எனத் தெரிநிலையும், ‡ஒஓ கொண்டான் எனச் சிறப்பும், "குன்றுறழ்ந்த களிறென்கோ கொய்யுளைய மாவென்கோ" (புறம். 397) என எண்ணு நிலையும் வல்லெழுத்து மிகாதுஇயல்பாய் முடிதல் கொள்க. இதனானே ஈற்றசை வருமேனும் கொள்க.

**292. $ ஒழிந்ததன் நிலையு மொழிந்தவற் றியற்றே. (89)**

**ஆ. மோ: இல.**

'ō' denoting that which is understood, has the nature of other 'ō's already described.

---

* இதில் என்கோ + கொய் என்னும் பகுதியே உதாரணம். என்கோக்கொய் என்று வாராமல் என்கோ கொய் என இயல்பாய் வந்துளது.

‡ 'ஒஓ கொண்டான் எனச்சிறப்பும்' என்னுந் தொடர், திரு. அடிகளாசிரியர் தம்மிடம் உள்ள நச்சினார்க்கினியர் உரைச்சுவடியில் இல்லை என்பர்.

1 2 இப்பகுதிகளில் உள்ள உதாரணங்கள் பிற்கால வழக்காதலின் அவற்றைக்கூறாது விடுத்தனர் ஆசிரியர் என்பர் சுப்பிரமணிய சாஸ்திரியார்.

$ கொளலோ கொண்டான்—கொண்டிலன்.

க. சு.

The same is the case when (ō) suggests an implied meaning.

பி. இ. நூ.

முத்து. பு. 134.

ஒழியிசை ஓவும்.........
மிகாது இயல்பாகும் என்மனார் புலவர்.

இளம்.

இதுவுமது.

இ—ள் : ஒழிந்ததன் நிலையும் ஒழிந்தவற்று இயற்று—ஒழியிசை ஓகாரத்தினது நிலையும் மேற்சொல்லி யொழிந்த ஓகாரங்களின் இயல்பிற்றாய் இயல்பாய் முடியும்.

உ—ம் : *கொளலோ கொண்டான் எனவரும்.

நச்.

இதுவுமது.

இ—ள் : ஒழியிசை ஓகாரத்தினது நிலையும் முற்கூறிய ஓகாரங்களின் இயல்பிற்றாய் இயல்பாய் முடியும்; எ—று.

உ—ம் : கொளலோ கொண்டான், செலலோ சென்றான், தரலோ தந்தான், போதலோபோயினான் என ஓசைவேற்றுமை யான் ஒருசொல் தோன்றப் பொருள் தந்து நிற்கும்.

வேற்றுமையில் ஓகார ஈறு

**293. வேற்றுமைக் கண்ணும் அதனோ ரற்றே
ஓகரம் வருதல் ஆவயி னான** (90)

ஆ. மொ: இல.

Even in case relation it assumes the state of 'ē'. The appearance of ō' occurs there.

---

* இச்சூத்திரத்தில் நிலையு மொழிந்தவற்று என்பதை இளம்பூரணர் நிலையும் ஒழிந்தவற்று எனவும், நச்சினார்க்கினியர் நிலையும் மொழிந்தவற்று எனவும் பிரித்தனர்—பொருள்மாறு இல்லை,

க. சு.

It is like that also in case-relationship;
in that position, the sound o occurs.

பி. இ நூ.

சூ, 204-இன் கீழ் உள்ளன கொள்க.

இளம்

இது, [1]அவ்வீற்று வேற்றுமை முடிபு கூறுதல் நுதலிற்று.

இ—ள்; வேற்றுமைக் கண்ணும் அதன் ஓர் அற்று—ஓகார வீற்று வேற்றுமைக்கண்ணும் [2]அவ்வோகார வீற்று அல்வழியோடு ஒத்து வல்லெழுத்துப் பெற்றுப் புணரும், ஆவயின் ஆன ஒகரம் வருதல்—அவ்விடத்து ஒகரம் வருக.

உ—ம்: ஓஒக் கடுமை, சிறுமை, தீமை, பெருமை எனவரும்.

நச்.

இது ஓகார வீற்று வேற்றுமை முடிபு கூறுகின்றது.

இ—ள்: ஓகார வீறு வேற்றுமைக் கண்ணும் அவ் ஓகாரவீற்று அல்வழியோடு ஒத்து வல்லெழுத்து மிக்கு முடியும்; அவ்விடத்து ஒகரம் வரும், எ—று.

உ—ம்; ஓஒக் கடுமை, கோஒக்கடுமை, சிறுமை, தீமை, பெருமை எனவரும்.

கோ + இல்

**244 இல்லொடு கிளப்பின் இயற்கை யாகும்** (91)

ஆ. மொ: இல.

If followed by 'il' 'o' does not occur.

க. சு.

If pronounced with il 'place house'
there is no change.

பி. இ. நூ.

முத்து. பு. 135

இல்லொடு கிளப்பின் இயல்பா கும்மே.

---

சு. வே:

1. அவ்வோகாரவீற்று
2. அவ்வேகாரவீற்று. (இது பிழை)

இளம்.

இது எய்தியது ஒருமருங்கு மறுத்தல் நுதலிற்று.

இ—ள் ; இல்லொடு கிளப்பின் இயற்கை ஆகும்—ஒகார வீற்றுக் கோ என்னும் மொழியினை இல் என்னும் வருமொழி யோடு சொல்லின் [1]ஒகரம் மிகாது இயல்பாய் முடியும்.

உ—ம் : [2]கோயில் எனவரும்.

[3]நிலைமொழி ஒகர எழுத்துப் பேறும் வரையாது கூறின வழி நான்கு கணத்துக் கண்ணும் செல்லும் என்பதனாற் பெற்றாம். கோ வென்றது உயர்திணைப் பெயரன்றோ வெனின், கோ வந்ததென அஃறிணையான் முடிதலின் அஃறிணைப் பாற்பட்டது போலும்.

நச்.

இஃது எய்தியது விலக்கிற்று. என்னை? முன்னர் வன்கணம் வந்துழியே ஒகரம் பெறும் என வரையாதும் நிலைமொழித் தொழில் வரையாதும் கூறலின் நான்கு கணத்துக் கண்ணும் சேரும் ஆதலின்.

இ—ள்: ஒகார வீற்றுக் கோ என்னும் மொழியினை இல் என்னும் வருமொழியோடு சொல்லின் ஒகரம் மிகாது இயல்பாய் முடியும்; எ—று.

உ-ம்: கோவில் எனவரும்.

'கோவென்றது உயர்திணைப் பெயரன்றோ எனின், 'கோ வந்தது' என்று அஃறிணையாய் முடிதலின் அஃறிணைப் பாற் பட்டதென்க.

சிவ.

இல் என்பதனை வருமொழியாகக் கொண்டு சேரும் ஓகார வீற்று நிலைமொழிச் சொல் 'கோ' என்பதன்றி வேறின்மையின் உரையாளர் இச்சூத்திரத்தில் 'கோ' என்பதைக் கொண்டனர். இவ்வாறு கொள்ள வேண்டியிருத்தலால் முன்சூத்திரத்தில்

---

சு. வே :

1. ஒகரம் இயல்பாய், ஒகாரம்
2. கோவில்
3. நிலைமொழி எழுத்துப்பேறு வரையாது

'கோஒக்கடுமை' என்னும் உதாரணத்தை நச்சினார்க்கினியர் ஆண்டனர் போலும்.

கோ என்பது அரசன்என உயர்திணைப் பொருளதாயினும் வந்தது என முடிதற்கேற்பவும் இருத்தலின் அஃறிணைப் பாற் பட்டது ஆகும்.

சாரியைப் பேறு.

**295. உருபியல் நிலையும் மொழியுமா ருளவே**
**ஆவயின் வல்லெழுத்து இயற்கை யாகும். (92)**

ஆ. மொ: இல.

There are words (of 'ō' ending) which
have the state of case signs.
Hard consonants does not occur there.

க. சு.

There are words (ending in ō) which
behave (in the same ways as when
they are followed by) case-suffixes
In such cases, the plosive becomes unchanged

உருபியற் சூத்திரம் (8)

ஒகார இறுதிக்கு ஒன்னே சாரியை

இளம்.

இது அவ்வீற்றிற் சிலவற்றிற்கு வல்லெழுத்து விலக்கிச் சாரியை வகுத்தமையின் எய்தியது விலக்கிப் பிறிது விதி [1]கூறுதல் நுதலிற்று.

இ—ள்: உருபு இயல் நிலையும் மொழியுமார் உள—அவ் வீற்றுட் சில உருபு புணர்ச்சியது இயல்பிலே நின்று ஒன்சாரியை பெற்று முடியும் மொழிகளும் உள; ஆவயின் வல்லெழுத்து இயற்கை ஆகும்—அவ்விடத்து வல்லெழுத்தின்றி [2]இயல்பாய் முடியும்.

உ-ம்: கோஒன்கை, செவி, தலை, புறம் எனவரும்.

---

சு. வே:

1. வகுத்தல்
2. இயல்பாம்
3. வல்லெழுத்தை

†இதனானும் பெற்றாம், சாரியைப்பேறு வருமொழி [3]வல்லெழுத்து விலக்காமை.

**நச்.**

இது வல்லெழுத்து விலக்கிச் சாரியை வகுத்தலின் எய்தியது விலக்கிப் பிறிது விதி வகுத்தது.

இ—ள் : ஓகாரவீற்று மொழிகளுள் பொருட் புணர்ச்சிக் கண் உருபு புணர்ச்சியது இயல்பிலே நின்று ஒன் சாரியை பெற்று முடியும் மொழிகளும் உள; அவ்விடத்து வல்லெழுத் தியல்பாய் முடியும்; எ—று

உ—ம் : கோஒன்கை, செவி, தலை, புறம் என வரும்.

சாரியைப்பேறு வருமொழி வல்லெழுத்தை விலக்காமை இதனானும் பெற்றாம்.

**சுப்.**

இச்சூத்திரம் எற்றுக்கு? இதனாற் கூறப்பட்டது "ஓகார விறுதிக்கு ஒன்னே சாரியை" (எழு 181) என்ற சூத்திரத்தாற் பெறப்படாதா வெனின், பெறப்படாதென்க. கோ என்றதின் பின்னர் வேற்றுமை யுருபு வரும் போது, இடையில் ஒன் சாரியை வரும் என்றது அச்சூத்திரம். கோவினது, கை என்ற சொற்கள் தொகையாம் போது கோ கை என்றிருக்க இடையில் இன்சாரியை வரும் என்றது இச்சூத்திரம் ஆகலின் இச்சூத்திரம் வேண்டும் என்க.

**பி. கு.**

"திவாகரம், பிங்கலம் என்னும் நிகண்டில் இச்சொல் 'கோன்' என்று னகரவீறாய் ஓதப் பெறாமல் 'கோ' என்று ஓகார ஈறாகவே ஓதப்பட்டுள்ளது. இச்சொல் உயர்திணைப் பொருளிலும் வரும் பல பொருள் ஒருசொல் என்பதை,

அந்தரம் குலிசம் பாரினோடத்திரம்
வந்த—நீர்திசை மலைவேன் மன்னவன்
விழிபசு கோவென வேண்டினர் புலவர்

என்னும் திவாகர நூற்பாவால் அறியலாம்".—திரு. அடிகளாசிரியர்.

† இதற்கு விளக்கம் 264 ஆம் சூத்திரத்திற் காண்க.

## 11. ஔகார ஈறு

*இருவழியிலும் ஔகார ஈறு*

**296.** **ஔகார இறுதிப் பெயர்நிலை முன்னர்**
**அல்வழி யானும் வேற்றுமைக் கண்ணும்**
**வல்லெழுத்து மிகுதல் வரைநிலை யின்றே**
**அவ்விரு ஈற்றும் உகரம் வருதல்**
**செவ்விது என்ப சிறந்திசி னோரே.** (93)

ஆ. மொ: இல.

Before the nouns which and in 'ou'
The appearance of hard consonants
is not forbidden both in case
relation and non-case relation.
The appearance of 'u' in both the two
endings is quite appropriate-so
say the learned.

க. சு.

After nouns ending in au
the appearance of plosive is not forbidden
either in case-relationship or in non case relationship
Great scholars opine that it is preferable
to insert u in both cases

பி. இ. நூ.

முத்து. பு 136

*ஔகார இறுதி மிகுதலும் உகரச்*
*சாரியை பெறுதலும் தனக்குரித் தாகும்*

சூ. 204—இன்கீழ் உள்ளனவும் கொள்க.

இளம்.

இது, ஔகாரவீறு அல்வழிக்கண்ணும் வேற்றுமைக் கண்ணும் முடியுமாறு கூறுதல் நுதலிற்று.

இ—ள் : ஒளகார இறுதிப் பெயர்நிலை முன்னர்—ஒளகார வீற்றுப் பெயர்ச் சொல் முன்னர் வல்லெழுத்து முதன்மொழி வரின், அல்வழியானும் வேற்றுமைக் கண்ணும்—அவை அல்வழிக் கண்ணும் வேற்றுமைக்கண்ணும், வல் எழுத்து மிகுதல் வரை நிலை இன்று—வல்லெழுத்து மிக்கு முடிதல் நீக்கும் நிலை இன்றாம்; அ இரு ஈற்றும் உகரம் வருதல் செவ்விது என்ப சிறந்திசினோர்—அவ்விரு கூற்று [1]முடிபின்கண்ணும் நிலை மொழிக்கண் உகரம் வந்து முடிதல் செவ்விதென்று சொல்லுவர் சிறந்தோர்.

உ—ம் ; கௌவுக்கடிது, சிறிது, தீது, பெரிது எனவும்; கௌவுக்கடுமை, சிறுமை, தீமை, பெருமை எனவும் வரும்.

'செவ்விது' என்றதனான், மென்கணத்துக்கண்ணும் இடைக் கணத்துக்கண்ணும் இருவழியும் உகரப்பேறு கொள்க. கௌவு ஞான்றது, கௌவு ஞாற்சி எனவும்; கௌவுவலிது, கௌவு வலிமை எனவும் வரும்.

'நிலை' என்றதனால், கௌவின்கடுமை என. உருபிற்குச் சென்ற சாரியை பொருட்கண் சென்றவழி இயைபு வல்லெழுத்து வீழ்வு கொள்க.

நச்.

இஃது ஒளகார ஈறு இருமொழியும் முடியுமாறு கூறுகின்றது.

இ—ள் : ஒளகாரம் இறுதியாகிய பெயர்ச்சொல் முன்னர் வல்லெழுத்து முதல்மொழி வருமொழியாய் வரின், அல்வழிக் கண்ணும் வேற்றுமைக் கண்ணும், வல்லெழுத்து மிக்கு முடிதல் நீக்கு நிலைமையின்று; அவ்விருகூற்று முடிபின்கண்ணும் நிலைமொழிக்கண் உகரம் வந்துமுடிதல் செவ்விது என்று சொல்லுவர் சிறந்தார்; எ—று.

---

சு. வே :

1. முடிபின்கண்ணும் உகரம் வந்து
2. முற்றும்.

உ—ம் : கௌவுக்கடிது; சிறிது, தீது, பெரிது எனவும்; கடுமை, சிறுமை, தீமை, பெருமை எனவும் வரும்.

'செவ்விது' என்றதனான் மென்கணத்தும் இடைக்கணத்தும் உகரம் பெறுதலும் கொள்க. கௌவு ஞெமிர்ந்தது, ஞெமிர்ச்சி எனவும்; வௌவு வலிது வலிமை எனவும் வரும்.

'நிலைமொழி' என்றதனாற் கௌவின்கடுமை என உருபிற்குச் சென்ற சாரியை பொருட்கண் சென்றுழி இயைபு வல்லெழுத்து வீழ்வும் கொள்க.

இன்னும் இதனானே ஐகாரமும் இகரமும் வேற்றுமைக்கண் உருபு தொகையாயுழி இயல்பாதல் கொள்க.

பி, கு.

"ஐகாரவீறும் ஔகாரவீறும் மாட்டெடுத்தியப்பட வில்லை. தொல்காப்பியர் காலத்தில் கௌ வௌ என்ற உயிர் மெய் ஔகாரவீற்றுச் சொற்கள் மட்டும் வழங்கின. நன்னூலார் தொல்காப்பியர் கருத்தை ஏற்று "ஔ ககர வகரமோ டாகும்" (நன் 107) என்றனர். ஆனால் மயிலை நாதர் ஔக்கடிது, ஔக்கடுமை என்பனவற்றை எடுத்துக்காட்டி ஔகாரவீற்றுப் பெயர்ப்பதமுன் வல்லினம் இருவழியும் மிக்கன என்பர் (நன். 164)"—திரு. அடிகளாசிரியர்.

உயிர் மயங்கியல் உரைவளம் முற்றும்.

## பயன்படுத்தப் பெற்ற நூல்கள்


1. தொல்காப்பியம்—எழுத்ததிகாரம்—இளம்பூரணம்
சென்னை, சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம் 1955

2. தொல்—எழுத்து—இளம்பூரணம், அடிகளாசிரியர் பதிப்பு
கரந்தைப்புலவர் கல்லூரி. தஞ்சாவூர் 1969

3. தொல்—எழுத்து—குறிப்புரையுடன்
டாக்டர், பி. சா. சுப்பிரமணிய சாஸ்திரியார்
பி. சு. சாமிநாதன் பதிப்பு, திருவையாறு 1937

4. தொல்—எழுத்து—நச்சினார்க்கினியம்
சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழக வெளியீடு 1972

5. தொல்—எழுத்ததிகார ஆராய்ச்சி
வே. வேங்கடராசுலு ரெட்டியார்
சென்னைப் பல்கலைக்கழக வெளியீடு 1941

6. தொல்—எழுத்து நச்சினார்க்கினியம்
சி. கணேசய்யர் பதிப்பு சுன்னாகம்,
இலங்கை திருமகள் அழுத்தக வெளியீடு 1957

7. தொல்—எழுத்து—நச்சினார்க்கினியம்
சரகவதிமகால் வெளியீடு, தஞ்சாவூர் 1957

8. தொல்—நன்னூல்—எழுத்ததிகாரம்
க. வெள்ளைவாரணன்
அண்ணாமலைப் பல்கலைக்கழக வெளியீடு
அண்ணாமலைநகர் 1962

9. இலக்கணத்தொகை—எழுத்து
டாக்டர் ச. வே. சுப்பிரமணியன் பதிப்பு
விற்பனை உரிமை, பாரி நிலையம், சென்னை 1967

10. காப்பியர்நெறி—எழுத்தியல்
தே. ஆண்டியப்பன்

11. எழுத்திலக்கணக் கோட்பாடு
செ. வை. சண்முகம்
அண்ணாமலைநகர் 1980

12. தொல்—சொல் சேனாவரையம்
கு, சுந்தரமூர்த்தி பதிப்பு
திருப்பனந்தாள்.

13. Tolkappiyam in English with critieal studies,
kuralneri publishing house, Madurai 1963

14. Journal of Tamil studies (4) 1973
International Institute of Tamil studies, Madras 113

## சுருக்க விளக்கம்

அகம்—அகநானூறு
ஆ. மொ—ஆங்கில மொழிபெயர்ப்பு
இடை—இடையியல்
இல—இலக்குவனார்
இல—வி—இலக்கண விளக்கம்
இ—ள்—இதன்பொருள்
இளம்—இளம்பூரணர்
இறை—கள—இறையனார் களவியல்
உ-ம்—உதாரணம்
உயிர், உயிர்ம—உயிர்மயங்கியல்
உயிரீ—உயிரீற்றுப் புணரியல்
உருபி—உருபியல்
உவம—உவமவியல்
எழு, எழுத்—எழுத்ததிகாரம்
எ-று—என்றவாறு
க, சு.—கமீல்சுவலபில்
கள—களவியல்
கற்பு—கறபியல்
குற்றிய—குற்றியலுகரப் புணரியல்
குறுந்—குறுந்தொகை
சப்தமணி—சப்தமணிதருப்பணம்
சிலப்—சிலப்பதிகாரம்
சிவ—சிவலிங்கனார்
சுப்—சுப்பிரமணியசாஸ்திரியார்
சு. வே—சுவடிவேறுபாடு
சொல்—சொல்லதிகாரம்
தொல்—தொல்காப்பியம்
தொன்—தொன்னூல் விளக்கம்
நச்—நச்சினார்க்கினியர்
நன்—நன்னூல்
நேமி—நேமிநாதம்
பட்டின—பட்டினப்பாலை
பி. இ. நூ—பிற்கால இலக்கண நூல்கள்
பிங்—பிங்கலம்
பி. கு—பிற குறிப்புகள்
புள்ளி—புள்ளி மயங்கியல்
புறம், புறநா—புறநானூறு
பேரா—பேராசிரியர்
பொருள்—பொருளதிகாரம்
முத்து—முத்துவீரியம்
வீர—வீரசோழியம்
வேங்—வேங்கடராசுலுரெட்டியார்

## சொல்லகராதி

( எண்—பக்கஎண் )


அக்குறிது 7, 8, 9,
அக்கொற்றன் 12, 13
அங்காக் கொண்டான் 92
அசைநிலை 42
அஞ்ஞாண் 15
அஞ்ஞாலம் 15
அஞ்ஞெளிந்தது 15
அடிகளாசிரியர் 3, 5, 9, 14, 24, 39, 42, 62, 68, 77, 100 115, 124, 152, 219
அண்ணனிக் கொண்டான் 130
அண்ணாத்துக்குளம் 80
அண்ணாத்தேரி 80
அணிக்கொண்டான் 111, 112
அத் 154
அத 155
அத —ஒருவகை மரம், 7
அதக்குறிது 8
அதங்கோடு 58
அதாஅன்றம்ம 153, 154
அதான்று 155
அது குறிது 151
அந்நன்று 15
அந்நூல் 15
அந்நன்று—எழுவாய்த் தொடர் 16
அப்பர் தேவாரம் 103
அம்ம கொற்றா 28, 31
அம்மலை 15
அம்மா கொற்றா 41, 42
அம்மாஞெள்ளா 41, 42
அம்மாண்டது 15
அரவுயர் கொடி 107
அராஅக்குட்டி 71
அருத்தாபத்தி 9, 50, 51
அரை 196
அரையங் கோடு 197
அரையின் கோடு 202
அவ்யாது 8, 9,
அவ்வழகிது 8, 9, 19, 20,
அவ்வாடை 19, 21
அவ்விலை 19
அவ்வுரல் 19
அவ்வூர்தி 19
அவ்வெழு 19
அவ்வேணி 19
அவ்வையம் 19
அவ் வொழுக்கம் 19
அவ் வோடை 19
அவ் வௌவியம் 19
அவற்றுக்கோடு 194
அனுவயத்துக் கொண்டான் 205
அவையற்றுக் கோடு 194
அறியாப் பொருள் 68
ஆகுறிது 75
ஆங்கக் கொண்டான் 12, 13
ஆங்கண் 23, 24
ஆடிக்குக் கொண்டான் 134, 136
ஆண்டியப்பன் தே. 47, 72, 88, 115, 122,
ஆணாங்கோடு 93
ஆப்பி 10 , 104,
ஆயிரண்டு 23
ஆயிருதிணை 22, 23
ஆயிருபாற் சொல் 23
ஆவகை 23
ஆவயின் 23
ஆவறு மூன்று 23
ஆவிரங்கோடு 197
ஆவிரை 196
ஆவின்கோடு 9 , 93, 94
ஆறாம் விரல் 20, 21

ஆன்கோடு 93
ஆன் நிரை 101
ஆன் பீ 103, 10
ஆன் முலை 101
ஆன நெய் 102
ஆன மணி 102
ஆனியற் பார்ப்பன மாக்கள் 101
ஆனினம் 101
இங்காக் கொண்டான் 92
இஞ்ஞாண் 116
இஞ்ஞானம் 116
இடாவினுட் கொண்டான் 80
இடைக்கணம் 59
இத் 154
இத 155
இதாஅன்றம்ம 153, 184
இது குறிது 151
இந்நூல் 116
இம்மணி 116
இராஅக் காக்கை 70, 71, 82
இராஅக் கூத்து 82
இராஅக் கொடிது 70
இராஅப்பகல் 71
இராக் கொண்டான் 81, 82
இராமாயணம் 47
இராவிற் கொண்டான் 88
இரு தூணிக் கொள் 118
இருநாடுரி 120, 121
இருவிள—ஓலை, வேணாட் டகத்ததோர் ஊர் 56
கருவூரினகத் தொரு சேரியு மாம் 57
இருவிளக் குறுமை 57
இருவிளக் கொற்றன் 56, 57
இல்முன் 73
இலக்கணச் சூத்திரத்திலும் இலக்கியச் செறிவு 53
இலக்கணப்போலி 139
இலக்கண விளக்கமுடையார் 68
இலேசு 11
இவ் யாழ் 116
இவ்வட்டு 116
இவ்வீயம் 116
இவ்வுரல் 116
இவ்வூர்தி 116
இவ்வேணி 116
இவ்வொடு 116
இவ்வோக்கம் 116
இவ்வௌவியம் 116
இவ 14
இவக்காண் 14
இவற்றுக்கோடு 194
இவையற்றுக்கோடு 194
இறவு 106
இறாஅ் வழுதுணங்காய் 70, 71
இறைஞ்சுக 36
இறையனார் களவியல் 150
இன்னினிக் கொண்டான் 130, 131
இனிக் கொண்டான் 111, 112
இஸ்ரேல் 135
ஈக்கால் 164
ஈவயினான் 116
உக்கொற்றன் 149
உங்காக் கொண்டான் 92
உஞ்ஞாண் 150
உண்கா கொற்றா 77
உண்கே 77
உண்டன குதிரை 29
உண்ணாக் கொண்டான் 67
உண்ணாக் கொற்றன் 67, 68, 69
உண்ணா குதிரைகள் 76, 77
உண்ணிய கொண்டான் 28, 31
உண்மன குதிரை 28
உண 13
உணக் கொண்டான் 12
உத் 154
உத 155
உதாஅன்றம்ம 153, 154
உதிங்கோடு 126
உதியின் கோடு 132
உது குறிது 101
உந்நூல் 150
உப்பின்று புற்கையுண்க 113, 114
உபலக்கணம் 33, 34
உம்மணி 150
உயிர்க்கணம் 59
உயில் (will) 84

உரிக்காய் 120
உரிக்காயம் 120, 121
உரைப் பொருள் 33
உரையசை 40, 42
உரையசைச் சொல் 36
உரையசைப் பொருள் 33
உரையிற் கோடல் 3, 34, 36
உவ்யாழ் 150
உவ்வட்டு 150
உவ்வாடை 150
உவ்வெளவியம் 150
உவ 14
உவற்றுக் கோடு 194
உவாஅக் காக்கை 72
உவாஅத்தாற் கொண்டான் 80
உவாஅத்து ஞான்று கொண்டான் 80
உவாஅப்பதினான்கு 70, 71, 72
உவாப்பட்டினி 71
உவையற்றுக்கோடு 194
உள்ள குதிரை 31
உள்ளவற்றுக்கோடு 64
உள குதிரை 31
ஊரகொள் 28, 30
ஊராகொள் 75
ஊவயினான 150
ஊழியம்—ஊடியம் 121
எங்காக் கொண்டான் 92
எருக்குழி 157, 158
எருங்குழி 157, 158
எருவங்குழி 157, 158
எருவ ஞாற்சி 158
எழு 140
எழுத்திலக்கணக் கோட்பாடு 82, 101, 135, 211
எழு 166
ஏழு—ஏடு 121
ஒன்றென முடித்தல் 38
ஓஒக் கடுமை 216
ஓஒ கொண்டான் 213
ஓக் கடிது 212
ஓலம் போழ்—ஓலையின் பிளப்பு 197
ஓலை 198
கட்டகல் 130, 131
கடுக் கடுமை 156
கடுக்காய் 155, 156
கடுக்குறிது 148
கண விரங்கோடு 130
கணேசய்யர் 14, 39, 42, 194,
கந்தசாமி 135
கப்பிதந்தை—கப்பிந்தை 130
கமஞ்சூல் 8
கயிலை 97
கரிய குதிரை 29
கரியவற்றுக்கோடு 205
கருங் கொள்ளு 119
கலத்துக் குறை 90
கலைக்கோடு 205
கலைங்கோடு 205
கற்பித வடிவம் 134, 135, 137
கஃறீது 96
காஅக்குறை 79
தூணிக் காணி 48
காப்பியர் நெறி 73, 88, 115, 122
காயாங் கோடு 93
கிணைமகள் 129
கிளிக்கால் 109
கிளிக் குறுமை 110
கிளி குறுமை 110
கிளியின் கால் 132
குதிரை 28, 30
குளாஅம்பல் 47
குளிக்குறுமை 130, 131
குளி குறுமை 130, 131
கூதள நறும் பூ 131
கூதாளங்கோடு 130
கூதாளி 131
கூழு—கூடு 121
கேட்டையாற் கொண்டான் 205
கேண்மியா கொற்றா 75
கொள்ளெனக் கொண்டான் 12, 13
கொளலோ கொண்டான் 213
கோ ஓக் கடுமை 216

கோஒன்கை 218, 219
கோயில் 217
கோவில் 217
கௌவுக்கடிது 221, 222
கௌவுக் கடுமை 219, 222
கௌவு ஞாற்சி 221, 222
கௌவு ஞெமிர்ச்சி 222
கௌவு ஞெமிர்ந்தது 222
சங்கர நமச்சிவாயர் 139
சண்முகம், செ. வை 82, 134, 211
சப்தமணி தருப்பணம் 45
சாக்குத்தினான் 35
சாஞான்றார் 25
சாஞான்றான் 26
சாத்தா 28, 30
சாரைப் பாம்பு 140
சாவ 13
சாஸ்திரியார் 21, 55
சித்திரைக்குக் கொண்டான் 205
சில்கேள்வி 49
சில்நாடு 50
சில்ல குதிரை 31
சில்லவற்றுக் கோடு 64
சில குதிரை 29, 31
சிலச்சில 54, 55
சிலசில 55
சிலவற்றுக் கோடு 64
சிற்சில வித்தி 49
சின்னூல் 55
சிஃறாழிசை 55
சுந்தரமூர்த்தி 3?, 99
அரவுயர் கொடி 107
சூடாமணி உள்ளமுடையான் 72
செங்கொள்ளு 119
செந்நாய் 28, 30
செய்ம்மன 34
செருக்களம் 157, 158
செருவக்களம் 157, 158
செருவஞாற்சி 158
செருவின் கடுமை 157, 158
செலீஇயர் 36
செவ்வேள் 44
செவியறிவுறூஉ 36
சென்னி தந்தை—சென்னிந்தை 131
சேனாவரையர் 10
சேனை 50
சோதியாற் கொண்டான் 1.3
ஞானியார் மடத்துச்சுவடி 113
ஞெமைங்கோடு 195
ஞெமைத்தலை 196
ஞெமையின் உச்சி 196
ஞெமையின் கோடு 202
தகர் 28, 30
தட என்பது பெயர்ப்போலி 9,10
தடக்கை 7, 8, 10,
தடஞ்செவி 7, 8
தடந்தோள் 7
தயிர் 129
தரூஉம் 158
தவ 31
தவ என்பது வினைப்போலி 10
தவக் கொண்டான் 7, 8, 9
தழு 160
தழூ 160
தளாஅக்கோடு 87, 88
தளாஅங்கோடு 85, 86
தளாவின் கோடு 88
தாது 9, 10
தாமோதரம் பிள்ளை 39
தாரா 78
தாராக்கடிது 64
தாராக்கால் 78
தாழங்காய் 198
தாழை 198
தானை 50
திட்டாஅத்துக்குளம் 80
திராவிட மொழியின் மூவிடப் பெயர் 154
திரிசிரபுரம் 46
திரிந்ததன் திரிபது 92, 93, 96, 10, 146, 147
திருப்பாதிரிப்புலியூர் 115
திருவாரூர்த் தியாகராச லீலை 46
தில்லங்காய் 197
தில்லை 198
திவாகரம் 219
தினக்கொண்டான் 12
தீக்கடிது 137
தீக்கடுமை 144
தீர்க்கசந்தி 47

துயிலெடை 122
துயிலெழுநிலை 122
துளியத்துக் கொண்டான் 130
131
துளியிற் கொண்டான் 131,
தூணிக்குத் தூணி 118
தூணிக் கொள் 118
தூணிச் சாமை 118
தூணித்தூணி 118
தூணிப் பதக்கு 118
தூதுணங்காய் 197
தெய்வச்சிலை யார் 34 68
தேடிக் கொண்டான் 111
தொடித்தொடி 118
தொல்காப்பியனார் 39
நந்தியம் பெருமான் 97
நமைங்கோடு 195
நமையின் கோடு 202
நன்னூல் 1[illegible]9
நன்னூலார் 39, 68
நாடுரி 1[illegible]0
நாழிக்காய் 120
நாழிக்காயம் 120 121
நாளன்று 114
நிலாஅக்கதிர் 84
நிலாஅத்துக் கொண்டான் 83,
90
நிலாத்துக்கொண்டான் 83, 87
நிலாவிற் கொண்டான் 87, 88,
90
நின்கை 145
நினதுகை 145
நீ குறியை 139, 140
நீயோ கொண்டாய் 213
நீழல்—நீட 121
நுணக்குறிது 8
நுணாங்கோடு 93
நேமிநாத நூலார் 68
படூஉம் 158
பணிஇயர் 36
பரணியாற் கொண்டான் 132,
133
பருத்திக்குச் சென்றான் 130
பல்படை 49, 50
பல்யானை 49, 50
பல்ல குதிரை 31
பல்லவற்றுக் கோடு 64
பல + அம் = பலாம் 46
பல குதிரை 28, 31
பலப்பல 54,55
பலபல 54, 55
பலவற்றுக்கோடு 64
பலாஅக்கோடு 79, 80
பலாஅஞ்சிலாஅம் 43, 44, 45, 46
பழுக்காய் 160
பழூஉப்பல் 159, 160
பற்பல கொண்டார் 49
பற்பல கொண்டான் 49
பறை 50
பன்மரம் 55
பன்மீன் 55
பன்றி 28, 30
பன்னகை 50
பன்னூறு 50
பனங்காய் 197
பனந்திரள் 202
பனாஅட்டு 199, 200
பனிக்கட் சென்றான் 124
பனியத்துக் கொண்டான் 122
123 124
பனியிற்கொண்டான் 122, 123
பனை 196
பனைக் கொடி 193, 201, 202
பனைந்திரள் 202, 204
பனையின் காய் 202
பஃறாலி 55
பஃறானை 55
பாடாண்திணை 36
பால்யாடு 62
பாவாணர் 88
பாளிதம்—பாற்சோறு 129
பாழு—பாடு 121
பிங்கலம் 129, 219
பிடாஅக்கோடு 87, 88
பிடாவின் கோடு 88
பிணர் 106
பிணவு நாய் 106
பிரபுலிங்க லீலை 97
புலிபோலக் கொன்றான் 12, 13
புளிக்கூழ் 130, 1[illegible]1
புளிங்கூழ் 129
புளிச்சோறு 130

புளிம்பழம் 131
புளியங்காய் 130
புளியங்கோடு 197
புளியின் கோடு 132
பூணிப்பூணி 118
பூதா 28, 30
பெருங்கதை 9
பேராசிரியர் 11, 26,
பொன் அன்ன குதிரை 28, 30
மகக் குறிது 7
மகக்கை 60
மகத்துக்கை 61, 62
மகப்பால் யாடு 62
மகம்பால் யாடு 62, 63
மகவின் கை 59
மகவின் ஞாண் 59
மகாலிங்கய்யர் 39, 62
மடவமன்ற தட்வு நிலைக் கொன்றை 7
மண்ணகல் 19, 21
மயங்கல்—கலத்தல் 3
மயிலை நாதர் 139
மராடி 155
மழையத்துக் கொண்டான் 207, 208
மழையிற் கொண்டான் 207, 208
மன்னிய 36
மன்னிய பெரும 29, 31, 32
மாஅங்கோடு 92
மாக்கடவினே 78
மாங்கோடு 92
மாணிக்கம் பதிப்பகம் 99
மாவின் கோடு 92, 93, 94
மாறனலங்கார வுரையாசிரியர் 124
மான்கோடு 93
மிகைபடக்கூறல் 136
மீக்கோள் 142, 143
மீகண் 139, 140, 141,
மீங்குழி 142, 143
மீந்தோல் 142, 143
மீப்பல் 142, 143
மீப்பா 143
மீனாட்சி சுந்தரம் பிள்ளை 46
முந்நாடுரி 121
முழவுறழ் தோள் 107
மூங்கா 78
மூங்காக்கடிது 66
மூங்காவின் கால் 80
மூங்காவின் றலை 80
மென் கணம் 59
யாஅக் கோடு 87, 88
யாஅங் கோடு 85, 86
யாஅத்துக்கண் கோடு 89
யாஅத்துக் கோடு 88
யாஅவினது கோடு 88
யா வின் கோடு 88
யான் உண்கா 77
யானையைக் கண்டான் 193
யானோ கொண்டேன் 213
வங்கா 78
வயக்களிறு 8
வயப்புலி 8
வரூஉம் 158
வழுதுணங்காய் 197
வழுதுணை 198
வழுதுணையின் காய் 202
வழைங்கோடு 205
வழையின் கோடு 202
வழையின் பூ 202
வளியத்துக் கொண்டான் 125
வளியிற் கொண்டான் 125
வன்கணம் 59
வாடுக 36
வாராத கொற்றன் 29
வாராததனால் வந்தது முடித்தல் 47, 49, 50, 51
வாழ்த்தியல் 36
வாழி கொற்றா 38, 41
வாழி ஞெள்ளா 38, 39
வாழிய கொற்றா 40
வாழிய முற்றுச் சொல் 40
வாளன்று 114
விச்சாவாதி 198, 199
விசைங்கோடு 195
விசையின் கோடு 202
விளக்குறிது 7
விளக்குறுமை 56, 57
விளங்கோடு 58
விளஞ்செதிள் 58
வேணவா 209
வெளவு வலிது 222

# சூத்திர முதற்குறிப்பகராதி

**(எண்—பக்கஎண்)**


அக்கென்சாரியை 173
அகரவிறுதிப்பெயர் 5
அத்தவண்வரினு 61
அன்றுவருகாலை 152
அன்னவென்னும் 26
ஆகாரவிறுதி 65
ஆடூஉ மகடூஉ 175
ஆவுமாவும் 73
ஆன்முன் வரூஉம் 102
ஆனொற்றகரமொடு 101
இகரவிறுதிப் 108
இடம்வரை கிளவி 141
இராவென்கிளவி 81
இல்லொடு 216
இன்றியென்னும் 112
இனியணி 110
ஈகாரவிறுதி 137
உகரவிறுதி 147
உதிமரக்கிளவி 125
உம்மையெஞ்சிய 69
உயிர்முன்வரினு 18
உரிவருகாலை 119
உருபியல் நிலையு 218
உரைப்பொருட் 41
ஊகாரவிறுதி 164
ஊவென்ஒருபெயர் 172
எகரஒகரம் 178
எருவும் செருவும் 156
ஏகாரவிறுதி 184
ஏயென்இறுதி 188
ஏனைப்புளி 128
ஏனையவரினே 149
ஐகாரவிறுதி 191
ஒடுமரக்கிளவி 160
ஒழிந்ததன்நிலை 214
ஓகாரவிறுதி 212
ஔகாரவிறுதி 220
குற்றெழுத்திம்பரும் 168
குறியதன்முன் 79
குறியதன் இறுதி 105
கொடி முன்வரினே 200
சாவவென்னும் 24
சுட்டின்முன்னர் 14
சுட்டின் முன்னரும 148
சுட்டினியற்கை 115
சுட்டுமுதலிறுதி...கும்மே 151
சுட்டு முதலிறுதியுரு...
இயற்கை 162
சுட்டு முதலிறுதி நிலையும் 193
செய்யாவென்னும் 66
செய்யுள் மருங் 208
சேயென்மரப் 189
திங்கள் முன்வரின் 133
திங்களு நாளும் 204
தேற்றஎகரமும் 180
தொடரல் இறுதி 47
நாள்முன் 132
நிலாவென்கிளவி 83
நீடவருதல் 22
நீயென்ஒருபெயர் 144
நீயென்பெயரு 138
பதக்குமுன்வரினே 117
பலவற்றிறுதி நீடுமொழி 42
பலவற்றிறுதியுருபியல் 63
பனியென வரூஉம் 122
பனையின் முன்னர் 198
பனையும் அரையும் 196
புளிமரக்கிளவி 127
பூவென்ஒருபெயர் 170
பெற்றம் ஆயின் 190
மகப்பெயர்க் 58
மரப்பெயர்க் 57
மழையென் கிளவி 207
மாமரக்கிளவி 91
மாறு கொள்...எண்ணும் 185
மாறு கொள்...ஐயமும் 213

யவமுன்வரினே 16
யாமரக்கிளவி 85
வல்லெழுத்தியற்கை 53
வல்லெழுத்து மிகினு...
மில்லை 86
வல்லெழுத்து...வழக்கத்
தான் 129
வளியெனவரூஉ 124
வாழியவென்னும் 37
விசைமரக் 194
வினையெஞ்சுகிளவியும் 11
வினையெஞ்சு கிளவிக்கும் 165
வேற்றுமைக்...அற்றே 56, 78,
143, 155, 167, 187
வேற்றுமைக்...ஆவயினான 215
ழகரவுகர 158

# நிறுவன வெளியீடுகள்

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | எண்பதில் [illegible] | ரூ. ... | 45 | 00 |
| 2 | பாரதியார் வாழ்க்கைக் கொள்கைகள் | ... | 8 | 00 |
| 3. | தமிழர் ஆடைகள் | ... | 16 | 00 |
| 4. | தமிழர் கண்ட மனம் | ... | 9 | 00 |
| 5. | தமிழக நாட்டுப்புறக் கலைகள் | ... | 10 | 00 |
| 6. | தமிழர் நாட்டு விளையாட்டுகள் | ... | 14 | 00 |
| 7. | தமிழர் உணவு | ... | 12 | 00 |
| 8. | தமிழர் தோற்கருவிகள் | ... | 10 | 00 |
| 9. | தமிழும் தமிழரும் | ... | 5 | 00 |
| 10. | Language & Grammar (Heritage of the Tamils) | ... | 22 | 00 |
| 11. | Cultural Heritage of the Tamils | ... | 20 | 00 |
| 12. | Literary Heritage of the Tamils | ... | 50 | 00 |
| 13. | தொல்காப்பியம்—சிறப்புப்பாயிரம் | ... | 10 | 00 |
| 14. | தொல்காப்பியம்-உரைவளம்-நான்மரபு | ... | 9 | 00 |
| 15. | தொல்காப்பியம்-உரைவளம்-மொழிமரபு | ... | 9 | 00 |
| 16. | தொல்காப்பியம்-உரைவளம்-பிறப்பியல் | ... | 8 | 00 |
| 17. | தொல்காப்பியம்-உரைவளம்-புணரியல் | ... | 10 | 00 |
| 18. | தொல்காப்பியம்-உரைவளம்-மரபியல் | ... | 10 | 00 |
| 19. | தொல்காப்பியம்-உரைவளம்-தொகைமரபு | ... | 8 | 00 |
| 20. | தொல்காப்பியம்-உரைவளம்-கிளவியாக்கம் | ... | 20 | 00 |
| 21 | தொல்காப்பியம்-உரைவளம்-உருபியல் | .. | 8 | 00 |
| 22. | தமிழ் இலக்கியக் கொள்கை-தொகுதி-3 | ... | 8 | 00 |
| 23. | தமிழ் இலக்கியக் கொள்கை-தொகுதி-5 | ... | 12 | 00 |
| 24. | தமிழ் இலக்கியக் கொள்கை-தொகுதி-6 | ... | 1[illegible] | 00 |
| 25. | தமிழ் இலக்கியக் கொள்கை-தொகுதி-7 | ... | 15 | 00 |
| 26. | கூவ நூல் | .. | 7 | 00 |
| 27. | மனை நூல் | ... | 1[illegible] | 00 |
| 28. | பிரபந்தத்திரட்டு | | 1[illegible] | 00 |
| 29. | கந்திவனப்புராணம் | ... | 15 | 00 |
| 30. | திருக்குருகூர் திருவேங்கடநாதன் பிள்ளைத்தமிழ் | ... | 7 | 50 |
| 31. | சின்ன மகிபன் குளுவ நாடகம் | ... | 5 | 00 |
| 32. | பணவிடுதூது | ... | 6 | 00 |
| 33. | கருவூரார் பலதிரட்டு | ... | 12 | 00 |
| 34. | சுவடியியல் பயிற்சி-கையேடு | ... | 6 | 00 |
| 35. | கும்மிப்பாடல்கள் | ... | 16 | 00 |
| 36. | பிரபந்த தீபிகை | ... | 12 | 00 |
| 37. | கண்மருத்துவம் | ... | 30 | 00 |
| 38. | தமிழில் விடுகதைகள் | ... | 12 | 00 |
| 39. | அடியார்க்கு நல்லார் உரைத்திறன் | ... | 12 | 00 |
| 40. | உலகத் தமிழ் எழுத்தாளர் யார்? எவர்? | ... | 6 | 00 |
| 41. | The Tamil Writers Directory | ... | 10 | 00 |
| 42. | Tamil Resarch through Journals | ... | 7 | 00 |
| 43. | Dr. MU. VA | ... | 20 | 00 |
| 44. | Dissertations on Tamilology | ... | 10 | 00 |
| 45. | Tirumurugan | ... | 5 | 00 |
| 46. | Epigraphical Evidence for Tamil Studies | ... | 10 | 00 |
| 47. | A Study of Peruṅkatai | ... | 12 | 00 |
| 48. | Tamil Drama | .. | 20 | 00 |
| 49. | Papers on Tamil Studies | ... | 15 | 00 |

இயக்குநர், உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம்
டி.டி.டி.ஐ. தரமணி, சென்னை-600113.